
# லெனின்

## போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள்



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# வி. இ. லெனின்

# போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள்

REFERENC

(கட்டுரைத் தொகுதி)

- 5 MAR 1985
MADRAS

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
விற்பனையாளர்கள்
சென்னை

NEW CENTURY BOOK HOUSE (P) LTD.
Rs.2-00
MADRAS-98

## வெளியிடுவோர் குறிப்பு

இந்தத் தொகுதியில் அடங்கிய கட்டுரைகள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியைச் சேர்ந்த மார்க்சிய-லெனினியக் கழகத்தார் தயாரித்த வி. இ. லெனின், நூல்திரட்டு, 5வது பதிப்பிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை. கட்டுரைகளின் முடிவிலும் அடிக்குறிப்புகளிலுமுள்ள தொகுதி எண்ணும் பக்கங்களும் ஐந்தாவது ருஷ்யப் பதிப்பைக் குறிப்பவை.

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102\text{-}369}{014(01)\text{-}82}$ 684-82

0101020000

- 5 MAR 1985
MADRAS
REFERENCE

# பொருளடக்கம்

போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள். முன்னுரை . . . . 5
முதற்கடிதம். இன்றைய நிலைமை பற்றிய மதிப்பீடு . . . 7
''இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சி'' என்பதிலிருந்து . 27
சமரசங்கள் குறித்து . . . . . . . . . . . . . . 35
சமரசங்கள் குறித்து . . . . . . . . . . . . . . 45
பாராளுமன்ற முறை பற்றிய சொற்பொழிவு கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் நிகழ்த்தப்பெற்றது 1920, ஆகஸ்டு 2 . . . . . . . . . . . . 50
ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம் . . . . . . 57
அஸர்பெய்ஜான், ஜார்ஜியா, ஆர்மீனியா, தாகெஸ்தான், மலைக் குடியரசு இவற்றின் கம்யூனிஸ்டுத் தோழர்களுக்கு . . . 62
1921, ஜூலை 1ல், கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றும் காங் கிரசில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்களை ஆதரித்து ஆற்றிய சொற்பொழிவு . . . . . . . 66
1921, ஜூலை 11ல், கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றும் காங்கிரசில் பங்கெடுத்த ஜெர்மனி, போலந்து, செகோஸ்லோ வாக்கியா, ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகளது பிரதி நிதிக் குழுக்களது உறுப்பினர்களின் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் . . . . . . . . . . . . 82
ஜெர்மன் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம் . . . . . . 90
போலந்துக் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம் . . . . . . 108
தற்போதும் சோஷலிசத்தின் முழுநிறை வெற்றிக்குப் பிற் பாடும் தங்கத்தின் முக்கியத்துவம் . . . . . . . 111
பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . . . 124
பெயர்க்குறிப்பு அகராதி . . . . . . . . . . . 140

- 5 MAR 1985
MADRAS

# போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள்

## முன்னுரை

தலைப்பில் குறிக்கப்படும் பொருள் குறித்து 1917 ஏப்ரல் 4ல் பெத்ரொகிராதில் முதலில் போல்ஷிவிக்குகளின் கூட்டம் ஒன்றில் நான் உரை நிகழ்த்தும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டது. இவர்கள் தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் அனைத்து ருஷ்ய மாநாட்டுக்குப் பிரதிநிதிகளாய் வந்திருந்தவர்கள். உடனே இவர்கள் தமது ஊர்களுக்குத் திரும்ப வேண்டியிருந்ததால் உரையை நான் ஒத்திப்போட அனுமதிக்க முடியவில்லை. ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை ஒன்றுபடச் செய்வது குறித்து விவாதிக்க விரும்பிய போல்ஷிவிக், மென்ஷிவிக்[1] பிரதிநிதிகளின் கூட்டு அமர்வில் என் உரையை உடனே திரும்பவும் நிகழ்த்த வேண்டுமென்று தலைமை வகித்த தோழர் கி. ஸினோவியேவ் இந்தக் கூட்டம் முடிவுற்றதும் கூட்டத்தினர் அனைவரின் சார்பிலும் என்னைக் கேட்டுக் கொண்டார்.

உடனே என் உரையைத் திரும்பவும் நிகழ்த்துவது எனக்குக் கடினமாகவே இருந்தது என்றாலும், கருத்துக்களில் என் தோழர்களும் மற்றும் மென்ஷிவிக்குகளும் என்னை இவ்வாறு கேட்டபின் மறுப்பதற்கு எனக்கு உரிமையில்லை என்பதாய்க் கருதினேன். இவர்கள் உடனே புறப்பட்டுச் செல்ல வேண்டியிருந்ததால் எனக்கு அவகாசமளிக்க முடியாமற் போயிற்று.

என் உரையை நிகழ்த்துகையில் நான் ஆய்வுரைகளைப் படித்துக் காட்டினேன். இவை 1917 ஏப்ரல் 7ல் பிராவ்தா[2] இதழ் 26ல் வெளியிடப்பட்டன.*

---

* இந்த ஆய்வுரைகளையும் பிராவ்தாவின் அதே இதழிலுள்ள சுருக்கமான விளக்க உரையையும் இந்தக் கடிதத்தின் அனுபந்தமாய் அச்சிடுகிறேன். (பார்க்கவும்: லெனின், நூல் திரட்டு, தொகுதி 31, ''தற்போதையப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் பணிகள்'', பக்கங்கள் 113-18.—பதிப்பாசிரியர்.)

இந்த ஆய்வுரைகளும் என்னுடைய உரையும் போல் ஷிவிக்குகளிடத்தும் மற்றும் பிராவ்தா ஆசிரியர்களிடத்தும் கருத்து வேற்றுமைகளை உண்டாக்கின. பல தடவை கலந்தாலோசித்த பிறகு எங்களுடைய வேறுபாடுகளைப் பகிரங்கமாய் விவாதிப்பது நல்லதென்றும், 1917 ஏப்ரல் 20ல் பெத்ரொகிராதில் கூடப்போகும் நமது கட்சியின் (மத்தியக் கமிட்டியின் கீழ் ஒன்றுபட்டிருக்கும் ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி) அனைத்து ருஷ்ய மாநாட்டுக்கு இவ்விதம் விவாத விவரங்கள் கிடைக்குமென்றும் நாங்கள் ஒருமனதாய் முடிவுசெய்தோம்.

விவாதிப்பதென்ற இந்த முடிவுக்கு ஏற்ப நான் பின்வரும் கடிதங்களை வெளியிடுகிறேன். இந்தக் கடிதங்களில் நான் இப்பிரச்சினையைத் தீர்க்கமாய்ப் பரிசீலித்திருப்பதாய்க் கூறிக் கொள்ளவில்லை; தலைமையான வாதங்களைச் சுருக்கமாய்க் குறிப்பிட வேண்டுமென்பதே எனது விருப்பம். இந்த வாதங்கள் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் நடைமுறைப் பணிகளுக்கு மிகவும் அவசியமானவை.

# முதற்கடிதம்

## இன்றைய நிலைமை பற்றிய மதிப்பீடு

வர்க்கங்களுக்கு இடையிலான பரஸ்பர உறவுகளையும் ஒவ்வொரு வரலாற்று நிலைமைக்கும் தனிச்சிறப்பாயுள்ள ஸ்தூலமான இயல்புகளையும் பற்றிக் கறாராகத் துல்லியமான, எதார்த்த வழியில் சரிபார்க்கத்தக்க பகுப்பாய்வு செய்யுமாறு மார்க்சியம் நம்மைக் கோருகிறது. போல்ஷிவிக்குகளாகிய நாம் கொள்கைக்கு விஞ்ஞான அடித்தளம் அமைத்துக்கொள்ள இன்றியமையாத இந்தக் கோரிக்கையை எப்போதும் பூர்த்தி செய்ய முயன்று வந்திருக்கிறோம்.

''நமது போதனை செயலுக்கான வழிகாட்டியே அன்றி வறட்டுச் சூத்திரமல்ல'' என்று மார்க்சும் எங்கெல்சும் எப்போதும் சொல்லிவந்திருக்கிறார்கள்; ''சூத்திரங்களை'' வெறுமே மனப்பாடம் செய்துகொண்டு திருப்பிச் சொல்லி வருவதை அவர்கள் சரியாகத்தான் கேலிசெய்தார்கள்; இந்தச் சூத்திரங்கள் அதிகபட்சமாகச் சொன்னால் பொதுவான கடமைகளை வரையறுக்க மட்டுமே முடியும்; இந்தப் பொதுவான கடமைகள் சரித்திர இயக்கப் போக்கின் குறிப்பிட்ட ஒவ்வொரு காலப்பகுதிக்கும் உரிய ஸ்தூலமான பொருளாதார, அரசியல் நிலைமைகளால் அவசியம் மாற்றப்படவே செய்யும்.

புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் கட்சி தன்னுடைய செயற்பாட்டின் கடமைகளையும் வடிவங்களையும் வரையறுக்கையில் இன்று அது வழிகாட்டப்பட வேண்டிய தெளிவாக நிலைநாட்டப் பெற்ற எதார்த்த உண்மைகள் எவை?

1917, மார்ச் 21-22 தேதிகளில் பிராவ்தா, இதழ்கள் 14, 15ல் வெளியிடப்பெற்ற என்னுடைய முதலாவது ''தொலைவிலிருந்து எழுதியகடிதத்திலும்'' (''முதற்புரட்சியின் முதற்கட்டம்''), என்னுடைய ஆய்வுரைகளிலும் ''ருஷ்யா

விலுள்ள இன்றைய நிலைமையின் பிரத்தியேக இயல்பைப்'' புரட்சியின் முதற்கட்டத்திலிருந்து இரண்டாவது கட்டத்துக்கு மாறிச் செல்கிற காலப்பகுதி என்று வரையறுக்கிறேன். எனவே, பின்வருவதையே நான் இந்தத் தருணத்தில் அடிப்படையான கோஷமாக, ''தற்சமயத்தின் கடமையாக'', கருதினேன்: ''தொழிலாளர்களே, ஜார் ஆட்சிக்கு எதிரான உள்நாட்டுப் போரில் நீங்கள் பாட்டாளி வர்க்க வீரம் மிகுந்த, மக்களுக்குரிய வீரம் மிகுந்த அதிசயங்கள் புரிந்திருக்கிறீர்கள். புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் உங்களுடைய வெற்றிக்குப் பாதையைத் தயார்படுத்த நீங்கள் பாட்டாளி வர்க்கத்தையும் எல்லா மக்களையும் ஸ்தாபன ரீதியாக அமைப்பதில் அதிசயங்கள் புரிந்தாக வேண்டும்'' (''பிராவ்தா'', இதழ் 15).*

எது இந்த முதல் கட்டம்?

முதலாளித்துவ வர்க்கத்துக்கு அரசு அதிகாரம் போய்ச் சேர்ந்திருப்பதே அது.

1917ன் பிப்ரவரி-மார்ச் புரட்சிக்கு முன்பு ருஷ்யாவில் அரசு அதிகாரம் பழைய வர்க்கத்தின் கையில், அதாவது நிக்கொலாய் ரொமானவ் தலைமை தாங்கிய பிரபுத்துவ நிலச்சுவான்தார்கள் கையில் இருந்தது.

இப்புரட்சிக்குப் பிறகு அதிகாரம் வேறு ஒரு வர்க்கத்தின், ஒரு புதிய வர்க்கத்தின், அதாவது, முதலாளித்துவ வர்க்கத்தின் கையில் இருக்கிறது.

இரண்டு வகையிலும், சரியான விஞ்ஞான அர்த்தத்திலும், நடைமுறை அரசியல் அர்த்தத்திலும், அரசு அதிகாரம் ஒரு வர்க்கத்தின் கையிலிருந்து மற்றொன்றுக்கு வந்து சேருவதுதான் புரட்சியின் முதற் பெரும் அடிப்படை அறிகுறி.

இந்த அளவுக்கு, முதலாளித்துவ அல்லது முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி ருஷ்யாவில் முடிந்து முற்றுப் பெற்று விட்டது.

ஆனால் இந்த இடத்தில், தங்களைப் ''பழைய போல்ஷிவிக்குகள்'' என்று அழைத்துக் கொள்ளும் நபர்களிடமிருந்து

* பார்க்கவும்: லெனின், நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 21.—பதிப்பாசிரியர்.

ஆட்சேபனைக் கூக்குரலை நாம் கேட்கிறோம். அவர்கள் சொல்கிறார்கள்: ''பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம்'' மூலமாகத்தான் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி முற்றுப்பெறும் என்று எப்பொழுதுமே நாம் சொல்லி வரவில்லையா? விவசாயப் புரட்சி—அதுவும் ஒரு முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிதான்—முற்றுப் பெற்றுவிட்டதா? இல்லையே, அது இன்னும் தொடங்கக்கூட இல்லை என்பதுதானே உண்மை?

என் பதில்: போல்ஷிவிக் கோஷங்களையும் கருத்துக்களையும் பொதுப்படையாய் வரலாறு முற்றிலும் உறுதிப்படுத்தியுள்ளது; ஆனால் ஸ்தூலமாய் விவகாரங்கள் வேறு விதமாக உருவாகியுள்ளன; அவை யாரும் எதிர்பார்த்திருக்கக் கூடிய அளவுக்கு மேலாகத் தனிமாதிரியாகவும், சிறப்பாகவும், பலவாறாகவும் உருவாகியுள்ளன.

இந்த உண்மையைப் புறக்கணிப்பது அல்லது பார்க்கத் தவறுவது என்பதற்கு அர்த்தம், புதிய உயிர்ப்புள்ள எதார்த்தத்தின் பிரத்தியேக இயல்புகளைப் பயில்வதற்குப் பதிலாகப் பொருள் விளங்காமல் மனப்பாடம் செய்து கொண்ட சூத்திரத்தைத் திருப்பிச் சொல்லி, நம் கட்சியின் வரலாற்றில் ஏற்கனவே ஒரு தடவைக்கு மேலாகவே எவ்வளவோ வருந்தத்தக்க பாத்திரம் வகித்த அந்தப் ''பழைய போல்ஷிவிக்குகளைப்'' பின்பற்றிச் செல்வதேயாகும்.

ருஷ்யப் புரட்சியில் ''பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம்'' ஏற்கனவே எதார்த்தமாகிவிட்டது*, ஏனெனில் இந்தச் ''சூத்திரம்'' வர்க்கங்களுக்கிடையிலான பரஸ்பர உறவையே குறிக்கிறது, இந்த உறவை, இந்தக் கூட்டுறவை நடைமுறையாக்குகிற ஒரு ஸ்தூலமான அரசியல் ஸ்தாபனத்தை அல்ல. ''தொழிலாளர்கள், போர்வீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்''—அதோ, அதுதான் எதார்த்தத்தில் ஏற்கனவே சாதிக்கப்பட்டுள்ள ''பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம்''.

---

* ஒரு குறிப்பிட்ட வடிவத்தில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு.

இச் சூத்திரம் ஏற்கனவே பழையதாகிவிட்டது. நிகழ்ச்சிகள் அதைச் சூத்திரங்களின் நிலையிலிருந்து எதார்த்தத்தின் நிலைக்கு மாற்றிவிட்டன, சதையும் எலும்பும் கொடுத்து உருவம் தந்துள்ளன, ஸ்தூலப்படுத்தி அதன் விளைவாக உரு மாற்றியுள்ளன.

இன்று ஒரு புதிய, வேறான கடமை நம்மை எதிர்நோக்குகிறது. இந்தச் சர்வாதிகாரத்துக்குள்ளே பாட்டாளி வர்க்கப் பகுதியோருக்கும் (பாதுகாப்புவாத-எதிர்ப்பு, சர்வதேசியவாத, கம்யூனுக்கு மாறிச் செல்வதை ஆதரிக்கும் ''கம்யூனிஸ்டுப் பகுதியோர்) சிறு உடைமையாளர் அல்லது குட்டிபூர்ஷுவாப் பகுதியோருக்கும் (புரட்சிகரமான பாதுகாப்புவாதிகளும் கம்யூனை நோக்கிச் செல்வதை எதிர்ப்பவர்களும் ஆகிய, முதலாளித்துவ வர்க்கத்தையும் பூர்ஷ்வா அரசாங்கத்தையும் ''ஆதரிக்க'' விரும்புகிற, ச்ஹெயீத்ஸே, த்ஸெரெத்தேலி, ஸ்தெக்லோவ், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்,[3] இன்னும் மற்றவர்கள்) இடையே ஒரு பிளவு ஏற்படுத்துவதே இந்தக் கடமை.

''பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம்'' பற்றி மட்டும் இன்று பேசுகிறவர் காலத்துக்குப் பின்தங்கிவிட்டவர்; எனவே உண்மையில் அவர் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்துக்கு எதிராகக் குட்டிபூர்ஷுவா வர்க்கத்தின் தரப்புக்குப் போய்விட்டவரே ஆவார்; அவரைப் புரட்சிக்கு முந்திய ''போல்ஷிவிக்குகளின்'' தொல்பொருட்சாலையில் வைத்தாக வேண்டும் (அதற்கு ''பழைய போல்ஷிவிக்குகளின்'' தொல்பொருட்சாலை என்று பெயரிடலாம்.)

பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம் ஏற்கனவே ஈடேறிவிட்டது, ஆனால் மிகவும் தனிவகைப் பாணியிலே, அதி முக்கியத்துவம் வாய்ந்த பல மாற்றங்களோடு ஈடேறியுள்ளது. என்னுடைய அடுத்த கடிதம் ஒன்றில் அவற்றைத் தனியாக விளக்குகிறேன். ஒரு மார்க்சியவாதி நிஜ வாழ்க்கையை, எதார்த்தத்தின் உண்மையான நிலவரங்களைக் கண்டுணர்ந்து கொள்ள வேண்டும், நேற்றையத் தத்துவத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது—அது எல்லாத் தத்துவங்களையும் போல் அதிகபட்சமாகப் போனால் பிரதானமானதையும்

பொதுவானதையும் மட்டுமே குறிக்கக் கூடியது, வாழ்க்கையை அதன் எல்லாச் சிக்கலோடும் முழுமையாய்க் காட்டும் நிலையை நெருங்குவதோடு நின்றுகொள்வது—என்கிற மறுக்க முடியாத உண்மையைப் புரிந்து கொள்வதன் அவசியத்தை இங்கு வலியுறுத்துவதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

''நண்பனே, தத்துவமானது கிழடாய் நரைத்துப் போனது, ஆனுல் அழிவின்றித் தழைக்கும் மரம் போன்ற வாழ்க்கையானது பசுமையோடிருப்பது.''[4]

பூர்ஷுவாப் புரட்சியின் ''நிறைவேற்றம்'' என்கிற பிரச்சினையைப் பழைய வழியிலே அணுகுவதானது உயிர்ப்புள்ள மார்க்சியத்தை உயிரற்ற எழுத்துக்குப் பலியிடுவதாகும்.

பழைய சிந்தனையின் வழிப்படி, முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியைத் தொடர்ந்து பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயிகளது ஆட்சி, இவர்களது சர்வாதிகாரம், வர முடியும், வர வேண்டும்.

ஆனுல், நிஜ வாழ்க்கையில் விவகாரங்கள் ஏற்கனவே வேறு விதமாக நடந்தேறியுள்ளன; மிகமிக சுயமான, புதிதான, முன்னென்றும் கண்டிராதபடி ஒன்று மற்றென்ருேடு பின்னிப் பிணைந்து கொண்டுவிட்டது. அக்கம் பக்கமாக இரண்டும் இருந்து வருகிற நிலையில், ஒரே காலத்தில், முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சி (லிவோவ், குச்கோவ் இவர்களின் அரசாங்கம்), பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம் ஆகிய இரண்டும் இருக்கின்றன; இந்தச் சர்வாதிகாரம் தன்னிச்சையாக முதலாளித்துவ வர்க்கத்துக்கு அதிகாரத்தை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறது, தன்னிச்சையாகவே தன்னை முதலாளித்துவ வர்க்கத்தின் தொங்குசதையாக்கிக் கொண்டு வருகிறது.

நடைமுறையில், பெத்ரொகிராதில், அதிகாரம் தொழிலாளர்களின், போர்வீரர்களின் கையில் இருக்கிறது என்பதை மறக்கலாகாது; புதிய அரசாங்கம் அவர்களை எதிர்த்துப் பலாத்காரத்தைப் பிரயோகிக்கவில்லை, பிரயோகிக்கவும் முடியாது; காரணம், போலீஸ் ஒன்றும் இல்லை, மக்களுக்கு அப்பால் நிற்கிற இராணுவம் ஒன்றும் இல்லை, மக்களுக்கு மேல்நிலையில் நிற்கும் எல்லாப் பலமும் பெற்ற அதிகார வர்க்கம் இல்லை. இது ஓர் உண்மை, பாரிஸ் கம்யூன்[5] வகைப்பட்ட அரசைக் குறிப்பதாயுள்ள ஓர் உண்மை. இந்த

உண்மை பழைய திட்டவரைகளுக்குப் பொருந்துகிறதா யில்லை. திட்டவரைகளை உண்மைகளுக்கேற்பப் பொருத்திச் சரிசெய்வதற்குத் தெரிந்து கொள்ள வேண்டுமே அல்லாது பொதுப்படையாகப் ''பாட்டாளிவர்க்கத்தினர், விவசாயிகளின் சர்வாதிகாரம்'' பற்றி இன்று அர்த்தமற்றுப் போன சொற்களைத் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

இந்தப் பிரச்சினையை மேலும் தெளிவுபடுத்துவதற்கு அதை மற்ருெரு கோணத்திலிருந்து அணுகுவோம்.

வர்க்க உறவுகளை உன்னிப்பாய்ப் பகுத்தாராயும் ஆதார நிலையை எந்த மார்க்சியவாதியும் கைவிடலாகாது. முதலாளித்துவ வர்க்கம் ஆட்சியிலிருக்கிறது. ஆனல், விவசாயி மக்களின் திரளும் கூட ஒரு முதலாளித்துவ வர்க்கம்தானே, வேருெரு சமூக அடுக்கினரான, வேருெரு வகையினரான, வேருெரு தன்மையரான முதலாளித்துவ வர்க்கம்தானே? இந்த அடுக்கினர் அதிகாரத்துக்கு வந்து, இவ்வழியில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை ''நிறைவேற்றுவது'' முடியாது என்று இதிலிருந்து எப்படிப் பெறப்படும்? இது ஏன் சாத்தியமில்லை?

இப்படித்தான் பழைய போல்ஷிவிக்குகள் அடிக்கடி வாதிக்கிருர்கள்.

அது முற்றும் சாத்தியமே என்பதுதான் என்னுடைய பதில். ஆனல், ஒரு குறிப்பிட்ட நிலைமையை மதிப்பீடு செய்யும்போது, எது சாத்தியம் என்ற நிலையிலிருந்தல்லாமல், எது எதார்த்தத்தில் இருப்பது என்கிற நிலையிலிருந்துதான் எந்த மார்க்சியவாதியும் தொடங்க வேண்டும்.

எதார்த்தம் புலப்படுத்தும் உண்மை என்னவெனில், சுதந்திரமாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட படைவீரர்கள், விவசாயிகளது பிரதிநிதிகள் சுதந்திரமாய் இரண்டாவது அரசாங்கத்தில், இணையான அரசாங்கத்தில் சேர்ந்து வருகிருர்கள், சுதந்திரமாய் இணைந்து அதை விரிவாக்கியும் வளர்த்தும் நிறைவு பெறச் செய்தும் வருகிருர்கள். இதே போல சுதந்திரமாகவே அவர்கள் ஆட்சியதிகாரத்தை முதலாளித்துவ வர்க்கத்துக்கு விட்டுக் கொடுத்தும் வருகிருர்கள். இந்த உண்மை மார்க்சியத் தத்துவத்துக்குச் சிறிதும் ''முரண்பாடானது'' அல்ல. ஏனெனில் முதலாளித்துவ வர்க்கம் பலாத்காரத்தால் மட்டும் தன்னை ஆட்சியதிகாரத்தில் நிலைநிறுத்திக்

கொள்ளவில்லை, வெகுஜனங்களின் வர்க்க உணர்வற்ற, நிறுவன ஒழுங்கமைப்பு இல்லாத நிலையாலும்கூட, மாமூல் முறை, ஒடுக்கப்பட்ட அவல நிலை இவற்றாலுங்கூட இதைச் செய்து கொள்கிறது என்பது எப்பொழுதுமே நாம் அறிந்ததுதான், மீண்டும் மீண்டும் நாம் சுட்டிக்காட்டியதுதான்.

இன்றைய இந்த எதார்த்த நிலைமையில் உண்மையைப் பார்க்காது எதிர்ப்பக்கம் திரும்பிக் கொண்டு ''சாத்தியப் பாடுகள்'' குறித்துப் பேசுவது நகைக்கத்தக்கதாகும்.

விவசாயிகள் நிலம் அனைத்தையும், ஆட்சியதிகாரம் அனைத்தையும் கைப்பற்றிக் கொண்டுவிடலாம்தான். இந்தச் சாத்தியப்பாட்டை நான் மறந்துவிடவில்லை, தற்போதைய நிலைமைக்குள் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிடவில்லை; மாறாக, புதிய நிலவரத்தைக் கணக்கில் எடுத்துதான், அதாவது ஒருபுறம் விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் இவர்களுக்கும் மறுபுறம் விவசாய நிலவுடைமையாளர்களுக்கும் இடையிலுள்ள ஆழ்ந்த பிளவினைக் கணக்கில் எடுத்துதான், திட்டவட்டமாகவும் தெளிவாகவும் நான் நிலத்தைப் பற்றிய வேலைத்திட்டத்தை வகுக்கிறேன்.

ஆனால் இன்னொரு சாத்தியப்பாடும் உள்ளது. குட்டி பூர்ஷுவாக் கட்சியினரான சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரது ஆலோசனைப்படி விவசாயிகள் நடக்கலாம் என்பது சாத்தியமே. சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி முதலாளித்துவ வர்க்கத்தாரின் செல்வாக்குக்குக் கீழ்படிந்துவிட்டது, பாதுகாப்புவாத நிலையை ஏற்றுக் கொண்டுவிட்டது, அரசியல் நிர்ணய சபைக் கூட்டப்படுவதற்கான தேதிகூட இன்னும் குறிக்கப்படவில்லை என்றாலும் இச்சபைக்காகக் காத்திருக்கும்படி ஆலோசனை கூறிவருகிறது.*

---

*என்னுடைய சொற்களுக்குத் தவறான வியாக்கியானம் செய்யப்படாமல் இருக்கும்பொருட்டு இதனைத் தயக்கமின்றி முன்கூட்டியே கூறுகிறேன்: விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளது சோவியத்துகள் உடனடியாகவே எல்லா நிலங்களையும் எடுத்துக் கொள்வதை நான் நிச்சயமாக ஆதரிக்கிறேன். ஆனால் தாமே அவை கண்டிப்பான ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் அனுசரிக்க வேண்டும்; இயந்திரங்கள், கட்டிடங்கள், அல்லது கால்நடைகளுக்குச் சிறிதளவுங்கூட சேதம் உண்டாக்க அவை இடந் தரலாகாது; எந்நிலைமையிலும்

விவசாயிகள் முதலாளித்துவ வர்க்கத்தாருடன் செய் துள்ள உடன்பாட்டை நிலைநாட்டிக்கொள்வதும் அதை நீடிக்கச் செய்து கொள்வதும் சாத்தியமே. இந்த உடன்பாட்டை இப்பொழுது அவர்கள் தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் மூலம் பெயரளவில் மட்டு மின்றி உண்மையிலேயே செய்து கொண்டுவிட்டனர்.

பலவும் சாத்தியமே. நிலத்துக்கான இயக்கத்தையும் நிலம் பற்றிய வேலைத்திட்டத்தையும் மறப்பது மிகப் பெருந் தவறாகிவிடும். ஆனால் எதார்த்த நிலைமையை மறப்பதும் இதே அளவுக்குப் பெருந் தவறே ஆகும். முதலாளித்துவ வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஓர் உடன்பாடு அல்லது—மேலும் கரூரான, அவ்வளவு சட்ட மொழியில் இல்லாத, ஆனால் இன்னும் வர்க்க-பொருளாதார முறையி லான பதத்தை உபயோகித்தால்—வர்க்க ஒத்துழைப்பு இருக் கிறது என்னும் உண்மையை எதார்த்த நிலைமை புலப்படுத்து கிறது.

இந்த உண்மை இனி உண்மையில்லை என்கிற நிலை ஏற்படும்போது, விவசாயிகள் முதலாளித்துவ வர்க்கத்தை விட்டுப் பிரிந்து, முதலாளித்துவ வர்க்கத்தை மீறி நிலத்தை யும் ஆட்சியதிகாரத்தையும் கைப்பற்றிக் கொள்ளும்போது, முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியில் அது ஒரு புதிய கட் டத்தைக் குறிப்பதாகிவிடும். இந்த விவகாரம் தனியே பரி சீலிக்கப்படும்.

இத்தகைய வருங்காலக் கட்டம் சாத்தியமே என்பதைக் கருத்தில் கொண்டு தற்போதைய நிலைமையில், விவசாயிகள் முதலாளித்துவ வர்க்கத்துடன் உடன்பாடு கொண்டுள்ள நிலைமையில், தனது கடமைகளை மறந்துவிடும் எந்த மார்க்சி யவாதியும் குட்டிபூர்ஷுவாவாக மாறிவிடுகிறார். ஏனெனில் நடைமுறையில் அவர் பாட்டாளி வர்க்கத்துக்குக் குட்டிபூர் ஷுவாக்களிடம் நம்பிக்கை உண்டாக்குவதற்காகப் பிரசாரம் செய்கிறவரே ஆவார் ("இந்தக் குட்டிபூர்ஷுவாக்கள்,

---

விவசாயமும் தானிய உற்பத்தியும் சீர்குலையும்படி விடக் கூடாது; மாறாக இவற்றை வளரச் செய்தாக வேண்டும். ஏனெனில் படைவீரர்களுக்கு இரு மடங்கு அதிக ரொட்டி தேவையாய் இருக்கிறது, மக்கள் பட்டினி கிடக்கும்படி விடப்படக்கூடாது.

இந்த விவசாயிகள், முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி நடந்து கொண்டிருக்கும்போதே முதலாளித்துவ வர்க்கத் திடமிருந்து பிரிந்து சென்றுவிடவேண்டும்''). மகிழ்ச்சியூட்டும் இந்த இனிய எதிர்காலத்துக்குரிய ''சாத்தியப்பாட்டின்'' காரணமாய், விவசாயிகள் முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒட்டிய வாலாய் இராத, சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின ரும், ச்ஹெயீத்ஸேக்களும், த்ஸெரெத்தேலிகளும், ஸ்தெக் லோவ்களும் முதலாளித்துவ அரசாங்கத்தின் தொங்குசதை யாய் இராத இந்த மகிழ்ச்சியூட்டும் எதிர்காலத்துக்குரிய ''சாத்தியப்பாட்டின்'' காரணமாய், கசாப்பான தற்போதைய நிலைமையை இவர் மறந்துவிடுகிறவர் ஆவார்; விவசாயிகள் இன்னமும் முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒட்டிய வாலாக வே இருந்து வரும், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின ரும் சமூக-ஜனநாயகவாதிகளும் முதலாளித்துவ அரசாங்கத் தின் தொங்குசதையாக, ''மேன்மை தங்கிய மன்னர் பிரான்'' லிவோவின் எதிர்த்தரப்பாளராகச்[6] செயல்படும் தமது பாத் திரத்தை இன்னமும் விட்டொழிக்காமல் இருந்துவரும் இன்றைய நிலைமையை மறந்துவிடுகிறவர் ஆவார்.

இந்தக் கற்பித ஆள் இனிப்பான லூயி பிளான்கையோ, சக்கரை போல தித்திக்கப் பேசும் காவுத்ஸ்கிவாதியையோ ஒத்திருப்பாரே அல்லாது ஒருபோதும் புரட்சிகர மார்க்சிய வாதியாய் இருக்க முடியாது.

ஆனால் நாம் அகநிலைவாதத்தினுள் சரிந்துவிடும் அபாயம் ஏற்படவில்லையா? இன்னமும் முடிவெய்தாத, விவசாயி இயக் கத்துக்கான சாத்தியக்கூறுகளுக்கு இன்னும் இடமிருக்கும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைத் ''தாவிச் சென்று'' சோஷலிசப் புரட்சியை வந்தடைய விரும்பும் அபாயம் ஏற் படவில்லையா?

''ஜார் ஒழிக, தொழிலாளர்களின் அரசாங்கமே வேண் டும்''[7] என்று நான் கூறியிருந்தால் இந்த அபாயத்தை ஏற் படுத்துகிறவனே ஆவேன். ஆனால் நான் அப்படிச் சொல்ல வில்லை, வேறொன்றையே சொன்னேன். ருஷ்யாவில் (முத லாளித்துவ அரசாங்கம் இல்லையேல்) தொழிலாளர்கள், விவ சாயத் தொழிலாளர்கள், படைவீரர்கள், விவசாயிகள் பிரதி நிதிகளது சோவியத்துகளின் அரசாங்கம் அல்லாமல் வேறு அரசாங்கம் எதுவும் இருக்க முடியாது என்று சொன்னேன்.

இன்று ருஷ்யாவில் குச்கோவ், லிவோவ் இவர்களிடமிருந்து ஆட்சியதிகாரம் இந்த சோவியத்துகளுக்கு மட்டுமே வர முடியும் என்றேன். இந்த சோவியத்துகளில் நிலைமை என்ன வென்றால், விவசாயிகளும் படைவீரர்களும்தான் பெரும் பான்மையோராய் இருக்கின்றனர், அதாவது விஞ்ஞான வழிப்பட்ட மார்க்சிய பதத்தைக் கையாண்டால், சாதாரண பேச்சில் அடிபடும் வழக்கமான உத்தியோகத் துறை குணநிர் ணயிப்பு அல்லாமல் வர்க்கக் குணநிர்ணயிப்பைக் கையாண் டால் குட்டிபூர்ஷுவாக்களே பெரும்பான்மையோராய் இருக் கின்றனர்.

இன்னமும் காலங் கடந்ததாகிவிடாத விவசாயி இயக் கத்தையோ பொதுவில் குட்டிபூர்ஷுவா இயக்கத்தையோ தாவிச் செல்வதை எதிர்த்து, தொழிலாளர்களுடைய அர சாங்கம் ''ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும்'' விளையாட்டினை எதிர்த்து, எந்த வகையான பிளாங்கிய சாகசவாதத்தையும்[8] எதிர்த்து நான் என்னுடைய ஆய்வுரைகளில் முழு அளவுக்குக் காப்பு செய்து கொண்டேன். இதன் பொருட்டு நான் திட்ட வட்டமான முறையில் பாரிஸ் கம்யூன் அனுபவத்தினைக் குறிப் பிட்டேன். இந்த அனுபவம் பிளாங்கியத்தை முழுமையாய் விலக்கி ஒதுக்குகிறது, பெரும்பான்மையோர் தாமே உணர்வு பூர்வமாய்ச் செயல்படும் அளவுக்கு மட்டும் இந்தப் பெரும்பான் மையோரின் நேரடியான, உடனடியான, சந்தேகத்துக்கு இடமில்லாத ஆட்சியையும் வெகுஜனங்களுடைய செயற் பாட்டையும் முழுமையாய் உறுதி செய்கிறது என்பதை நாம் அறிவோம், மார்க்ஸ் 1871லும் எங்கெல்ஸ் 1891லும் இதனை விளக்கமாய் நிரூபித்தனர்.[9]

தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவ சாயிகள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளினுள் செல்வாக்கு பெறும் போராட்டமாய் ஆய்வுரைகளில் மிகவும் திட்டவட்டமாய் நான் பிரச்சினையைக் குறுக்கி வகுத்திட் டேன். இது சம்பந்தமாய்த் துளியளவும் சந்தேகத்துக்கு இடம் விட்டு வைக்கலாகாதென்று ஆய்வுரைகளில் நான் ''வெகுஜனங்களின் நடைமுறைத் தேவைகளுக்குப் பொருத்தமான'', பொறுமையான, விடாப்பிடியான ''விளக் கப்'' பிரசாரத்தின் அவசியத்தை இரு முறை வலியுறுத்தி னேன்.

அறியாதோர் அல்லது திருவாளர் பிளெஹானவைப் போல் மார்க்சியத்தை விட்டோடிய ஓடுகாலிகள் அராஜக வாதம் என்றும் பிளாங்கியம் என்றும் இன்ன பலவாறுகவும் கூச்சல் எழுப்பக்கூடும். ஆனுல் சிந்திக்கவும் கற்றறிந்து கொள்ளவும் விரும்புவோர் பிளாங்கியமானது சிறுபான்மை யோர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதைக் குறிப்பதாகும் என்பதையும், இதற்கு மாருய் சோவியத்துகள் மக்களின் பெரும்பான்மையோரது உண்மையில் நேரடியான உடனடி ஒழுங்கமைப்பாகும் என்பதையும் புரிந்து கொள்ளத் தவற முடியாது. இந்த சோவியத்துகளின் உள்ளே செல்வாக்கு பெறும் போராட்டத்தின் வரம்புக்குட்பட்ட பணி பிளாங் கியச் சகதியினுள் பிசகிச் சென்று விட முடியாது, ஒருபோ தும் முடியவே முடியாது. அதே போல இப்பணி அராஜக வாதச் சகதியினுள்ளும் பிசகிச் சென்றுவிட முடியாது, ஏனெ னில் அராஜகவாதமானது முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட் சியிலிருந்து பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சிக்கு மாறிச் செல்லும் இடைக்காலக் கட்டத்தில் அரசும் அரசு அதிகாரமும் அவசியமென்பதை மறுக்கிறது; இதற்கு மாருக நான், தவருன அர்த்தத்துக்குச் சிறிதும் இடமளியாத துல்லியத்துடன், இந்தக் கால கட்டத்தில் அரசின் அவசியத்தை வலியுறுத்தி வாதாடுகிறேன். ஆனுல் மார்க்சுக்கும் பாரிஸ் கம்யூன் அனுபவத் துக்கும் ஏற்ப, நிரந்தர சேனை இல்லாத, மக்களுக்கு எதிரான போலீஸ் இல்லாத, மக்களுக்கு மேலானேரான அதிகாரிகளா லான அமைப்பு இல்லாத அரசையே வலியுறுத்தி வாதாடு கிறேனே அன்றி, வழக்கமான பாராளுமன்ற-முதலாளித்துவ அரசையல்ல.

திருவாளர் பிளெஹானவ் அவருடைய யெதின்ஸ்த்வோ[10] செய்தியேட்டில் இது அராஜகவாதமே என்பதாய்த் தமது முழு பலத்தையும் கொண்டு கூச்சல் எழுப்புகையில், மார்க் சியத்திலிருந்து அவர் முறித்துக்கொண்டுவிட்டதற்கு மேலும் ஒரு சான்று அளிக்கிருரே தவிர வேறல்ல. அரசு குறித்து மார்க்சும் எங்கெல்சும் *1871*, *1872*, *1875*ஆம் ஆண்டு களில் போதித்தது என்னவென்று* கூறும்படி பிராவ்தாவில்

* பார்க்கவும்: லெனின், நூல் திரட்டு, தொகுதி *31*, ''தற்போதையப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் பணிகள்'', பக்கங்கள் *117-18*.—பதிப்பாசிரியர்.

(இதழ் 26) நான் அவருக்குச் சவால் விடுத்தபோது, சர்ச்சையிலுள்ள பிரச்சினை குறித்து ஒன்றும் சொல்லாமல் மௌனம் சாதித்துவிட்டு, சீற்றமுற்ற முதலாளித்துவ வர்க்கத்தாரின் பாணியிலே வசவுகளைத்தான் வாரியெறிய முடிந்தது.

முன்னாள்-மார்க்சியவாதியான திருவாளர் பிளெஹானவ், அரசு பற்றிய மார்க்சியப் போதனையைப் புரிந்து கொள்ள அடியோடு தவறிவிடுகிறார். இதை அவர் புரிந்து கொள்ளவில்லை என்பதைக் காட்டும் வித்துக்கள் அராஜகவாதத்தைப் பற்றிய அவருடைய ஜெர்மன் மொழிப் பிரசுரத்திலும்[11] காணப்படுவதை இங்கு குறிப்பிடலாம்.

* * *

இனி என்னுடைய ஆய்வுரைகளிலும் மேலே எடுத்துரைக்கப்பட்டுள்ள கருத்தோட்டங்களிலும் தோழர் யூ.காமெனெவ் தமது "கருத்து வேறுபாடுகளை" பிராவ்தா இதழ் 27ல் எப்படி வகுத்தளிக்கிறார் என்பதைக் காண்போம். இவற்றை மேலும் தெளிவாய்ப் புரிந்து கொள்ள இது நமக்கு உதவியாய் இருக்கும்.

> "தோழர் லெனினுடைய பொதுத் திட்டம் பொறுத்தவரை, அது எங்களுக்கு ஏற்புடையதாய்த் தெரியவில்லை" என்று தோழர் காமெனெவ் எழுதுகிறார். "ஏனெனில், அது முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி நிறைவுற்றுவிட்டது என்று கொண்டு அதிலிருந்து தொடங்கி, இந்தப் புரட்சியை சோஷலிசப் புரட்சியாய் உடனடியாய் மாற்ற வேண்டும் என்று திட்டமிடுகிறது..."

இங்கு இரு பெருந் தவறுகள் உள்ளன.

முதலாவது. முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி "நிறைவுறும்" பிரச்சினை தவறான முறையில் எடுத்துரைக்கப்படுகிறது. இப்பிரச்சினை கருத்தியலான எளிய முறையில், ஒற்றை நிறத்தில் எனலாம், குறிக்கப்படுகிறது. இது எதார்த்த உண்மைக்குப் பொருந்துவதாய் இல்லை. பிரச்சினையை இந்த

மூறையில் குறிப்பிடுவதானது, இப்பொழுது ''முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி நிறைவுற்றுவிட்டதா'' என்று கேட்டு விட்டு அதற்குமேல் எதுவும் சொல்லாதிருப்பதானது, மிக வும் சிக்கலான எதார்த்த உண்மையை, குறைந்தது ''இரு நிறத்திலாவது'' இருக்கக்கூடிய இதனைப் பார்க்காது தன்னைத் தானே தடுத்துக் கொள்வதாகும். இது தத்துவார்த்த நிலை யில். நடைமுறையில் இது குட்டிபூர்ஷுவா புரட்சிவாதத்துக்குத் திராணியற்றுப் போய் சரணடைந்து விடுவதே ஆகும்.

உண்மையில் எதார்த்தமானது ஆட்சியதிகாரம் முத லாளித்துவ வர்க்கத்தின் கைகளுக்கு செல்வது (வழக்கமான வகையைச் சேர்ந்த ''நிறைவுற்ற'' முதலாளித்துவ-ஜன நாயகப் புரட்சி), மெய்யான அரசுடன் கூடவே ''பாட்டாளி வர்க்கம், விவசாயிகளுடைய புரட்சிகர-ஜனநாயக சர்வாதி காரத்தைக்'' குறிக்கும் இணை அரசாங்கம் ஒன்று இருப்பது ஆகிய இரண்டையும் காட்டுகிறது. இந்த ''இரண்டாவது அரசாங்கம்'' தானே ஆட்சியதிகாரத்தை முதலாளித்துவ வர்க்கத்துக்கு விட்டுக்கொடுத்துள்ளது, முதலாளித்துவ அரசாங்கத்துடன் தன்னைத் தானே கட்டுண்டுவிடும்படிச் செய்துள்ளது.

இந்த எதார்த்த நிலைமை ''முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி நிறைவுறவில்லை'' என்று கூறும் தோழர் காமெனெ வின் பழைய-போல்ஷிவிக் சூத்திரத்தில் உள்ளடக்கப்படு கிறதா?

உள்ளடக்கப்படவில்லை. இந்தச் சூத்திரம் காலாவதியாகி விட்டது. இது உதவாக்கரையாகிவிட்டது. மடிந்து உயிரற்ற தாகிவிட்டது. இதற்கு உயிரூட்ட முயன்று பயனில்லை.

இரண்டாவது. ஒரு நடைமுறைப் பிரச்சினை. தனிவகை யான ''பாட்டாளி வர்க்கம், விவசாயிகளது புரட்சிகர-ஜன நாயக சர்வாதிகாரம்'' ஒன்று, முதலாளித்துவ அரசாங்கத் திலிருந்து துண்டித்துக் கொண்டு வந்துவிட்ட ஒன்று தற்போது இன்னமும் சாத்தியமா என்று யாருக்குத் தெரியும்? மார்க் சியப் போர்த்தந்திரத்தைத் தெரியாத ஒன்றன் அடிப்படை யிலே அமைத்துக் கொள்ள முடியாது.

ஆனால் இன்னமும் இது சாத்தியமே என்றால், பிறகு அதற் குரிய வழி ஒன்றே ஒன்றுதான். குட்டிபூர்ஷுவா கூறுகளிட மிருந்து உடனடியாகவும், தீர்மானமாகவும், முடிவாகவும்

பாட்டாளி வர்க்க, கம்யூனிஸ்டுக் கூறுகளைப் பிரித்திடுவது தான் அந்த வழி.

ஏன் அப்படி?

ஏனென்றால் குட்டிபூர்ஷுவாக்கள் அனைவரும் தற்செயலாய் அல்ல, வேண்டுமென்றே தேசியவெறியின் (=பாதுகாப்புவாதத்தின்) பக்கம் திரும்பியுள்ளனர்; முதலாளித்துவ வர்க்கத்துக்கு ''ஆதரவளிப்பது'', அதைச் சார்ந்திருப்பது, அதன்றி இருப்பது குறித்து அஞ்சுவது இத்தியாதி நிலையின் பக்கம் திரும்பியுள்ளனர்.

குட்டிபூர்ஷுவாக்கள் இப்பொழுதே ஆட்சியதிகாரத்தை மேற்கொள்ள முடியும், ஆனால் இவ்வாறு விரும்பவில்லை என்றால், அவர்களை ஆட்சியதிகாரத்தை மேற்கொள்ளும்படி ''தள்ளிவிடுவது'' எப்படி?

பாட்டாளி வர்க்க, கம்யூனிஸ்டுக் கட்சியைப் பிரிந்து வரச் செய்வதன் மூலம் மட்டுமே, இந்தக் குட்டிபூர்ஷுவாக்களின் கோழைத்தனத்திலிருந்து விடுபட்டு பாட்டாளி வர்க்கப் போராட்டத்தை நடத்துவதன் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும். சொல்லளவில் மட்டுமின்றி செயலிலும் குட்டிபூர்ஷுவாச் செல்வாக்கிலிருந்து விடுபட்ட பாட்டாளி வர்க்கத்தினரை ஒன்றுதிரட்டி உறுதியாக்கினால்தான் குட்டி பூர்ஷுவாக்களின் காலுக்கடியில் தரை கொதிப்படைந்து குறிப்பிட்ட சில நிலைமைகளில் அவர்கள் ஆட்சியதிகாரத்தை மேற்கொள்ளும் படியான நிர்ப்பந்தம் ஏற்பட முடியும். குச்கோவும் மில்யூக்கோவும்—குறிப்பிட்ட சில நிலைமைகளில் என்பதைத் திரும்பவும் கூற வேண்டும்—எப்படியும் ''பாதுகாப்புவாதிகளாகவே'' இருந்துவரும் ச்ஹெயித்ஸே, த்ஸெரெத்தேலி, சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர், ஸ்தெக்லோவ் ஆகியோரிடம் முழு ஆட்சியதிகாரத்தையும் விட்டுவிடத் தயாராயிருப்பார்கள் என்பதும்கூட சாத்தியப்பாட்டின் வரம்புகளுக்கு உட்பட்டதுதான்.

சோவியத்துகளில் பாட்டாளிவர்க்கக் கூறுகளை (அதாவது, பாட்டாளி வர்க்க, கம்யூனிஸ்டுக் கட்சியை) குட்டி பூர்ஷுவாக் கூறுகளிலிருந்து இப்பொழுதே, உடனடியாகவும் முடிவாகவும் பிரித்திடுவது, நிகழ்ச்சிகளின் சாத்தியமான இரு சந்தர்ப்பங்களில் எதிலும் இயக்கத்தின் நலன்களைப் பிழையற்றபடி பிரதிபலிக்கச் செய்வதாகும்; முதலாளித்துவ

வர்க்கத்தைச் சாராத சுயேச்சையான தனிவகைப் பட்ட ''பாட்டாளி வர்க்கம், விவசாயிகளது சர்வாதிகாரம்'' இனியும் ருஷ்யாவில் ஏற்படுவதாயினும், குட்டிபூர்ஷுவாக்களால் முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து பிய்த்துக் கொண்டு வர முடியாமற் போய் நமக்கும் அதற்குமிடையே காலகாலத்துக்கும் (அதாவது, சோஷலிசம் நிறுவப்படும் வரையில்) ஊசலாடுமாறு ஏற்படுவதாயினும் இரு சந்தர்ப்பங்களிலும் பிரதிபலிக்கச் செய்வதாகும்.

''முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி நிறைவுறவில்லை'' என்கிற எளிய சூத்திரத்தால் மட்டும் வழிகாட்டப் பெற்றுச் செயல்படுவதானது, குட்டிபூர்ஷுவாக்களால் நிச்சயமாய் முதலாளித்துவ வர்க்கத்தை சாராது சுயேச்சையாய் இருக்க முடியுமென உறுதி கூறுவதற்கு ஒப்பானதாகிவிடும். அவ்வாறு செய்வது அத்தருணத்தில் குட்டிபூர்ஷுவாக்களின் காலடியில் விழுந்து அவர்களுடைய தயவை எதிர்பார்ப்பதாகிவிடும்.

பாட்டாளி வர்க்கம், விவசாயிகளது சர்வாதிகாரம் என்னும் ''சூத்திரம்'' சம்பந்தமாய் இரு போர்த்தந்திரங்களில் (1905 ஜூலை) நான் குறிப்பாய்ப் பின்வருமாறு வலியுறுத்தியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும் (பன்னிரண்டு ஆண்டுகள், பக்கம் 435):

''உலகில் வேறு எதற்கும் இருப்பது போலவே பாட்டாளி வர்க்கம், விவசாயிகளது புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரத்துக்கும் கடந்த காலமும் எதிர்காலமும் உண்டு. அதன் கடந்த காலம்—எதேச்சாதிகாரமும், பண்ணையடிமை முறையும், முடியாட்சியும், தனிச் சலுகைகளும்... அதன் எதிர்காலம்—தனியார் சொத்துரிமைக்கு எதிரான போராட்டமும், முதலாளிக்கு எதிரான கூலி-உழைப்பாளரின் போராட்டமும், சோஷலிசத்துக்கான போராட்டமும்...''*

தோழர் காமெனெவின் தவறு என்னவெனில் 1917ஆம் ஆண்டிலுங்கூட அவர் பாட்டாளி வர்க்கம், விவசாயிகளது புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரத்தின் கடந்த காலத்தை மட்டுமேதான் பார்க்கிறார். நடைமுறையில் அதன் எதிர்காலம் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. ஏனெனில் கூலி-உழைப்

---

* பார்க்கவும்: லெனின், நூல் திரட்டு, தொகுதி 11, பக்கம் 74.—பதிப்பாசிரியர்.

பாளர், சிறு உடைமையாளர் இவர்கள் இருவரது நலன்களும் கொள்கைகளும் ''பாதுகாப்புவாதம்'', ஏகாதிபத்திய யுத்தம் குறித்து அனுசரிக்கும் போக்கு இவை போன்ற முக்கியப் பிரச்சினையிலுங்கூட நடைமுறையில் ஏற்கனவே ஒன்றை விட்டு ஒன்று விலகிப் பிரிந்து சென்றுவிட்டன.

இது என்னைத் தோழர் காமெனெவின் மேற்குறிப்பிட்ட வாதத்திலுள்ள இரண்டாவது தவறுக்கு இட்டுச் செல்கிறது. என்னுடைய திட்டம் ''இந்த [முதலாளித்துவ-ஜனநாயகப்] புரட்சியை சோஷலிசப் புரட்சியாய் உடனடியாய் மாற்றத் திட்டமிடுவதாய்'' சொல்லி என்னை அவர் குற்ற விமர்சனம் செய்கிறார்.

இது சரியல்ல. நம்முடைய புரட்சியை சோஷலிசப் புரட்சியாய் ''உடனடியாய் மாற்ற'' வேண்டுமென நான் ''திட்டமிட''வில்லை என்பதுடன், உண்மையில் இதை எதிர்த்து எச்சரிக்கை செய்கிறேன். ஆய்வுரை 8ல் நான் ''...சோஷலிசத்தைப் 'புகுத்துவது' நமது உடனடிப் பணி அல்ல...''* என்று கூறி எச்சரிக்கை செய்கிறேன்.

நமது புரட்சியை சோஷலிசப் புரட்சியாய் உடனடியாகவே மாற்ற வேண்டுமெனத் திட்டமிடுகிறவர் எவரும் சோஷலிசத்தைப் புகுத்துவதே உடனடிப் பணி என்பதை எதிர்க்க முடியாதென்பது தெளிவாய் விளங்கவில்லையா?

தவிரவும், ''கம்யூன்-அரசையுங்''கூட (அதாவது பாரிஸ் கம்யூன் வழியில் ஒழுங்கமைந்த ஓர் அரசு) ருஷ்யாவில் ''உடனடியாகப்'' புகுத்திவிட முடியாது. ஏனெனில் இதைச் செய்வதற்கு எல்லா சோவியத்துகளிலும் (அல்லது மிகப் பெருவாரியானவற்றில்) பெரும்பான்மையான பிரதிநிதிகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் ச்ஹெயித்ஸேயும் த்ஸெரெத்தேலியும் ஸ்தெக்லோவும் இன்ன பிறரும் கடைப்பிடிக்கும் போர்த்தந்திரமும் கொள்கையும் தவறானவை, தீங்கிழைப்பவை என்பதைத் தெளிவாய் ஏற்றுக் கொள்வது அவசியமாகும். என்னைப் பொறுத்தவரை இத்துறையில் நான் ''பொறுமையாய்'' விளக்கிச் சொல்வதென்ற ஒரே அடிப்

---

* பார்க்கவும்: ''தற்போதையப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் பணிகள்'' (லெனின், நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 116).—பதிப்பாசிரியர்.

படையில்தான் ''திட்டமிடுகிறேன்'' என்று சந்தேகத்துக்கு இடமின்றி அறிவித்தேன் (''உடனடியாகவே'' செய்துவிடக் கூடிய ஒரு மாறுதலை ஏற்படுத்துவதற்கு பொறுமையாகவா இருக்க வேண்டும்?).

தோழர் காமெனெவ் தமது ஆவலால் உந்தப்பட்டு கொஞ்சம் அதிகப்படியாகவே போய்விடுகிறார். பாரிஸ் கம்யூன் ''உடனடியாகவே'' சோஷலிசத்தைப் புகுத்த விரும்பிய தென்ற முதலாளித்துவப் புரளியைத் தாமும் திருப்பிக் கூறி யுள்ளார். இது உண்மையல்ல. கம்யூனது துரதிருஷ்டவச மாய் சோஷலிசத்தைப் புகுத்துவதில் கால் தாமதம் செய்து விட்டது. கம்யூனுடைய மெய்யான சாரம் முதலாளித்துவ வாதிகள்வழக்கமாய்த்தேடும் இடத்தில் அடங்கியிருக்கவில்லை, ஒரு தனிவகை அரசு தோற்றுவிக்கப்பட்டதில்தான் அதன் சாரம் அடங்கியுள்ளது. இத்தகைய ஓர் அரசு ஏற்கனவே ருஷ்யாவில் தோன்றியிருக்கிறது. தொழிலாளர்கள், படை வீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துகள்தான் அந்த அரசு!

இந்த உண்மை குறித்து, தற்போதுள்ள சோவியத்துகளின் முக்கியத்துவம் குறித்து, வகையிலும் சமூக-அரசியல் பண்பியலிலும் அவை கம்யூன் அரசை முழுதொத்தனவாய் இருப்பது குறித்து தோழர் காமெனெவ் சிந்தனை செய்தார் இல்லை. உண்மையை ஆய்ந்தறிவதற்குப் பதில் அவர் ''உட னடியான'' எதிர்காலத்துக்காக நான் எதையோ ''திட்டமிடு வதாய்க்'' கொண்டு அதைப் பற்றி பேசத் தொடங்குகிறார். துரதிருஷ்டவசமாய் இதன் விளைவு என்னவென்றால் முத லாளித்துவவாதிகள் பலரும் கையாளும் அதே முறையினை அவரும் அப்படியே கையாளுகிறார்: தொழிலாளர்கள், படை வீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துகள் எப்படிப்பட்டவை, பாராளுமன்றக் குடியரசைக் காட்டிலும் அவை உயர்ந்த வகையானவையா, மக்களுக்கு அவை இன்னும் அதிக பயன் அளிப்பவையா, அதிக ஜனநாயகம் கொண்டவையா, போராட் டத்துக்கு, உதாரணமாய் தானியப் பற்றுக்குறை போன்ற வற்றை எதிர்த்துப் போராடுவதற்கு அதிக வசதி படைத்த வையா என்கிற இந்த மெய்யான, அவசர அவசியமான, ஜீவாதாரமான பிரச்சினையை விட்டுவிட்டு வெற்றுப் பிரச் சினைக்கு, விஞ்ஞானப் பூச்சுடையதாயினும் உண்மையில் பொருளற்ற, மேதாவித்தன மினுக்கு கொண்ட உயிரற்ற

''உடனடியாய் மாற்ற வேண்டுமென்று திட்டமிட்டுச் செல்லும்'' பிரச்சினைக்குக் கவனம் திசை திருப்பப்படுகிறது.

வெற்றுப் பிரச்சினை தவறான முறையில் எழுப்பப்படுகிறது. அதிக அளவில் தானியம் உற்பத்தி செய்தல், அதைத் திறம்பட வினியோகித்தல், படைவீரர்களுக்குத் திறம்படக் கிடைக்கச் செய்தல் முதலான கடினமான நடைமுறைப் பிரச்சினைகளுக்கு அதிகாரிகளைக் காட்டிலும், போலீசைக் காட்டிலும் தொழிலாளர்கள், படைவீரர்கள், விவசாயிகள் சிறந்த முறையில் தீர்வுகாண்பார்கள்—இந்த ஒன்றின்மீது மட்டுமே, முழுக்க முழுக்க இதன்மீதுதான் நான் ''திட்டமிடுகிறேன்''

பாராளுமன்றக் குடியரசைக் காட்டிலும் சோவியத்துகள் வெகுஜனங்களுடைய சுயேச்சையான செயற்பாட்டினை மேலும் விரைவாகவும் பயனுள்ள முறையிலும் எதார்த்த நிலவரமாக்கும்—இதில் எனக்குத் துளியும் ஐயப்பாடு இல்லை (இந்த இருவகை அரசுகளையும் இன்னொரு கடிதத்தில் விவரமாய் ஒப்பீடு செய்து காட்டுகிறேன்). சோஷலிசத்தை நோக்கிச்செல்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் யாவை, இவை எடுக்கப்பட வேண்டிய முறை என்ன என்பதை சோவியத்துகள் மிகவும் பயனுள்ளவாறும் நடைமுறை சாத்திய முறையிலும் பிழையின்றியும் முடிவு செய்யக் கூடியவை. பாங்கியின்மீது கட்டுப்பாடு நிறுவுதலோ, எல்லா பாங்கிகளையும் ஒரே பாங்கியாய் இணைத்தலோ சோஷலிசம் ஆகிவிடவில்லை, ஆனால் இது சோஷலிசத்தை நோக்கிச் செல்வதற்கான நடவடிக்கையாகும். இன்று ஜெர்மனியில் இத்தகைய நடவடிக்கைகள் மக்களுக்கு எதிராய் ஐங்கர்களாலும் முதலாளித்துவ வர்க்கத்தாலும் எடுக்கப்பட்டு வருகின்றன. நாளைக்கு தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துகள், அரசு அதிகாரம் அனைத்தும் அவற்றின் கைகளுக்கு வந்துவிடும் பட்சத்தில், இந்த நடவடிக்கைகளை மேலும் திறம்பட எடுத்து மக்களுக்கு நலம் பயக்க முடியும்.

இந்த நடவடிக்கைகளை எடுக்கும்படிக் கட்டாயம் செய்பவை எவை?

பஞ்சம். பொருளாதாரச் சீர்குலைவு. நெருங்கி வரும் தகர்வு. யுத்தத்தின் பயங்கர விளைவுகள். யுத்தத்தால் மனிதகுலத்துக்கு ஏற்படும் பயங்கரக் கொடுமைகள்.

தோழர் காமெனெவ் ''விரிவான ஒரு விவாதத்தில் தான் தனது கருத்தோட்டத்தை நிலேநாட்டி ஏற்கப்படுமாறு செய்ய முடியுமென நம்புவதாகவும், புரட்சிகர சமூக-ஜனநாயகம் கம்யூனிஸ்டுப் பிரசாரகர்களது ஒரு குழுவாய்க் குறுகிவிடாது இறுதிவரை பாட்டாளி வர்க்கப் புரட்சிகர வெகுஜனங்களது கட்சியாய் இருக்க விரும்பிஞல் (அவ்வாறே அது இருக்க வேண்டும்), இது ஒன்றுதான் சாத்தியமான ஒரே கருத்தோட்டம் என்பதாகவும்'' கூறித் தமது கட்டுரையை முடிக்கிருர்.

இந்தச் சொற்கள் சூழ்நிலைமை பற்றிய முற்றிலும் தவருன மதிப்பீட்டை வெளிப்படுத்துவதாய் எனக்குத் தோன்றுகிறது. ''வெகுஜனங்களது கட்சிக்கு'' எதிராய்ப் ''பிரசாரகர்களது குழுவை'' வைத்துப் பேசுகிருர் தோழர் காமெனெவ். ஆனல் ''வெகுஜனங்கள்'' இப்பொழுது ''புரட்சிகரப்'' பாதுகாப்புவாதத்தின் பித்தத்தால் பீடிக்கப்பட்டுவிட்டார்கள். சர்வதேசியவாதிகளானேர் இத்தருணத்தில் வெகுஜனங்களுடன் தாமும் ''இருக்க விரும்புவதைக்'' காட்டிலும், அதாவது எல்லோரையும் பிடித்தாட்டும் இந்தப் பித்தத்தால் தாமும் பீடிக்கப்பட விரும்புவதைக் காட்டிலும், ''வெகுஜன'' மதிமயக்கத்தைத் தம்மால் எதிர்த்து நிற்க முடியுமெனக் காட்டுவது சிறப்புடைத்தது அல்லவா? யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் தேசிய வெறியர்கள் ''வெகுஜனங்களுடன் இருக்கத்'' தமக்குள்ள விருப்பத்தைக் காரணமாய்க் காட்டி, தமக்கு நியாயம் கற்பிக்க முயன்றதை நாம் பார்க்கவில்லையா? ''வெகுஜன'' மதிமயக்கத்தை எதிர்த்து நாம் சிறிது காலத்துக்குச் சிறுபான்மையாய் இருக்கும் திறனுள்ளவர்களாய் இருத்தல் வேண்டாமா? பாதுகாப்புவாத, குட்டிபூர்ஷுவா ''வெகுஜன'' மதிமயக்கத்திலிருந்து பாட்டாளி வர்க்கக் கொள்கை வழியை தனியே பிரித்துக் காட்டுவதில் தற்போதைய தருணத்தில் கேந்திர நிலே வகிப்பது பிரசாரகர்களின் பணி அல்லவா? வெகுஜனங்களிடையே வர்க்க வேறுபாடுகளேக் கவனியாது பாட்டாளி வர்க்கத்தினர், பாட்டாளி வர்க்கமல்லாதோர் ஆகிய வெகுஜனங்களே இவ்விதம் ஒன்றிணைத்ததுதான் பாதுகாப்புவாத வெறியாட்டம் தலேதூக்குவதற்

குரிய நிலைமைகளில் ஒன்ருய் இருந்தது. பாட்டாளி வர்க்கக் கொள்கை வழிக்காகப் பாடுபடும் ''பிரசாரகர்களின் குழு'' குறித்து மட்டமாய்ப் பேசுவது நன்ருயில்லை.

| | |
|---|---|
| *1917 ஏப்ரல் 8க்கும் 13க்கும் (21க்கும் 26க்கும்) இடையில் எழுதப்பெற்றது* | நூல் திரட்டு, தொகுதி *31*; பக்கங்கள் *131-44* |

*1917 ஏப்ரலில் பெத்ரொகிராதில் ''பிரிபோய் பதிப்பகத்தால்'' பிரசுரமாய் வெளியிடப்பட்டது*

# "இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சி" என்பதிலிருந்து

யுத்தமானது புரட்சிகர சூழ்நிலையை உண்டாக்கும் என்று எதிர்பார்த்துத்தான் நேர்மையான சோஷலிஸ்டுகள் பாசெல் தீர்மானத்தை[12] ஆதரித்தனர் என்றும், ஆனால் புரட்சி சாத்தியமற்றதாகிவிடவே நிகழ்ச்சிகள் அவர்களை மறுதலிக்கச் செய்துவிட்டன என்றும் கொள்ளலாமா?

இது போன்ற குதர்க்கவாதத்தைக் கொண்டுதான் கூனெவ் (கட்சியின் வீழ்ச்சியா? என்னும் பிரசுரத்திலும் வரிசையாய்ப் பல கட்டுரைகளிலும்) முதலாளித்துவ வர்க்கத்தின் முகாமுக்குத் தாம் ஓடிவிட்டதற்கு நியாயம் கூற முயன்றிருக்கிறார். காவுத்ஸ்கியின் தலைமையிலுள்ள அனேகமாய் ஏனைய எல்லா சமூக-தேசியவெறியர்களின் எழுத்துக்களிலும் இதையொத்த ''வாதங்கள்தான்'' சூசகமாய்க் குறிப்பிடப்படுகின்றன. புரட்சி வருமென்ற நம்பிக்கைகள் வெறும் பிரமையாகிவிட்டன, பிரமைகளுக்காகப் போராடுவது மார்க்சியவாதிக்குரிய செயலாகாது என்று கூனெவ் வாதாடுகிறார். ஆனால் பாசெல் அறிக்கையில் கையொப்பமிட்ட எல்லோருக்கும் இந்தப் ''பிரமைகளில்'' பங்குண்டு என்பது குறித்து இந்த ஸ்த்ருவிஸ்டு[13] ஒரு வார்த்தைகூடக் கூறக் காணோம். பெனெகக்கையும் ராதேக்கையும் போன்ற அதிதீவிர இடது சாரிகளையே குற்றம் கூற வேண்டும் என்பதாய் அப்பழுக்கில்லா நேர்மையாளரைப் போல அவர் பாவனை செய்கிறார்.

பாசெல் அறிக்கையைத் தயாரித்தவர்கள் புரட்சி வருமென்று நேர்மையாகவே எதிர்பார்த்தனர், ஆனால் நிகழ்ச்சிகள் அவர்களை மறுதலிக்கச் செய்துவிட்டன என்கிற வாதத்தின் கருப்பொருளைப் பரிசீலிப்போம். பாசெல் அறிக்கை கூறுவதாவது: (1) யுத்தமானது பொருளாதார, அரசியல்

நெருக்கடியை உண்டாக்கும்; (2) தொழிலாளர்கள் தாம் யுத்தத்தில் பங்குகொள்வது குற்றமாகுமென்றும், ''முதலாளி களுடைய லாபத்துக்காகவும், அரசவம்சத்தினரின் சிறப்புக் காகவும், இரகசிய அரசு ஒப்பந்தங்களின் நிறைவேற்றத்துக் காகவும் தாம் ஒருவரை யொருவர் சுட்டுக் கொள்வது'' மன் னிக்க முடியாத கொடுங் குற்றமாகுமென்றும் கருதுகிறார்கள்; யுத்தத்தால் தொழிலாளர்களிடம் ''ஆத்திரமும் கலகமும் தான்'' எழுகின்றன; (3) இந்த நெருக்கடியையும் தொழி லாளர்களுடைய கோபாவேசத்தையும் சாதகமாய்ப் பயன் படுத்தி ''மக்களைத் தட்டியெழுப்புவதும், முதலாளித்துவத் தின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்துவதும்'' சோஷலிஸ்டுக ளுடைய கடமையாகும்; (4) விதிவிலக்கின்றி எந்த ''அரசாங் கமும்'' ''தனக்குப் பேரபாயத்தை'' ஏற்படுத்திக் கொள் ளாமல் யுத்தத்தைத் துவக்க முடியாது; (5) அரசாங்கங்கள் ''பாட்டாளி வர்க்கப் புரட்சியைக் கண்டு அஞ்சுகின்றன''; (6) அரசாங்கங்கள் பாரிஸ் கம்யூனையும் (அதாவது உள் நாட்டு யுத்தத்தையும்), 1905ஆம் ஆண்டு ருஷ்யப் புரட்சி யையும் இன்ன பிறவற்றையும் ''நினைவில் கொண்டிருக்க வேண்டும்''. இவை யாவும் தெட்டத் தெளிவான கருத்துக் கள். இவை உண்மை நிலவரங்களும் போக்குகளும் கறாராய் குணநிர்ணயம் செய்யப்படுவதை வலியுறுத்துகின்றனவே ஒழிய, புரட்சி ஏற்பட்டுவிடும் என்று உத்தரவாதம் செய்ய வில்லை. எதிர்பார்க்கப்பட்ட புரட்சி வெறும் பிரமையாகி விட்டது என்பதாய் இந்தக் கருத்துக்களையும் வாதங்களையும் பற்றி கூறுபவர் எவரும் புரட்சியின்பால் ஸ்த்ருவிஸ்டு, போலீஸ்-ஓடுகாலிப் போக்கை வெளியிடுகிறாரே அன்றி மார்க்சியவாதியின் போக்கை அல்ல.

புரட்சிகரச் சூழ்நிலை இல்லாமல் புரட்சி சாத்தியமல்ல என்பதும், தவிரவும் புரட்சிகரச் சூழ்நிலை ஒவ்வொன்றும் புரட்சியை மூளச் செய்துவிடுவதில்லை என்பதும் மார்க்சிய வாதிக்கு மறுக்க முடியாதவை. பொதுவில், புரட்சிகரச் சூழ் நிலை என்பதற்குரிய அறிகுறிகள் யாவை? பின்வரும் மூன்று பிரதான அறிகுறிகளைக் குறிப்பிடுவது சிறிதும் தவறாகாது: (1) ஆளும் வர்க்கங்கள் தமது ஆட்சியை எந்த மாற்றமு மின்றித் தொடர்ந்து நடத்திச் செல்வது சாத்தியமற்றதாகி விடுதல்; ''மேல் வர்க்கங்களிடையே'' ஏதேனும் ஒரு வடி

வத்தில் நெருக்கடி ஏற்பட்டு, ஆளும் வர்க்கத்தினுடைய கொள்கையில் நெருக்கடி ஏற்பட்டு, இதன் காரணமாய் ''வெடிப்பு'' தோன்றி ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய அதிருப்தியும் ஆத்திரமும் அதன் வழியே பீறிட்டெழுதல். புரட்சி ஏற்பட பழைய வழியில் வாழ ''அடிநிலை வர்க்கங்கள் விரும்பாதது'' மட்டும் போதாது; பழைய வழியில் வாழ ''மேல் வர்க்கங்களால் முடியாமற்போவதும்'' அவசியமாகும். (2) ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய துயரும் வறுமையும் வழக்கம் போலல்லாது மிகவும் தீவிரமடைந்துவிடுதல். (3) மேற்கண்ட காரணங்களின் விளைவாய் வெகுஜனங்களுடைய செயற்பாடு கணிசமாய் அதிகரித்துவிடுதல். ''சமாதான காலத்தில்'' தாம் சூறையாடப்படுவதற்கு முறையீடின்றி இடமளித்துவிடும் வெகுஜனங்கள், கொந்தளிப்பான காலங்களில், வரலாறு படைக்கும் சுயேச்சைச் செயலில் இறங்கும்படி நெருக்கடியின் சூழ்நிலை அனைத்தாலும் மற்றும் ''மேல் வர்க்கங்களாலுங்கூட'' இழுக்கப்பட்டுவிடுகிறார்கள்.

தனிப்பட்ட கோஷ்டிகள், கட்சிகளின் சித்தத்தை மட்டுமின்றி, தனிப்பட்ட வர்க்கங்களின் சித்தத்தையும் சார்ந்திராத இந்தப் புறநிலை மாறுதல்கள் இல்லாமல், வழக்கமாய்ப் புரட்சி சாத்தியமன்று. இந்தப் புறநிலை மாறுதல்கள் யாவும் சேர்ந்த ஒட்டுமொத்தமே புரட்சிகரச் சூழ்நிலை எனப்படுவது. இத்தகைய ஒரு சூழ்நிலை ருஷ்யாவில் 1905லும், மேலைய நாடுகளில் எல்லாப் புரட்சிகரக் கட்டங்களிலும் நிலவிற்று. மற்றும், ஜெர்மனியில் கடந்த நூற்றாண்டின் அறுபதாம் ஆண்டுகளிலும் ருஷ்யாவில் 1859-61லும் 1879-80லும் இந்தச் சூழ்நிலை நிலவிற்று என்றாலும், இச்சந்தர்ப்பங்களில் புரட்சி ஏற்படவில்லை. காரணம் என்ன? காரணம் என்னவென்றால், புரட்சிகரச் சூழ்நிலை ஒவ்வொன்றும் புரட்சியை உண்டாக்கிவிடுவதில்லை. மேற்கண்ட புறநிலை மாறுதல்களுடன்கூட அகநிலை மாற்றமும் இருக்கையில்தான், அதாவது பழைய அரசாங்கத்தைத் தகர்க்கும்படியான (அல்லது சீர்குலைக்கும்படியான)—அரசாங்கம் ''கவிழ்க்கப்படாதவரை'', நெருக்கடியான கட்டத்திலுங்கூட அது ''விழுந்துவிடுவ'' தில்லை—பலம் பொருந்திய புரட்சிகர வெகுஜனச் செயலை மேற்கொள்ளும் ஆற்றல் புரட்சிகர வர்க்கத்திடம் இருக்கையில்தான், புரட்சி எழுகிறது.

இவையே புரட்சியைப் பற்றிய மார்க்சியக் கருத்தோட்டங்கள். மிகப் பல தடவை இவை தெளிவாய் எடுத்துரைக்கப்பட்டவை; மறுக்க முடியாதவையாய் எல்லா மார்க்சிய வாதிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை; ருஷ்யர்களாகிய நமக்கு 1905ஆம் ஆண்டு அனுபவத்தால் மிகவும் எடுப்பாய் மெய்ப்பித்துக் காட்டப்பெற்றவை. இது சம்பந்தமாய் 1912ல் பாசெல் அறிக்கை அனுமானித்துக் கொண்டது என்ன? 1914-15ல் நடைபெற்றது என்ன?

புரட்சிகர சூழ்நிலை—இதைச் சுருக்கமாய், அது "பொருளாதார, அரசியல் நெருக்கடி" என்று விவரித்தது—எழுமென்று பாசெல் அறிக்கை அனுமானித்துக் கொண்டது. இத்தகைய சூழ்நிலை எழுந்துள்ளதா? சந்தேகத்துக்கு இடமின்றி எழுந்துதான் இருக்கிறது. கூனெவ், காவுத்ஸ்கி, பிளெஹானவ் முதலான எத்தர்களைக் காட்டிலும் கபடமின்றியும் பகிரங்கமாகவும் நேர்மையுடனும் தேசியவெறியை ஆதரித்து வாதாடும் சமூக-தேசியவெறியர் லெஞ்ச் பின்வருமாறு கூறுமளவுக்குச் செல்கிறார்: "இப்பொழுது நாம் கடந்து செல்வது ஒருவகைப் புரட்சியாகும்" (அவருடைய பிரசுரமான "ஜெர்மன் சமூக ஜனநாயகமும் யுத்தமும்", பெர்லின், 1915, பக்கம் 6). அரசியல் நெருக்கடி நிலவுகிறது; எந்த அரசாங்கத்துக்கும் நாளை என்ன ஆகும் என்ற உறுதி இருக்கவில்லை; நிதித் துறை நொடிப்பு, பிரதேச இழப்பு, நாட்டிலிருந்து வெளியேற்றப்படுதல் (பெல்ஜிய அரசாங்கம் வெளியேற்றப்பட்டது போல) ஆகிய அபாயமின்றி எந்த அரசாங்கமும் பாதுகாப்புடன் இருக்கவில்லை. எல்லா அரசாங்கங்களும் எரிமலையிலே அமர்ந்திருக்கின்றன; வெகுஜனங்கள் முன்முயற்சியும் வீரமும் வெளிப்படுத்த வேண்டுமென்று அவை தாமே அறைகூவிக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பாவின் அரசியல் ஆட்சி முறை முழுதுமே ஆட்டங் கண்டுவிட்டது. பிரம்மாண்ட அரசியல் கொந்தளிப்புகளுக்குரிய கட்டத்தினுள் நுழைந்துவிட்டோம் (மேலும் மேலும் ஆழ மூழ்கும்படி நுழைந்து வருகிறோம்—இத்தாலி யுத்தப் பிரகடனம் செய்திருக்கும் நாளில் இதை எழுதுகிறேன்) என்பதை யாருமே மறுப்பதற்கில்லை. யுத்தம் பிரகடனமாகி இரண்டு மாதங்களுக்குப் பிற்பாடு காவுத்ஸ்கி எழுதினார் (Die Neue Zeit[14] இல், 1914 அக்டோபர் 2ல்): "யுத்தம் தொடங்கும் போது

இருப்பது போல வேறு எந்த நேரத்திலும் அரசாங்கங்கள் இவ்வளவு பலம் படைத்தும், கட்சிகள் இவ்வளவு பலமின்றியும் இருப்பதில்லை'' என்று. வரலாற்று விஞ்ஞானம் பொய்யாய்த் திரிக்கப்படுவதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்; ஸுடெக்கும்களையும் ஏனைய சந்தர்ப்பவாதிகளையும் திருப்திப்படுத்துவதற்காக காவுத்ஸ்கி இப்படித் திரிக்கிறார். முதலாவதாக, யுத்தக் காலத்தில் தேவைப்படுவது போல அந்த அளவுக்கு வேறு எந்தக் காலத்திலும் அரசாங்கங்களுக்கு ஆளும் வர்க்கங்களது எல்லாக் கட்சிகளுடனும் உடன்பாடோ, ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் ''சமாதானமாய்'' அந்த ஆட்சிக்குக் கீழ்ப்படிய வேண்டியதோ தேவைப்படுவதில்லை. இரண்டாவதாக, ''யுத்தம் தொடங்கும்போது''—முக்கியமாய் விரைவிலே வெற்றி கிட்டுமென எதிர்பார்க்கும் ஒரு நாட்டில்—அரசாங்கம் பெருஞ் சக்தி படைத்ததாய்த் தோன்றிய போதிலும், புரட்சிகரச் சூழ்நிலை ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பங்களை உலகில் எங்குமே, எவருமே, ஒருபோதும் யுத்தத்தின் ''தொக்கத்துடன்'' மட்டுமே இணைந்தவையாய்க் கொள்ளமாட்டார், தவிரவும் ''தோன்றுவதை'' உண்மை நிலவரத்துக்கு முழுதொத்ததாய் எவரும் கொள்வது இன்னுங் கூட கடினமாகும்.

ஐரோப்பிய யுத்தம் கடந்த காலத்தின் எந்த யுத்தத்தையும் காட்டிலும் கொடூரமானதாய் இருக்கும் என்பது பொதுவாய் எல்லோரும் அறிந்ததும், கண்டுணர்ந்ததும் ஏற்றுக் கொண்டதும்தான். யுத்தத்தின் அனுபவம் மேலும் மேலும் அதிக அளவில் இதனை மெய்ப்பித்து வருகிறது. யுத்தத் தீ பரவிய வண்ணமுள்ளது. ஐரோப்பாவின் அரசியல் அடித்தளங்கள் மேலும் மேலும் ஆட்டி உலுக்கப்படுகின்றன. வெகுஜனங்களின் துன்பதுயரங்கள் சொல்லும் தரமற்றவை. இந்தத் துன்பதுயரங்களை மூடிமறைக்க அரசாங்கங்களும் முதலாளித்துவ வர்க்கத்தாரும் சந்தர்ப்பவாதிகளும் செய்யும் முயற்சிகள் மேலும் மேலும் பயனற்றவையாகி வருகின்றன. முதலாளிகளின் சில கோஷ்டிகளுக்கு யுத்தத்தின் மூலம் கிடைக்கும் லாபங்கள் அசுரத்தனமாய் மிதமிஞ்சிச் செல்கின்றன. முரண்பாடுகள் மிகவும் கடுமையாய் வளர்ந்து வருகின்றன. வெகுஜனங்களின் கனன்று கொண்டிருக்கும் ஆத்திரம், சமுதாயத்தின் மிதித்து வதைக்கப்பட்டு அறி

யாமை இருளிலே வதையும் பகுதிகளுக்கு இதமான (''ஜன நாயக'') சமாதானம் வேண்டுமென்ற தெளிவற்ற ஏக்கம், ''கீழ்நிலை வர்க்கங்க''ளிடையே அதிருப்தி தோன்றியிருப்பது—இவை யாவும் கண்கூடான உண்மைகள். யுத்தம் நீடிக்க நீடிக்க, மேலும் மேலும் கடுமையாகிச் செல்லச் செல்ல, அரசாங்கங்கள் வெகுஜனங்களுடைய செயற்பாட்டைத் தாமே மேலும் மேலும் உசுப்பிவிடுகின்றன—அவை உசுப்பிவிட்டே ஆக வேண்டியிருக்கிறது. வெகுஜனங்களை அவை மிதமிஞ்சிய முயற்சியை மேற்கொள்ளுமாறு, தம்மையே தியாகம் புரிந்து கொள்ளுமாறு அழைக்கின்றன. யுத்தத்தின் அனுபவம், வரலாற்றில் எழும் எந்த நெருக்கடியின் அனுபவத்தையும் போல, மனித வாழ்வில் தோன்றும் எந்தப் பெரிய விபத்தின், எந்தத் திடீர்த் திருப்பத்தின் அனுபவத்தையும் போல, சில பேரைக் கதி கலங்கி நிலை குலையச் செய்கிறது; ஆனால் ஏனையோருக்கு அறிவொளியூட்டி அவர்களைப் பதம் பெறச் செய்கிறது. ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கையில், அனைத்து உலகின் வரலாற்றையும் பொதுவாய்ப் பார்க்கையில், இரண்டாவது வகையினரின் எண்ணிக்கையும் பலமும்—இந்த அல்லது அந்த அரசின் சரிவுக்கும் வீழ்ச்சிக்குமான தனிப்பட்ட உதாரணங்களைத் தவிர்த்து—முதலாவது வகையினரின் எண்ணிக்கையையும் பலத்தையும் காட்டிலும் அதிகமாகவே இருந்து வருகின்றன.

சமாதானம் முடிக்கப்படுவதால், இந்த இன்னல்கள் யாவற்றுக்கும், முரண்பாடுகள் இப்படி தீவிரமடைந்து செல்வதற்கும் ''உடனடியாய்'' முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடாது; மக்களின் மிகவும் பிற்பட்ட திரள்கள் இந்த இன்னல்களை மேலும் கூர்மையாகவும் உடனடியாகவும் உணரும்படியே நேரும்.

சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து ஐரோப்பாவின் வல்லரசுகளிலும் முன்னேறிய நாடுகள் மிகப் பெரும்பாலானவற்றிலும் புரட்சிகர நிலைமை இருந்து வருகிறது. இந்தத் துறையில், பாசெல் அறிக்கை முன்னறிந்து கூறியதானது பூரணமாய் ஊர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது. நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்த உண்மையை மறுப்பதும், கூனெவ், பிளெஹானவ், காவுத்ஸ்கி முதலானோர் செய்துள்ளது போல இதனை உதாசீனம் செய்வதும் அபாண்டப் பொய்யைச்

சொல்லித் தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்றுவதே ஆகும்: முதலாளித்துவ வர்க்கத்தாருக்குத் தொண்டூழியம் புரிவதே ஆகும். புரட்சியைக் கண்டு அஞ்சுவோர்—குட்டிபூர்ஷுவா கிறிஸ்தவப் பாதிரிகளும் இராணுவத் தலைமை அதிகாரிகளும் கோடீஸ்வரர்களுடைய செய்தியேடுகளும்—ஐரோப்பாவில் புரட்சிகர நிலைமைக்கான அறிகுறிகள் இருப்பதை ஒத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதை நிரூபிக்கும் உண்மைகளை சோஷியல்-டெமாக்கிராட்டில்[15] (இதழ்கள் 34, 40, 41) நாங்கள் எடுத்துரைத்தோம்.

இந்த நிலைமை அதிக காலத்துக்கு நீடிக்குமா? இன்னும் இது எவ்வளவு கடுமையாகிச் செல்லும்? இது புரட்சிக்கு இட்டுச் செல்லுமா? இவற்றை நாம் அறியோம், யாராலும் அறியவும் முடியாது. புரட்சிகர உணர்வினது வளர்ச்சியின் போதும் முன்னேறிய வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் செயலுக்குரிய கட்டத்துக்குச் செல்லும்போதும் கிடைக்கப் பெறும் அனுபவத்தால் மட்டுமே இதற்குப் பதில் கூற முடியும். இது சம்பந்தமாய்ப் ''பிரமைகள்'' குறித்தோ, அவற்றை நிராகரிப்பது குறித்தோ பேசுவதற்கு இடமில்லை; ஏனெனில் எந்த சோஷலிஸ்டும் இந்த யுத்தம் (அடுத்தது அல்ல), இன்றையப் புரட்சிகரச் சூழ்நிலை (நாளையது அல்ல) புரட்சியை உண்டாக்கிவிடுமென்று அறுதியிட்டுக் கூறியதே இல்லை. எல்லா சோஷலிஸ்டுகளுக்குமுள்ள மறுக்க முடியாத அடிப்படையான கடமையைப் பற்றிதான்—புரட்சிகரச் சூழ்நிலை இருப்பதை வெகுஜனங்களுக்குப் புலப்படச் செய்வது, அதன் வீச்சையும் ஆழத்தையும் விளக்கிக் கூறுவது, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர உணர்வினையும் புரட்சிகர வைராக்கியத்தையும் தட்டியெழுப்புவது, புரட்சிகரச் செயலுக்குச் செல்ல அதற்கு உதவுவது, அதன் பொருட்டு புரட்சிகரச் சூழ்நிலைக்கு ஏற்ற நிறுவனங்களை அமைத்திடுவது ஆகிய இந்தக் கடமையைப் பற்றித்தான்—நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

இது சோஷலிஸ்டுக் கட்சிகளுடைய கடமை என்பது குறித்து செல்வாக்கு படைத்த அல்லது பொறுப்புணர்ச்சி கொண்ட எந்த சோஷலிஸ்டும் ஐயுறவு கொள்ளத் துணிந்ததில்லை. பாசெல் அறிக்கை கிஞ்சித்தும் ''பிரமைகளைப்'' பரப்பவோ அவற்றுக்கு இடம் தரவோ முற்படாமல்,

சோஷலிஸ்டுகளுக்குள்ள இந்த கடமை குறித்து—மக்களைத் தட்டியெழுப்பிக் ''கிளர்த்திவிடவும்'' (பிளெஹானவும் அக்ஸெல்ரோதும் காவுத்ஸ்கியும் செய்து வந்துள்ளதுபோலத் தேசியவெறியைக் கொண்டு மக்களைத் தூங்கச் செய்வதல்ல), முதலாளித்துவத்தின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தும் பொருட்டு நெருக்கடியைப் ''பயன்படுத்திக் கொள்ளவும்,'' கம்யூன், *1905* அக்டோபர்-டிசம்பர் இவற்றின் உதாரணங்களால் வழிகாட்டப் பெறவும் சோஷலிஸ்டுகளுக்கு உள்ள கடமை குறித்து—திட்டவட்டமாய்ப் பேசிற்று. தற்போதுள்ள கட்சிகள் இந்தக் கடமையைச் செய்யத் தவறியதானது அவற்றின் துரோகத்தை, அரசியல் மரணத்தை, தமக்குரிய பாத்திரத்தைத் துறந்துவிட்டு முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கத்துக்கு ஓடிவிட்டதைக் குறிக்கிறது.

*1915 மே பிற்பாதியிலும் ஜூன் முற்பாதியிலும் எழுதப் பெற்றது.*

*1915 செப்டம்பரில் கம்யூனிஸ்டு சஞ்சிகையில் (இதழ் 1-2, ஜெனீவா) வெளியிடப்பட்டது.*

ஒப்பம்: நி. லெனின்

நூல் திரட்டு,
தொகுதி *26*,
பக்கங்கள் *217-22*

# சமரசங்கள் குறித்து

அரசியல் துறையில் சமரசம் என்கிற சொல், இன்னொரு கட்சியுடன் செய்து கொள்ளும் உடன்பாடு மூலமாக, சில கோரிக்கைகளை விட்டுக்கொடுப்பது, தன்னுடைய கோரிக்கைகளில் ஒரு பகுதியைக் கைவிடுவது என்பதைக் குறிக்கிறது.

போல்ஷிவிக்குகளைப் பற்றி சாதாரணமாய் நிலவும் கருத்து என்னவெனில்—அவர்களை அவதூறு செய்கிற பத்திரிகைகள் ஊக்கி வளர்த்துள்ள கருத்து இது—போல்ஷிவிக்குகள் யாருடனும் சமரசம் செய்ய என்றைக்கும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்பதே.

புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சி என்கிற முறையில் நமக்கு இந்தக் கருத்து பெருமையளிப்பதாயிருக்கிறது; ஏனெனில், புரட்சியின், சோஷலிஸத்தின் அடிப்படையான கோட்பாடுகளிடம் நமக்குள்ள விசுவாசத்தை நமது பகைவர்களுங்கூட ஒத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இது நிரூபிக்கிறது. இருப்பினும் இந்தக் கருத்து தவறு என்பதை நாம் குறிப்பிட்டாக வேண்டும். பிளாங்கியக் கம்யூனிஸ்டுகளின் கொள்கை அறிக்கை (1873) பற்றிய தமது விமர்சனத்தில், "சமரசங்கள் கூடாது!" என்கிற அவர்களின் பிரகடனத்தை எங்கெல்ஸ் கேலிசெய்தது முற்றிலும் நியாயமே ஆகும். இது ஒரு வெற்றுச் சொல் என்றார் அவர், ஏனெனில் தவிர்க்க முடியாதபடி சந்தர்ப்பங்கள் போராடும் கட்சிமீது அடிக்கடி சமரசங்களைத் திணிக்கின்றன, மேலும் "கடனைப் பகுதி பகுதியாகப் பெறுவதை" என்றைக்கும் ஏற்கமாட்டோம் என்று மறுப்பது அபத்தமாகும். மெய்யான புரட்சிக் கட்சியின் கடமை

எல்லா சமரசங்களையும் கைவிடுவது சாத்தியமல்லவெனப் பிரகடனப்படுத்துவதல்ல, ஆனால் அவை தவிர்க்க முடியாதவையாகிவிடும்போது, எல்லா சமரசங்களினூடேயும் தனது கோட்பாடுகளுக்கும், தனது வர்க்கத்துக்கும், தனது புரட்சிகர நோக்கத்துக்கும், புரட்சிக்கு வழியைச் செப்பனிடுதல், புரட்சியில் வெற்றிபெற மக்களுக்குப் போதமளித்தல் ஆகிய தனது பணிக்கும் விசுவாசமாய் இருந்துவரச் சக்தி பெற்றிருப்பதேயாகும்.

எடுத்துக்காட்டாக, மூன்றுவது நான்காவது டூமாவில்[16] பங்கெடுக்க ஒத்துக்கொண்டது ஒரு சமரசமேயாகும், தற்காலிகமாகப் புரட்சிகரமான கோரிக்கைகளைக் கைவிடுவதேயாகும். ஆனால் இந்தச் சமரசம் முற்றிலும் நம் மீது நிர்ப்பந்தமாகச் சுமத்தப்பட்டதேயாகும்; ஏனெனில், சக்திகளின் பரஸ்பர நிலையானது நாம் வெகுஜனப் புரட்சிப் போராட்டத்தை நடத்துவதைத் தற்காலிகமாக அசாத்தியமாக்கிவிட்டிருந்தது, மேலும் இந்தப் போராட்டத்துக்கு ஒரு நீண்ட காலப்பகுதியில் தயாரிப்பு செய்யும் பொருட்டு நாம் இப்படிப்பட்ட ஒரு ''பன்றிப்பட்டியின்'' உள்ளேகூட இருந்து வேலை செய்யத் திறமை பெற்றிருக்க வேண்டியிருந்தது. ஒரு கட்சி என்கிற முறையில் போல்ஷிவிக்குகள் இப்பிரச்சினையை இவ்விதம் அணுகியதானது முற்றிலும் சரியே என்பதை சரித்திரம் நிரூபித்துள்ளது.

இப்பொழுது எழும் பிரச்சினை தன்னிச்சையான சமரசமே அன்றி நிர்ப்பந்தமாய்த் திணிக்கப்படும் சமரசமல்ல.

வேறு எந்த அரசியல் கட்சியையும் போலவே, நமது கட்சியும் தனக்கு அரசியல் ஆதிக்கம் கிடைப்பதற்காகப் பாடுபட்டு வருகிறது. நமது குறிக்கோள் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம். புரட்சியின் ஆறு மாத காலம் இந்தக் கோரிக்கையானது இந்தக் குறிப்பிட்ட புரட்சியின் நலன்களையொட்டி சரியானதே, தவிர்க்க இயலாததே என்று மிகத் தெளிவாக, பலமாக, ஏற்கத்தக்க விதத்திலே நிரூபித்துள்ளது; ஏனெனில், வேறு எவ்வழியிலும் மக்கள் ஒரு ஜனநாயக பூர்வமான சமாதானத்தை என்றைக்கும் பெற முடியாது, விவசாயிகள் நிலம் பெற முடியாது, முழுமையான சுதந்திரம் (முழுநிறை ஜனநாயகக் குடியரசு) பெற முடியாது. நமது புரட்சியின் ஆறு மாத காலத்தால், வர்க்கங்களின்,

கட்சிகளின் போராட்டத்தால், ஏப்ரல் 20-21, ஜூன் 9-10, 18-19, ஜூலை 3-5, ஆகஸ்டு 27-31 தேதிய நெருக்கடிகளின் வளர்ச்சியால் இது காட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

ருஷ்யப் புரட்சி இவ்வளவு தீவிரமாகவும் தனி வகையிலும் திருப்பம் பெற்றுவருவதின் காரணத்தால் நாம், ஒரு கட்சி என்கிற முறையில், தன்னிச்சையான சமரசம் செய்து கொள்ள முற்படலாம்—நமது நேரடியான, பிரதானமான வர்க்க விரோதியாகிய முதலாளித்துவ வர்க்கத்துடன் செய்து கொள்ள முடியாதுதான், ஆனால் நமக்கு நெருங்கிய நிலையிலுள்ள எதிரிகளாகிய, ''ஆட்சிபுரிகிற'' குட்டிபூர்ஷ்வா-ஜனநாயகக் கட்சிகளாகிய சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினருடனும் மென்ஷிவிக்குகளுடனும் செய்து கொள்ள முன்வரலாம்.

ஒரு விதிவிலக்காக மட்டுமே, இந்தக் குறிப்பிட்ட நிலைமையின் விசேஷத்தால் மட்டுமே—இது மிகவும் குறுகிய காலத்துக்குத்தான் நீடிக்கும் என்பது வெளிப்படை—இந்தக் கட்சிகளுடன் நாம் ஒரு சமரசம் செய்து கொள்ள முன்வரலாம். அவற்றுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்றுதான் நான் கருதுகிறேன்.

அனைத்து அதிகாரமும் சோவியத்துக்களுக்கு, சோவியத்துக்களுக்குப் பொறுப்பான சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர், மென்ஷிவிக்குகளின் அரசாங்கம் என்கிற ஜூலைக்கு முந்திய நமது கோரிக்கைக்கு நாம் திரும்பிச் செல்வதே நாம் செய்து கொள்ள முன்வரும் சமரசம்.

இப்பொழுது, இப்பொழுது மட்டுமே, சில நாட்களுக்கு மட்டுமே, அல்லது இரண்டொரு வாரங்களுக்கு மட்டுமே, இப்படிப்பட்ட அரசாங்கம் முற்றிலும் சமாதான பூர்வமான வழியிலே நிறுவப்பெற்று உறுதி பெற முடியும். அநேகமாக ருஷ்யப் புரட்சி முழுவதும் சமாதான பூர்வமாக முன்னேறுவதை இது சாத்தியமாக்கலாம், சமாதானத்தையும் சோஷலிசத்தின் வெற்றியையும் நோக்கிச் செல்லும் உலக இயக்கம் வெகுவாய் முன்னேற மிகச் சிறந்த வாய்ப்பினை அளிக்கக் கூடும்.

என் கருத்தில், உலகப் புரட்சிக்காகவும், புரட்சி வழிமுறைகளுக்காகவும் போராடுவோரான போல்ஷிவிக்குகள் புரட்சியின் சமாதான பூர்வமான இந்த வளர்ச்சிக்காக

வேண்டி—இது சரித்திரத்தில் மிகமிக அபூர்வமான வாய்ப்பு, மிகமிக உயர்மதிப்புக்குரிய வாய்ப்பு, எப்போதாவது ஒரு தடவைதான் கிடைக்கிற வாய்ப்பு—இந்தச் சமரசத்துக்கு ஒத்துக்கொள்ளலாம், ஒத்துக்கொள்ளவும் வேண்டும்.

அந்தச் சமரசம் பின்வருமாறு அமைவதாயிருக்கும்: அரசாங்கத்தில் தாங்கள் பங்கெடுப்பதாக போல்ஷிவிக்குகள் கோராமலும் (பாட்டாளி வர்க்கத்தின், ஏழை விவசாயிகளின் சர்வாதிகாரம் அமையாத வரையில் சர்வதேசியவாதிகளுக்கு இது சாத்தியமில்லை), உடனடியாக அதிகாரம் பாட்டாளி வர்க்கத்துக்கும் ஏழை விவசாயிகளுக்கும் மாற்றப்பட வேண்டுமென்று கோராமலும், இந்தக் கோரிக்கைக்காகப் போராடுவதில் புரட்சிகர வழிமுறைகளைப் பயன்படுத்தாமலும் இருப்பார்கள். ஒரு நிபந்தனை—இது வெளிப்படை, சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினருக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் இது புதிதல்ல—என்னவெனில் பிரசாரத்திற்கு முழு சுதந்திரம் வேண்டும், மேற்கொண்டு தாமதங்கள் செய்யாமல், அல்லது குறித்த தேதிக்கு முன்பேகூட அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட வேண்டும்.

மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும், அரசாங்கக் கூட்டணி என்ற முறையில் (சமரசம் ஏற்பட்டுவிட்டது என்று வைத்துக்கொண்டால்), சோவியத்துக்களுக்கு மட்டுமே முற்றுகப் பொறுப்புள்ள ஒரு அரசாங்கத்தை அமைக்க ஒத்துக்கொள்வார்கள், சோவியத்துக்கள் ஊராட்சியிலும் வட்டார ஆட்சியிலும் எல்லா அதிகாரத்தையும் எடுத்துக் கொள்ளும். இதுவே ''புதிய'' நிபந்தனையாக இருக்கும். உண்மையிலேயே முழுமையான பிரசார சுதந்திரம் இருக்குமாதலாலும், சோவியத்துக்களின் அமைப்பிலும் (புதிய தேர்தல்கள் மூலம்) அவற்றின் செயல்பாட்டிலும் புதிய ஜனநாயகம் உடனடியாக நிறுவப்படும் காரணத்தாலும், புரட்சி சமாதானபூர்வமாக முன்னேறும், சோவியத்துக்களில் கட்சிப் போராட்டம் சமாதானபூர்வமாகத் தீர்க்கப்படும் என்கிற நம்பிக்கை பெற்று போல்ஷிவிக்குகள் வேறு எந்த நிபந்தனையும் முன்வைக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

இது ஏற்கனவே அசாத்தியமாகி இருக்குமோ? இருக்கலாம். ஆனால், நூற்றில் ஒன்றுக வாய்ப்பு இருந்தாலும், அந்த

வாய்ப்பை நடைமுறையாக்கிக் கொள்ளும் முயற்சி பயன் உள்ளதே.

''உடன்பாடு காணும்'' இரு தரப்பினரும்—அதாவது, ஒருபுறம் போல்ஷிவிக்குகளும், மறுபுறம் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் மென்ஷிவிக்குகளுமான கூட்டணியும்—இந்த ''சமரசத்தால்'' பெறக்கூடிய லாபம் என்ன? இரு தரப்பினருக்குமே எந்த லாபமும் கிடைக்கவில்லையென்றால், அந்த சமரசம் அசாத்தியம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும், அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றுமில்லை. எவ்வளவு தான் கடினமானதாக இந்த சமரசம் இன்று (ஜூலை—ஆகஸ்டுக்குப் பிறகு, ''சமாதானபூர்வமான'', தூங்கிவிழுகிற காலத்தில் இருபது ஆண்டுகளுக்குச் சமானமானவை இந்த இரண்டு மாதங்கள்) இருந்தபோதிலும் அதை நடைமுறையில் காண்பதற்கு ஒரு சிறு வாய்ப்பு இன்னமும் இருக்கிறது என்றே நினைக்கிறேன். காடெட்டுகளுடன்[17] சேர்ந்து அரசாங்கத்தில் பங்கெடுப்பதில்லை என்று சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் மென்ஷிவிக்குகளும் எடுத்துள்ள முடிவு இந்த வாய்ப்பைச் சிருஷ்டித்திருக்கிறது.

போல்ஷிவிக்குகள் தம்முடைய கருத்துக்களை முற்றிலும் சுதந்திரமாகச் சொல்வதற்கும், உண்மையிலேயே முழுமையான ஜனநாயகத்தின்கீழ் சோவியத்துக்களில் செல்வாக்கு பெற முயல்வதற்கும் வாய்ப்பு பெறுவார்கள். போல்ஷிவிக்குகளுக்கு இந்தச் சுதந்திரம் உண்டு என ''எல்லோருமே'' இன்று வார்த்தையளவில் ஒப்புக்கொள்கிறார்கள். எதார்த்தத்திலோ, முதலாளித்துவ அரசாங்கத்தில் அல்லது முதலாளித்துவ வர்க்கம் பங்குகொள்கிற அரசாங்கத்தில், சோவியத்துக்கள் அல்லாத மற்ற எந்த அரசாங்கத்திலும், இந்தச் சுதந்திரம் சாத்தியமற்றது. ஒரு சோவியத் அரசாங்கத்தில் அப்படிப்பட்ட சுதந்திரம் சாத்தியமே (நிச்சயமாக இருக்கும் என்று நாம் சொல்லவில்லை, சாத்தியம் என்றே சொல்கிறோம்). இப்படிப்பட்ட கடினமான காலத்தில் இப்படிப்பட்ட சாத்தியப்பாட்டிற்காக, சோவியத்துக்களில் இன்றுள்ள பெரும்பான்மையினருடன் சமரசம் செய்வது பயனுள்ளதேயாகும். உண்மையான ஜனநாயகத்திடம் நமக்குப் பயப்படுவதற்கு ஒன்றுங்கிடையாது, ஏனெனில் எதார்த்தம் நம் தரப்பில் இருக்கிறது, நமக்கு எதிரியாகவுள்ள சோஷலிஸ்டு-புரட்சியாளர்

கட்சிக்குள்ளும், மென்ஷிவிக் கட்சிக்குள்ளும் வளர்ந்து வரும் போக்குகளே நமது நிலை சரியென்று நிரூபிக்கின்றன.

மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் லாபமடைவார்கள், எப்படியெனில் வெளிப்படையாக மிகப் பெரிய பெரும்பான்மையான மக்களின் ஆதரவோடு அவர்கள் தங்களுடைய கூட்டணியின் வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எல்லா வாய்ப்பும் உடனே பெறுவார்கள், மேலும் சோவியத்துக்களில் தங்களுக்குள்ள பெரும்பான்மை நிலையை அவர்கள் ''சமாதானபூர்வமாகப்'' பயன்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பு பெறுவார்கள்.

இந்தக் கூட்டணியிலிருந்து அநேகமாக இரண்டு குரல்கள் கேட்கக்கூடும்தான்; ஒரு கூட்டணி என்பதினாலும், முதலாளித்துவ வர்க்கத்தையும் பாட்டாளி வர்க்கத்தையும்விட எப்போதும் குட்டிபூர்ஷுவா ஜனநாயகம் குறைந்த அளவுக்கே ஒருபடித்தானது என்பதினாலும் அது கதம்பத் தொகுப்பாகவே இருந்து வருகிறது.

ஒரு குரல் சொல்லக்கூடும்: ''போல்ஷிவிக்குகளும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கமும் போகிற அதே பாதையை நாம் பின்பற்றிச் செல்ல முடியாது. எப்படியிருந்தாலும் அது அளவுக்கு மிஞ்சிக் கோரும், வாய்வீச்சு மூலமாக ஏழை விவசாயிகளை அது கவர்ந்து இழுத்துக் கொள்ளும். அது சமாதானத்தையும் நேசநாடுகளிடமிருந்து முறித்துக் கொள்வதையும் கோரும். அது சாத்தியமில்லை. முதலாளித்துவ வர்க்கத்தாருடன் இருப்பதில் நாம் மேலான நிலையிலேயே இருக்கிறோம், பத்திரமாயும் இருக்கிறோம்; என்ன இருந்தாலும், நாம் அவர்களிடமிருந்து பிரிந்து சென்றுவிடவில்லை, கர்னீலோவ் நிகழ்ச்சியை வைத்து மட்டுமே நாம் ஒரு தற்காலிகமான சண்டை போட்டுக்கொண்டோம். நாம் சண்டை போட்டுக் கொண்டோம் என்றாலும், சரிசெய்து சமாதானம் செய்து கொண்டு விடுவோம். மேலும், போல்ஷிவிக்குகள் நமக்கு எதையும் 'விட்டுக்கொடுக்கவில்லை', ஏனெனில் புரட்சிக்கலகம் செய்யும் அவர்களின் முயற்சிகள் 1871ஆம் ஆண்டுக் கம்யூன் போலவே தோல்வியுறுவது திண்ணம்.''

மற்றொரு குரல் சொல்லக்கூடும்: ''கம்யூனைக் குறிப்பிட்டது மிகவும் மேலோட்டமானது, முட்டாள்தனமானதுங்கூட. ஏனெனில், முதலாவதாக, 1871க்குப் பிறகு போல்ஷிவிக்கு

கள் கொஞ்சம் விஷயம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்; பாங்குகளைப் பிடுங்கிக் கொள்ள அவர்கள் தவறமாட்டார்கள், வெர்ஸேய்மீது படையெடுத்துச் செல்லமறுக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளில் அந்தக் கம்யூன்கூட வெற்றி பெற்றிருக்கும். மேலும், போல்ஷிவிக்குகள் அதிகாரத்துக்கு வந்தால் வழங்கக் கூடியதை—அதாவது, விவசாயிகளுக்கு நிலம், சமாதானத்திற்கு உடனடியான திட்டம், உற்பத்திமீது உண்மையான கண்காணிப்பு, உக்ரேனியர்களுடன், பின்லாந்து மக்களுடன், மற்றவர்களுடன் நேர்மையான சமாதானம்—கம்யூனால் உடனடியாக மக்களுக்கு வழங்க முடியவில்லை. அப்பட்டமாகச் சொல்வதென்றால், கம்யூனைவிட போல்ஷிவிக்குகள் பத்து மடங்கு அதிகமான 'துருப்புச் சீட்டுகள்' வைத்திருக்கிறார்கள். இரண்டாவதாக, என்னதான் இருந்தாலும், கம்யூன் என்றாலே கடுமையான உள்நாட்டுப் போர் என்று பொருள், வெகு காலத்திற்குச் சமாதான பூர்வமான கலாசார வளர்ச்சிக்குத் தேக்கம் என்று பொருள், பல வகையான மாக்மஹோன்களுக்கும் கர்னீலோவ்களுக்கும் இன்னும் அதிகச் சுலுவுடன் வேலை செய்யவும் சதிகள் புரியவும்—அப்படிப்பட்ட காரியங்கள் நமது முதலாளித்துவ சமுதாயம் பூராவுக்கும் ஆபத்தாகும்—வாய்ப்பு என்று பொருள். கம்யூன் ஆபத்துக்கு இடம் தருவது விவேகமானதுதானா?

''நம் கைகளிலேயே அதிகாரத்தை நாம் எடுத்துக்கொள்ளாவிட்டால், மே 6க்கும் ஆகஸ்டு 31க்கும் இடையே இருந்த அதே மோசமான நிலையில் விவகாரங்கள் இருந்து வருமேயானால், ருஷ்யாவில் இன்று கம்யூன் தவிர்க்க முடியாததாகும். புரட்சிகரமான ஒவ்வொரு தொழிலாளியும் போர்வீரனும் தவிர்க்க முடியாதபடி கம்யூனைப்பற்றி நினைப்பான், கம்யூன் மீது நம்பிக்கை வைப்பான், தவிர்க்க முடியாதபடி அதைக் கொண்டுவர முயல்வான்; ஏனெனில், அவன் பின்வருமாறு வாதிப்பான்: 'மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள், யுத்தமும் பஞ்சமும் நாசமும் பரவிக் கொண்டிருக்கின்றன. கம்யூன் ஒன்றுதான் நம்மைக் காப்பாற்றும். ஆகவே நாம் அனைவரும் செத்தாலும் பரவாயில்லை, உயிர்போனாலும் பரவாயில்லை, கம்யூனை அமைப்போம் வாருங்கள்' என்பான். தொழிலாளர்களிடம் இப்படிப்பட்ட கருத்துக்கள் தவிர்க்க முடியாதவை, மேலும் 1871ல் செய்தது போல் கம்யூனை நசுக்குவது

இன்று அவ்வளவு சுலபமல்ல. உலகமெங்கும் ருஷ்யக் கம்யூனுக்கு நேசசக்திகள், 1871ல் கம்யூனுக்கு இருந்ததைவிட நூறு மடங்கு அதிக பலமுள்ள நேசசக்திகள் இருக்கும்... நாம் கம்யூன் ஆபத்துக்கு இடம் தருவது விவேகமானதுதானு? போல்ஷிவிக்குகள் தம்முடைய சமரசம் மூலம் நமக்கு அநேகமாக ஒன்றுமே விட்டுக்கொடுக்கவில்லை என்கிறதையும் நாம் ஒத்துக்கொள்ளவில்லை. ஏனெனில், நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும், யுத்தகாலத்தில் பாட்டாளி வர்க்கத்துடன் செய்து கொள்கிற ஒவ்வொரு உடன்பாட்டையும், அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரி, நாகரிகமுள்ள மந்திரிகள் மிக உயர்வாக மதிக்கிறார்கள். அவர்கள் மிகமிக உயர்வாக மதிக்கிறார்கள். அவர்கள் செயல் வீரர்கள், உண்மையான மந்திரிகள். போல்ஷிவிக்குகள், அடக்குமுறை இருந்தபோதிலும், அவர்களுடைய பத்திரிகைகள் பலவீனமாக இருந்தபோதிலும், வேகமாக மேன்மேலும் பலம் அடைந்து வருகிறார்கள்... நாம் கம்யூன் ஆபத்துக்கு இடம் தருவது விவேகமானதுதானு?

''நமக்கு நிச்சயமான பெரும்பான்மை இருக்கிறது; கொஞ்ச காலத்துக்கு ஏழை விவசாயிகள் விழித்தெழ மாட்டார்கள்; நம் ஆயுட்காலத்துக்கு நாம் பத்திரம்தான். விவசாயிகளின் நாட்டில் பெரும்பான்மையினர் அதீதவாதிகளைப் பின்பற்றுவார்கள் என்று நான் நம்பவில்லை. மேலும், மெய்யான ஜனநாயகக் குடியரசில் வெளிப்படையான பெரும்பான்மைக்கு எதிராக எந்தப் புரட்சிக்கலகமும் சாத்தியமில்லை.'' இதைத்தான் இரண்டாவது குரல் சொல்லும்.

மார்த்தவ் அல்லது ஸ்பிரிதோனவா ஆகியோரின் ஆதரவாளர்களிடமிருந்து வரும் மூன்ருவது குரலுங்கூட கேட்கக்கூடும். அது சொல்லும்: '' 'தோழர்களே', கம்யூனைப் பற்றியும் அது வரக்கூடிய சாத்தியப்பாடு பற்றியும் பேசும்போது நீங்கள் இருவரும் தயக்கமின்றி அதன் எதிரிகளின் பக்கம் போவதைக் கண்டு எனக்கு ஆத்திரம் வருகிறது. ஏதாவது ஒரு வடிவத்தில், நீங்கள் இருவரும் கம்யூனை நசுக்கியவர்கள் பக்கம் போகிறீர்கள். கம்யூனுக்காக நான் கிளர்ச்சி நடத்தப் மாட்டேன், ஒவ்வொரு போல்ஷிவிக்கும் செய்யப்போவதைப் போல் நான் அதன் அணிகளில் நின்று போரிட முன்கூட்டியே வாக்குறுதி தர முடியாது. ஆனல் என்னுடைய

முயற்சிகளையும் மீறி கம்யூன் தொடங்குமேயானால், அதன் எதிரிகளுக்கு உதவுவதை விட அதனைப் பாதுகாத்து நிற்பவர்களுக்கே உதவுவேன்...''

''கூட்டணியில்'' இருக்கிற குரல்களின் குழப்பம் பெரிது, தவிர்க்க முடியாததுங்கூட; ஏனெனில் குட்டிபூர்ஷுவா ஜனநாயகவாதிகளிடையே பலப்பல சாயல்கள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன—அரசாங்கத்தில் பதவிபெற முழுக்க லாயக்கான முழு பூர்ஷுவா முதலாகப் பாட்டாளி வர்க்க நிலையை இன்னமும் மேற்கொள்ளச் சக்தியற்றிருக்கிற அரைப் பஞ்சைப்பனுதி ஈருக. எந்த ஒரு குறிப்பிட்ட தருணத்திலும் இந்த நானுவிதக் குரல்களின் விளைவு எப்படி இருக்குமென்று யாருக்கும் தெரியாது.

* * *

மேற்கண்ட வரிகள் செப்டம்பர் 1ஆம் தேதி வெள்ளிக்கிழமை எழுதப்பெற்றவை; ஆனல் எதிர்பாராத சந்தர்ப்பங்களால் (கேரென்ஸ்கியின் கீழ், போல்ஷிவிக்குகளில் எல்லோரும் தங்கள் இருப்பிடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள சுதந்திரம் பெற்றிருக்கவில்லை என்பதை வரலாறு கூறும்) அவை அதே நாளில் ஆசிரியர் அலுவலகத்திற்குப் போய்ச் சேரவில்லை. சனிக்கிழமை பத்திரிகைகளையும் இன்றைய, ஞாயிற்றுக்கிழமை, பத்திரிகைகளையும் படித்த பிறகு எனக்கு நானே சொல்லிக் கொள்வதாவது: ஒரு சமரசத் திட்டத்திற்குரிய காலம் ஏற்கனவே கடந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். சமாதான பூர்வமான வளர்ச்சி இன்னமும் சாத்தியமாயிருந்திருக்கக்கூடிய அந்தச் சில நாட்களுங்கூடக் கடந்து விட்டன போலும். ஆம், அவை ஏற்கனவே கடந்து விட்டன என்றுதான் தோன்றுகிறது. ஏதாவது ஒரு வழியில், கேரென்ஸ்கிய் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி, சோஷலிஸ்டு-புரட்சி இயக்கம் ஆகிய இரண்டையுமே கைவிட்டு, அவர்கள் செயலற்று நிற்கும் நிலையின் காரணத்தால் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் இல்லாமலேயே முதலாளித்துவ வர்க்கத்தின் உதவியைக் கொண்டு தன்னுடைய பதவியைப் பலப்படுத்திக் கொள்வார்... ஆம், சந்தர்ப்பவசமாக சமாதான பூர்வமான வளர்ச்சிப் பாதையைச் சாத்தியமாக்கிய

அந்த நாட்கள் ஏற்கனவே கடந்துவிட்டன என்று தோன்று கிறது. இனி செய்வதற்கு மிச்சமிருப்பது இந்தக் குறிப்புக் களை, ''காலங்கடந்த சிந்தனைகள்'' என்று அவற்றிற்குத் தலைப்பு கொடுக்குமாறு கேட்டுக் கொண்டு ஆசிரியருக்கு அனுப்ப வேண்டியதுதான்... காலங்கடந்த சிந்தனைகளும் சில சமயங்களில் சுவையற்றதாகிவிடுவதில்லை அல்லவா?

*1917, செப்டம்பர் 3*

*1917, செப்டம்பர் 1-3 (14-16)*
தேதிகளில் எழுதப்பட்டது

*1917, செப்டம்பர் 19 (6),*
''ரபோச்சிய் பூத்'' இதழ் 3ல்
வெளியிடப்பட்டது

கையொப்பம்: நி. லெனின்

நூல் திரட்டு,
தொகுதி 34,
பக்கங்கள் 133-39

## சமரசங்கள் குறித்து

என்னுடன் உரையாடுகையில் தோழர் லான்ஸ்பரி தொழிலாளர் இயக்கத்தில் பிரிட்டிஷ் சந்தர்ப்பவாதத் தலைவர்களுடைய பின்வரும் வாதத்தை விசேஷமாய் வலியுறுத்தினார்.

போல்ஷிவிக்குகள் முதலாளிகளுடன் சமரசம் செய்து கொள்கிறார்கள். உதாரணமாய், எஸ்தோனியாவுடனான சமாதான ஒப்பந்தத்தில் மரச் சலுகைகளுக்கு ஒத்துக் கொண்டனர். அப்படியானால், பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் மிதவாதத் தலைவர்கள் முதலாளிகளுடன் செய்துகொள்ளும் சமரசங்களும் இதே அளவுக்கு நியாயமானவையே.

பிரிட்டனில் பரவலாய் அடிபடும் இந்த வாதம் தொழிலாளர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததென்றும், இதைப் பரிசீலனை செய்வது அவசர அவசியமானதென்றும் தோழர் லான்ஸ்பரி கருதுகிறார்.

இந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முயலுகிறேன்.

### 1

பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஆதரவாளர் முதலாளிகளுடனோ முதலாளித்துவ வர்க்கத்துடனோ சமரசங்கள் செய்து கொள்ளலாமா?

இதுதான் மேற்கூறிய வாதத்துக்கு அடிநிலையாய் இருக்கும் கேள்வி என்பது தெளிவு. ஆனால் இந்தப் பொதுப்படை

யான வழியில் இக்கேள்வியை எழுப்புவதானது கேட்பவரின் அளவு கடந்த அரசியல் அனுபவமின்மையையும் அரசியல் உணர்வில் அவருடைய தாழ் நிலையையும் காட்டுவதாகவோ, வழிப்பறி, கொள்ளை, மற்றும் முதலாளித்துவ வன்முறையின் ஏனைய ஒவ்வொரு வகையும் நியாயமே என்கிற தமது நிலையை மூடிமறைப்பதற்காக குதர்க்கவாதத்தில் இறங்கும் அவருடைய கயமையைக் காட்டுவதாகவோ தான் இருக்கிறது.

உண்மையில், பொதுப்படையான இந்தக்கேள்விக்கு எதிர் மறையில் பதிலளிப்பது அபத்தமே ஆகும். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஆதரவாளர் முதலாளிகளுடன் சமரசங்கள் அல்லது ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம்தான். எல்லாம் எவ்வகையான ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுகிறது, எந்த நிலைமைகளில் செய்து கொள்ளப்படுகிறது என்பதையே பொறுத்திருக்கிறது. பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கண்ணோட்டத்தில் நியாயமான ஒப்பந்தத்துக்கும் (இதே கண்ணோட்டத்தில்) துரோகமான, வஞ்சகமான ஒப்பந்தத்துக்கும் இடையிலான வேறுபாட்டை இதில், இதில் மட்டுமே தான் காண முடியும், காணவும் வேண்டும்.

இதைத் தெளிவுபடுத்த முதலில் மார்க்சியத்தின் மூலவர்களுடைய வாதத்தினை நினைவுபடுத்துகிறேன்; பிறகு தெட்டத் தெளிவான எளிய உதாரணங்கள் சிலவற்றைத் தருகிறேன்.

மார்க்சையும் எங்கெல்சையும் காரணமின்றி நாம் விஞ்ஞான சோஷலிசத்தின் மூலவர்களாய்க் கருதவில்லை. எல்லா வாய்வீச்சுக்கும் அவர்கள் தீராப் பகைவர்களாய் இருந்தவர்கள். சோஷலிசத்தின் பிரச்சினைகள் (சோஷலிசப் போர்த்தந்திரப் பிரச்சினைகளும் அடங்கலாய்) விஞ்ஞான வழியிலே தான் எடுத்துரைக்கப்பட வேண்டுமென்று அவர்கள் போதித்தனர். கடந்த நூற்றாண்டின் எழுபதாம் ஆண்டுகளில் கம்யூனிலிருந்து வெளியே ஓடியவர்களான பிரெஞ்சு பிளாங்கிய வாதிகளின் புரட்சிகர அறிக்கையைப் பாகுத்தாய்ந்தபோது எங்கெல்ஸ் ''சமரசங்கள் கூடவே கூடாது'' என்று அவர்கள் பெருமையாய்ப் பிரகடனம் செய்தது வெற்றுப் பேச்சே ஆகுமென்று தெட்டத் தெளிவாய் அவர்களிடம் கூறினர். சமரசங்கள் செய்துகொள்ளும் கருத்தையே நிராகரித்துவிடக்

கூடாது. மிகவும் புரட்சிகரமான வர்க்கத்தின் மிகவும் புரட்சிகரமான கட்சியும்கூட சூழ்நிலைமையின் நிர்ப்பந்தத்தால் சில சமயம் சமரசங்கள் செய்து கொள்வது அத்தியாவசியமாகி விடுகிறது. எல்லா சமரசங்களுக்கு இடையிலும் புரட்சிகரப் போர்த்தந்திரத்தையும், நிறுவனத்தையும், தொழிலாளி வர்க்கத்தின், அதன் நிறுவன ஒழுங்கமைப்பு பெற்ற முன்னணிப் படையான கம்யூனிஸ்டுக் கட்சியின் புரட்சிகர உணர்வையும், வைராக்கியத்தையும், தயார் நிலையையும் பாதுகாத்துக் கொள்ளவும் பலப்படுத்தவும் உருக்கு உறுதியாக்கிக் கொள்ளவும் வளர்த்துச் செல்லவும் முடிகிறது என்பதே இங்குள்ள பிரச்சினையாகும்.

மார்க்சின் போதனைகளுடைய அடிப்படைக் கூறுகளை அறிந்த எவரும் இந்தப் போதனைகளின் முழுமொத்தத்திலிருந்து தவிர்க்க முடியாதபடி இந்த முடிவினைத்தான் வந்தடைந்தாக வேண்டும். ஆனால் பிரிட்டனில் வரலாற்றுக் காரணங்கள் பலவற்றின் விளைவாகவும் மார்க்சியமானது சார்ட்டிஸ்டு இயக்கத்துக்குப்[18] பிற்பாடு (பல வழிகளிலும் இந்த இயக்கம் மார்க்சியத்துக்கான தயாரிப்பாகவும், மார்க்சியத்துக்கு முன்பு ''இறுதி முடிவுக்கு ஒரு படி குறைவான'' தாகவும் இருந்தது) தொழிற் சங்கங்கள், கூட்டுறவுகள் இவற்றின் சந்தர்ப்பவாத, அரை-முதலாளித்துவத் தலைவர்களால் பின்னிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டதால், பரிசீலனையிலுள்ள கருத்தோட்டத்தின் மெய்ப்பொருளை எல்லோரும் அறிந்த சர்வசாதாரண, அரசியல், பொருளாதார வாழ்க்கையின் உண்மைகளிலிருந்து எடுக்கப்பட்ட பொருத்தமான எடுத்துக் காட்டுகளைக் கொண்டு விளக்க முயலுகிறேன்.

முன்னொரு முறை என்னுடைய பேச்சுக்களில் ஒன்றில்* நான் கொடுத்த ஓர் உதாரணத்திலிருந்து தொடங்குகிறேன். ஆயுதங்கள் கொண்ட கொள்ளைக் கூட்டத்தினர் நீங்கள்

---

* ''சுதந்திரம், சமத்துவம் ஆகிய முழக்கங்களைக் கொண்டு மக்களை ஏமாற்றுதல்'' என்னும் தலைப்பில் முதலாவது அனைத்து ருஷ்ய முதியோர் கல்விக் காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவைப் பார்க்கவும் (வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 38, பக்கங்கள் 341-42).—பதிப்பாசிரியர்.

செல்லும் காரைத் தாக்குவதாய் வைத்துக் கொள்வோம். உங்கள் பொட்டுக்கு நேராய்க் கைத்துப்பாக்கியை வைத்ததும் உங்கள் காரையும் பணத்தையும் ரிவால்வரையும் நீங்கள் கொள்ளைக் கூட்டத்தினரிடம் ஒப்படைத்துவிடுவதாகவும், கொள்ளைக்காரர்கள் இந்தக் காரையும் பிறவற்றையும் உபயோகித்து மேலும் சில கொள்ளைகள் நடத்துவதாகவும் வைத்துக் கொள்வோம்.

இது வழிப்பறிக்காரர்களுடன் செய்து கொள்ளப்படும் ஒரு சமரசமே, அவர்களுடனான ஓர் ஒப்பந்தமே என்பதில் சந்தேகமில்லை. கையொப்பமிடப்படாமல் மௌனமாய்ச் செய்துகொள்ளப்பட்டது என்றாலும் திட்டவட்டமான ஒப்பந்தமே ஆகும்: ''கொள்ளைக்காரர்களே, என் காரையும் ஆயுதத்தையும் பணத்தையும் உங்களுக்குத் தருகிறேன், உங்களுடைய சகவாசத்திலிருந்து என்னை விட்டுவிடுங்கள்.''

வழிப்பறிக்காரர்களுடன் இத்தகைய ஒப்பந்தம் செய்து கொண்ட ஆளைக் கொள்ளையில் உடந்தையாய் இருந்தார், ஒப்பந்தம் செய்து கொண்டவரிடமிருந்து பெற்ற கார், பணம், ஆயுதம் இவற்றின் துணை கொண்டு கொள்ளைக் கூட்டத்தினர் மூன்றாவது ஆட்கள்மீது தாக்கி நடத்திய கொள்ளையில் உடந்தையாய் இருந்தார் என்று சொல்வீர்களா?

இல்லை, சொல்லமாட்டீர்கள்.

சின்னஞ்சிறு விவரம் வரை முற்றிலும் தெளிவாகவும் சுலபமாகவும் விளங்கும் விவகாரம் இது.

வேறொரு வகை சூழ்நிலையில் கொள்ளைக்காரர்களிடம் காரையும் பணத்தையும் ஆயுதத்தையும் பேசாமல் ஒப்படைப்பதானது பகுத்தறிவுடைய எவராலும் கொள்ளையில் உடந்தையாக இருந்ததாய்க் கொள்ளப்படும் என்பதும் இதே போலத் தெளிவு.

முடிவு தெளிவாய் விளங்குகிறது: பொதுவாகப் பேசுமிடத்து, கொள்ளைக்காரர்களுடன் சில சமயம் ஒப்பந்தங்கள் அவசியமாகவும் அனுமதிக்கப்படக் கூடியவையாகவும் இருக்கலாம் என்ற கருத்தியலான நிர்ணயிப்பின் அடிப்படையில் கொள்ளையில்ஒருவர் உடந்தையாய் இருந்திருக்க முடியாதென தீர்ப்பளிப்பது எவ்வளவு அபத்தமானதோ, அதே அளவுக்கு அபத்தமானதுதான் கொள்ளைக்காரர்களுடனான எல்லா ஒப்

பந்தங்களையும் அல்லது சமரசங்களையும் பொதுப்பட நிராகரிப்பதும்.

இனி ஓர் அரசியல் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம்....*

1920 மார்ச்-ஏப்ரலில் எழுதப்பெற்றது

முதலில் 1936ல் போல்ஷிவிக் சஞ்சிகையில் ( இதழ் 2) வெளிவந்தது

நூல் திரட்டு, தொகுதி 40, பக்கங்கள் 289-91

---

* கையெழுத்துப் பிரதி இத்துடன் நின்றுவிடுகிறது. —பதிப்பாசிரியர்.

# பாராளுமன்ற முறை பற்றிய சொற்பொழிவு கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் நிகழ்த்தப் பெற்றது 1920, ஆகஸ்டு 2

தோழர் பொர்டீகா இங்கே இத்தாலிய மார்க்சியவாதிகளின் கருத்தோட்டத்துக்காக வாதாட விரும்பியதாய்த் தெரிகிறது. ஆனால் அவர் பாராளுமன்ற வழியிலான செயற்பாட்டுக்கு ஆதரவாய்ப் பிற மார்க்சியவாதிகள் முன்வைத்த வாதங்களில் எதற்குமே பதிலளிக்கவில்லை.

வரலாற்று அனுபவத்தைச் செயற்கை முறையில் படைப்பித்துவிட முடியாது என்பதை தோழர் பொர்டீகா ஒத்துக் கொள்கிறார். போராட்டத்தைப் பிறிதொரு துறைக்கு எடுத்துச் சென்றாக வேண்டுமென்று அவர் நம்மிடம் கூறுகிறார். புரட்சிகர நெருக்கடி ஒவ்வொன்றுடன் கூடவும் பாராளுமன்ற நெருக்கடியும் தோன்றுவதை அவர் உணரவில்லையா, என்ன? போராட்டத்தைப் பிறிதொரு துறைக்கு, அதாவது சோவியத்துகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமெனக் கூறுகிறார் என்பது மெய்தான். ஆனால் சோவியத்துகளைச் செயற்கை முறையில் படைப்பித்துவிட முடியாதென்பதை பொர்டீகாவே ஒத்துக் கொள்கிறார். புரட்சியின் போதோ, புரட்சியின் தருவாயிலோதான் சோவியத்துகளை நிறுவ முடியுமென்று ருஷ்யாவின் உதாரணம் காட்டுகிறது. கேரென்ஸ்கியின் காலத்திலுங்கூட சோவியத்துகள் (அவை மென்ஷிவிக் சோவியத்துகளாகவே இருந்தன) பாட்டாளி வர்க்க அதிகாரமாய் அமைய முடியாத முறையிலேதான் நிறுவப்பட்டன. பாராளுமன்றம் வரலாற்று வழியில் தோன்றுவதாகும்; முதலாளித்துவப் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குப் போதுமான பலமுடையோராகும் வரை நம்மால் அதை அகற்றிவிட முடியாது. குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளில் முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் உறுப்பினராய் இருந்து

கொண்டுதான் முதலாளித்துவ சமுதாயத்தையும் பாராளுமன்ற முறையையும் எதிர்த்துப் போராட்டம் நடத்த முடிகிறது. போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கம் கையாளும் அதே ஆயுதத்தைப் பாட்டாளி வர்க்கமும்—முற்றிலும் மாருன குறிக்கோள்களுக்காக என்பதைக் கூறத் தேவையில்லை—உபயோகித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. இவ்வாறு இல்லை என்று உங்களால் சாதிக்க முடியாது. இதனை நீங்கள் நிராகரித்து வாதாட விரும்பினுல், உலகின் புரட்சிகர நிகழ்ச்சிகள் அனைத்தின் அனுபவத்தையும் நீங்கள் விட்டொழிக்க வேண்டியிருக்கும்.

தொழிற் சங்கங்களுங்கூட சந்தர்ப்பவாதத் தன்மை கொண்டவையே, இவையும் ஓர் அபாயமே என்று கூறுகிறீர்கள். ஆனுல் அதேபோது தொழிற் சங்கங்களைப் பொறுத்த வரை விதிவிலக்கு செய்து கொள்ள வேண்டும், ஏனெனில் இவை தொழிலாளர்களுடைய நிறுவனங்கள் என்று சொல்கிறீர்கள். ஆனுல் இது ஓரளவுக்கு மட்டுமே உண்மை. தொழிற் சங்கங்களிலுங்கூட மிகவும் பிற்பட்ட பகுதியோர் உள்ளனர்; பாட்டாளிகளாக்கப்பட்ட குட்டிபூர்ஷுவாக்களில் ஒரு பகுதியோரும் பிற்பட்ட தொழிலாளர்களும் சிறு விவசாயிகளும் உள்ளனர். இப்பகுதியோர் எல்லோரும் தமது நலன்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருப்பதாய் மெய்யாகவே நினைக்கிருர்கள். பாராளுமன்றத்தின் உள்ளிருந்து வேலை செய்வதன் மூலம், எது மெய்யென்பதை வெகுஜனங்களுக்குக் காட்டும் வண்ணம் உண்மை விவரங்களை எடுத்துரைப்பதன் மூலம் இந்தக் கருத்தினை எதிர்த்துப் போராடியாக வேண்டும். பிற்பட்ட மக்கள் திரள்களிடம் தத்துவம் பலனளிக்காது; இவர்களுக்கு நடைமுறை அனுபவம் அவசியமாகும்.

ருஷ்யாவின் உதாரணத்திலுங்கூட இதுவேதான் காணக் கிடக்கிறது. பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்ற பிறகும்கூட நாங்கள் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டும்படி நேர்ந்தது; பிற்பட்ட நிலையிலிருந்த பாட்டாளிகளுக்கு இந்தச் சபையால் அவர்கள் பெறக் கூடிய அனுகூலம் ஒன்றுமில்லை என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காக நாங்கள் இதைச் செய்ய வேண்டியதாயிற்று. சோவியத்துகளுக்கும் அரசியல் நிர்ணய சபைக்குமுள்ள வித்தியாசத்தை உணர்த்தும் பொருட்டு,

PUBLIC LIB

ஸ்தூலமான முறையில் இரண்டையும் எதிரெதிரே வரச் செய்து, சோவியத்துகள் மட்டுமேதான் தீர்வாய் அமைய முடியுமென்பதைக் காட்ட வேண்டியிருந்தது.

புரட்சிகர சிண்டிகலிஸ்டான தோழர் சூஷியும் இதே தத்துவத்தை ஆதரித்து வாதாடினர். ஆனல் தமது வாதத்துக்கு ஆதரவாய் அவர் தர்க்க நியாயம் எதையும் தரவில்லை. தாம் மார்க்சியவாதியல்ல என்று அவர் சொன்னர், ஆகவே யாவும் தெளிவாய்ப் புரிந்துவிடுகிறது. ஆனல் தோழர் பொர்டீகா, நீங்கள் மார்க்சியவாதி என்று கூறிக் கொள்கிறீர்கள். ஆதலால் உங்களிடமிருந்து அதிக அளவில் தர்க்க நியாயம் எதிர்பார்க்கிறேம். பாராளுமன்றத்தைத் தகர்ப்பது எப்படி என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லா நாடுகளிலும் ஆயுதமேந்திய எழுச்சியால் நீங்கள் இதைச் செய்ய முடியுமானல் நல்லதுதான். ருஷ்யாவில் நாங்கள் முதலாளித்துவப் பாராளுமன்றத்தை ஒழிப்பதில் எங்களுடைய உறுதியைத் தத்துவ வழியில் மட்டுமின்றி நடைமுறையிலும் நிரூபித்துக் காட்டினேம் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனல் ஓரளவு நீண்ட நெடிய தயாரிப்புகள் இல்லாமல் இதைச் செய்ய இயலாது என்பதையும், பெரும்பாலான நாடுகளில் ஒரே அடியில் பாராளுமன்றத்தை வீழ்த்துவது இன்னமும் சாத்தியமாகிவிடவில்லை என்பதையும் நீங்கள் கருத்தில் கொள்ளத் தவறிவிடுகிறீர்கள். பாராளுமன்றத்தை ஒழிக்க நாம் பாராளுமன்றத்தின் உள்ளிருந்து போராட்டம் நடத்தியாக வேண்டியிருக்கிறது. நவீன சமுதாயத்தில் எல்லா வர்க்கங்களின் அரசியல் கொள்கை வழியையும் நிர்ணயிக்கும் நிலைமைகளுக்கு மாற்ருய் உங்களுடைய புரட்சிகர மனவுறுதியைக் கொண்டுவிடப் பார்க்கிறீர்கள். ஆதலால்தான், ருஷ்யாவில் முதலாளித்துவப் பாராளுமன்றத்தை ஒழித்திடு முன், எங்களுடைய வெற்றிக்குப் பிற்பாடுங்கூட முதலில் நாங்கள் அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட வேண்டியிருந்ததை நீங்கள் மறந்துவிடுகிறீர்கள். ''ருஷ்யப் புரட்சியின் உதாரணம் மேலைய ஐரோப்பாவிலுள்ள நிலைமைகளுக்கு பொருந்தாதென்பது மெய்தான்'' என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனல் நமக்கு இதை நிரூபிக்க எந்தவொரு முக்கிய வாதத்தையும் அளித்திடவில்லை. நாங்கள் முதலாளித்துவ ஜனநாயகத்துக்குரிய கட்டத்தின் வழியேதான் சென்றேம்.

இதனை நாங்கள் வேகமாய்க் கடந்து சென்றோம். அப்பொழுது நாங்கள் அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்களுக்காகக் கிளர்ச்சி நடத்தினோம். பிற்பாடு தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்த பிறகும் விவசாயிகள் முதலாளித்துவப் பாராளுமன்றம் அவசியமென்பதாகவே நம்பி வந்தனர்.

இந்தப் பிற்பட்ட பகுதியோரின் விருப்பத்தைக் கருத்தில் கொண்டு, நாங்கள் தேர்தல்களை அறிவித்து, மிகக் கடுமையான பசியாலும் பட்டினியாலும் எல்லோரும் அவதிப்பட்ட ஒரு தருணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையானது சுரண்டப்படும் வர்க்கங்களுடைய விருப்பங்களையும் கோரிக்கைகளையும் பிரதிபலிக்கவே இல்லை என்பதை உதாரணத்தின் மூலமும் உண்மைகளின் மூலமும் வெகுஜனங்களுக்குக் காட்ட வேண்டியிருந்தது. சோவியத் அரசாங்கத்துக்கும் முதலாளித்துவ அரசாங்கத்துக்குமுள்ள மோதல் இவ்விதம் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகிய எங்களுக்கு மட்டுமின்றி, மிகப் பெரும்பாலான விவசாயிகளுக்கும் சிறு அலுவலகச் சிப்பந்திகளுக்கும் குட்டிபூர்ஷுவாக்களுக்கும் இன்ன பிறருக்கும் தெக்கத் தெளிவாய்த் தெரியலாயிற்று. எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் தொழிலாளி வர்க்கத்தில் பிற்பட்ட நிலையிலுள்ள பகுதியோர் இருக்கிறார்கள்; பாராளுமன்றம் மக்களின் மெய்யான பிரதிநிதியாகுமென்று இவர்கள் நம்புகிறார்கள்; அங்கே கையாளப்படும் அயோக்கிய முறைகளை இவர்கள் காண்பதில்லை. முதலாளித்துவ வர்க்கம் வெகுஜனங்களை ஏமாற்றத் துணை புரியும் சாதனமாகவே பாராளுமன்றம் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு எதிராய் எழுப்பப்பட வேண்டிய வாதம் இது. உங்களுடைய முடிவுகளுக்கு எதிராய் இது எழவே செய்கிறது. முதலாளித்துவ வர்க்கத்தால் ஏமாற்றப்பட்டு வரும் மெய்யாகவே பிற்பட்ட பகுதியோரான வெகுஜனங்களுக்குப் பாராளுமன்றத்தின் உண்மையான தன்மையை எப்படி நீங்கள் புலப்படச் செய்யப் போகிறீர்கள்? நீங்கள் பாராளுமன்றத்தில் இல்லையானால், நீங்கள் பாராளுமன்றத்துக்கு வெளியேதான் நிற்கப் போகிறீர்கள் என்றால், பல்வேறு பாராளுமன்ற சூழ்ச்சிகளையும் பல்வேறு கட்சிகளுடைய நிலைகளையும் எப்படி அம்பலம் செய்யப்

போகிறீர்கள்? நீங்கள் மார்க்சியவாதிகள்தான் என்ருல், முதலாளித்துவ சமுதாயத்தில் வர்க்கங்களுக்கு இடையிலான உறவுகளுக்கும் கட்சிகளுக்கு இடையிலான உறவுகளுக்கும் நெருங்கிய இணைப்பு உண்டென்பதை நீங்கள் ஒத்துக்கொண்டாக வேண்டும். திரும்பவும் கேட்கிறேன்: பாராளுமன்ற உறுப்பினர்களாய் இல்லையேல், பாராளுமன்ற வழியிலான செயற்பாட்டினை நிராகரிப்பீர்களாயின், இவற்றை எல்லாம் எப்படி புலப்படச் செய்யப் போகிறீர்கள்? தொழிலாளி வர்க்கத்தினர், விவசாயிகள், சிறு அலுவலகச் சிப்பந்திகள் ஆகிய வெகுஜனங்களுக்கு அவர்களுடைய சொந்த அனுபவத்தின் வாயிலாகவே அன்றி, எந்த வாதங்களாலும் உண்மை நிலைமையை உணர்த்திவிட முடியாது என்பதை ருஷ்யப் புரட்சியின் வரலாறு தெளிவாய்க் காட்டியிருக்கிறது.

பாராளுமன்றப் போராட்டத்தில் ஈடுபடுவது வெறும் கால விரயமே என்பதாய் இங்கு வாதாடப்பட்டது. பாராளுமன்றத்தைப் போல, எல்லா வர்க்கங்களும் இந்த அளவுக்குப் பங்கெடுத்துக் கொள்ளும் வேருெரு நிறுவனம் இருப்பதாய் யாரும் நினைக்க முடியுமா? செயற்கை முறையிலே இப்படி ஒன்றை சிருஷ்டித்துவிட முடியாது. எல்லா வர்க்கங்களும் பாராளுமன்றப் போராட்டத்தினுள் கவர்ந்திழுக்கப்படுகின்றன என்ருல், வர்க்க நலன்களும் மோதல்களும் பாராளுமன்றத்தில் பிரதிபலிக்கப்படுவதுதான் காரணம். உதாரணமாய், தீர்மானகரமான பொது வேலைநிறுத்தத்தை எங்கும் உடனடியாக உண்டாக்கி ஒரே அடியில் முதலாளித்துவத்தை வீழ்த்திவிட முடியுமானுல், பல நாடுகளிலும் ஏற்கனவே புரட்சி நடைபெற்று முடிவுற்றிருக்குமே. உண்மைகளை நாம் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும், பாராளுமன்றமானது வர்க்கப் போராட்ட அரங்காய் இருந்து வருகிறது. தோழர் பொர்டீகாவும் அவருடைய கருத்தோட்டங்களை ஏற்றுக் கொள்வோரும் வெகுஜனங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டும். பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்டுக் குழு ஒன்று செயல்படுவது சாத்தியமே என்பதற்கு ஜெர்மனி சிறந்த உதாரணமாய் அமைகிறது. ஆகவே நீங்கள் ஒளிவுமறைவின்றி வெகுஜனங்களிடம் சொல்ல வேண்டும்: ''வலுவான நிறுவன ஒழுங்கமைப்பு கொண்ட ஒரு கட்சியைப் படைப்பிக்க நாங்கள் பலமற்ருேராய் இருக்கிருேம்''. இதுதான்

சொல்லப்படவேண்டிய உண்மை. ஆனால் வெகுஜனங்களிடம் சென்று உங்கள் பலவீனத்தை நீங்கள் ஒப்புக் கொண்டால், அவர்கள் உங்கள் ஆதரவாளர்களாய் இருக்க மாட்டார்கள், எதிராளிகளாகவே இருப்பார்கள்; அவர்கள் பாராளுமன்ற முறையின் ஆதரவாளர்களாகிவிடுவார்கள்.

''தொழிலாளித் தோழர்களே, நாங்கள் மிகவும் பலவீனமாயிருக்கிறோம், பாராளுமன்றத்திலுள்ள கட்சி உறுப்பினர்களைக் கட்சிக்குக் கீழ்ப்படிய வைக்கவல்ல கட்டுப்பாடுள்ள கட்சியினை எங்களால் அமைக்கமுடியவில்லை'' என்று சொல்வீர்களாயின், தொழிலாளர்கள் உங்களை விட்டுத் துறந்துவிடுவார்கள்; ''பலமில்லாத இந்த சோனிகளைக் கொண்டு பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நாங்கள் நிறுவுவது எப்படி?'' என்றுதான் அவர்கள் தம்மைத் தாமே கேட்டுக் கொள்வார்கள்.

பாட்டாளி வர்க்கம் வெற்றிபெற்ற மறுதினமே அறிவுத் துறையினரும் மத்தியதர வகுப்பாரும் குட்டிபூர்ஷுவாக் களும் கம்யூனிஸ்டுகளாகிவிடுவார்கள் என்று நீங்கள் நினைத்தால், அது சிறு பிள்ளைத்தனமே ஆகும்.

இந்தப் பிரமை உங்களிடம் இல்லையானால், உடனே நீங்கள் பாட்டாளி வர்க்கத்தை அதன் சொந்தக் கொள்கை வழியைக் கடைப்பிடிக்கும்படி வைப்பதற்குத் தயார் செய்தாக வேண்டும். அரசு விவகாரங்களில் எந்தக் கிளையிலும் இந்த விதிக்கு விலக்குகள் இல்லை என்பதைக் காண்பீர்கள். புரட்சிக்கு மறுநாளன்றே நீங்கள் எங்கும் தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்பதாய்க் கூறிக்கொண்டு சந்தர்ப்பவாதத்தைக் கைக்கோள்வோரைக் காண்பீர்கள்; அதாவது, கம்யூனிஸ்டுக் கட்சியின் அல்லது பாட்டாளி வர்க்க அரசின் கட்டுப்பாட்டை அங்கீகரிக்க மறுக்கும் குட்டிபூர்ஷுவாக்களைக் காண்பீர்கள். தனது எல்லா உறுப்பினர்களையும் தனது கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படிக் கட்டாயப்படுத்தக் கூடியதான, மெய்யான கட்டுப்பாடு வாய்ந்த கட்சியை அமைத்திட நீங்கள் தொழிலாளர்களைத் தயார் செய்யாவிடில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு உங்களால் ஒரு நாளும் தயார் செய்ய முடியாது. புதிய கம்யூனிஸ்டுக் கட்சிகள் மிகப் பலவும் பாராளுமன்றத்தில் பங்குகொண்டு செயல்படுவதை நிராகரிப்பதானது அவற்றின் பலவீனத்

திலிருந்து எழும் போக்கே ஆகுமென்பதை நீங்கள் ஒத்துக் கொள்ள விரும்பாததற்கு இதுவேதான் காரணமென நினைக் கிறேன். மெய்யாகவே புரட்சிகரமான தொழிலாளர்களில் மிகப் பெரும்பாலோர் எங்களைத்தான் பின்பற்றுவார்கள், உங்களுடைய பாராளுமன்ற - எதிர்ப்பு உரைகளை எதிர்த்துப் பேசுவார்கள் என்பதில் எனக்கு ஐயப்பாடு சிறிதும் இல்லை.

**கிராஸ்னயா கஸெத்தா**
*(பெத்ரொகிராத்) இதழ் 170,*
*ஆகஸ்டு 3ல் சுருக்கமான*
*செய்தியுரையாய் வெளிவந்தது*

*முதன்முதல் 1921ல் முழு வாசகமும்*
**கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது**
**காங்கிரஸ். முழு உரைகள்**
*(பெத்ரொகிராத்)*
*என்னும் புத்தகத்தில் வெளிவந்தது*

**நூல் திரட்டு.**
*தொகுதி 41,*
*பக்கங்கள் 255-59*

# ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம்[19]

ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சி முதலாளித்துவ-ஜனநாயகப் பாராளுமன்றத்திற்கு நடக்கும் தேர்தல்களைப் பகிஷ்கரிப்பதென்று முடிவு செய்துள்ளது. சமீபத்தில் முடிவுற்ற கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் முதலாளித்துவப் பாராளுமன்றங்களுக்கான தேர்தல்களிலும் இந்தப் பாராளுமன்றங்களின் வேலையிலும் பங்கெடுத்துக் கொள்வது பிழையற்ற போர்த்தந்திரம் என்று அங்கீகரித்தது.

ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிகளுடைய உரைகளைக் கொண்டு பார்க்கையில் அது கம்யூனிஸ்டு அகிலத்தின் முடிவைக் கட்சிகளில் ஒன்றின் முடிவுக்கு மேலாக வைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் ஓடிவிட்டவர்களாகிய, சோஷலிஸத்தின் துரோகிகளாகிய ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் முடிவுபற்றி—அது ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பகிஷ்கார முடிவுக்கு முரணுயுள்ளது—மகிழ்ச்சி அடைவார்கள் என்பதிலும் சந்தேகம் இருக்க முடியாது. என்றபோதிலும், ஷெய்டெமன்கள், நோஸ்கேகள், அல்பேர் டோமாக்கள், கோம்பர்சுகள் ஆகியோரின் கூட்டாளிகளான ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளைப் போன்ற பேர்வழிகளின் வஞ்சகமான மகிழ்ச்சியில் அரசியல் உணர்வுள்ள தொழிலாளர்கள் கவனம் செலுத்த மாட்டார்கள் என்பது நிச்சயம். ரென்னர்கள் முதலாளித்துவ வர்க்கத்தினிடம் அடிமையாகிக் கிடப்பது போதிய அளவுக்கு வெளிப்படையாகியுள்ளது; எல்லா நாடுகளிலும் இரண்டாவது அல்லது மஞ்சள் அகிலத்தின்[20] வீரர்களை எதிர்த்து ஆத்திரம் வளர்ந்து பரவி வருகிறது.

ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகள் முதலாளித்துவப் பாராளுமன்றத்திலும், அதே போல தங்கள் சொந்த பத்திரிகைகளும் அடங்கலாய்த் தமது ''வேலைகளின்'' எல்லாத் துறைகளிலும், எதார்த்தத்தில் முதலாளி வர்க்கத்தையே முழுக்க முழுக்கச் சார்ந்திருக்கும் வகையில் முதுகெலும் பற்ற ஊசலாட்டத்திலே மட்டுமே திறனுள்ள குட்டிபூர்ஷுவா ஜனநாயகவாதிகள் போல் நடந்துகொள்கிறார்கள். தொழிலாளர்களையும் உழைப்பாளி மக்களையும் வஞ்சிக்கும் ஊழல் மலிந்த இந்த முதலாளித்துவ ஸ்தாபனத்தின் வஞ்சகத்தை அதன் மேடையிலிருந்து அம்பலப்படுத்துவதற்காக வே கம்யூனிஸ்டுகளாகிய நாம் முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் நுழைகிறோம்.

முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் பங்கெடுப்பதை எதிர்த்து ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் முன்வைக்கும் வாதங்களில் ஒன்று இன்னும் கொஞ்சம் அதிகக் கவனமாய்ப் பரிசீலிக்கப்பட வேண்டியதாகும். அந்த வாதம் பின்வருமாறு:

''கம்யூனிஸ்டுகளுக்குப் பாராளுமன்றம் ஒரு கிளர்ச்சி மேடையாக மட்டுமே முக்கியத்துவமுடையது. ஆஸ்திரியாவிலுள்ள எங்களுக்குத் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத் ஒரு கிளர்ச்சி மேடையாக இருக்கிறது. எனவே, முதலாளித்துவப் பாராளுமன்றத்தின் தேர்தல்களில் நாங்கள் பங்கெடுக்க மறுக்கிறோம். ஜெர்மனியில் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத் என்று மெய்யாகவே கருதத்தக்கது ஒன்றுமில்லை. அதனாலேதான் ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் மாறான போர்த்தந்திரத்தைப் பின்பற்றுகிறார்கள்.''

இந்த வாதம் தவறாகுமெனக் கருதுகிறேன். முதலாளித்துவப் பாராளுமன்றத்தை நம்மால் ஒழிக்க முடியாத வரை நாம் அதை எதிர்த்து உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வேலை செய்ய வேண்டும். தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக முதலாளிகள் பயன்படுத்துகிற முதலாளித்துவ ஜனநாயகக் கருவிகளை உழைக்கும் மக்களில் (பாட்டாளிகள் மட்டுமின்றி, அரைப் பாட்டாளிகளும் சிறு விவசாயிகளும்) கணிசமான தொகையினர் நம்புகிறவரை, தொழிலாளர்களின் பிற்பட்ட பகுதியினர்—குறிப்பாகப் பாட்டாளி வர்க்கமல்லாத உழைப்பாளி மக்கள் —அதிமுக்கியமானதாகவும் செல்

வாக்கு உள்ளதாகவும் கருதுகிற அதே மேடையிலிருந்து இந்த வஞ்சகத்தை நாம் விளக்க வேண்டும்.

கம்யூனிஸ்டுகளாகிய நாம் அரசு அதிகாரத்தைக் கைப் பற்றித் தேர்தல்கள்—முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய்த் தங்களுடைய சோவியத்துக்களுக்காக உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொள்ளும் தேர்தல்கள்—நடத்த முடியாதிருக்கிறவரை, முதலாளித்துவ வர்க்கம் அரசு அதிகாரத்தை வகித்து மக்களின் பல்வேறு வர்க்கங் களைத் தேர்தல்களில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள் கிறவரை, அந்தத் தேர்தல்களில், பாட்டாளி வர்க்கம் மட்டு மின்றி எல்லா உழைப்பாளி மக்களிடையேயும் பிரசாரம் செய்யும்பொருட்டு, நாம் பங்கெடுப்பது நமது கடமையாகும். முதலாளித்துவப் பாராளுமன்றம், நிதி மோசடிகளையும் எல்லா விதமான லஞ்சங்களையும் மூடிமறைப்பதற்கு (பூர்ஷ்" வாப் பாராளுமன்றத்தில் நடப்பதுபோல் வேறெங்கும் எழுத் தாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள், மற்றவர்களின் விஷயத்தில் இவ்வளவு பெரிய அளவில் மிக ''நயமான'' வகைப்பட்ட லஞ்சம் கையாளப்படுவதில்லை) ''ஜனநாயகத்தைப்'' பற்றிய வாய்ச்சொற்களைப் பயன் படுத்தி, தொழிலாளிகளை வஞ்சிப்பதற்குரிய ஒரு சாதனமாக இருந்து வருகிற வரை, இதே நிறுவனத்தில்—அது மக்களின் சித்தத்தை வெளியிடுவதாகக் கருதப்படுகிறது; ஆனால் பணக் காரர்கள் மக்களை ஏய்ப்பதை மூடிமறைப்பதே உண்மையில் அது ஆற்றும் பணியாகும் —கம்யூனிஸ்டுகளாகிய நாம் இருந்து வஞ்சனையை முரணின்றி அம்பலப்படுத்துவதும் தொழி லாளர்களுக்கு எதிராக முதலாளிகள் பக்கம் ஓடிப்போகிற ரென்னர்களின் கும்பல் புரியும் ஒவ்வொரு காரியத்தையும் அம்பலப்படுத்துவதும் நமது கடமையாகும். பாராளுமன்றத் திலே முதலாளித்துவக் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் இடை யே உள்ள உறவுகள் மிக அடிக்கடி தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன; முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள எல்லா வர்க்கங்களிடையேயும் நிலவும் உறவுகளை அவை பிரதிபலிக் கின்றன. எனவேதான், முதலாளித்துவப் பாராளுமன்றத் திலே, அதனுள் இருந்தே கம்யூனிஸ்டுகளாகிய நாம் கட்சிகள் பால் வர்க்கங்கள் கடைப்பிடிக்கும் போக்கு, பண்ணைத் தொழி லாளிகள்பால் நிலப்பிரபுக்கள் கடைப்பிடிக்கும் போக்கு,

ஏழை விவசாயிகள்பால் பணக்கார விவசாயிகள் கடைப் பிடிக்கும் போக்கு, அலுவலக ஊழியர்கள்பால், சிறு உடைமையாளர்கள்பால் பெரு முதலாளிகள் கடைப்பிடிக்கும் போக்கு, இப்படியே மற்றவற்றின் உண்மையை நாம் மக்களுக்கு விளக்க வேண்டும்.

முதலாளிகளின் கேடுகெட்ட, நாசுக்கான தந்திரங்கள் எல்லாவற்றையும் புரிந்து கொள்ளக் கற்றுக் கொள்ளவும், குட்டிபூர்ஷுவா வர்க்கத்தினர்மீதும் பாட்டாளி வர்க்கமல்லாத உழைக்கும் மக்கள் திரள்மீதும் செல்வாக்குச் செலுத்தக் கற்றுக்கொள்ளவும், பாட்டாளி வர்க்கம் இதையெல்லாம் தெரிந்திருக்க வேண்டும். இந்தப் ''பள்ளிப் பயிற்சி'' இல்லாமல், பாட்டாளி வர்க்கம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பொறுப்புக்களை வெற்றிகரமாகச் சமாளிக்க முடியாது. காரணம், அப்போதுங்கூட, முதலாளித்துவ வர்க்கம் தன்னுடைய புதிய நிலையிலிருந்து கொண்டு (ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்ட ஒரு வர்க்கம் என்ற நிலையிலிருந்து) பல வடிவங்களிலே பல துறைகளிலே விவசாயிகளை ஏமாற்றியும் அலுவலகச் சிப்பந்திகளை லஞ்சம் கொடுத்தும் பயமுறுத்தியும் வரும், ''ஜனநாயகம்'' பற்றிய வாய்ச்சொற்களைக் கொண்டுதன்னுடைய அசிங்கமான, சுயலாப அபிலாஷைகளை மூடிமறைக்கும் கொள்கையைத் தொடர்ந்து பின் பற்றும்.

இல்லை, ரென்னர்களின், அவர்களை ஒத்த முதலாளித்துவ வர்க்கத்தின் இதர ஏவலாட்களின் எக்களிப்பைக் கண்டு ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் பயப்பட மாட்டார்கள். ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய பகிரங்கமான, நேரடியான, சர்வதேசப் பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டின் அங்கீகாரத்தைப் பிரகடனம் செய்ய அஞ்சமாட்டார்கள். வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் அனுபவத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய அறிவு, சித்தம் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசக் கட்டுப்பாடுக்குக் கீழ்ப்படுவதால் தொழிலாளர்களின் விடுதலைப் போராட்டத்தின் மகத்தான பிரச்சினைகளைத் தீர்க்கிறோம் என்பதிலே நாம் பெருமைப்படுகிறோம்; அவ்வழியே, செயல்பூர்வமாக (ரென்னர்களும், பிரிட்ஸ் ஆட்லெர்களும், ஒட்டோ பௌவர்களும்

செய்வதுபோல் சொல்லளவில் அல்ல) உலகெங்கும் கம்யூனிசத்துக்காக நடைபெறும் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் ஒற்றுமையைச் செயல்படுத்துகிறோம்.

நி. லெனின்

*1920, ஆகஸ்டு 15*

*1920, ஆகஸ்டு 31,*
"Die Rote Fahne" (Wien)
*இதழ் 396ல்*
*ஜெர்மன் மொழியில் வெளியிடப்பட்டது*

*1925ல்,*
*''லெனின் திரட்டுக்கள் IV''ல்*
*ருஷ்ய மொழியில் முதன்முதலில் வெளியிடப்பட்டது*

நூல் திரட்டு,
*தொகுதி 41,*
*பக்கங்கள் 268-73*

# அஸர்பெய்ஜான், ஜார்ஜியா, ஆர்மீனியா, தாகெஸ்தான், மலைக் குடியரசு இவற்றின் கம்யூனிஸ்டுத் தோழர்களுக்கு

காக்கசஸின் சோவியத் குடியரசுகளுக்கு எனது ஆர்வ மிக்க வாழ்த்துக்களை அனுப்புகிறேன். இந்தக் குடியரசுகளுடைய நெருங்கிய கூட்டணியானது முதலாளித்துவ வர்க்கத்தின்கீழ் காண முடியாததும் முதலாளித்துவ அமைப்பில் சாத்தியமற்றதுமான தேசிய அமைதிக்கு ஒரு முன்னுதாரணமாய்த் திகழுமென்ற நம்பிக்கையை வெளியிட விரும்புகிறேன்.

காக்கேசிய தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், விவசாயிகளிடையே தேசிய அமைதி முக்கியமானதே என்ருலும், சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய கட்டமாய் சோவியத் ஆட்சியதிகாரத்தைப் பாதுகாப்பதும் வளர்த்திடுவதும் இதனிலும் முக்கியமானது. இந்தப் பணி கடினமானது என்ருலும், முற்றிலும் நடைமுறை சாத்தியமானதே. இது வெற்றிகரமாய் நிறைவேற்றப்படுவதற்கு மிகவும் முக்கியமாய் வேண்டியது என்னவென்ருல், டிரான்ஸ் காக்கசஸின் கம்யூனிஸ்டுகள் அவர்களுடைய நிலையின், ருஷ்ய சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசின் நிலையிலிருந்தும் நிலைமைகளிலிருந்தும் வேறுபடும் அவர்களுடைய குடியரசுகளின் நிலையின் தனித் தன்மையை நன்கு உணர்ந்திருக்க வேண்டும்; எங்களுடைய போர்த்தந்திரத்தைக் காப்பியடிப்பதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொண்டு, வேறுபடும் ஸ்தூல நிலைமைகளுக்குத் தக்கபடி அதை அறிவார்ந்த முறையில் மாற்றிக் கொள்ள வேண்டும்.

ருஷ்ய சோவியத் குடியரசுக்கு வெளியிடத்திலிருந்து அரசியல் அல்லது இராணுவ உதவி கிடைக்கவில்லை. இதற்குப் பதில் மிகப் பல ஆண்டுகளாய் அது ஆன்டான்ட்[21] படையெடுப்புகளையும் முற்றுகையையும் எதிர்த்துப் போராடியது.

காக்கசஸின் சோவியத் குடியரசுகளுக்கு ருஷ்ய சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசிடமிருந்து அரசியல் உதவியும் ஓரளவு இராணுவ உதவியும் கிடைத்து வந்திருக்கின்றன. இது ஒன்றே பெரிய வேறுபாட்டை உண்டாக்கியிருக்கிறது.

இரண்டாவதாக, ஆன்டான்ட் படையெடுப்பு எதுவும் நடைபெறுமென்றோ, ஜார்ஜிய, அஸர்பெய்ஜானிய, ஆர்மீனிய, தாகெஸ்தானிய, மலைவாசி வெள்ளைப் படையினருக்கு ஆன்டான்ட் இராணுவ உதவி கிடைக்குமென்றோ தற்போது அஞ்சக் காரணமில்லை. ஆன்டான்ட் அரசுகள் ருஷ்யாவில் ''மொத்துப் பட்டிருக்கின்றன'', சில காலத்துக்கு இது அவற்றை இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாய் இருக்கும்படிச் செய்யுமென எதிர்பார்க்கலாம்.

மூன்ருவதாக, காக்கேசியக் குடியரசுகள் ருஷ்யாவைக் காட்டிலும் இன்னுங்கூட அதிக அளவுக்கு விவசாயி இயல்புடைத்தவை.

நான்காவதாக, ருஷ்யாவானது முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிடமிருந்து பொருளாதார வழியில் தனிமைப்பட்டு இருந்துள்ளது, இன்றும் பெருமளவுக்குத் தனிமைப்பட்டே இருக்கிறது. காக்கசஸ் முதலாளித்துவ மேற்குலகுடன் மேலும் சீக்கிரமாகவும் மேலும் சுலபமாகவும் வாணிபம் புரியவும், ''கூடி வாழவும்'' தொடங்கக் கூடிய நிலையில் உள்ளது.

இவைதாம் எல்லா வேறுபாடுகளும் என்பதில்லை என்ருலும், வேறு வகையான போர்த்தந்திரம் வேண்டுமென்பதை விளக்கிக் காட்ட இவை போதும்.

குட்டிபூர்ஷுவாக்களையும் அறிவுத் துறையினரையும் முக்கியமாய் விவசாயிகளையும் குறித்து நீங்கள் மேலும் அதிகமாய் நிதானத்தையும் எச்சரிக்கையையும் இணக்கத்தையும் கையாள வேண்டியிருக்கும். சலுகைகள், வாணிபம் ஆகிய கொள்கையின் வாயிலாய் முதலாளித்துவ மேலைய உலகினை நீங்கள் மிக வேகமாகவும் மிகத் தீவிரமாகவும் சாத்தியமான முழு அளவுக்கும் பொருளாதார வழியில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எண்ணெய், மாங்கனீஸ், நிலக்கரி (திக்வார்ச்செலி சுரங்கங்கள்), செம்பு ஆகியவை உங்களுடைய பிரம்மாண்ட கனி வளங்களில் சில. அயல் நாடுகளுடன் சலுகைகளுக்கும் வாணிபத்துக்குமான கொள்கையை விரி

வாகவளர்த்து உருவாக்கிக் கொள்ள நீங்கள் எல்லா சாத்தியப்பாடுகளையும் பெற்றிருக்கிறீர்கள்.

பரந்த அளவிலும், உறுதியும் திறமையும், விழிப்புணர்வும் வாய்ந்த முறையிலும் இது செய்யப்பட வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகளுடைய நிலைமையை மேம்படுத்துவதற்காகவும் பொருளாதாரக் கட்டுமானப் பணியில் அறிவுத் துறையினரை ஈடுபடச் செய்வதற்காகவும் இது முழு அளவுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இத்தாலியுடனும் அமெரிக்காவுடனும் ஏனைய நாடுகளுடனும் வாணிபம் புரிவதன் மூலம், செல்வச் செழிப்புடைய உங்கள் நாட்டின் உற்பத்தி சக்திகளையும், உங்களுடைய நீர்வளங்களையும் நீர்ப்பாசனத்தையும் வளர்த்திட நீங்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். நீர்ப்பாசனமானது விவசாயமும் கால்நடைத் துறையும் முன்னேறுவதற்கு மிக முக்கிய சாதனமாகும்.

ருஷ்ய சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசு செய்ததற்கு மாறாக காக்கசஸின் குடியரசுகள் செய்யக் கூடியதும் செய்ய வேண்டியதும் என்னவெனில், சோஷலிசத்துக்கான மாற்றத்தைச் சற்று மெதுவாகவும் மேலும் எச்சரிக்கையுடனும் மேலும் முறையாகவும் செயல்படுத்துவதுதான். இதை நீங்கள் புரிந்து கொண்டு, எங்களுடைய போர்த்தந்திரத்திலிருந்து மாறுபடும் இதனைச் செயல்படுத்தி நிறைவேற்றியாக வேண்டும்.

உலக முதலாளித்துவத்தின் அரணில் முதல் உடைப்பை உண்டாக்க நாங்கள் போராடினோம். இந்த உடைப்பு உண்டாக்கப் பெற்றுவிட்டது. ஆன்டான்ட் நாடுகளையும் அவற்றின் முற்றுகையையும் இராணுவ உதவியையும் பக்க பலமாய்க் கொண்ட வெள்ளைப்படையினரையும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரையும் மென்ஷிவிக்குகளையும் எதிர்த்து நடைபெற்ற உக்கிரமான, மனித சக்திக்கு மீறிய யுத்தத்தில் எங்கள் நிலைகளை நாங்கள் பாதுகாத்துக் கொண்டோம்.

காக்கசஸின் கம்யூனிஸ்டுத் தோழர்களாகிய நீங்கள் உடைப்பை ஏற்படுத்தத் தேவையில்லை. 1921ல் இருக்கும் சாதகமான சர்வதேசச் சூழ்நிலையை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; புதியதை மேலும் அதிக எச்சரிக்கை

யோடும் மேலும் முறையாகவும் கட்டியமைக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். ஐரோப்பாவும் உலகும் 1917லும் 1918லும் இருந்தது போல 1921ல் இருக்கவில்லை.

எங்களுடைய போர்த்தந்திர முறைகளைக் காப்பியடிக் காதீர்கள். அவற்றின் விசேஷ இயல்புகளுக்கான காரணங் களையும், அவற்றைத் தோற்றுவித்த நிலைமைகளையும், அவற் றின் பலன்களையும் பகுத்தாராயுங்கள். சொல்லின் பொரு ளுக்கு அப்பால் செல்லுங்கள்; உட்பொருளை, சாரப் பொருளை, 1917-21ன் அனுபவத்தின் படிப்பினைகளைச் செயல்படுத்துங் கள். முதலாளித்துவ நாடுகளுடனான வாணிபத்தை உடனடி யாகவே நீங்கள் உங்களுடைய பொருளாதார அடித்தள மாக்கிக் கொள்ளுங்கள். விலை ஒரு பொருட்டல்ல, கோடிக் கணக்கான தொகை பெறுமானமுள்ள விலையுயர்ந்த கனிகளை அவற்றிடம் விட்டு வைக்க நேர்ந்தாலும் பரவாயில்லை.

விவசாயிகளுடைய நிலைமையை மேம்படச் செய்ய உடன டியாக நீங்கள் முயற்சிகள் எடுத்தாக வேண்டும், பரந்த அளவில் மின்னுக்க, நீர்ப்பாசனத் திட்டங்களைத் துவக்கியாக வேண்டும். யாவற்றுக்கும் முதலாய் உங்களுக்குத் தேவைப் படுவது நீர்ப்பாசனம். ஏனெனில் மற்றெதைக் காட்டிலும் இது நிலப்பரப்பை உசுப்பி எழுப்பிவிடும், புத்துயிர் பெறச் செய்யும், கடந்த காலத்தைப் புதைத்துவிட்டு சோஷலிசத் துக்கான மாற்றத்தை மேலும் உறுதியாக்கும்.

என்னுடைய நடை சரிவர அமையாதது குறித்து மன்னிப் பீர்கள் என்று நம்புகிறேன். கடிதத்தை தோழர் மியாஸ்னிக் கோவ் மூலம் அனுப்பி வைக்கும்பொருட்டு, போதிய முன்னறி விப்பின்றி குறைந்த அவகாசத்துக்குள் நான் எழுத வேண்டி யிருந்தது. மீண்டும் காக்கசஸின் சோவியத் குடியரசுகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் எனது வணக்கத்தையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

நி. லெனின்

*மாஸ்கோ, 1921 ஏப்ரல் 14*
பிராவ்தா குருஸியி, இதழ் 55,
*1921 மே 8*

நூல் திரட்டு,
தொகுதி 43,
பக்கங்கள் 198-200

# 1921, ஜூலை 1ல், கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றும் காங்கிரசில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்களை ஆதரித்து ஆற்றிய சொற்பொழிவு

தோழர்களே, தற்காப்புக்கு அப்பால் செல்லாது நிறுத்திக் கொள்ள வேண்டியிருப்பது பற்றி மிகவும் வருத்தப்படு கிறேன் (சிரிப்பு). ஏன் மிகவும் வருத்தப்படுகிறேன் என்று சொல்கிறேன் என்ருல், தோழர் டெராச்சீனியின் சொற்பொழி வையும் மூன்று பிரதிநிதிக் குழுக்கள் கொண்டுவந்துள்ள திருத்தங்களையும் நான் தெரிந்துகொண்டபிறகு தாக்குதலில் இறங்கவே வெகுவாக விரும்புகிறேன். ஏனெனில், முறை யாகப் பார்த்தால், டெராச்சீனியும் இந்த மூன்று பிரதிநிதிக் குழுக்களும்[22] ஆதரித்து வாதாடும் கருத்துக்களை எதிர்த்துத் தாக்குதல் நடவடிக்கைகள் அவசியமாகின்றன. இப்படிப் பட்ட தவறுகளை எதிர்த்து, இப்படிப்பட்ட ''இடதுசாரி'' அசட்டு வாதங்களை எதிர்த்து, காங்கிரஸ் முழு மூச்சுடன் தாக்குதல் நடத்தாவிட்டால் இயக்கம் முழுவதும் பாழாகி விடும். இது என் ஆழ்ந்த நம்பிக்கை. ஆனுல் நாம் ஸ்தாபன ஒழுங்கமைப்பு கொண்ட கட்டுப்பாடுள்ள மார்க்சியவாதிகள். தனிப்பட்ட தோழர்களை எதிர்த்துப் பேசுவதோடு நாம் திருப்திப்பட முடியாது. ருஷ்யர்களாகிய நாங்கள் இந்த இடதுசாரி வாய்ச்சொற்களைக் கேட்டுக் கேட்டு ஏற்கனவே சலிப்புற்றவர்கள். நாம் ஸ்தாபன ஒழுங்கமைப்பு கொண்ட வர்கள். நமது திட்டங்களை வகுக்கும்போது, நாம் ஒழுங்க மைந்த முறையில் சென்று சரியான கொள்கை வழியைக் கண்டுபிடிக்க முயல வேண்டும். நமது ஆய்வுரைகள் ஒரு சமரசமே என்பது தெரிந்ததுதான்., சமரசம்தான், அதனுல் என்ன? ஏற்கனவே தமது மூன்ருவது காங்கிரசைக் கூட்டி, திட்டவட்டமான அடிப்படைக் கோட்பாடுகளை வகுத்திருக் கிற கம்யூனிஸ்டுகளிடையே சில சந்தர்ப்பங்களில் சமரசங்

கள் அவசியம்தான். ருஷ்யப் பிரதிநிதிகள் முன்வைத்த நமது ஆய்வுரைகள் மிகமிக கவனமான முறையிலே ஆராய்ந்து தயாரிக்கப்பட்டவை, அவை நீண்ட விவாதங்களின் விளைவாகவும் பல்வேறு பிரதிநிதிக் குழுக்களுடன் கலந்து ஆலோசித்ததன் விளைவாகவும் ஏற்கப்பட்டவை. அவற்றின் குறிக்கோள் கம்யூனிஸ்டு அகிலத்தின் அடிப்படைக் கொள்கை வழியை நிலைநாட்டுவதாகும். மெய்யான மையவாதிகளை சம்பிரதாய பூர்வமாகக் கண்டித்ததோடல்லாமல் கட்சியிலிருந்து வெளியேற்றிய பிறகு இன்று அவை முக்கியமாய்த் தேவைப்படுகின்றன. இவைதாம் உண்மைகள். இந்த ஆய்வுரைகளை ஆதரிப்பது என் கடமையாகும். இன்று டெராச்சீனி முன்வந்து மையவாதிகளை எதிர்த்து நாம் தொடர்ந்து போராட வேண்டும் என்றும் எப்படி அந்தப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்றும் சொல்லும் போது, இந்தத் திருத்தங்கள் ஒரு திட்டவட்டமான போக்கைக் குறிப்பனவாயின் இந்தப் போக்கை எதிர்த்து சிறிதும் விட்டுக்கொடுக்காமல் போராட்டம் நடத்த வேண்டும் என்று சொல்கிறேன்; ஏனெனில் அப்படிச் செய்யாவிட்டால், கம்யூனிசமும் இல்லை; கம்யூனிஸ்டு அகிலமும் இல்லை. இந்தத் திருத்தங்களுக்கு ஆதரவாய் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின்[23] கையொப்பம் இல்லாதிருப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. (சிரிப்பு.) டெராச்சீனி ஆதரிப்பதையும் இந்தத் திருத்தங்கள் சொல்வதையும் கொஞ்சம் கேளுங்கள். அவை இவ்வழியிலே தொடங்குகின்றன: ''பக்கம் 1, பத்தி 1, வரி 19ல் 'பெரும்பான்மை' என்கிற வார்த்தை நீக்கப்பட வேண்டும்''. பெரும்பான்மையா? அது மிகவும் அபாயமானதாயிற்றே! (சிரிப்பு.) பிறகு: ''அடிப்படையான கோட்பாடுகள்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''இலட்சியங்கள்'' என்று புகுத்துக. அடிப்படைக் கோட்பாடுகள் என்பவையும் இலட்சியங்கள் என்பவையும் வெவ்வேறானவை. அராஜகவாதிகள்கூடத்தான் இலட்சியங்களில் நம்மோடு உடன்பாடு கொண்டுவிடுவார்கள், ஏனெனில் அவர்களும் சுரண்டலையும் வர்க்கப் பாகுபாடுகளையும் ஒழிக்க நிற்கிறார்கள்.

என் வாழ்க்கையில் நான் மிகச் சில அராஜகவாதிகளையே சந்தித்துப் பேசியிருக்கிறேன். இருந்தபோதிலும், நான் அவர்களைப் போதிய அளவுக்குத் தெரிந்து கொண்டுவிட்டேன்.

நான் சில சமயங்களில் அவர்களோடு இலட்சியங்களில் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வதில் வெற்றி பெற்றேன்; ஆனால் கோட்பாடுகள் விஷயத்தில் என்றைக்கும் இல்லை. கோட்பாடுகள்—அவை இலட்சியம் அல்ல, வேலைத்திட்டம் அல்ல, போர்த்தந்திரங்களல்ல, தத்துவமல்ல. போர்த் தந்திரங்களும் தத்துவமும் கோட்பாடுகளல்ல. கோட்பாடுகளில் நமக்கும் அராஜகவாதிகளுக்கும் வேறுபாடு என்ன? கம்யூனிஸத்தின் கோட்பாடுகள், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதும் மாற்றநிலைக் கட்டத்தில் அரசு பலவந்தத்தைப் பயன்படுத்துவதும் அவசியம் என்கின்றன. இவை கம்யூனிசத்தின் கோட்பாடுகளாகுமே அன்றி அதன் இலட்சியமாகா. ஆகவே இந்தப் பிரேரணையை முன்வைத்துள்ள தோழர்கள் தவறு இழைப்போர் ஆகின்றனர்.

இரண்டாவதாக, இங்கே சொல்லப்பட்டிருப்பதாவது: '' 'பெரும்பான்மை' என்கிற வார்த்தை நீக்கப்பட வேண்டும்''. அந்த வாசகம் பூராவையும் படியுங்கள்:

''பல நாடுகளில் புரட்சிகரமான அர்த்தத்தில் எதார்த்தச் சூழ்நிலை தீவிரப்படுத்தப்பட்டிருக்கிற சந்தர்ப்பத்தில், மிகப் பல வெகுஜனக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் நிறுவப்பெற்றிருக்கையில், அவை தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மை மேல் உண்மையாகத் தலைமையை நடைமுறைப் புரட்சிகரப் போராட்டத்தில் எங்குமே தங்கள் கையில் எடுத்துக்கொள்ளாதிருக்கிற நிலைமைகளில், கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரஸ் போர்த்தந்திரங்கள் பற்றிய பிரச்சினைகளைப் பரிசீலிக்க முற்பட்டிருக்கிறது.''

ஆக, அவர்கள் ''பெரும்பான்மை'' என்கிற சொல் நீக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட எளிய விஷயங்களில் நாம் உடன்பட முடியாதென்றால், நாம் எப்படி ஒன்றுகச் சேர்ந்து வேலை செய்ய முடியும், பாட்டாளி வர்க்கத்தை வெற்றிக்குக் கொண்டு செல்ல முடியும் என்று எனக்குப் புரியவில்லை. நாம் கோட்பாடுகள் பற்றிய பிரச்சினையிலும் உடன்பாடு காண முடியாமற்போவதில் சிறிதும் வியப்பில்லை. தொழிலாளி வர்க்கத்தினிடையே பெரும்பான்மையை ஏற்கனவே பெற்றிருக்கும் ஒரு கட்சியை எனக்குக் காட்டுங்கள். ஓர் உதாரணம் குறிப்பிட வேண்டும் என்று

டெராச்சீனி நினைக்கக்கூட இல்லை. அப்படி ஓர் உதாரணம் எதுவும் இல்லைதான்.

ஆகவே, ''கோட்பாடுகள்'' என்கிறதற்குப் பதிலாக ''இலட்சியங்கள்'' என்கிற வார்த்தையைப் புகுத்த வேண்டும்;''பெரும்பான்மை'' என்கிற சொல்லை நீக்கிவிடவேண்டும். நன்றி, அது முடியாத காரியம்! நாங்கள் அப்படிச் செய்யப் போவதில்லை. ஜெர்மன் கட்சிகூட—மிகச் சிறந்த கட்சிகளில் ஒன்று அது—தன்னிடம் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையைக் கொண்டிருக்கவில்லை. இதுதான் உண்மை. ஒரு மிகக் கடுமையான போராட்டத்தை எதிர்நோக்கும் நாம் இந்த உண்மையைச் சொல்லப் பயப்படவில்லை; ஆனால் ஒரு பொய்யுடன் தொடங்க விரும்புகிற மூன்று பிரதிநிதிக் குழுக்கள் இங்கே உள்ளன; ஏனெனில், ''பெரும்பான்மை'' என்கிற சொல்லைக் காங்கிரஸ் நீக்கினால் அது பொய்யை விரும்புகிறது என்றுதான் அர்த்தம். அது மிகத் தெளிவு.

பிறகு அடியிற்கண்ட திருத்தம் வருகிறது: ''பக்கம் 4, பத்தி 1, வரி 10ல், 'பகிரங்கக் கடிதம்' முதலிய சொற்கள் 'நீக்கப்பட வேண்டும்' ''.[24] ஏற்கனவே இன்று நான் கேட்ட ஒரு சொற்பொழிவில் இதே கருத்து இருக்கக் கண்டேன். ஆனால் அது இயல்பாயிருந்தது. அது தோழர் ஹேம்பெலின் சொற்பொழிவு; அவர் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர். அவர் சொன்னதாவது: '' 'பகிரங்கக் கடிதம்' ஒரு சந்தர்ப்பவாதச் செய்கையாகும்.'' நான் இப்படிப்பட்ட கருத்துக்கள் ஏற்கனவே தனிப்பட்ட முறையில் பேசப்பட்டதைக் கேட்டுப் பெரிதும் வருத்தப் பட்டேன், வெட்கமடைந்தேன். ஆனால் காங்கிரசிலே, இப்படிப் பட்ட நீடித்த விவாதத்திற்குப் பிறகு, ''பகிரங்கக் கடிதம்'' சந்தர்ப்பவாதமானது என்று அறிவிக்கப்பட்டால்—அது வெட்கக்கேடு; மானக்கேடுதான்! இப்போது தோழர் டெராச் சீனி மூன்று பிரதிநிதிக் குழுக்களின் சார்பாக முன்வந்து ''பகிரங்கக் கடிதம்'' என்கிற சொற்களை நீக்க விரும்புகிறார். அப்படியானால் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியோடு சண்டைபோடுவதில் என்ன பயன்? ''பகிரங்கக் கடிதம்'' ஒரு முன்மாதிரியான அரசியல் நடவடிக்கை. நமது ஆய்வுரைகளில் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாம் நிச்சயமாக ஆதரித்து நிற்க வேண்டும். அது ஒரு முன்

மாதிரி என்பதற்குக் காரணம், தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை நம் பக்கம் வென்று கொள்வதற்குரிய நடைமுறை வழிமுறையின் முதற் செயல் ஆகும். அநேகமாக எல்லாப் பாட்டாளிகளுமே ஒழுங்கமைந்துள்ள ஐரோப்பாவில் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை நம் தரப்புக்கு வரும்படி வென்று கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுகிற எவரும் கம்யூனிஸ்டு இயக்கத்தால் இழக்கப்பட்டுவிட்டவரே; மகத்தான புரட்சியின் மூன்றுண்டுக் காலத்தில் இதைக் கற்றுக் கொள்ளாத ஒருவர் எதையும் என்றைக்கும் கற்கப் போவதில்லை.

கட்சி சிறிதாக இருந்தபோதிலும் ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்றேம் என்று டெராச்சீனி சொல்கிருர். ஆய்வுரைகளில் செகோஸ்லோவாக்கியாவைப் பற்றிச் சொல்லியிருப்பது அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. இங்கே 27 திருத்தங்கள் உள்ளன; அவற்றை நான் விமர்சிக்க எண்ணினுல் சில பேச்சாளர்களைப் போல மூன்று மணி நேரத்துக்குக் குறையாமல் பேச வேண்டியிருக்கும்... இதில் நாம், செகோஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்டுக் கட்சி 3 லட்சத்திலிருந்து 4 லட்சம் வரை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது என்றும், பெரும்பான்மையை நம் பக்கம் வரும்படிச் செய்து, வெல்லற்கரிய சக்தியைச் சிருஷ்டிப்பதும் தொழிலாளர்களில் புதிய வெகுஜனப் பகுதிகளைத் தொடர்ந்து அணி திரட்டுவதும் அவசியம் என்றும் இங்கே கூறப்பட்டதைக் கேட்டோம். டெராச்சீனி ஏற்கனவே தாக்கத் தயாராகிவிட்டார். அவர் சொல்கிருர்: ஏற்கனவே 4 லட்சம் தொழிலாளர்கள் கட்சியில் இருக்கிருர்கள் என்ருல் அதற்கு மேலாக நாம் ஏன் விரும்ப வேண்டும்? நீக்குங்கள்! (சி ரி ப் பு.) ''வெகுஜனங்கள்'' என்ற சொல்லைக் கண்டு அவர் பயப்படுகிருர்; அதை அகற்றிவிட விரும்புகிருர். தோழர் டெராச்சீனி ருஷ்யப் புரட்சியை மிகச் சொற்ப அளவே புரிந்து கொண்டிருக்கிருர்.

ருஷ்யாவில் நாங்கள் ஒரு சிறு கட்சியாகத்தான் இருந்தோம்; ஆனுல் அதோடு கூடுதலாக எங்களுடன் நாடெங்கும் தொழிலாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துக்களில் பெரும்பாலானவற்றையும் பெற்றிருந்தோம். (கு ர ல் க ள்: ''முற்றிலும் உண்மை!'') இத்தகையது உங்களிடம் எதுவும் இருக்கிறதா? இராணுவத்தில் அநேகமாகப்

பாதி எங்கள் பக்கம் இருந்தது—அப்போது அது குறைந்த பட்சம் ஒரு கோடி பேரைக் கொண்டிருந்தது. நிஜமாகவே இராணுவத்தில் பெரும்பான்மை உங்களிடம் இருக்கிறதா? அப்படிப்பட்ட நாட்டை எனக்குக் காட்டுங்கள்! தோழர் டெராச்சீனியின் இந்தக் கருத்துக்களை மற்றும் மூன்று பிரதி நிதிக் குழுக்கள் கொண்டிருக்கின்றன என்ருல், அப்போது கம்யூனிஸ்டு அகிலத்தில் எதோ தவறு என்றுதான் அர்த்தம்! அப்படியென்ருல் ''நிறுத்துங்கள்! தீர்மானகரமான போராட்டம் நடத்தியாக வேண்டும்! இல்லையேல் கம்யூனிஸ்டு அகிலம் நாசமாகிவிடும்'' என்று நாம் சொல்லியே ஆக வேண்டும்! (ஹாலில் பரபரப்பு.)

நான் ஒரு தற்காப்பு நிலை எடுத்துக் கொண்டுள்ள போதிலும் (சிரிப்பு), என் அனுபவத்தின் அடிப்படையில் நான் சொல்லியே ஆக வேண்டும், எனது பிரசங்கத்தின் இலட்சியமும் கோட்பாடும் எங்கள் பிரதிநிதிக் குழு முன்மொழிந்த தீர்மானத்தையும் ஆய்வுரைகளையும் ஆதரிப்பதுதான் என்று. நிஜந்தான், அவற்றில் ஒரு எழுத்தைக்கூட மாற்றக் கூடாது என்று சொல்வது வெறும் பகட்டே ஆகும். நான் பல தீர் மானங்களைப் படித்துப் பார்த்திருக்கிறேன்; அவற்றில் ஒவ் வொரு வரியிலும் நல்ல திருத்தங்கள் புகுத்த முடியும் என்பது எனக்குத் தெரியும். ஆனுல் அது பகட்டுப் புலமையாகவே இருக் கும். இருந்தபோதிலும், அரசியல் அர்த்தத்தில் இப்போது நான் அதில் ஒரு எழுத்தைக்கூட திருத்தக்கூடாதென்று சொன் ஞல் அதற்குக் காரணம், நான் பார்க்கிறபடி திருத்தங்கள் திட்டவட்டமான ஓர் அரசியல் இயல்பு கொண்டவையாயுள் ளன; அவை கம்யூனிஸ்டு அகிலத்துக்குத் தீங்கும் அபாயமும் உண்டாக்கும் ஒரு பாதையிலே நம்மைக் கொண்டு செல்கின் றன. எனவே, நானும், நாமெல்லோரும், ருஷ்யப் பிரதிநிதிக் குழுவும், ஆய்வுரைகளில் ஒரு எழுத்தையும் மாற்றக்கூடாது என்று வற்புறுத்த வேண்டும். நாம் நமது வலதுசாரி நபர் களைக் கண்டித்ததோடு நிற்கவில்லை—அவர்களை வெளியேற் றியும் இருக்கிறோம். ஆனுல், டெராச்சீனியைப் போல், வலது சாரிகளை எதிர்க்கும் போராட்டத்தை ஒரு வகைப் போட்டி விளையாட்டாக மாற்றினுல் அப்பொழுது நாம் ''நிறுத்துங் கள்! இல்லையேல் அபாயம் மிகவும் தீவிரமாகிவிடும்!'' என்று சொல்லியே ஆக வேண்டும்.

தாக்குதல் போராட்டத் தத்துவத்தை[25] டெராச்சீனி ஆதரித்திருக்கிறார். இது சம்பந்தமாக, அந்த அபகீர்த்தி பெற்ற திருத்தங்கள் இரண்டு மூன்று பக்கங்கள் கொண்ட ஒரு சூத்திரத்தைப் பிரேரேபிக்கின்றன. அவற்றை நாம் வாசிக்கத் தேவையில்லை. அவை என்ன சொல்கின்றன என்பதை நாமறிவோம். பிரச்சினையை டெராச்சீனி மிகத் தெளிவாய்க் கூறியிருக்கிறார். ''இயங்கியல் போக்குகளைச்'' சுட்டிக்காட்டியும் ''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்கு மாறிச் செல்லுதலைச்'' சுட்டிக்காட்டியும் அவர் தாக்குதல் தத்துவத்தை ஆதரித்தார். ருஷ்யாவிலுள்ள நாங்கள் மையவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் போதிய அரசியல் அனுபவம் பெற்றிருக்கிறோம். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே எங்களுடைய சந்தர்ப்பவாதிகளையும் மையவாதிகளையும், மென்ஷிவிக்குகளையும்கூடத்தான், எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தோம்; மேலும் மென்ஷிவிக்குகள் மட்டுமின்றி அரை-அராஜகவாதிகள் மீதும் நாங்கள் வெற்றி பெற்றோம்.

இதை நாங்கள் செய்யாதிருந்தால், அதிகாரத்தில் மூன்றரை ஆண்டுகளுக்கு அல்ல, ஏன் மூன்றரை வாரங்களுக்கும் கூட இருந்திருக்க முடியாது; இங்கே கம்யூனிஸ்டுக் காங்கிரஸ்களையும் கூட்டியிருக்க முடியாது. ''இயங்கியல் போக்குகள்'', ''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்கு மாறிச் செல்லுதல்''—இவையெல்லாம் எங்களுக்கு எதிராக இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் பயன்படுத்திய வாய்ச்சொற்களே. அவர்கள் இப்போது சிறைகளில் இருக்கிறார்கள்—அங்கே ''கம்யூனிஸத்தின் இலட்சியங்களை'' ஆதரித்துக் கொண்டும், ''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்பான நிலைக்கு மாறிச் செல்வதைப்'' பற்றி சிந்தித்துக் கொண்டும் இருக்கிறார்கள். (சிரிப்பு.) பிரேரேபிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் வாதித்திருப்பதுபோல் வாதம் புரிவது அசாத்தியம், ஏனெனில் அவற்றில் மார்க்சியமோ, அரசியல் அனுபவமோ, நியாயமோ இல்லை. நமது ஆய்வுரைகளில் நாம் புரட்சிகரமான தாக்குதல்பற்றி ஒரு பொதுவான தத்துவத்தை விவரித்து இருக்கிறோமா? ராதேக் அல்லது எங்களில் யாராவது அப்படிப்பட்ட முட்டாள்தனத்தைச் செய்திருக்கிறோமா? குறிப்பிட்ட ஒரு நாடு, குறிப்பிட்ட ஒரு

காலப்பகுதி சம்பந்தமாகவே தாக்குதல் தத்துவத்தைப் பற்றிப் பேசியிருக்கிறோம்.

முதல் புரட்சிக்கு முன்பே புரட்சிகரமான கட்சி தாக்குதலில் இறங்க வேண்டுமா என்று சந்தேகப்பட்ட ஆட்கள் சிலர் இருந்தனர். நாங்கள் மென்ஷிவிக்குகளை எதிர்த்து நடத்திய போராட்டத்திலிருந்து இதற்கு உதாரணங்கள் காட்ட முடியும். இப்படிப்பட்ட சந்தேகங்கள் எந்த சமூக-ஜனநாயகவாதியிடமும்—அப்படித்தான் அந்தக் காலத்தில் நாங்களெல்லோரும் எங்களை அழைத்துக் கொண்டோம்—எழுமாயின் அவருக்கு எதிராகப் போராட்டம் தொடுத்து, அவர் ஒரு சந்தர்ப்பவாதி என்றும் மார்க்சியத்திலும் புரட்சிகரக் கட்சியின் தர்க்கவியலிலும் எதையும் அவர் புரிந்து கொள்ளவில்லை என்றும் சொன்னோம். பொதுப்படையாய்ப் புரட்சிகரத் தாக்குதல் அனுமதிக்கத்தக்கதுதானா என்று ஒரு கட்சி சந்தேகிப்பது சாத்தியம்தானா? எங்கள் நாட்டில் அப்படிப்பட்ட உதாரணங்களைக் காண பதினைந்து ஆண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும். தாக்குதல் தத்துவத்தை மறுக்கிற மையவாதிகளோ மறைவான மையவாதிகளோ இருந்தால், அப்படிப்பட்டவர்களை உடனே வெளியே தள்ள வேண்டும். இந்தப் பிரச்சினை சர்ச்சைக்குரியது அல்ல. ஆனால் இன்றைக்கும்கூட, கம்யூனிஸ்டு அகிலத்தில் மூன்றாண்டுகளாக இருந்து வந்த பிறகும் கூட, நாம் ''இயங்கியல் போக்குகள்'' பற்றியும் ''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்கு மாறிச் செல்வது'' பற்றியும் விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்கிற உண்மை இருக்கிறதே—அது ஒரு வெட்கக்கேடு, மானக்கேடு.

எங்களோடு சேர்ந்து இந்த ஆய்வுரைகளை எழுதிய தோழர் ராதேக்கோடு எங்களுக்கு இவ்விஷயத்தில் சர்ச்சை எதுவும் கிடையாது. எதார்த்தத்தில் ஒரு தாக்குதல் தயாரிக்கப்படாமலிருக்கும்போது புரட்சிகரமான தாக்குதல் குறித்த தத்துவத்தைப் பற்றி ஜெர்மனியில் பேசத் தொடங்குவது முழுவதும் சரியானதாய் இல்லாமல் இருக்கலாம். என்றாலும் மார்ச்சு நடவடிக்கை ஒரு மகத்தான முன்னேற்றப் படிதான்—அதன் தலைவர்களின்[26] தவறுகள் இருந்தபோதிலும். ஆனால் இது பரவாயில்லை. லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வீர தீரமாய்ப் போராடினார்கள். எவ்வளவு தைரியமாய்

ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் போரிட்டிருந்த போதிலும், ஹோல்ட்ஸைப் பற்றி ஒரு ருஷ்யக் கட்டுரையில் ராதேக் சொன்னதையே நாம் திரும்பவும் சொல்லியாக வேண்டும். யாராவது, அராஜகவாதியாய் இருப்பினும் கூட, முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து வீரமாகப் போரிடுவது ஒரு பெரிய விஷயமே; ஆனல் லட்சக் கணக்கானேர் சமூக-துரோகிகளின் மோசமான ஆத்திரமூட்டலையும் முதலாளித்துவ வர்க்கத்தையும் எதிர்த்துப் போரிடுவது ஒரு மெய்யான முன்னேற்றப் படிதான்.

தன் தவறுகளை விமர்சனக் கண் கொண்டு பார்ப்பது மிக முக்கியமாகும். அதிலிருந்துதான் நாம் தொடங்கினேம். லட்சக் கணக்கான பேர் பங்கெடுத்த ஒரு போராட்டத்திற்குப் பிறகு யாராவது இந்தப் போராட்டத்தை எதிர்த்துப் பேசி லெவீ போல் நடந்து கொண்டால், அவரை வெளியேற்ற வேண்டும். அதைத்தான் செய்தோம். ஆனல் இதிலிருந்து நாம் படிப்பினை பெற வேண்டும். உண்மையிலே நாம் ஒரு தாக்குதலுக்குத் தயார் செய்திருந்தோமா? (ராதேக்: ''நாம் தற்காப்புக்குக் கூட தயார் செய்திருக்கவில்லை''.) உண்மையிலே, பத்திரிகைக் கட்டுரைகள் மட்டுமே தாக்குதல் பற்றிப் பேசின. 1921 ஜெர்மனியின் மார்ச்சு நடவடிக்கைக்கு அனுஷ்டிக்கப்பட்ட அளவில் இந்தத் தத்துவம் சரியல்ல—அதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும்; ஆனல், பொதுப்படையாக, புரட்சிகரத் தாக்குதல் தத்துவம் சிறிதும் தவருனதல்ல.

ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்ருேம். அவ்வளவு சுலபமாக வெற்றி பெற்றதற்குக் காரணம் எங்கள் புரட்சிக்கு ஏகாதிபத்திய யுத்தத்தின் போது தயார் செய்திருந்தோம். அதுதான் முதல் நிபந்தனை. ருஷ்யாவில் ஒரு கோடி தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆயுதமேந்தியிருந்தனர்; எந்த விலை கொடுத்தேனும் உடனடியான சமாதானம் என்பதே எங்கள் கோஷமாய் இருந்தது. நாங்கள் வெற்றிபெற்றதற்குக் காரணம் விவசாயிகளில் மிகப் பெரும் திரளானேர் பெரிய நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் புரட்சி செய்யும் மனேபாவத்தோடு இருந்தனர். இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களைச்[27] சேர்ந்தோராய் இருந்த சோஷலிஸ்டு-புரட்சி

யாளர் கட்சியினர், 1917, நவம்பரில் ஒரு பெரிய விவசாயிக் கட்சியாயிருந்தனர். அவர்கள் புரட்சிகரமான வழிமுறைகளைக் கோரினர், ஆனால், இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் வீரர்களைப் போலவே, புரட்சிகரமான வழியிலே செயல்புரியப் போதிய தைரியம் பெற்றிருக்கவில்லை. 1917, ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களில் நாங்கள் சொன்னோம்: ''தத்துவ ரீதியிலே நாங்கள் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரை முன்போல் எதிர்த்துப் போராடுகிறோம்; ஆனால் நடைமுறையில் அவர்களுடைய வேலைத்திட்டத்தை நாங்கள் ஏற்கத் தயார், ஏனெனில் அதை எங்களால் மட்டுமே செயலுக்குக் கொண்டு வர முடியும்'' என்று. நாங்கள் சொன்னபடியே செய்தோம். 1917, நவம்பரில் எங்கள் வெற்றிக்குப் பிறகு, எங்களிடம் நல்ல மனப்பான்மை கொண்டிராத விவசாயி மக்களை, அரசியல் நிர்ணய சபைக்கு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரைப் பெரும்பான்மையாக அனுப்பி வைத்த அவர்களை, ஒரு சில நாட்களிலே இல்லாவிட்டாலும்—நான் தவருக எதிர்பார்த்துச் சொன்னதுபோல இல்லாவிட்டாலும்—ஒரு சில வாரங்களிலே எங்கள் பக்கம் கொண்டு வந்து விட்டோம். அதில் வித்தியாசம் பெரியதாயில்லை. ஒரு சில வாரங்களில் விவசாயி மக்களில் பெரும்பான்மையினரை உங்கள் பக்கம் கொண்டு வர முடிகிற நாட்டை ஐரோப்பாவில் எங்காவது காட்ட முடியுமா? ஒருவேளை இத்தாலியா? (சிரிப்பு.) ஒரு பெரிய கட்சி இல்லாமற் போயினும் ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்றோமே என்று சொல்லப்படுகிறதென்றால், அப்படிச் சொல்கிறவர்கள் ருஷ்யப் புரட்சியைப் புரிந்து கொள்ளவில்லை; புரட்சிக்கு எப்படித் தயார் செய்வது என்பதைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை என்பதைத்தான் அது நிரூபிக்கிறது.

யாருடன் பேசுகிறோம், யாரை முழுக்க நம்ப முடியும் என்று அறியும்பொருட்டு ஒரு மெய்யான கம்யூனிஸ்டுக் கட்சியைப் படைப்பதே எங்களது முதற்படியாக இருந்தது. ''மையவாதிகள் வீழ்க!'' என்பதே முதலாவது, இரண்டாவது காங்கிரஸ்களின் கோஷமாக இருந்தது. வழி நெடுகிலும் உலகம் முழுவதிலும் நாம் மையவாதிகளையும் அரைமையவாதிகளையும் — ருஷ்யாவில் இவர்களை மென்ஷிவிக்குகள் என்று நாங்கள் அழைக்கிறோம்—ஒழித்துக் கட்டாவிட்டால்

கம்யூனிசத்தின் அரிச்சுவடியைக்கூட நாம் கற்றுப் பாண்டித்தியம் பெற்றவர்களாக முடியாது. மெய்யான புரட்சிக் கட்சியைப் படைப்பதும், மென்ஷிவிக்குகளிடமிருந்து முறித்துக் கொள்வதும்தான் நமது முதல் கடமை. எனினும் அது ஒரு தயாரிப்புப் பள்ளியே ஆகும். நாம் ஏற்கனவே மூன்ருவது காங்கிரசைக் கூட்டியிருக்கிருேம்; தோழர் டெராச்சீனியோ முன்போலவே தயாரிப்புப் பள்ளியின் கடமை மையவாதிகளையும் அரைமையவாதிகளையும் தேடிச் சென்று, துரத்திப் பிடித்து அம்பலப்படுத்துவதே என்று சொல்கிருர். உங்களுக்கு மிக்க நன்றி! போதுமான அளவுக்கு அதை ஏற்கனவே நாம் செய்தாகிவிட்டது. இரண்டாவது காங்கிரசில் ஏற்கனவே மையவாதிகள் நமது பகைவர்கள் என்று நாம் சொல்லியாகிவிட்டது. உண்மையில் இன்று நாம் மேலே போக வேண்டியவர்களாயிருக்கிருேம். நாம் ஒரு கட்சியாக அமைந்த பின்னர் புரட்சிக்குத் தயார் செய்வதைப் பயில்வதே இரண்டாம் கட்டமாகும். எப்படித் தலைமை கொள்வது என்பது பற்றி நாம் பல நாடுகளில் இன்னும் கற்கக்கூடக் கிடையாது. ருஷ்யாவில் நாங்கள் வெற்றி பெற்றதற்குக் காரணம் தொழிலாளி வர்க்கத்திடையே சந்தேகத்திற்கு இடமற்ற பெரும்பான்மையினர் எங்கள் பக்கம் இருந்தார்கள் (1917 தேர்தல்களின்போது தொழிலாளிகளில் மிகப் பெரும்பான்மையினர் மென்ஷிவிக்குகளுக்கு எதிராக எங்கள் பக்கமே இருந்தார்கள்) என்பது மட்டுமல்ல, நாம் அதிகாரத்தைக் கைப்பற்றியதுமே இராணுவத்தில் பாதியும் சில வார காலத்தில் விவசாயிகளில் பத்தில் ஒன்பது விகிதத்தினரும் எங்கள் பக்கம் வந்து விட்டனர் என்பதுமாகும்; நாங்கள் வெற்றி பெற்றதற்குக் காரணம் நாங்கள் நிலம் பற்றிய எங்களுடைய வேலைத்திட்டத்துக்குப் பதிலாய், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதை நடைமுறையாக்கிஞேம் என்பதுமாகும். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் வேலைத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றியதிலேதான் எங்கள் வெற்றி இருந்தது; எனவேதான் இந்த வெற்றி அவ்வளவு சுலுவாக இருந்தது. மேலைய நாடுகளைச் சேர்ந்த உங்களுக்கு இப்படிப்பட்ட பிரமைகள் இருப்பது சாத்தியமா? அது கேலிக்குரியது! தோழர் டெராச்சீனியும் பிரேரேபித்துள்ள திருத்தங்களில் கையெழுத்திட்டுள்ள எல்லாத்

தோழர்களும் ஸ்தூலமான பொருளாதார நிலைமைகளை ஒப்பு நோக்கிப் பார்க்கட்டும்! அத்தனை வேகமாகப் பெரும்பான்மையினர் எங்கள் பக்கம் வந்துவிட்ட போதிலும் எங்கள் வெற்றிக்குப் பிறகு எங்களை எதிர்கொண்ட கஷ்டங்கள் மிகப் பெரியவை. இருந்த போதிலும் நாங்கள் வெற்றி பெற்றோம்; காரணம், நாங்கள் எங்கள் இலட்சியங்களை மட்டுமின்றி எங்கள் கோட்பாடுகளையும் நினைவில் வைத்திருந்தோம், கோட்பாடுகளைப் பற்றி மௌனம் சாதித்து இலட்சியங்களைப் பற்றியும் ''இயங்கியல் போக்குகளைப்'' பற்றியும் ''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்குப் மாறிச் செல்வது'' பற்றியும் பேசிக் கொண்டிருந்த பேர்வழிகளை நாங்கள் கட்சியில் இருக்க விடவில்லை. இப்படிப்பட்ட கனவான்களைச் சிறையில் வைத்திருப்பதே மேல் என நாங்கள் கருதுவதற்காக ஒருக்கால் நாங்கள் குறை கூறப்படலாம். ஆனால் வேறு எந்த வழியிலும் சர்வாதிகாரம் சாத்தியமில்லை. நாம் சர்வாதிகாரத்துக்குத் தயார் செய்தாக வேண்டும், இப்படிப்பட்ட வாய்ச்சொற்களையும் திருத்தங்களையும் எதிர்த்துப் போராடுவதிலேதான் இந்தத் தயாரிப்பு அடங்கியுள்ளது. (சிரிப்பு.) நமது ஆய்வுரைகள் நெடுகிலும் மக்கள் திரளைப் பற்றி பேசுகின்றன. ஆனால், தோழர்களே, மக்கள் திரள் என்பதின் அர்த்தத்தை நாம் புரிந்துகொள்வது அவசியம். ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர்களே, இடதுபுறம் அமர்ந்துள்ள தோழர்களே, நீங்கள் இந்தச் சொல்லைத் தகாத முறையில் பயன்படுத்துகிறீர்கள். ஆனால் தோழர் டெராச்சீனியும் இந்தத் திருத்தங்களில் கையெழுத்திட்ட அனைவரும் ''மக்கள் திரள்'' என்கிற சொல் எதைக் குறிக்கிறது என்று அறியாமலிருக்கிறார்கள்.

ஏற்கனவே நான் வெகுநேரம் பேசிவிட்டேன்; எனவே ''மக்கள் திரள்'' என்கிற கருத்து பற்றி ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். ''மக்கள் திரள்'' என்கிற கருத்து போராட்டத்தின் தன்மையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மாறுகிறது. போராட்டத்தின் துவக்கத்தில் மெய்யான புரட்சிகரத் தொழிலாளிகள் ஒரு சில ஆயிரம் பேர் இருந்தால் போதும், மக்கள் திரளைப் பற்றி பேச முடிந்தது. போராட்டத்தில் கட்சி தன்னுடைய உறுப்பினர்களை ஈடுபடுத்துவதில் வெற்றி பெறுவதோடு மட்டுமின்றி, கட்சிச்

சார்பல்லாத மக்களையும் தட்டியெழுப்பிவிடுவதிலே வெற்றி பெறுமேயானால், அதுவே மக்கள்திரளைத் தன் பக்கம் வென்று ஈர்ப்பதின் தொடக்கமாகும். எங்களுடைய புரட்சிகளின் போது சில ஆயிரம் தொழிலாளர்கள் மக்கள் திரளைக் குறித்த சந்தர்ப்பங்கள் இருந்தன. எங்கள் இயக்கத்தின் வரலாற்றில், மென்ஷிவிக்குகளை எதிர்த்து நடந்த எங்கள் போராட்டத்தின் வரலாற்றில் ஒரு நகரில் இயக்கத்துக்கு வெகுஜனத் தன்மை அளிப்பதற்குச் சில ஆயிரம் தொழிலாளர்கள் போதுமானதாக இருந்ததற்குப் பல உதாரணங்கள் காண்பீர்கள். வழக்கமாகவே கிணற்றுத் தவளை வாழ்க்கையையும் மோசமான பிழைப்பையும் நடத்திக் கொண்டு அரசியலைப்பற்றி என்றைக்கும் ஒன்றுமே கேள்விப்படாமலிருந்துவருகிற கட்சிச்சார்பற்ற சில ஆயிரம் தொழிலாளர்கள் புரட்சிகரமான முறையில் செயல்புரியத் தொடங்கிவிட்டால் அங்கே நீங்கள் மக்கள் திரளைப் பெற்றவர்கள் ஆகிறீர்கள். அந்த இயக்கம் பரவித் தீவிரமடைந்தால் படிப்படியாக அது ஒரு உண்மையான புரட்சியாக வளர்கிறது. 1905லும் 1917லும் மூன்று புரட்சிகளின்போது நாங்கள் இதைப் பார்த்தோம். நீங்களும் இவையாவற்றையும் அனுபவிக்க வேண்டியிருக்கும். புரட்சி போதுமான அளவுக்குத் தயார் செய்யப்பட்டவுடன் ''மக்கள் திரள்'' என்கிற கருத்து வேறானதாகிவிடுகிறது: சில ஆயிரம் தொழிலாளர்கள் இப்போது மக்கள் திரளாக மாட்டார்கள். இந்தச் சொல் வேறொன்றைக் குறிக்கத் தொடங்குகிறது. மக்கள் திரள் என்கிற கருத்து பெரும்பான்மையினரை—வெறுமே தொழிலாளர்களில் மட்டுமல்ல, எல்லா சுரண்டப்படும் மக்களிலும் பெரும்பான்மையினரை—குறிக்கிற அளவுக்கு மாற்றம் பெறுகிறது. புரட்சியாளருக்கு வேறெந்த வகையிலான விளக்கமும் சரியானதாக முடியாது; இந்தச் சொல்லுக்கு வேறெந்த அர்த்தமும் புரிந்து கொள்ள இயலாததாகிறது. ஒரு சிறிய கட்சி—எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷ் அல்லது அமெரிக்கக் கட்சி—அரசியல் வளர்ச்சிப் போக்கைச் சரிவரப் பயின்று, கட்சிச் சார்பற்ற மக்கள் திரளின் வாழ்க்கையையும் பழக்கவழக்கங்களையும் தெரிந்து கொண்ட பிறகு, ஒரு சாதகமான தருணத்தில் புரட்சி இயக்கத்தை எழச் செய்வது சாத்தியமே (சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை ஒரு நல்ல எடுத்துக்காட்டாகத்

தோழர் ராதேக் குறிப்பிடுகிருர்).[28] அப்படிப்பட்ட ஒரு கட்சி அந்த நேரத்தில் தன் கோஷங்களுடன் முன்வந்து கோடிக் கணக்கான தொழிலாளர்கள் தன்னைப் பின்பற்றுமாறு செய் வதில் வெற்றி பெற்ருல் ஒரு வெகுஜன இயக்கத்தை நீங்கள் பெற்றுவிடலாம். ஒரு சிறிய கட்சி புரட்சியைத் தொடங்க முடியும், வெற்றிகர முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்பதை நான் முற்ருய் மறுக்கவில்லை. ஆனல் மக்கள் திரளை நம் பக்கம் வரச் செய்வதற்குரிய வழிமுறைகள் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதற்குப் புரட்சிக்குரிய பூரண தயாரிப்பு அவசியம். ஆனல் இங்கே தோழர்கள் ''பெரும்'' திரளான மக்கள் வேண்டும் என்கிற கோரிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று சாதிக்க முன் வருகிருர்கள். இப்படிப்பட்ட தோழர்களை எதிர்த்தாக வேண்டும். பூரண தயாரிப்பில்லாமல் எந்த நாட்டிலும் நீங்கள் வெற்றிபெறப் போவதில்லை. மக்கள் திரளை வழி நடத்திச் செல்ல ஒரு சிறு கட்சி இருந்தால் போதும். குறிப்பிட்ட சில சமயங்களில் பெரிய நிறுவனங்களுக்கு அவசியமில்லாமற் போய்விடுகின்றன.

ஆனல், வெற்றி பெறுவதற்கு மக்கள் திரளின் ஆதரவு நமக்கு இருந்து தீரவேண்டும். ஒரு முழுமையான பெரும்பான் மை எப்போதும் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை; ஆனல் வெற்றி பெறுவதற்கும் அதிகாரத்தைத் தன் கையில் வைத்திருப்பதற்கும் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான் மையினர் மட்டுமின்றி—''தொழிலாளி வர்க்கம்'' என்கிற சொல்லை மேலைய ஐரோப்பியப் பொருளில், அதாவது இயந் திரத் தொழிலில் ஈடுபட்டு உள்ள பாட்டாளி வர்க்கம் என் கிற பொருளில், பயன்படுத்துகிறேன்—உழைக்கும் சுரண்டப் படும் கிராமப்புற மக்களில் பெரும்பான்மையினர் இருப் பதும் அவசியமாகும். இதைப் பற்றி நீங்கள் சிந்தித்தீர்களா? அந்தச் சிந்தனைக்குரிய ஒரு ஜாடையேனும் டெராச்சீனியின் சொற்பொழிவில் கிடைக்கிறதா? ''இயங்கியல் போக்கு'' பற்றியும் ''செயலற்ற நிலையிலிருந்து செயல் முனைப்புள்ள நிலைக்கு மாறிச் செல்வது'' பற்றியும் மட்டுமே அவர் பேசு கிருர். உணவுப் பிரச்சினை குறித்து ஒரு வார்த்தையேனும் அவர் சொல்கிருரா? தொழிலாளர்கள், ருஷ்யாவில் ஓரள வுக்கு நாம் பார்த்த மாதிரி, எவ்வளவோ சகித்துக் கொண்டு

பட்டினி கிடக்க முடியும் என்றாலுங்கூட அவர்கள் அன்றாட உணவு கொடு என்று கோருகிறார்கள். எனவே, தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை மட்டுமின்றி, உழைக்கும் சுரண்டப்படும் கிராமப்புற மக்கள் தொகையின் பெரும் பான்மையையும் நம் பக்கம் கொண்டுவர வேண்டும். இதற்குத் தயார் செய்திருக்கிறீர்களா நீங்கள்? அநேகமாக எங்குமே காணோம்.

எனவே, திரும்பச் சொல்கிறேன்: நமது ஆய்வுரைகளை நான் நிபந்தனையின்றி ஆதரித்து நின்றாக வேண்டும், அது என் கடமை என்று கருதுகிறேன். நாம் மையவாதிகளைக் கண்டித்ததோடல்லாமல், கட்சியிலிருந்து வெளியே தள்ளியிருக்கிறோம். மற்றொரு அம்சத்தையும் இப்பொழுது நாம் கவனிக்க வேண்டும். இந்த அம்சமும் ஆபத்தானது என்றே நாம் கருதுகிறோம். யாரும் அவமானப்படுத்தப்பட்டதாக நினைக்க இடமில்லாத வகையில் மிகவும் நயப் பாங்கோடு தோழர்களுக்கு உண்மையைக் கூற வேண்டும் (நமது ஆய்வுரைகளில் இது மரியாதையுடனும் பரிவுடனும் சொல்லப் படுகிறது). மையவாதிகளைத் தாக்குவதைவிட அதிக முக்கியமுள்ள வேறு பிரச்சினைகளை நாம் இன்று எதிர்நோக்குகிறோம். இந்தப் பிரச்சினை நமக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. ஏற்கனவே ஓரளவுக்கு இது நமக்குச் சலிப்பூட்டுவதாயிருக்கிறது. அதற்குப் பதிலாக, மெய்யான புரட்சிப் போராட்டத்தை நடத்தத் தோழர்கள் பயில்வது அவசியம். ஜெர்மன் தொழிலாளர்கள் ஏற்கனவே இவ்வாறு செய்யத் தொடங்கிவிட்டார்கள். அந்த நாட்டில் லட்சக்கணக்கான பாட்டாளிகள் வீரமாகப் போராடியிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தை எதிர்க்கும் எந்தப் பேர்வழியும் உடனடியாக வெளியே தள்ளப்பட வேண்டும். ஆனால் அதன் பிறகு நாம் வெற்றுச் சொற்பின்னல் வேலையில் ஈடுபடாமல், செய்த தவறுகளின் அடிப்படையில் படிப்பினை பெற, போராட்டத்தை மேலும் நல்ல முறையிலே ஒழுங்கமைப்பது எப்படி என்று உடனடியாகப் பயில முற்பட வேண்டும். எதிரியிடமிருந்து நமது தவறுகளை நாம் மறைக்கக் கூடாது. இது குறித்துப் பயப்படுகிறவர் புரட்சியாளர் அல்ல. அதற்கு மாறாக, தொழிலாளர்களிடம் ''ஆம், நாங்கள் தவறுகள் செய்தோம்'' என்று பகிரங்கமாய்ச் சொன்னால், அவற்றைத் திரும்பச் செய்ய

மாட்டோம், தருணத்தைத் தேர்ந்தெடுப்பதில் முன்னைவிட திறமையுடையோராய் இருப்போம் என்று அதற்குப் பொருள். மேலும், போராட்டத்தின்போதே உழைப்பாளி மக்களில் பெரும்பான்மையினர் — தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் மட்டுமல்ல, எல்லாச் சுரண்டப்படும், ஒடுக்கப்படும் மக்களிலும் பெரும்பான்மையினர்—நம் பக்கம் வந்துவிட்டால் நாம் உண்மையிலே வெற்றி பெறுவோம். *(நீடித்த கையொலி முழக்கம்.)*

*1921, ஜுலை 5ல்,*
''பிராவ்தா'', இதழ் *144*லும்
''அகில ருஷ்யாவின் நிர்வாகக் குழு
வின் செய்திகள்'', இதழ் *144*லும்
செய்தியுரையாக வெளிவந்தது

*1921, ஜுலை 8ல்,* ''கம்யூனிஸ்டு
அகிலத்தின் மூன்றும் காங்கிரசின்
செய்தி அறிக்கை'', இதழ் *11*ல்
முழு வாசகமாய் வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி *44*,
பக்கங்கள்*23-33*

# 1921, ஜூலை 11ல், கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றும் காங்கிரசில் பங்கெடுத்த ஜெர்மனி, போலந்து, செகோஸ்லோவாக்கியா, ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகளது பிரதிநிதிக் குழுக்களது உறுப்பினர்களின் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகள்

## 1

நேற்றைய தினம் பிராவ்தாவில் நான் படித்த செய்திகளிலிருந்து தாக்குதலுக்குரிய நேரம் காங்கிரசில் நாம் நினைத்ததைவிட—இதற்காக இளம் தோழர்கள் நம்மைக் காங்கிரசில் பலமாகத் தாக்கினுர்கள்—கிட்ட நெருங்கி விட்டதாக எனக்குத் தெளிவாயிற்று. ஆனால் இந்தச் செய்திகளைப்பற்றிப் பின்னுல் பேசுகிறேன். இத்தருணத்தில் நான் சொல்ல வேண்டியது என்னவெனில், பொதுத் தாக்குதல் நெருங்க நெருங்க நாம் மேலும் மேலும் ''சந்தர்ப்பத்துக்கு உகந்த முறையில்'' செயல்பட வேண்டும். இப்போது நீங்கள் அனைவரும் தாய்நாடுகளுக்குத் திரும்பிச் சென்று நாம் மூன்றும் காங்கிரசுக்கு முன்பிருந்ததைவிட மதியூகம் மிகுந்தவர்கள் ஆகிவிட்டோம் என்று தொழிலாளர்களிடம் கூற வேண்டும். இதனுல் நீங்கள் குழப்பமடையக் கூடாது. நாம் தவறுகள் செய்துவிட்டோம், இனி அதிக எச்சரிக்கையுடன் செயல்பட விரும்புகிறோம் என்று நீங்கள் மக்களிடம் சொல்ல வேண்டும். இவ்வழியில் தான் சமூக-ஜனநாயகக் கட்சியிடமிருந்தும் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியிடமிருந்தும் வெகுஜனங்களை நம் பக்கம் கொண்டுவருவோம். நிகழ்ச்சிப் போக்குகள் அனைத்தின் காரணமாய் எதார்த்தத்தில் இந்த மக்கள் நம் பக்கம் ஈர்க்கப்பட்டு வருகிறுர்கள்; ஆனுல் நம்மிடம் பயப்படுகிறுர்கள். நாம் மேலும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்

பதைக் காட்டுவதற்காக எங்களிடமிருந்து ஓர் உதாரணத்தை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

யுத்தம் வெடித்தபோது போல்ஷிவிக்குகளாகிய நாங்கள் ஒரேயொரு கோஷத்தைக் கடைப்பிடித்தோம் — ஒரு உள்நாட்டு யுத்தம், மிகமிகக் கடுமையான யுத்தம் என்பதே அந்தக் கோஷம். உள்நாட்டு யுத்தத்தை எதிர்த்துப் பேசிய எவனையும் துரோகி என்று நாங்கள் சூடு போட்டோம். ஆனால் 1917 மார்ச்சில் ருஷ்யாவுக்குத் திரும்பி வந்தபோது, எங்கள் நிலையை முற்றாக மாற்றிக் கொண்டோம். நாங்கள் ருஷ்யாவுக்குத் திரும்பிவந்து விவசாயிகளிடமும் தொழிலாளிகளிடமும் பேசிய போது, அவர்கள் எல்லோரும் தாய்நாட்டின் பாதுகாப்புக்கு ஆதரவாக நிற்கக் கண்டோம்—மென்ஷிவிக்குகள் மாதிரியல்லாமல் முற்றிலும் வேறொரு வகையில் பாதுகாப்புக்கு ஆதரவாயிருந்தனர் என்பது மெய்தான். இந்தச் சாதாரணத் தொழிலாளர்கள், விவசாயிகள் அனைவரையும் கயவாளிகள், துரோகிகள் என்று சொல்ல முடியவில்லை. அவர்களை ''மனச்சாட்சி பூர்வமான பாதுகாப்புவாதிகள்'' என்று குறிப்பிட்டோம். இதைப்பற்றி ஒரு நீண்ட கட்டுரை எழுதி எல்லா விஷயாதாரங்களையும் பிரசுரிக்க நான் விரும்புகிறேன். ஏப்ரில் 7ல் நான் ஆய்வுரைகளை வெளியிட்டேன், அவற்றில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை என்று வலியுறுத்தினேன்.* யுத்தத் தொடக்கத்தில் நாங்கள் எடுத்த நிலை சரிதான், ஏனெனில் அந்தச் சமயத்தில் நிச்சயமான, உறுதியான உட்கருவை நிறுவுவது முக்கியமாயிருந்தது. பின்னால் நாங்கள் மேற்கொண்ட நிலையும் சரியானதே. மக்கள் திரளை எங்கள் பக்கம் கொண்டு வர வேண்டும் என்ற தேவையிலிருந்து அது உதித்தது. இடைக்கால அரசாங்கத்தை உடனடியாகத் தூக்கியெறிகிற கருத்தை அன்று எதிர்த்தோம். நான் எழுதினேன்: ''அரசாங்கத்தை நாம் தூக்கியெறிய வேண்டும், ஏனெனில் அது மக்கள் ஆட்சியல்ல, சிலர் ஆட்சி; ஏனெனில் அதனால் மக்களுக்கு உணவோ சமாதானமோ கொடுக்க முடியவில்லை. ஆனால் அதை உடனடியாகத்

---

* ''தற்போதையப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் பணிகள்'' (லெனின், நூல் திரட்டு, தொகுதி 31, பக்கங்கள் 113-18).—பதிப்பாசிரியர்.

தூக்கியெறிய முடியாது; காரணம், அது தொழிலாளர்களின் சோவியத்துக்களைச் சார்ந்து இருக்கிறது, இன்னமும் தொழிலாளர்களின் நம்பிக்கைக்கு உரியதாயிருக்கிறது. நாம் பிளாங்கியவாதிகள் அல்ல, தொழிலாளி வர்க்கத்தில் பெரும்பான்மையினருக்கு எதிராகச் சிறுபான்மையினரைக் கொண்டு நாம் ஆள விரும்பவில்லை'' என்று.* நுட்பமான அரசியல்வாதிகளாகிய காடெட்டுகள் உடனே எங்களுடைய பழைய நிலைக்கும் புதிய நிலைக்கும் உள்ள முரண்பாட்டைக் கண்டு கொண்டு எங்களை ஆஷாடபூதிகள் என்று அழைத்தார்கள். ஆனால் அதே மூச்சில் அவர்கள் எங்களை உளவாளிகள், துரோகிகள், கயவர்கள், ஜெர்மன் ஏஜெண்டுகள் என்று அழைத்ததினால் முதற்சொன்ன நிந்தனை எடுபடவில்லை. ஏப்ரில் 20ஆம் தேதியன்று முதல் நெருக்கடி ஏற்பட்டது. அரசாங்கம் ஏகாதிபத்திய அரசாங்கம் என்பதை மில்யூக்கோவின் டார்டனெல்ஸ் பற்றிய குறிப்பு அம்பலப்படுத்திவிட்டது. விரைவிலே அதைத் தொடர்ந்து ஆயுதமேந்திய இராணுவ வீரர்கள் அரசாங்கக் கட்டடத்தை வளைத்துக் கொண்டு மில்யூக்கோவை வெளியே தள்ளி விட்டார்கள். யாரோ லிந்தே என்கிற கட்சிச்சார்பற்ற ஒருவர் அவர்களுக்குத் தலைமை வகித்தார். இந்த நடவடிக்கை கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டதல்ல. அது ஆயுதமேந்திய ஆர்ப்பாட்டத்தை விட ஓரளவு மேலானது, ஆயுதமேந்திய புரட்சியெழுச்சியை விட ஓரளவு கீழானது என்று அன்று நாங்கள் அதை இனங்குறித்துச் சொன்னோம். ஏப்ரில் 22ல் நடந்த எங்கள் மாநாட்டில் அரசாங்கத்தை உடனடியாகத் தூக்கியெறிய வேண்டுமென்று இடதுசாரிப் போக்கு கோரியது. அதற்கு மாறாக, மத்தியக் கமிட்டி உள்நாட்டுப் போர் என்கிற கோஷத்தை எதிர்த்துப் பேசியது, போல்ஷிவிக்குகள் உள்நாட்டுப் போரை விரும்புகிறார்கள் என்கிற படுமோசமான புளுகை மறுத்துப் பேசுமாறு மாநிலங்களிலுள்ள எல்லாப் பிரசாரகர்களுக்கும் ஆணையிட்டோம். ஏப்ரில் 22ல் நான் ''இடைக்கால அரசாங்கம் வீழ்க'' என்கிற கோஷம் தவறு என்று எழுதினேன்; காரணம், மக்களிலே பெரும்பான்மையினரின் ஆதரவில்லாத

* ''இரட்டை ஆட்சி'' (லெனின், நூல் திரட்டு, தொகுதி *31*, பக்கம் *147*). —பதிப்பாசிரியர்.

நிலையில் அது ஒரு வெற்றுச் சொல்லாகவோ சாகசவாதமாக வோதான் இருக்க முடியும்.*

எங்கள் இடதுசாரிகளை எங்கள் விரோதிகளின் முன்னிலை யிலேயே ''சாகசவாதிகள்'' என்று பெயர் சூட்டியழைக்க நாங்கள் தயங்கவில்லை. இதை வைத்து மென்ஷிவிக்குகள் மகிழ்ச்சிக் கூச்சல் எழுப்பினர், நாங்கள் கையாலாகாதவர் களாகிவிட்டோம் என்று சொன்னார்கள். ஆனால், மத்தியக் கமிட்டியின் நிலையிலிருந்து சொற்ப அளவுக்கேனும் அற்ப அளவுக்கேனும் இடதுசாரியான நிலையை மேற்கொள்ளும் எந்த முயற்சியும் மடமையாகும், மத்தியக் கமிட்டியின் நிலைக்கு இடதுசாரியாகச் செல்லும் எவரும் பகுத்தறிவை இழந்தவரே என்று கூறினோம். நமது விரோதிகள் நம் தவறுகளுக்காக மகிழ்ச்சி கொண்டாடுவதைக் கண்டு நாம் பயப்படப் போவதில்லை என்றோம்.

இன்னமும் பலம் பெறுவது ஒன்றே இன்று எங்களுடைய யுத்ததந்திரமாகும்; எனவே நாம் இன்னமும் விவேகத் துடனும் மதியூகத்துடனும் ''சந்தர்ப்பத்துக்கு உகந்தவாறும்'' நடந்துகொள்ள வேண்டும். இதைத்தான் நாம் வெகு ஜனங்களுக்குச் சொல்ல வேண்டும். நமது மதியூகத்தால் மக்கள் திரளை நம் பக்கம் கொண்டுவந்த பிறகு தாக்கு தல் போர்த்தந்திரங்களை—அந்தச் சொல்லின் முழுப் பொரு ளில்—செயல்படுத்துவோம்.

இனி அந்த மூன்று செய்திகளைப்பற்றி:

1) பெர்லின் நகராட்சித் தொழிலாளர்களின் வேலைநிறுத் தம். இந்தத் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் பழைமைப் போக்குள்ளவர்கள், சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மையோரையும் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட் சியையும் சேர்ந்தவர்கள், நல்ல நிலையில் இருப்பவர்கள், எனினும் வேலைநிறுத்தம் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட் டிருக்கிறார்கள்.[29]

---

* பார்க்கவும்: ''ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) மத்தியக் கமிட்டி தீர்மானம். 1917 ஏப்ரல் 22ல் (மே 5) காலையில் ஏற்கப்பட்டது'' (லெனின், நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 319). —**பதிப்பாசிரியர்.**

2) லீல் நகரத்தில் நூற்புநெசவாலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம்.[30]

3) மூன்றாவது செய்தி அதிமுக்கியமானதாகும். கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு, குடியரசு என்ற எல்லாக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்திய ஐம்பது ஆயிரம் தொழிலாளர்கள் பங்கு கொண்ட கூட்டம் பாசிஸ்டுகளை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதற்காக ரோம் நகரில் கூட்டப்பட்டது. இதில் யுத்தத்திலிருந்து திரும்பிய ஐயாயிரம் போர்வீரர்கள் இராணுவச் சீருடையுடன் கலந்து கொண்டார்கள். ஒரு பாசிஸ்டேனும் தெருவில் தலைகாட்டத் துணியவில்லை.[31] நாம் நினைத்ததைவிட அதிக அளவில் எரிபொருள் ஐரோப்பாவில் இருக்கிறதை இது நிரூபிக்கிறது. போர்த்தந்திரங்களைப் பற்றிய நம் தீர்மானத்தை லஸ்ஸாரி புகழ்ந்தார். அது நமது காங்கிரசின் ஒரு பெரும் சாதனையாகும். லஸ்ஸாரி அதை அங்கீகரிக்கிறாரென்றால் அவரைப் பின்பற்றுகிற பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் நிச்சயமாக நம் பக்கம் வருவார்கள், அவர்களின் தலைவர்கள் அவர்களைப் பயமுறுத்தி நம்மிடமிருந்து விரட்டிவிட முடியாது. “Il faut reculer, pour mieux sauter” (சிறந்த பாய்ச்சலின் பொருட்டுப் பின்நகர்வது அவசியம்). அந்தப் பாய்ச்சல் தவிர்க்க முடியாததாகும்; காரணம், எதார்த்த நிலைமை சகிக்க முடியாததாகி வருகிறது.

ஆக, நாம் நம்முடைய புதிய போர்த்தந்திரங்களைச் செயல்படுத்தத் தொடங்கியிருக்கிறோம். நாம் பதற்றப்படக் கூடாது. தாமதம் செய்தவர்களாகிவிட மாட்டோம். உண்மையிலே பார்த்தால் நாம் காலத்திற்கு மிக முன்னதாகவே தொடங்கிவிடுவது சாத்தியம். அதுவரை ருஷ்யா தாக்குப் பிடித்து நிற்க முடியுமா என்று கேட்டால் தற்சமயம் குட்டி பூர்ஷ்வாக்களை எதிர்த்து, விவசாயிகளை எதிர்த்து ஒரு போரை, முந்திய போரைக் காட்டிலும் மிகவும் ஆபத்தான ஒரு பொருளாதாரப் போரை, நாங்கள் நடத்தி வருகிறோம் என்று பதில் சொல்லுகிறோம். கிளாவுஸெவிட்ஸ் சொன்னது போல, யுத்தம் முளக்கூடிய அபாயம் இருக்கத்தான் செய்கிறது, ஒரு வினாடியேனும் இந்த அபாயம் எங்களை விட்டகன்று விடவில்லை. நாங்கள் இன்னும் அதிக எச்சரிக்கையுடன் செயல்புரியத்தொடங்கினால்,காலாகாலத்தில்சலுகைகள்வழங்

கினும், இந்தப் போர் மூன்றாண்டுகளுக்கு மேல் நடந்தாலும் இதிலும் வெற்றிபெறுவோம் என்று உறுதியாக நம்புகிறேன்.

தொகுத்து உரைக்கிறேன்:

1) நாம் புதிய போர்த்தந்திரங்களைச் செயல்படுத்துவதாக ஐரோப்பா முழுவதற்கும் ஒருமனதாகச் சொல்லுவோம். இவ்வழியே மக்கள் திரளை நம் பக்கம் கொண்டு வருவோம்.

2) ஜெர்மனி, செகோஸ்லோவாக்கியா, இத்தாலி ஆகிய மிக முக்கிய நாடுகளில் தாக்குதலை இணைப்பது. இந்தப் பிரச்சினையில் தயாரிப்பும் இடையருத ஒருங்கிணைத்தலும் அவசியம். ஐரோப்பா புரட்சியைக் கருக்கொண்டிருக்கிறது, எனினும் முன்கூட்டியே புரட்சிக்குக் கால அட்டவணை வகுப்பது சாத்தியமல்ல. ருஷ்யாவிலுள்ள நாங்கள் ஐந்து ஆண்டுகள் மட்டுமல்ல, அதற்கு மேலும் தாக்குப்பிடித்து நிற்போம். நாம் தீர்மானித்துள்ள யுத்ததந்திரம் ஒன்றுதான் சரியானது. ஆண்டான்ட் வல்லரசுகள் எதிர்த்து நிற்க முடியாதபடி புரட்சிக்கு நாம் தக்க நிலைகளைப் பிடிப்போம் என்பது என் உறுதி, அதுவே உலக அளவிலான வெற்றிக்குத் துவக்கமாயிருக்கும்.

## 2

என் பேச்சில் ஷ்மேராலுக்குத் திருப்தி போலிருக்கிறது, ஆனால் அவர் அதை ஒருசார்பாக வியாக்கியானம் செய்கிறார். சரியான பாதைக்கு வர ஷ்மேரால் இடதுசாரித் திசையில் மூன்று அடி எடுத்துவைக்க வேண்டுமென்றும் கிரெய்பிஹ் வலதுசாரித் திசையில் ஓர் அடி எடுத்துவைக்க வேண்டுமென்றும் நான் குழுவில் பேசுகையில் சொன்னேன். இந்த அடிகளை எடுத்துவைப்பதுபற்றி ஷ்மேரால் எதுவும் சொல்லாதது வருந்தத்தக்கது. நிலைமையைத் தான் எப்படி மதிப்பீடு செய்கிறார் என்பதைப் பற்றியும் அவர் ஒன்றும் சொல்லவில்லை. கஷ்டங்களைப் பற்றி ஏற்கனவே தான் சொன்னதையே திரும்பச் சொன்னார், புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. தன்னுடைய அச்சங்களை நான் போக்கிவிட்டதாக அவர் சொன்னார். காலத்துக்கு முன்னதாகவே செயல்புரியும்படிக் கம்யூனிஸ்டுத் தலைமை தன்னை நிர்ப்பந்திக்கும் என்று வசந்த காலத்தில் அவர் அஞ்சினார், ஆனால் நிகழ்ச்சிகள் அவருடைய

அச்சங்களை அகற்றிவிட்டன. எனினும், இன்று வேறொன்று நமக்குக் கவலையளிப்பதாயிருக்கிறது: செகோஸ்லோவாக்கியாவில் விவகாரங்கள் தாக்குதலுக்குத் தயாரான கட்டத்துக்கு உண்மையிலே வந்து சேருமா அல்லது கஷ்டங்களைப் பற்றிய வெறும் பேச்சோடு நின்றுவிடுமா என்பதே அது. இடதுசாரித் தவறு வெறும் தவறு மட்டுமே. அது பெரிய தவறல்ல. சுளுவாய்த் திருத்தப்படக் கூடியதே. செயல்புரிவதில் திட உறுதியைப் பற்றிய தவறாய் இருந்தால் அப்போது அது சிறு தவறு அல்ல, துரோகமேயாகும். இந்தத் தவறுகளுக்கு இணையே கிடையாது. மற்றவர்கள் முதலில் செய்த பிறகு நாங்கள் புரட்சியைச் செய்துமுடிக்கிறோம் என்கிற தத்துவம் அடிப்படையிலேயே தவறானது.

## 3

என் அபிப்பிராயத்தில், இந்தக் காங்கிரசில் செய்யப்பட்டிருக்கும் பின்வாங்குதலை நாம் ருஷ்யாவில் 1917ல் செய்த செயல்களுடன் ஒப்புநோக்க வேண்டும், இவ்விதம் இந்தப் பின்வாங்குதல் தாக்குதலுக்குத் தயார் செய்யப் பயன்படுத்தப்பட வேண்டும். நாம் முன்பு சொன்னதை இன்று சொல்லவில்லை என்று நமது எதிரிகள் சொல்வார்கள். அதனால் அவர்களுக்கு லாபம் அதிகமிருக்காது; ஆனால், எந்த அர்த்தத்தில் மார்ச்சு நடவடிக்கை வெற்றிகரமானது என்று கருதலாம், அதன் தவறுகளை ஏன் நாம் விமர்சிக்கிறோம், எதிர்காலத்தில் இன்னும் திறம்பட தயாரிப்பு செய்ய வேண்டும் என்று ஏன் சொல்கிறோம் என்று விளக்குவோமானால் தொழிலாளி வர்க்க வெகுஜனங்கள் நம்மைப் புரிந்து கொள்வார்கள். ஷ்மேராலுடைய, புரியானுடைய விளக்கங்கள் தவறு என்று டெராச்சீனி சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். செயலிணைப்புக்கு அர்த்தம் வேறொரு, அதிக ஜனத்தொகை கொண்ட வளமான நாடு செயல்புரியும் வரை நாங்கள் காத்திருக்க வேண்டும் என்பதாய் வியாக்கியானம் செய்யப்பட்டால் அது கம்யூனிஸ்டு விளக்கம் ஆகாது, பச்சையான ஏமாற்றே ஆகும். எந்தெந்த தருணங்கள் முக்கியத்துவமானவை என்று பிற நாட்டுத் தோழர்களுக்குத் தெரிந்திருப்பது என்பதே

செயலிணைப்பாகும். நல்ல உதாரணங்களைச் சிறப்பாகவும் மிக விரைவாகவும் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதே செயலிணைப்புக்கான அதிமுக்கிய விளக்கமாகும். ரோம் தொழிலாளிகளின் உதாரணம் சிறந்த ஒன்றாகும்.

முதல் சொற்பொழிவு முழுவதாகவும், இரண்டாவது, மூன்றாவது சொற்பொழிவுகள் சுருக்கப்பட்டும் ''வப்ரோஸீ இஸ்தோரியீ கெ. பெ. எஸ். எஸ்.'', இதழ் 5ல், 1958ல் முதன்முதலாய் வெளிவந்தவை

நூல் திரட்டு, தொகுதி 44, பக்கங்கள் 57-61

# ஜெர்மன் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம்

அருமைத் தோழர்களே,

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசினுடைய படிப்பினைகள் குறித்து என்னுடைய அபிப்பிராயத்தை விவர மான ஒரு கட்டுரையில் எடுத்துரைக்க வேண்டுமென்று இருந் தேன். துரதிருஷ்டவசமாய் உடல் நலக் குறைவு காரண மாய் நான் இதுவரை இந்த வேலையில் இறங்க முடியாமற் போய்விட்டது. உங்களுடைய கட்சியின், ஜெர்மனியின் ஐக் கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின், (V. K. P. D.)[32] காங்கிரஸ் ஒன்று ஆகஸ்டு 22ல் கூட்டப்பட்டிருப்பதால் அவசரமாய் நான் இந்தக் கடிதத்தை எழுதியாக வேண்டியிருக்கிறது. தாமதமின்றி தக்க நேரத்தில் இதை ஜெர்மனிக்கு அனுப்பும் பொருட்டு ஒருசில மணி நேரத்துக்குள் எழுதி முடிக்க வேண்டியிருக்கிறது.

என்ஞல் மதிப்பிட முடிகிறவரை ஜெர்மனியில் கம் யூனிஸ்டுக் கட்சியின் நிலை மிகவும் கடினமானதே. இது புரிந்து கொள்ளக் கூடியதுதான்.

முதலாவதாகவும், பிரதானமாகவும் 1918ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து ஜெர்மனியின் சர்வதேச நிலை மிக வேகமாக வும் கடுமையாகவும் அதன் உள்நாட்டுப் புரட்சிகர நெருக் கடியை தீவிரப்படுத்தி, பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையை உடனடியாகவே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முற்படுமாறு உந்திவிட்டது. அதேபோது சிறந்த முறையில் ஆயுதம் தரித்து ஒழுங்கமைக்கப் பெற்று ''ருஷ்ய அனுபவத் தால்'' கற்பிக்கப்பட்டிருந்த ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கமும் சர்வதேச முதலாளித்துவ வர்க்கம் அனைத்துமே வெறி கொண்டெழுந்து ஜெர்மனியின் புரட்சிகரப் பாட்

டாளி வர்க்கத்தின்மீது பாய்ந்து தாக்கின. முதலாளித்துவ வர்க்கத்தாலும், அதன் வீரதீரர்களான நோஸ்கேயாலும் நோஸ்கே கும்பலாலும், அதன் கூலியாட்களான ஷெய்டெமன்களாலும் இவர்களையொத்த பிறராலும், அதன் மறைமுகமான, ''நுட்பமான'' (ஆகவே மிகவும் விலைமதிப்பு வாய்ந்த) உடந்தையாளர்களாய்த் தமது அறுவறுப்புமிக்க உறுதியின்மையையும் ஊசலாட்டங்களையும் பகட்டுப் புலமையையும் அற்பவாதத்தையும் கொண்டு செயல்பட்ட ''இரண்டரையாவது அகிலத்தின்'' பெரும்புள்ளிகளாலும் ஜெர்மனியின் மிகச் சிறந்த மக்கள்—அதன் புரட்சிகரத் தொழிலாளர்கள்—பல்லாயிரக் கணக்கில் கொன்று குவிக்கப்பட்டனர் அல்லது சித்தரவதை செய்யப்பட்டு சாகடிக்கப்பட்டனர். ஆயுதபாணிகளான முதலாளிகள் நிராயுதபாணிகளான தொழிலாளர்களைக் கண்ணிவைத்துப் பிடித்தனர்; இவர்களை திரள் திரளாய்ப் படுகொலை புரிந்தனர், ஒளிந்திருந்து இவர்களுடைய தலைவர்களை ஒவ்வொருவராய்த் தாக்கிக் கொன்றனர்; இதன் பொருட்டு அவர்கள் சமூக-ஜனநாயகவாதிகளது இரு ரகத்தினரும் — ஷெய்டெமன்வாதிகளும் காவுத்ஸ்கிவாதிகளும்—எழுப்பிய எதிர்ப்புரட்சிக் கூப்பாட்டைத் திறம்பட பயன்படுத்திக் கொண்டனர். ஆனல் நெருக்கடி வெடித்த போது ஜெர்மன் தொழிலாளர்களுக்கு மெய்யான புரட்சிகரக் கட்சி இருக்கவில்லை. பிளவுபட்டுப் பிரிந்து வருவதில் செய்யப்பட்ட கால தாமதமும், மூலதனத்தின் ஊழல் மலிந்த (ஷெய்டெமன்கள், லெகீன்கள், டேவிட்கள் முதலானோர்), உறுதியற்ற (காவுத்ஸ்கிகள், ஹில்பெர்டிங்கள் முதலானோர்) கைக்கூலிக் கும்பல்களுடன் ''ஒன்றுபடுவது'' என்னும் கேடுகெட்ட பாரம்பரியத்தின் சுமையும்தான் இதற்குக் காரணம். 1912ஆம் ஆண்டின் பாசெல் அறிக்கையை ''இரண்டாவது'', ''இரண்டரையாவது'' ரகங்களைச் சேர்ந்த கயவர்களைப் போல ''சைகையாய்க்'' கொள்ளாது, அதன் நேர் பொருளில் ஏற்றுக்கொண்ட நேர்மை உள்ளங்கொண்ட வர்க்க உணர்வு படைத்த ஒவ்வொரு தொழிலாளியின் நெஞ்சத்திலும் பழைய ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளது சந்தர்ப்பவாதம் குறித்து சொல்லொணு வெறுப்பு நிரம்பிவிட்டது. ஒடுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வரும் திரளான மக்களிலே மிகச் சிறந்தோரின் மகத்தான புனித

உணர்ச்சியான இந்த வெறுப்பு மக்களின் பார்வையை மறைத்துவிட்டது; நிதானம் தவறுதிருப்பதற்கும், நன்கு ஆயுதம் தரித்து ஒழுங்கமைந்து ''ருஷ்ய அனுபவத்தால்'' பயிற்றுவிக்கப்பட்டு பிரான்சு, பிரிட்டன், அமெரிக்கா இந் நாடுகளின் ஆதரவைப் பெற்றிருந்த ஆன்டான்ட் முதலாளிகளுடைய தேர்ந்த யுத்ததந்திரத்துக்குத் தக்க பதிலாய் இருக்கவல்ல பிழையற்ற யுத்ததந்திரத்தை வகுத்துக் கொள்வதற்கும் முடியாதபடி அவர்களைத் தடுத்துவிட்டது. இந்த வெறுப்பு அவர்களை அகால எழுச்சிகளில் இறங்கும்படித் தள்ளிவிட்டது.

எனவேதான் 1918ஆம் ஆண்டின் இறுதி முதலாய் ஜெர்மனியில் புரட்சிகரத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சி மிகவும் நெருடான வேதனைமிக்க பாதையிலே நடைபோட்டு வந்துள்ளது. ஆயினும் அது இடையறுது முன்னேக்கித்தான் நடைபோட்டிருக்கிறது, நடைபோட்டும் வருகிறது. ஜெர்மனியில் பெருந் திரளான தொழிலாளர்களிடையே, உழைப்போரும் சுரண்டப்பட்டோருமான மக்களில் மெய்யான பெரும்பான்மையோரிடையே, பழைய மென்ஷிவிக் தொழிற் சங்கங்களில் (அதாவது, முதலாளித்துவ வர்க்கத்துக்குத் தொண்டாற்றும் சங்கங்களில்) ஒழுங்கமைந்தோரும் அறவே அல்லது அனேகமாய் அறவே ஒழுங்கமைப்பின்றி இருப்போருமான இரு வகையினரிடையேயும் சிறிதுசிறிதாய் இடதுசாரிக்கு மாற்றம் ஏற்படுவது மறுக்க முடியாத உண்மையாகும். ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் செய்ய வேண்டியதும் செய்யப் போவதும் என்னவெனில்—இதுவே வெற்றிக்குரிய உத்தரவாதம்—நிதானம் தவருது இருப்பதும்; கடந்த காலத்துத் தவறுகளை முறையாய்த் திருத்திக் கொள்வதும்; தொழிற் சங்கங்களினுள்ளும் வெளியிலும் இருக்கும் தொழிலாளர்களில் மிகப் பெருந் திரள்களை மேலும் மேலும் தம் பக்கத்துக்கு வென்று கொள்வதும்; நிகழ்ச்சிகளின் ஒவ்வொரு திருப்பத்திலும் வெகுஜனங்களுக்கு மெய்யான தலைமைப் பதவி வகிக்க வல்லதான வலிமை வாய்ந்த கூர்மதி கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சியினைப் பொறுமையுடன் கட்டியமைப்பதும்; (பொதுவில் தொன்னெடுங் கால அனுபவத்தாலும் குறிப்பாய் ''ருஷ்ய அனுபவத்தாலும்'') ''ஒளிபெற்றுள்ள'' மிகவும் முன்னேறிய முதலாளித்துவ வர்க்கத்தின்

தேர்ந்த சர்வதேச யுத்ததந்திரத்துக்கு ஈடான ஒரு யுத்த தந்திரத்தை வகுத்துக் கொள்வதும்தான்.

மறு புறத்தில் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியினுடைய இந்தக் கடினமான நிலை, அவ்வளவு சிறந்த கம்யூனிஸ்டுகள் அல்லாத இடதுபுறத்தோரும் (''ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி''யான K. A. P. D.), வலதுபுறத்தோரும் (பாவுல் லெவீயும் அவருடைய சிறு சஞ்சிகையான Unser Weg அல்லது Sowjetஉம்) பிய்த்துக் கொண்டு சென்றிருப்பதால் தற்போது மேலும் கடுமையாக்கப்படுகிறது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் முதலாய் ''இடதுசாரிகள்'' அல்லது ''K. A. P.க்கள்'' சர்வதேச அரங்கில் போதுமான அளவுக்கு நம்மால் எச்சரிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். குறைந்தது தலைமையான நாடுகளிலாவது போதிய பலமும் அனுபவமும் செல்வாக்கும் கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சிகள் கட்டப்படும் வரையில், நமது சர்வதேசக் காங்கிரசுகளில் அரை-அராஜகவாதக் கூறுகள் பங்கெடுத்துக் கொள்வதைச் சகித்து வர வேண்டியிருக்கிறது, இவை பங்கெடுத்துக் கொள்வது ஓரளவுக்குப் பயனுள்ளதாகவுங்கூட இருக்கிறது. இந்தக் கூறுகள் அனுபவமில்லாத கம்யூனிஸ்டுகளுக்குத் தெளிவான ஓர் ''எச்சரிக்கையாய்ப்'' பயன்படும் அளவுக்கும், இவை கற்றறிந்து கொண்டு திருந்தக் கூடியவையாய் இருக்கும் அளவுக்கும் இது பயனுள்ளதாய் இருக்கிறது. உலகெங்கும் அராஜகவாதமானது இரு போக்குகளாய்ப் பிளவுண்டு வந்திருக்கிறது—இன்று நேற்று அல்ல, 1914-18ஆம் ஆண்டுகளின் ஏகாதிபத்திய யுத்தத்தின் தொடக்கமுதலாய் இது நடந்து வந்திருக்கிறது. ஒன்று சோவியத்-ஆதரவுப் போக்கு, மற்றொன்று சோவியத்-எதிர்ப்புப் போக்கு; ஒன்று பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு ஆதரவானது, மற்றொன்று அதற்கு எதிரானது. அராஜகவாதிகளிடையிலான இந்தச் சிதைவு தொடர்ந்து நடைபெற்று உச்சமடையும்படி நாம் விட்டுவிட வேண்டும். மேற்கு ஐரோப்பாவில் அனேகமாய் யாரும் பெரிய புரட்சிக்கு ஒப்பான எதையும் அனுபவித்திருக்கவில்லை. பெரும் புரட்சிகளின் அனுபவம் இங்கு அனேகமாய் அடியோடு மறக்கப்பட்டுவிட்டது. புரட்சிகரமாய் இருக்கவேண்டுமென்ற ஆசையிலிருந்தும் புரட்சி பற்றிய பேச்சிலிருந்தும் (தீர்மானங்களிலிருந்தும்)

மெய்யான புரட்சிகரப் பணிக்கு மாறிச்செல்வது மிகவும் கடினமாகவும் துயரூட்டுவதாகவும் மெதுவாகவுமே நடை பெறுகிறது.

ஆனால் அரை-அராஜகவாதக் கூறுகளைக் குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டுதான் சகித்துக் கொள்ள முடியும், சகித்துக் கொள்ள வேண்டும் என்பதைக் கூறத் தேவை யில்லை. ஜெர்மனியில் இவற்றை நாம் ஓரளவு அதிக காலத் துக்குச் சகித்து வந்தோம். கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றா வது காங்கிரஸ் அவர்களுக்கு இறுதி எச்சரிக்கை அளித்து திட்டவட்டமான கால வரம்பை நிர்ணயித்தது. இப்பொழுது இவர்கள் தாமே விரும்பி கம்யூனிஸ்டு அகிலத்திலிருந்து ராஜினுமா செய்தார்களாயின் அது இன்னும் நல்லதே. முத லாவதாக அவர்களை வெளியேற்ற வேண்டிய தொல்லை நமக்கு இல்லாதபடி செய்துள்ளனர். இரண்டாவதாக, கம்யூனிஸ்டு அகிலம் பொறுமையுடன் இருந்திருக்கிறது, அராஜகவாதி களை உடனடியாகவும் நிபந்தனையின்றியும் அது வெளியேற்றி விடவில்லை, அவர்கள் கூறியதைக் காது கொடுத்து கவன மாய்க் கேட்டது, அவர்கள் பாடம் பயின்று கொள்ள உதவி யது என்பது ஊசலாடும் எல்லாத் தொழிலாளர்களுக்கும், பழைய சமூக-ஜனநாயகவாதிகளுடைய சந்தர்ப்பவாதத்தின் மீது ஏற்பட்ட வெறுப்பு காரணமாய் அராஜகவாதம் பக்கம் சாய்ந்துள்ள எல்லோருக்கும் முடிவாகவும் கண்கூடாகவும் புலப்படுத்திக் காட்டப்பெற்றுக் கறாரான உண்மைகள் வாயி லாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

K. A. P.க்களிடம் இப்பொழுது நாம் குறைந்த அளவு கவனமே செலுத்த வேண்டும். அவர்களுடன் வாக்குவாதம் புரிவதன் மூலம் அவர்களை விளம்பரம் பெறும்படித்தான் செய்கிறோம். அவர்கள் புத்தியில்லாதவர்கள், அவர்களிடம் அதிகம் கருத்து செலுத்துவது தவறாகும், அவர்களை ஒரு பொருட்டாய்க் கருதிக் கோபப்படுவது சரியல்ல. வெகுஜனங் களிடையே செல்வாக்கில்லாதவர்கள், நாம் தவறுகள் செய் தாலன்றி அவர்கள் செல்வாக்குப் பெறப் போவதுமில்லை. இம்மியளவான இந்தப் போக்கு இயற்கையான வழியிலே ஒழிந்து போகும்படி விட்டுவிடுவோமாக. இது எதற்கும் உத வாதது என்பதைத் தொழிலாளர்கள் தாமாகவே உணர்ந்து கொண்டுவிடுவார்கள். K. A. P. க்களுடன் வாதாடி அவர்

களுக்கு விளம்பரம் தருவதற்குப் பதிலாய்க் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசினுடைய நிறுவனத் துறை, போர்த்தந்திரத் துறை முடிவுகளை மேலும் திறம்பட பரப்பி அவற்றைச் செயல்படுத்துவோமாக. இடதுசாரிவாதமான இளம் பருவக் கோளாறு மறைந்து கொண்டிருக்கிறது, இயக்கம் வளருகையில் மறைந்தொழிந்து போய்விடும்.

இதே போல இப்பொழுது நாம் தேவையின்றி பாவுல் லெவீக்கு உதவி வருகிறோம், அவருடன் வாக்குவாதம் புரிவதன் மூலம் வீணில் அவருக்கு விளம்பரம் அளித்து வருகிறோம். நாம் அவருடன் வாதாட வேண்டுமென்பது தான் அவர் விரும்புவதெல்லாம். இப்பொழுது கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசின் முடிவுகளுக்குப் பிறகு நாம் அவரை மறந்துவிட வேண்டும், நமது கவனம் அனைத்தையும் நமது முயற்சிகளை எல்லாம் மூன்றுவது காங்கிரசின் தீர்மானங்களுடைய உணர்வில் சமாதான வழிப்பட்ட நடைமுறை ஆக்கப் பணிகளிலே (எந்த வம்போ வாக்குவாதமோ இல்லாமல், நேற்றைய சச்சரவுகளை எழுப்பிக் கொண்டிராமல்) ஈடுபடுத்தவேண்டும். மூன்றுவது காங்கிரசின் இந்தப் பொதுவான, ஒருமனதாய் ஏற்கப்பட்ட முடிவுக்கு, தோழர் கா. ராதேக்கின் ''மார்ச் மாத நடவடிக்கை குறித்து மூன்றுவது உலகக் காங்கிரசும் வருங்காலப் போர்த்தந்திரமும்'' என்கிற கட்டுரை (ஜெர்மனியின் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய ஏடான Die Rote Fahneயின் 1921 ஜூலை 14, 15ஆம் தேதி இதழ்கள்) கணிசமான அளவில் பங்கம் விளைவிக்கிறது என்பதே எனது துணிபு. இந்தக் கட்டுரையின் பிரதி ஒன்றை போலந்துக் கம்யூனிஸ்டுகளில் ஒருவர் எனக்கு அனுப்பியிருந்தார். இந்தக் கட்டுரை எதிர்த்துத் தாக்குவது பாவுல் லெவீயை மட்டுமல்ல (இது முக்கியமல்ல), சிறிதும் அவசியமின்றி—நம்முடைய பணிகளுக்கு நிச்சயமாய் ஊறு செய்யும் முறையில்—கிளாரா ஸெத்கினையும்கூடத் தாக்குகிறது. ஆயினும் கிளாரா ஸெத்கின் மாஸ்கோவில் மூன்றுவது காங்கிரசின்போது ஜெர்மனியின் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் குழுவுடன் (''சென்டிரேல்'') கோஷ்டிவாதமின்றி கூட்டாய்ப் பணியாற்றுவதென்று ''சமாதான ஒப்பந்தம்'' செய்துகொண்டவர்! நாம் எல்லோரும் இந்த ஒப்பந்தத்தை அங்கீகரித்தோம். தகாத சந்தர்ப்பத்தில் தமது

வாக்குவாத ஆர்வத்தைக் காட்டித் தோழர் கா. ராதேக் ஒருகாலும் உண்மையில்லாத ஒன்றைக் கூறுமளவுக்குச் செல் கிறார்; ''கட்சியின் பொதுச் செயல் ஒவ்வொன்றையும்'' (jede allgemeine Aktion der Partei) ''பெருந் திரள்களான மக்கள் எழும் நாள் வரையில்'' (auf den Tag, wo die grossen Massen aufstehen werden) ''ஒத்திப்போட வேண்டும்'' (verlegt) என்ற கருத்தை ஸெத்கின் கொண்டிருப்பதாய்க் கூறுகிறார். பாவுல் லெவீ விரும்பக்கூடிய மிகச் சிறந்த சேவையையே இது போன்ற முறைகளில் தோழர் கா. ராதேக் அவருக்குச் செய்கிறார் என்பது கூறாமலே விளங்கும். பாவுல் லெவீ வேறு எதையும்விட அதிகமாய் விரும்புவது வாக்குவாதம் முடிவின்றி இழுத்தடிக்கப்பட்டு, கூடுமான அளவுக்கு அதிக மானோர் இதில் சிக்கிவிடப்படுவதும், ஸெத்கின் தாமே செய்து கொண்டு கம்யூனிஸ்டு அகிலம் அனைத்தாலும் அங்கீ கரிக்கப்பட்ட ''சமாதான ஒப்பந்தம்'' வாக்குவாத சர்ச்சை கள் மூலம் மீறப்பட்டு ஸெத்கினைக் கட்சியிலிருந்து விரட்ட முயலுவதும்தான். பாவுல் லெவீக்கு எப்படி ''இடதுசாரி'' யிடமிருந்து துணை புரிகிறார்கள் என்பதற்குத் தோழர் கா. ராதேக்கின் கட்டுரை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இங்கு நான் மூன்றாவது காங்கிரசில் ஏன் பாவுல் லெவீக் காக அவ்வளவு நீண்ட நேரம் வாதாடினேன் என்பதை ஜெர் மன் தோழர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். முதலா வதாக, நான் ராதேக் மூலம் சுவிட்ஜர்லாந்தில் 1915 அல்லது 1916ல் லெவீயுடன் பரிச்சயம் பெற்றேன். அப்பொழுதே லெவீ போல்ஷிவிக்காய் இருந்தார். போல்ஷிவிசம் ருஷ் யாவில் பெற்ற வெற்றிக்குப் பிற்பாடு மட்டுமே, சர்வதேச அரங்கில் அது கண்ட பல வெற்றிகளுக்கும் பிற்பாடே அதை ஏற்றுக் கொண்டவர்கள் குறித்து நான் ஓரளவு அவநம்பிக் கை கொள்ளாமல் இருக்க முடிவதில்லை. ஆனால் இந்தக் கார ணம் ஒப்பளவில் முக்கியமல்லதான், ஏனெனில் எப்படியும் நான் பாவுல் லெவீயைப் பற்றி நேரடியாய் அறிந்தது மிகச் சொற்பமே. இதைக் காட்டிலும் ஒப்பிடற்கரிய அளவில் முக்கியமானது இரண்டாவது காரணமாகும், அதாவது ஜெர் மனியில் 1921ல் நடைபெற்ற மார்ச் மாத நடவடிக்கை பற்றிய லெவீயின் விமர்சனத்தில் பெருமளவு சாராம்சத்தில் சரியானதே என்கிற காரணமாகும் (இந்த எழுச்சியை அவர்

''சதிகார ஆட்சிக் கவிழ்ப்பு'' என்று சொன்னது குறித்து நான் இப்படிக் கூறவில்லை, அவருடைய இந்தக் கூற்று அபத்தமானதுதான்).

லெவீ தமது விமர்சனத்தை பலவீனமாக்கவும், கெடுக்கவும், தானும் ஏனையோரும் விவகாரத்தின் சாராம்சத்தைப் புரிந்து கொள்வதைக் கடினமாக்கவும், தம்மால் இயன்ற தனைத்தையும் செய்தார், அதற்கு அதிகமாகவுங்கூடச் செய்தார், வெளிப்படையாகவே தவறான ஏராளமான விவரங்களைக் கொண்டு வந்து குவித்தார் என்பது மெய்தான். லெவீ தமது விமர்சனத்தை அனுமதிக்க முடியாத, தீங்கான வடிவில் வகுத்தளித்தார். நன்கு ஆலோசித்து முடிவு செய்யப்பட்ட எச்சரிக்கையான யுத்ததந்திரத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று ஏனையோரை வற்புறுத்தும் அதே லெவீ பள்ளிக்கூடப். பையனைக் காட்டிலும் மோசமான தவறுகள் இழைத்தார். எந்தப் ''போரிலும்'' நிச்சயமாய்த் தோல்வி பெறும்படி (பல ஆண்டுகளுக்குத் தமது பணி கெட்டுவிடும்படி அல்லது தடைப்பட்டுவிடும்படி) அப்படி அகாலமாகவும் தயாரிப்பின்றியும் அசட்டுத்தனமாகவும் ஆவேசமாகவும் அவசர கோலமாய்க் களத்திலே குதித்துப் போர் தொடுத்தார். ஆயினும் இந்தப் ''போர்'' வெற்றி பெறக் கூடியதும் வெற்றி பெற வேண்டியதுமான ஒன்று. பாட்டாளி வர்க்கக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒழுங்கமைந்த உறுப்பினராய் நடந்து கொள்வதற்குப் பதில், லெவீ ''அராஜகவாத அறிவுத் துறையினராய்'' (Edelanarchist என்பதே ஜெர்மன் பதமென நினைக்கிறேன்) நடந்து கொண்டார். கட்டுப்பாட்டை மீறும் குற்றமிழைத்தார் லெவீ.

நம்பமுடியாத அளவுக்கு அசட்டுத்தனமான இந்த தவறுகளை வரிசையாய்ச் செய்ததன் மூலம் லெவீ விவகாரத்தின் சாராம்சத்தின்மீது கவனம் ஒன்று குவிய முடியாதபடிக் கடினமாக்கினார். ஆனால் விவகாரத்தின் சாராம்சம், அதாவது 1921ஆம் ஆண்டு மார்ச் மாத நடவடிக்கையின்போது ஜெர்மனியின் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி புரிந்த எண்ணிலடங்காத தவறுகளை மதிப்பிடுவதும் சரிசெய்வதும், பிரம்மாண்ட முக்கியத்துவமுடையதாய் இருந்துள்ளன, தொடர்ந்து இருந்தும் வருகின்றன. இந்தத் தவறுகளை (சிலர் இவற்றை மார்க்சியப் போர்த்தந்திரத்தின் மாணிக்கங்களாய் மெச்சிப்

போற்றினர்) விளக்கும் பொருட்டும், அவற்றைச் சரிசெய்யும் பொருட்டும் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசின் போது வலதுசாரியில் இருப்பது அவசியமாய் இருந்தது. இல்லையேல் கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைவழி தவருனதாய் இருந்திருக்கும்.

நான் லெவீக்காக வாதாடினேன், வாதாட வேண்டியிருந்தது. அவருடைய எதிராளிகள் ''மென்ஷிவிசம்'' என்றும் ''மையவாதம்'' என்றும் கூச்சல் போட்டுவிட்டு மார்ச் மாத நடவடிக்கையின் தவறுகளையும் அவற்றை விளக்கிச் சரிசெய்ய வேண்டியதன் அவசியத்தையும் பார்க்க மறுத்ததைத் தான் என் முன்ஞல் கண்டதால் நான் லெவீக்காக வாதாட வேண்டியிருந்தது. இவர்கள் புரட்சிகர மார்க்சியத்தைக் கேலிக்கூத்தாக்கினர், ''மையவாதத்துக்கு'' எதிரான போராட்டத்தை ஒரு விளையாட்டாக்கிக் கொண்டுவிட்டனர். இலட்சியம் அனைத்துக்குமே அவர்கள் மிகப்பெரும் தீங்கிழைத்திருப்பார்கள், ஏனெனில் ''உலகில் யாரும், தம்மைத் தாமே இழுக்குப்படுத்திக் கொள்ளாமல் புரட்சிகர மார்க்சியவாதிகளை இழுக்குப்படுத்திவிட முடியாது.''

இவர்களிடம் நான் கூறினேன்: லெவீ மென்ஷிவிக்கே ஆகிவிட்டதாய் வைத்துக் கொள்ளலாம். நேரடியாக அவரை எனக்கு அதிகம் தெரியாததால், இது எனக்கு நிரூபிக்கப் படுமாயின் நான் வற்புறுத்தமாட்டேன். ஆனுல் இது இன்னும் நிரூபிக்கப்பட்டாகவில்லை. இதுவரை நிரூபிக்கப்பட்டிருப்பது எல்லாம் அவர் நிதானம் தவறிவிட்டார் என்பதுதான். இந்த ஆதாரத்தை மட்டும் கொண்டு ஒருவரை மென்ஷிவிக் என்று பிரகடனம் செய்வது சிறுபிள்ளைத்தனமான அளவுக்கு அசட்டுத்தனமானது. அனுபவம் வாய்ந்த, செல்வாக்கு படைத்த கட்சித் தலைவர்களைப் பயிற்றுவிப்பது நீண்டநெடிய கடினமான காரியம். இதைச் செய்யாமல் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமும் அதன் ''சித்த ஒற்றுமையும்'' வெற்றுத் தொடரே ஆகும். ருஷ்யாவில் தலைவர்கள் குழு ஒன்றை உருவாக்கப் பதினைந்து ஆண்டுகள் (1903-17) ஆயின—மென்ஷிவிசத்தை எதிர்த்துப் போராட்டம் நடைபெற்ற பதினைந்து ஆண்டுகள், ஜாரிஸ்டு அடுக்குமுறைக்குரிய பதினைந்து ஆண்டுகள், மாபெரும் சக்தி மிக்க புரட்சியான முதலாது புரட்சிக்குரிய (1905) ஆண்டுகளும் அடங்கிய பதினைந்து ஆண்டுகள். ஆயினும்

சிறந்த தோழர்களும் ''நிதானம் தவறிவிட்ட'' சோகமிக்க உதாரணங்கள் எங்களிடையிலும் இருக்கவே செய்தன. மேற்கு ஐரோப்பியத் தோழர்கள் இத்தகைய ''சோகமிக்க உதாரணங்கள்'' தம்மிடையே எழமுடியாதபடி உத்தரவாதம் செய்து கொண்டுவிட்டதாய்க் கற்பனை செய்து கொள்வார்களாயின், அது முழுக்க முழுக்க சிறுபிள்ளைத்தனமே ஆகும். இதனை நாம் எதிர்த்துப் போராடாமல் இருக்க முடியாது.

கட்டுப்பாட்டை மீறியதற்காக லெவீயை வெளியேற்ற வேண்டியதாயிற்று. 1921ஆம் ஆண்டு மார்ச் மாத நடவடிக்கையின்போது செய்யப்பட்ட தவறுகளை மிகவும் விவரமாய் விளக்கிக் கூறி அவற்றைச் சரிசெய்வதன் அடிப்படையில் போர்த்தந்திரத்தை நிர்ணயம் செய்தாக வேண்டியிருந்தது. இதன் பிறகும் லெவீ பழைய வழியிலேயே நடந்து கொள்ள விரும்பினால், தான் வெளியேற்றப்பட்டது நியாயமே என்பதைக் காட்டிக்கொள்பவரே ஆவார் அவர். பாவுல் லெவீ சம்பந்தமாய் மூன்றாவது காங்கிரஸ் எடுத்த முடிவுகள் முற்றிலும் சரிதான் என்பது ஊசலாடும் அல்லது சஞ்சலம் கொண்டுள்ள தொழிலாளர்களுக்கு மேலும் சக்திவாய்ந்த முறையில் சந்தேகத்துக்கு இடமின்றி திடமாய் நிரூபித்துக் காட்டப்படும்.

லெவீயின் தவறுகளை மதிப்பீடு செய்வதில் காங்கிரசில் எச்சரிக்கையுடன் அணுகிய நான், லெவீ தம்மைப்பற்றிய படுமோசமான நினைப்புகளை ஊர்ஜிதம் செய்வதில் முனைந்துவிட்டார் என்று இப்பொழுது மேலும் திடமான உறுதியுடன் கூற முடியும். அவருடைய Unser Weg சஞ்சிகையின் 6ஆவது இதழ் (1921 ஜூலை 15) என்முன்னே இருக்கிறது. மூன்றாவது காங்கிரசின் முடிவுகள் பாவுல் லெவீக்குத் தெரியும் என்பது இந்த சஞ்சிகையின் முகப்பில் அச்சிடப்பட்டிருக்கும் தலையங்கக் குறிப்பிலிருந்து தெளிவாய் விளங்குகிறது. இந்த முடிவுகளுக்கு அவருடைய பதில் என்ன? ''பெரிய சமய விலக்குக் கட்டளை'' (grosser Bann), ''திருச்சபைச் சட்டம்'' (kanonisches Recht) என்பன போன்ற மென்ஷிவிக் சொல் வீச்சுக்களும், ''முற்றிலும் சுதந்திரமாய்'' (in vollständiger Freiheit) இந்த முடிவுகளை ''விவாதிப்பேன்'' என்பதும் தான். கட்சி உறுப்பினர், கம்யூனிஸ்டு அகிலத்தின் உறுப்பினர் என்கிற பட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்டபின் ஒருவருக்கு இன்னும் பெரிய சுதந்திரம் என்ன இருக்க முடியும்!

கட்சி உறுப்பினர்கள் தனக்காக எழுதுவார்கள் என்று, பெயர் குறிப்பிடாது அநாமதேயமாய் லெவீக்காக எழுது வார்கள் என்று அவர் எதிர்பார்ப்பதைக் கவனியுங்கள்!

முதலில்—கட்சியைப் படுமோசமாய் ஏமாற்றுகிறார், பின்புறமாய் வந்து முதுகிலே குத்துகிறார், அதன் பணிகளைச் சீர்குலைக்கிறார்.

பிறகு—காங்கிரஸ் முடிவுகளின் சாராம்சத்தை விவாதிக் கிறார்.

மிக்கச் சிறப்பானதே.

இதைச் செய்வதன் மூலம் தன்னைத் தானே தீர்த்துக் கட்டிவிடுகிறார் லெவீ.

பாவுல் லெவீ தொடர்ந்து சண்டை போட விரும்புகிறார்.

அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவது பெரிய யுத்ததந்திரப் பிழையாகிவிடும். லெவீயுடனும் அவருடைய சஞ்சிகையுடனும் கட்சியின் தினசரிப் பத்திரிகையில் எல்லா வாக்குவாதத்துக்கும் தடை விதிக்க வேண்டுமென ஜெர்மன் தோழர்களுக்கு நான் ஆலோசனை கூற விரும்புகிறேன். அவ ருக்கு விளம்பரம் அளிக்கலாகாது. போராடும் கட்சியின் கவனத்தை அவர் முக்கிய விவகாரங்களிலிருந்து முக்கிய மல்லாதவற்றுக்குத் திசைதிருப்ப நாம் இடந் தரலாகாது. அத்தியாவசியச் சந்தர்ப்பங்கள் ஏற்படின், வாக்குவாதம் வார அல்லது மாத சஞ்சிகைகளிலோ, பிரசுரங்களிலோ நடத்தப்படலாம். K.A.P.க்களையும் பாவுல் லெவீயையும் பெயர் குறிப்பிட்டுப் பேசுகையில் அவர்களுக்கு உண்டாகும் மகிழ்ச்சி அவர்களுக்குக் கிட்டுவதற்கு இடந் தராதபடி கூடு மான வரை நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்; ''எப்படி யாவது தம்மைக் கம்யூனிஸ்டுகளாய்க் கருதிக்கொள்ள ஆசைப் படுவோராயினும் கெட்டிக்காரர்களெனச் சொல்ல முடி யாத சில விமர்சகர்கள்'' என்பதாகவே குறிப்பிட வேண்டும்.

மத்தியக் குழுவின் (Ausschuss) விரிவாக்கப்பட்ட கடந்த கூட்டத்தில் இடதுசாரியாளர் பிரீஸ்லண்டும்கூட மாஸ்லோவ் மீது கடுந் தாக்குதல் தொடுக்க வேண்டியதாயிற்று என்று கேள்விப்படுகிறேன். மாஸ்லோவ் இடதுசாரிவாத விளையாட் டில் ஈடுபட விரும்புகிறார், ''மையவாதிகளை'' வேட்டை யாடிப் பொழுதுபோக்க விரும்புகிறார். இந்த மாஸ்லோவ் நடந்து கொள்வது எவ்வளவு நியாயமற்றது (மிதமான



MARA PUBLIC L...
- 1935

முறையில் கூறுவதெனில்) என்பது இங்கே மாஸ்கோவிலுங் கூட தெரிய வந்தது. உண்மையில் இந்த மாஸ்லோவும் அவருடைய ஆதரவாளர்கள், கூட்டாளிகள் இரண்டு மூன்று பேரும்—''சமாதான ஒப்பந்தத்தை'' இவர்கள் அனுசரிக்க விரும்பவில்லை, புத்திசாலித்தனத்தைவிட ஆர்வமே அதிக முடையவர்கள் —ஓரிரண்டு ஆண்டுக்கு ஜெர்மன் கட்சியால் சோவியத் ருஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். நாங்கள் பயனுள்ள தக்க வேலையை அவர்களுக்குத் தேடித் தருவோம். அவர்களை முழு மனிதர்களாக்குவோம். சர்வதேச இயக்கத்துக்கும் ஜெர்மன் இயக்கத்துக்கும் நிச்சயம் அதனால் ஆதாயமே ஏற்படும்.

ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் எப்படியும் உள் பூசலுக்கு முடிவு கட்டியாக வேண்டும், இரு பக்கங்களிலும் இருக்கும் சண்டைக்காரர்களை நீக்கிவிட வேண்டும், பாவுல் லெவீயையும் K. A. P.க்களையும் மறந்துவிட்டு மெய்யான வேலைகளில் இறங்கியாக வேண்டும்.

செய்ய வேண்டிய வேலைகள் நிறைய உள்ளன.

---

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசினது போர்த்தந்திர, நிறுவன ஒழுங்கமைப்புத் தீர்மானங்கள் என்னுடைய கருத்துப்படி ஒரு பெரிய முன்னேற்றப் படியைக் குறிக்கின்றன. இரு தீர்மானங்களையும் மெய்யாகவே செயல் படுத்த எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். இது கடினமானதுதான், ஆனால் இதைச் செய்ய முடியும், செய்யவும் வேண்டும்.

முதலில் கம்யூனிஸ்டுகள் தமது கோட்பாடுகளை உலகுக்குப் பிரகடனப்படுத்த வேண்டியிருந்தது. முதலாவது காங்கிரசில் இது செய்யப்பட்டது. இது முதற் படி.

இரண்டாவது படி கம்யூனிஸ்டு அகிலத்துக்கு நிறுவன ஒழுங்கமைப்பு அளிப்பதும், அதில் சேர்வதற்கான நிபந்தனைகளை வகுத்திடுவதும். மையவாதிகளிடமிருந்து, தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் இருக்கும் முதலாளித்துவ வர்க்க நேரடி, மறைமுக ஏஜெண்டுகளிடமிருந்து மெய்யாகவே பிரிவதற்கு வழி செய்யும் நிபந்தனைகள் இவை. இரண்டாவது காங்கிரசில் இது செய்யப்பட்டது.

மூன்றுவது காங்கிரசில் செயல் வழியில் ஆக்கப் பணியைத் துவக்க வேண்டியிருந்தது, ஏற்கனவே ஆரம்பமாகிவிட்ட கம்யூனிசப் போராட்டத்தின் நடைமுறை அனுபவத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு போர்த்தந்திரம் குறித்தும் நிறுவன ஒழுங்கமைப்பு குறித்தும் மேற்கொண்டு செயல்படுவதற்குரிய கொள்கை வழி துல்லியமாய் என்ன என்பதை ஸ்தூலமாய் நிர்ணயிக்க வேண்டியிருந்தது. இந்த மூன்றுவது படிக்குரிய செயல்களை நாம் எடுத்திருக்கிறோம். உலகெங்கும் நமக்குக் கம்யூனிஸ்டுகளின் சேனை ஒன்று உள்ளது. இன்னமும் இது நல்லபடியாய்ப் பயிற்சி பெருமலும், நல்லபடியாய் நிறுவன ஒழுங்கமைப்பு பெருமலும்தான் இருக்கிறது. இந்த உண்மையை மறுப்பது, அல்லது இதை ஏற்க அஞ்சுவது மிகமிகத் தீங்கிழைப்பதாய் இருக்கும். மிகவும் உன்னிப்பான கடுமையான சோதனைக்கு நம்மை உட்படுத்தியும், நமது இயக்கத்தின் அனுபவத்தை ஆய்ந்தறிந்தும், நாம் இந்தச் சேனையைத் திறம்பட பயிற்றுவித்தாக வேண்டும்; இதை நாம் சரிவர ஒழுங்கமைத்தாக வேண்டும்; எல்லா விதமான மாற்றமைவுகளிலும், எல்லா விதமான போர்களிலும், தாக்குதலிலும் பின்வாங்குதலிலும் இதை நாம் சோதித்தாக வேண்டும். இந்த நீண்டநெடிய கடினமான பயிற்சி நெறியின்றி நாம் வெற்றி பெற முடியாது.

1921ஆம் ஆண்டு கோடையில் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் நிலைமையில் இருந்த ''அடிச்சிக்கல்'' என்னவெனில், கம்யூனிஸ்டு அகிலத்தின் மிகச் சிறந்த, மிகுந்த செல்வாக்கு படைத்த பிரிவுகளில் சில இந்தப் பணியினை போதிய அளவுக்குச் சரிவர உணர்ந்துகொள்ளவில்லை; ''மையவாதத்துக்கு எதிரான போராட்டத்தைச்'' சிறிதளவு அவை மிகைப்படுத்தின; இந்தப் போராட்டம் ஒரு விளையாட்டாய் மாறிப் புரட்சிகர மார்க்சியம் இழுக்குப்பட ஆரம்பிக்கும் எல்லைக் கோட்டை அவை கடந்து சிறிதளவு அப்பால் சென்றன.

இதுதான் மூன்றுவது காங்கிரசின் ''அடிச்சிக்கல்''.

இந்த மிகைப்பாடு சிறிதளவிலானதுதான், ஆயினும் அதிலிருந்து எழுந்த அபாயம் பிரம்மாண்டமானது. இதை எதிர்த்துப் போராடுவது கடினமாயிருந்தது. ஏனெனில் இப்படி மிகைப்படுத்தியவை மெய்யாகவே கம்யூனிஸ்டு அகிலத்

தின் மிகச் சிறந்த, மிகுந்த பற்றுறுதி கொண்ட கூறுகளாகும், இவையின்றி கம்யூனிஸ்டு அகிலம் உருவாவதே முடியாத காரியமெனச் சொல்லத் தக்கனவாகும். மாஸ்கோ[33] பத்திரிகையில் ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டு, ஜெர்மன், ஆஸ்திரிய, இத்தாலியப் பிரதிநிதிக் குழுக்கள் கையொப்பமிட்டிருந்த போர்த்தந்திரத் திருத்தப் பிரேரணைகளில் இந்த மிகைப்பாடு திட்டவட்டமாய்ப் புலப்பட்டது—ஏற்கனவே (நீண்ட சர்வாம்சத் தயாரிப்பு வேலைகளுக்குப் பிற்பாடு) இறுதி வடிவமளிக்கப்பட்டிருந்த நகல் தீர்மானத்துக்குப் பிரேரிக்கப்பட்ட திருத்தங்களாதலால் மிகவும் திட்டவட்டமாகவே புலப்பட்டது. இந்தத் திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டதன் மூலம் கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கை வழி நேர் ஒழுங்கு செய்யப்பட்டது. மிகைப்பாட்டின் அபாயத்தின் மீது பெற்ற ஒரு வெற்றியாய் இது அமைந்தது.

மிகைப்பாடு திருத்தப்படாவிடில் நிச்சயம் அது கம்யூனிஸ்டு அகிலத்தைச் சாகடித்துவிடும். ஏனெனில் ''உலகில் யாரும், தம்மைத் தாமே இழுக்குப்படுத்தி கொள்ளாமல் புரட்சிகர மார்க்சியவாதிகளை இழுக்குப்படுத்திவிட முடியாது''. இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்கள்மீது கம்யூனிஸ்டுகள் வெற்றி பெறுவதை (இருபதாம் நூற்றுண்டின் மேலைய ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முதலாவது ஏகாதிபத்திய யுத்தத்துக்குப் பிற்பாடு நிலவும் நிலைமைகளில் இது முதலாளித்துவ வர்க்கத்தின்மீதான வெற்றியைக் குறிப்பதாகும்) உலகில் யாராலும் தடுத்துவிட முடியாது, கம்யூனிஸ்டுகள் தாமே இதனைத் தடுத்துக் கொண்டால் ஒழிய.

மிகைப்பாடு, அது எவ்வளவுதான் சிறிதளவே ஆயினும், வெற்றியைத் தடுப்பதாகும்.

மையவாதத்துக்கு எதிரான போராட்டம் மிகைப்படுத்தப்படுவது மையவாதத்தைக் காப்பாற்றுவதாகும்; அதன் நிலையை, தொழிலாளர்கள்மீது அதற்குள்ள செல்வாக்கினைப் பலப்படுத்துவதாகும்.

இரண்டாவது, மூன்றுவது காங்கிரசுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நாம் சர்வதேச அளவில் மையவாதத்தை எதிர்த்து வெற்றிகரப் போராட்டம் நடத்தக் கற்றுக் கொண்டோம். உண்மைகள் இதனை நிரூபிக்கின்றன. தொடர்ந்து

நாம் இந்தப் போராட்டத்தினை (லெவீயையும் செராட்டிக் கட்சியையும் வெளியேற்றியது) இறுதி வரை நடத்திச் செல்கிறோம்.

ஆனால் மையவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் தவறான மிகைப்பாடுகளை எதிர்த்து சர்வதேச அளவில் போராட இன்னமும் கற்றுக் கொண்டாகவில்லை. எனினும் மூன்றாவது காங்கிரசின் போக்கினாலும் விளைவுகளாலும் நிருபிக்கப்பட்டிருப்பது போல இந்தக் குறைபாட்டை நாம் உணர்ந்து கொண்டுவிட்டோம். நம்முடைய குறைபாட்டினை நாம் உணர்ந்து கொண்டுவிட்ட காரணத்தால் நம்மிடமிருந்து இதை நாம் ஒழித்துக் கட்டிக் கொண்டுவிடுவோம்.

பிறகு வெல்லமுடியாத பலமுடையோராகிவிடுவோம். ஏனெனில் பாட்டாளி வர்க்கத்தினுள்ளிருந்து கிடைக்கும் ஆதரவு (இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களைச் சேர்ந்த முதலாளித்துவக் கையாட்களின் மூலமாய்க் கிடைப்பது) இல்லாமற் போய்விடுமாதலால் மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க முதலாளித்துவ வர்க்கத்தால் ஆட்சியதிகாரத்தைத் தம்மிடம் இருத்திக் கொள்ள முடியாமற் போய்விடும்.

மேலும் தீர்மானகரமான புதிய போர்களுக்கு, பாதுகாப்பு வழிப்பட்டவை, தாக்குதல் வழிப்பட்டவை ஆகிய இரு வகையிலுமான போர்களுக்கு, மேலும் உன்னிப்பாகவும் மேலும் தீர்க்கமாகவும் தயார் செய்தாக வேண்டும்—மூன்றாவது காங்கிரசின் முடிவுகளில் அடிப்படையானதும் முதன்மையானதும் இதுவே.

''...இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியானது செராட்டியச் சந்தர்ப்பவாதக் கொள்கையை எதிர்த்து விடாப்பிடியாகவும் முறையாகவும் போராடி, அதேபோதில் வேலைநிறுத்தங்களின்போதும் எதிர்ப்புரட்சி பாசிஸ்டு நிறுவனங்களுடனான போராட்டங்களின்போதும் தொழிற் சங்கங்களின் பாட்டாளி வர்க்க வெகுஜனங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள முடியும்போது, தொழிலாளி வர்க்க நிறுவனங்கள் அனைத்தின் இயக்கங்களை ஒன்றுசேர்க்கவும் தொழிலாளி வர்க்கத்தின் தன்மூப்பான கொந்தளிப்புகளைக் கவனமாய்த் தயாரிக்கப்பட்ட போர்களாய் மாற்றவும் முடியும்போது இத்தாலியில் கம்யூனிசம் வெகுஜன சக்தியாகிவிடும்...''

''ஜெர்மனியின் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி தனது போராட்ட கோஷங்களை எதிர்காலத்தில் உண்மையில் நில

வும் சூழ்நிலைக்கு மேலும் திறம்பட தகவமைத்துக் கொண்டு, சூழ்நிலையை அது மேலும் தீர்க்கமாய் ஆய்ந்தறிந்து, மேலும் ஒருமித்த கட்டுப்பாடான செயல்களை மேற்கொள்ளுமாயின் அதனால் மேலும் திறம்பட வெகுஜன நடவடிக்கை நடத்த முடியும்...''

மூன்றாவது காங்கிரசின் போர்த்தந்திரத் தீர்மானத்தில் மிகவும் முக்கியமான வாசகங்கள் இவை.

பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மையோரை நம் பக்கத்துக்கு வென்று கொள்ளுதல்—இதுவே ''தலைமையான பணி'' (போர்த்தந்திரத் தீர்மானத்தின் 3ஆவது விவரத்தின் தலைப்பு).

ஆனால் பெரும்பான்மையோரை வென்று கொள்வது என்பதற்கு இரண்டரையாவது அகிலத்தின் அற்பவாத ''ஜன நாயகத்தின்'' தீரர்களைப்போல சம்பிரதாய முறையில் நாம் அர்த்தப்படுத்திக் கொள்வதில்லைதான். ரோமில் 1921 ஜூலையில் பாட்டாளி வர்க்கம் அனைத்தும்—தொழிற் சங்கங்களைச் சேர்ந்த சீர்திருத்தவாதப் பாட்டாளி வர்க்கமும் செராட்டிக் கட்சியைச் சேர்ந்த மையவாதப் பாட்டாளிவர்க்கமும்—பாசிஸ்டுகளுக்கு எதிராய்க் கம்யூனிஸ்டுகளைப் பின்தொடர்ந்ததே, அதுதான் நம் பக்கத்துக்குத் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரை வென்று கொள்வது என்பது.

அது அவர்களைத் தீர்மானகரமாய் வென்று கொள்வதிலிருந்து நெடுந் தொலைவு, மிக நெடுந் தொலைவு ஆனதாகும்; அது அரைகுறையாகவே, நொடிப் பொழுதுக்கே, ஸ்தல வழியில் மட்டுமே நடந்தேறியதாகும். ஆயினும் அது பெரும்பான்மையோரை வென்று கொள்வதே ஆகும். பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மையோர் சம்பிரதாயமாய் முதலாளித்துவத் தலைவர்களை, அல்லது (இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் எல்லாத் தலைவர்களும் செய்வதுபோல) முதலாளித்துவக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தலைவர்களைப் பின்பற்றுவோராய் இருப்பினுங்கூட, அல்லது பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மையோர் ஊசலாடிய போதிலுங்கூட, இவ்வாறு வென்று கொள்வது சாத்தியமே. இப்படி வென்று கொள்வதானது உலகெங்கும் எல்லா வழிகளிலும் இடையறாது மேலோங்கி வருகிறது. இதற்கு நாம் மேலும் தீர்க்கமான, மேலும் உன்னிப்பான தயாரிப்புகள்

செய்வோமாக; முதலாளித்துவ வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தைப் போராட்டத்தில் இறங்குமாறு பலவந்தம் செய்யும் முக்கிய வாய்ப்பு எந்த ஒன்றையும் நாம் நழுவ விடாமல் இருப்போமாக; பாட்டாளி வர்க்க வெகுஜனங்கள் நம்முடன் சேர்ந்து எழுச்சியில் ஈடுபடாமல் இருக்கவொண்ணுத தருணத்தைப் பிழையின்றி நிர்ணயிக்கத் தெரிந்து கொள்வோமாக.

அப்பொழுது வெற்றி உறுதியாகிவிடும்; மாபெரும் நமது இயக்கத்தின் சில தோல்விகளும் இடைக் கட்டங்களும் எவ்வளவுதான் கடுமையாய் இருப்பினும், வெற்றி உறுதியாகி விடும்.

நமது போர்த்தந்திர, யுத்ததந்திர முறைகள் (சர்வதேச அளவில் இவற்றை எடுத்துக் கொள்வோமாயின்) முதலாளித்துவ வர்க்கத்தின் சிறந்த யுத்ததந்திரத்துக்கு இன்னமும் பிற்பட்டதாகவே இருக்கின்றன. முதலாளித்துவ வர்க்கம் ருஷ்ய உதாரணத்திலிருந்து கற்றறிந்து கொண்டுவிட்டது, ''எதிர்பாராத விதமான அதிர்ச்சி'' தனக்கு ஏற்பட இடந்தராது. ஆனுல் நம்முடைய சக்திகள் கூடுதலானவை, அளவு கடந்து கூடுதலானவை; போர்த்தந்திரமும் யுத்ததந்திரமும் நாம் கற்றுத் தெரிந்து கொள்கிறேம். 1921 மார்ச் மாத நடவடிக்கையின் தவறுகளின் அடிப்படையிலே நாம் இந்த ''விஞ்ஞானத்தை'' முன்னேறச் செய்திருக்கிறேம். இந்த ''விஞ்ஞானத்தில்'' முழு அளவில் பாண்டித்தியம் பெற்று விடுவோம்.

மிகப் பெருவாரியான நாடுகளில் நமது கட்சிகள் மெய்யான கம்யூனிஸ்டுக் கட்சிகளாய் இருக்க வேண்டியதிலிருந்து இன்னமும் நெடுந் தொலைவிலே இருக்கின்றன; மெய்யான புரட்சிகர, ஒரேயொரு புரட்சிகரக் கட்சியின் உண்மையான முன்னணிப் படைகளாய் இருப்பதிலிருந்து, ஒவ்வொரு உறுப்பினரும் வெகுஜனங்களுடைய போராட்டத்திலும் இயக்கத்திலும் அன்ருட வாழ்விலும் பங்கு கொள்ளும் நிலையிலிருந்து நெடுந் தொலைவிலே இருக்கின்றன. ஆனுல் நாம் இந்தக் குறைபாட்டை உணருகிறேம், கட்சிப் பணி குறித்த மூன்ருவது காங்கிரஸ் தீர்மானத்தில் இதை மிகவும் எடுப்பாய் வெளிப்படுத்தியிருக்கிறேம். இந்தக் குறைபாட்டினை நாம் சரிசெய்து கொண்டுவிடுவோம்.

தோழர்களே, ஜெர்மன் கம்யூனிஸ்டுகளே, ஆகஸ்டு 22ல் கூடப் போகும் உங்களுடைய கட்சிக் காங்கிரஸ் இடப்புறத்தும் வலப்புறத்தும் முறித்துச் சென்றுள்ளோருக்கு எதிரான அற்பமான போராட்டத்துக்கு உறுதியான முறையில் என்றைக்கும் முடிவான முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற எனது விருப்பத்தை வெளியிட்டு இக்கடிதத்தை முடித்துக் கொள்ள அனுமதியுங்கள். உட்கட்சிப் போராட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும்! நேரடியாகவோ மறைமுகமாகவோ அவற்றை இழுத்தடிக்க விரும்புவோர் ஒவ்வொருவரும் வீழ்க. நமது பணிகளை இன்று நாம் நேற்றைக் காட்டிலும் மேலும் தெளிவாகவும் ஸ்தூலமாகவும் தீர்க்கமாகவும் தெரிந்து கொண்டிருக்கிறோம். நமது தவறுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பகிரங்கமாய் அவற்றைச் சுட்டிக் காட்ட நாம் அஞ்சவில்லை. கட்சி நிறுவனத்தை மேம்படுத்துவதிலும், அதன் பணிகளின் தரத்தையும் உள்ளடக்கத்தையும் செம்மை செய்வதிலும், வெகுஜனங்களுடன் மேலும் நெருங்கிய தொடர்பு அமைத்துக் கொள்வதிலும், மென்மேலும் சரியான பிழையற்ற தொழிலாளி வர்க்கப் போர்த்தந்திரத்தையும் யுத்ததந்திரத்தையும் வகுத்திடுவதிலும் இப்பொழுது நாம் கட்சியின் முயற்சிகள் அனைத்தையும் ஈடுபடுத்துவோம்.

கம்யூனிஸ்டு வாழ்த்துக்களுடன்

*1921, ஆகஸ்டு 14* — நி. லெனின்

*Die Rote Fahne,*
*இதழ் 384ல்*
*1921 ஆகஸ்டு 22,*
*ஜெர்மன் மொழியில்*
*வெளிவந்தது*

*நூல் திரட்டு,*
*தொகுதி 44,*
*பக்கங்கள் 88-100*

கம்யூனிஸ்டு அகிலத்தின்
செயற் குழுவின் செய்தியறிக்கை
*இதழ் 3ல், 1921, அக்டோபர் 21,*
*ருஷ்யனில் வெளிவந்தது*

# போலந்துக் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம்

*19. 10. 1921*

அருமைத் தோழர்களே,

போலந்தில் கம்யூனிஸ்டு இயக்கம் வளர்வது குறித்து எங்கள் செய்தியேடுகளுக்கு வந்துசேரும் துண்டுத் துக்காணித் தகவல்களைக் கொண்டு பார்க்கையிலும், (இன்னும் அதிகமாய்) முக்கியமான போலந்துத் தோழர்கள் சிலரின் உரைகளைக் கொண்டு பார்க்கையிலும் போலந்தில் புரட்சி முற்றிக் கொண்டிருக்கிறது.

தொழிலாளர்களின் புரட்சி ஒன்று மூண்டு வருகிறது: போலந்து சோஷலிஸ்டுக் கட்சி[34](ருஷ்யாவில்—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் மென்ஷிவிக்குகளும்; ஐரோப்பாவில் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்கள்) அறவே தகர்ந்துள்ளது. தொழிற் சங்கங்கள் ஒன்றன்பின் ஒன்ருய்க் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து வருகின்றன. ஆர்ப்பாட்டங்கள் வளர்ந்து செல்லுதல் முதலானவை. நெருங்கிவிட்ட தவிர்க்க முடியாத நிதித் துறை தகர்வு. போலந்தில் நிலச் சீர்திருத்தம் குறித்து முதலாளித்துவ ஜனநாயகத்தின் (குட்டி பூர்ஷுவாக்களினதும் கூடத்தான்) பிரம்மாண்ட தோல்வி, முன்பே உறுதியாகிவிட்ட தவிர்க்க முடியாத ஒரு தோல்வி, கிராம மக்களில் பெரும்பான்மையோரை—விவசாயிகளின் ஏழைப் பகுதியோர் அனைவரையும்—கம்யூனிஸ்டுகளின் பக்கத்துக்கு நிச்சயமாய்த் தள்ளிவிடப் போகிற ஒரு தோல்வி.

நிதித் துறை தகர்வுடனும் ஆன்டான்ட் (பிரான்சும் பிற நாடுகளும்) மூலதனம் வெட்கமின்றி போலந்தில் அடித்து வரும் கொள்ளையுடனும் தேசிய, வல்லரசு பிரமைகள் நடைமுறையில் அம்பலமாகி வருகின்றன. இது வெகுஜனங்களுக்கு, சாதாரண தொழிலாளிக்கும், சாதாரண விவசாயிக்கும் எடுப்பான முறையில் தெளிவாகி இருக்கிறது.

அப்படியானால், போலந்தில் புரட்சி (சோவியத் புரட்சி) வெற்றி பெறுவது, சீக்கிரமே வெற்றி பெறுவது திண்ணம். நிலைமை இப்படி இருக்கையில் அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கமும் அகாலப் புரட்சியை இரத்தத்திலே மூழ்க்கடித்து நசுக்குவதன்மூலம் புரட்சியின் குரல்வளையை நெரித்துவிடாதபடி தடுத்தாக வேண்டும். நீங்கள் ஆத்திரமூட்டலுக்குப் பலியாகிவிடக் கூடாது. எழுச்சி அதன் உச்ச நிலைக்கு உயர்ந்தெழுவதற்காக நீங்கள் காத்திருக்க வேண்டும்: இது யாவற்றையும் அடித்துச் சென்று போய்விடும், கம்யூனிஸ்டுகளுக்கு வெற்றி கிடைக்கச் செய்யும்.

முதலாளித்துவ வர்க்கம் 100-300 பேரைக் கொலை புரியுமாயின் அதனால் இலட்சியம் பாழாகிவிடாது. ஆனால் அது ஆத்திரமூட்டிவிட்டு படுகொலை நடத்த முடிந்துவிட்டால், 10—30 ஆயிரம் தொழிலாளர்களைக் கொலை புரிய முடிந்துவிட்டால், அது புரட்சியைச் சில ஆண்டுகளுக்குங்கூட தாமதப்படுத்திவிடலாம்.

செய்முக்குத்* தேர்தல்கள் நடத்துவது அரசாங்கத்துக்கு முக்கியமாயிருந்தால், தொழிலாளர்களின் புரட்சியாலும் விவசாயிகளின் அதிருப்தியாலுமான அலையினால் செய்ம் வென்று கொள்ளப்பட முயற்சிகள் எடுத்தாக வேண்டும்.

ஆத்திரமூட்டலுக்குப் பணிந்து விடாதீர்கள்.

புரட்சியானது முழு அளவுக்கு வளர்ந்து பழுத்துக் கனியாகும்படி விட்டாக வேண்டும். போலந்தில் உள்ளிருந்தபடி சோவியத் ஆட்சியதிகாரம் வெற்றி பெறுவது பிரம்மாண்டமான சர்வதேச வெற்றியாய் இருக்கும். சோவியத் ஆட்சியதிகாரம், என்னுடைய கருத்துப்படி, இப்பொழுது 20-30 சதவீத அளவுக்கு சர்வதேச வெற்றி பெற்றுள்ளதெனில், போலந்தில் உள்ளிருந்தபடி சோவியத் ஆட்சியதிகாரம் வெற்றி பெற்றுவிட்டபின், நமக்குக் கம்யூனிஸ்டுப் புரட்சியின் 40-50 சதவீத அளவிலும், ஏன் ஒரு கால் 51 சதவீத அளவிலுங்கூட சர்வதேச வெற்றி கைவரப் பெற்றுவிடும். ஏனெனில் போலந்தானது ஜெர்மனியையும் செக்கோஸ்லோவாக்கியாவையும் ஹங்கேரியையும் ஒட்

---

* செய்ம் (Sejm) என்பது போலந்து பாராளுமன்றம். — பதிப்பாசிரியர்.

டினைற்போல் இருக்கிறது; சோவியத் போலந்தானது வெர்சேய் சமாதானத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டிருக்கும் ஆட்சி முறை அனைத்தையுமே குலைத்துவிடும்.

எனவே, அனைத்து உலகுக்கும் ஆற்ற வேண்டிய ஒரு பொறுப்பு போலந்துக் கம்யூனிஸ்டுகளுக்கு இருக்கிறது— தமது கப்பலின் சுக்கானை உறுதியாய் பிடித்து ஆத்திரமூட்டல்களில் தட்டுப்படாது ஓட்டிச் செல்வதே அந்தப் பொறுப்பு.

தாஷின்ஸ்கியும் அவர் கும்பலும் தாபாலைத் தாக்கி அடித்ததற்காகப் பதிலடி கொடுப்பது பயனுடையதுதானு? பதிலடி கொடுப்பதெனில், துப்பாக்கிச் சுடுதலோ காயப் படுத்தலோ இல்லாமல் அதே முறையில் தாஷின்ஸ்கியைத் தாக்கி அடிப்பதன் மூலமே நடைபெறுவதாய் இருக்க வேண்டும். இதன் விளைவாய் ஆணவம் பிடித்த ஓர் ஆள் தொழிலாளர்களிடமிருந்து படிப்பினை பெறுவதாகவும், 5—10 தொழிலாளர்கள் (சிறை அல்லது மரண தண்டனைக்கு) இலக்காகும் விலையைக் கொடுத்து தொழிலாளர்களுடைய வைராக்கிய உணர்வு ஓங்குவதாகவும் இருப்பின் இது பயனுடையதாய் இருக்கக்கூடும். ஆனல் பயனற்ற வீண் வேலையாகவும் இருக்கலாம்: நம்முடைய தாபால் மிருகத்தனமாய் அடிக்கப்பட்டார் என்பது விவசாயிகளிடையே கிளர்ச்சி நடத்துவதற்கு அதிகம் பயன்படுவதாய் இருக்காதா? தாஷின்ஸ்கிக்கு உதை கொடுப்பதைக் காட்டிலும் இது பிற்பட்ட விவசாயிகளுடைய அனுதாபத்தை நம் பக்கம் திரும்பச் செய்வதற்கு அதிக அளவு பயனுடையதாய் இருக்காதா? இதனை மேலும் கவனமாய்ச் சீர்தூக்கிப் பார்த்தாக வேண்டும்.

கம்யூனிஸ்டு வாழ்த்துக்களுடன்

லெனின்

*1962 ஏப்ரல் 22ல்*
*பிராவ்தா, இதழ் 112ல்*
*முதன்முதல் வெளிவந்தது*

நூல் திரட்டு,
தொகுதி 44,
பக்கங்கள் 180-81

# தற்போதும் சோஷலிசத்தின் முழுநிறை வெற்றிக்குப் பிற்பாடும் தங்கத்தின் முக்கியத்துவம்

மாபெரும் ஒரு புரட்சியின் ஆண்டுவிழா கொண்டாட, அதன் தீர்வு பெருத பிரச்சினைகளில் கவனத்தை ஒன்றுகுவிப்பதுதான் மிகச் சிறந்த வழி. அந்தப் புரட்சி இன்னமும் தீர்வு அளிக்காத அடிப்படை பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கும் ஒரு நேரத்தில், இந்தப் பிரச்சினைகளின் தீர்வுக்காக நாம் புதிய ஒன்றினை (அந்தப் புரட்சி இதுகாறும் சாதித்திருப்பதன் கண்ணேட்டத்தில்) கற்றுப் பாண்டித்தியம் பெற வேண்டியுள்ள ஒரு நேரத்தில், இப்புரட்சியை இந்த வழியில் கொண்டாடுவது மிக்கப் பொருத்தமாய் இருப்பதோடு, அவசியமும் ஆகும்.

பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ''சீர்திருத்தவாத வழியிலான'', படிப்படியான, எச்சரிக்கையான, சுற்றிவளைந்து செல்லும் போக்கு தேவைப் படுவதானது தற்போது நமது புரட்சிக்குப் புதிய ஒன்ருகும். இந்தப் ''புதுமையானது'' தத்துவம், நடைமுறை ஆகிய இரண்டிலும் பல கேள்விகளையும் திகைப்புகளையும் ஐயுறவுகளையும் எழச் செய்கிறது.

ஒரு தத்துவார்த்தப் பிரச்சினை ஒட்டுமொத்தமாய்ப் புரட்சி வெற்றிகரமாய் முன்னேறிக் கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் ஒரே துறையில் மிகமிகப் புரட்சிகரமான வரிசையான பல செயல்களிலிருந்து மிகமிகச் ''சீர்திருத்தவாத வழியிலான'' செயல்களுக்கு மாறிச் செல்ல வேண்டியிருப்பதற்கு எப்படி நாம் விளக்கம் கூறுவது? ''நிலைகளை விட்டுக் கொடுக்கிறேம்'', ''தோல்வியை ஒத்துக் கொள்கிறேம்'' அல்லது இதையொத்த ஒன்றினைக் குறிப்பதாய் இருக்குமோ இது? ஆம், அப்படித்தான் என்று கூறுகின்றனர் நமது பகை

வர்கள்—அரைப்பிரபுத்துவ வகைப்பட்ட பிற்போக்காளர் களிலிருந்து மென்ஷிவிக்குகள் அல்லது இரண்டரையாவது அகிலத்தின் ஏனைய வீரர்கள் வரையில். சாக்கு கிடைக்கும் தோறும், எந்தச் சாக்கும் இல்லாதபோதுங்கூட இது போல ஏதாவது கூச்சல் எழுப்பவில்லையானல் அவர்கள் பகைவர் களாய் இருக்கமாட்டார்களே. பிரபுத்துவப் பிற்போக்காளர் களிலிருந்து மென்ஷிவிக்குகள் வரையிலான எல்லாக் கட்சி களிடையிலும் இந்தப் பிரச்சினை குறித்து நிலவும் இதமான கருத்து ஒருமைப்பாடானது இந்த எல்லாக் கட்சிகளும் பாட் டாளி வர்க்கப் புரட்சிக்கு விரோதமான ''ஒரு பிற்போக்குத் திரளே'' (எங்கெல்ஸ் 1875, 1884ல் பெபெலுக்கு எழுதிய கடிதங்களில் முன்னறிந்து கூறியது போலவென இடைக் குறிப்பாய்ச் சொல்லலாம்)[35] என்பதற்கு மற்ருெரு சான்றே அன்றி வேறல்ல.

ஆனல் நண்பர்களிடத்தும் ''திகைப்பு''—எனலாமா— இருந்து வருகிறது.

பெருவீத இயந்திரத் தொழில் துறையைப் புனரமைத்து, அதன் பண்டங்கள் சிறு விவசாயியின் பயிர்த்தொழிலின் விளைபொருள்களுடன் நேரடியாய்ப் பரிவர்த்தனை யாவதற்கு ஏற்பாடு செய்து, இவ்வழியில் பின்னது சமுதாய உடைமையாவதற்கு உதவு; பெருவீதத் தொழில் துறையைப் புனரமைப்பதற்காக விவசாயிகளிட மிருந்து கொள்முதல் செய்வதன் மூலம் ஓரளவு உணவுப் பொருள்களும் மூலப் பொருள்களும் கடனுய் வாங்கிக் கொள் —இதுவே மூன்று ஆண்டுகளுக்கு மேலாய் 1921 வசந்தம் வரை யில் நாம் அனுசரித்த திட்டம் (அல்லது முறை, செயல் வழி). பிரச்சினையை இது புரட்சிகர வழியில் அணுகுவதாகும்— பழைய சமூக-பொருளாதார அமைப்பினை ஒரேயடியாய் அறவே நொறுக்கி அதற்குப் பதில் ஒரு புதிய அமைப்பை எழுப்பும் வழி இது.

*1921* வசந்தம் முதலாய் இந்த அணுகலுக்கு, திட்டத் துக்கு, முறைக்கு அல்லது செயல் வழிக்குப் பதிலாய் முற்றி லும் மாருன ஒரு முறையை, சீர்திருத்தவாத வகைப்பட்ட முறையை அனுசரித்து வந்திருக்கிருேம் (இன்னும் நாம் ''அனுசரித்துவிட''வில்லை, அனுசரித்துக் கொண்டிருக்கிருேம், இன்னும் இதனைப் பூரணமாய்ப் புரிந்து கொள்ளவில்லை):

பழைய சமூக-பொருளாதார அமைப்பை—வர்த்தகம், சிறு உற்பத்தி, தனியார் பண்ணை, முதலாளித்துவம் இவற்றை—நொறுக்குவதற்குப் பதிலாய் வர்த்தகத்தை, சிறு உற்பத்தியை, முதலாளித்துவத்தைப் புத்துயிர் பெறச் செய்து அதே போது விழிப்புடனும் படிப்படியாகவும் இவற்றின் மீது மேல் நிலை பெறுதல் அல்லது அவை புத்துயிர் பெறும் அளவுக்கு மட்டும் அவற்றை அரசின் ஒழுங்கியக்கத்துக்கு உட்படுத்த வகை செய்தல் என்னும் ஒரு முறையை அனுசரித்து வந்திருக்கிறோம்.

பிரச்சினையை முற்றிலும் புதியதொரு வழியில் அணுகுவதாகும் இது.

முந்தைய, புரட்சிகர முறையிலான அணுகலுடன் ஒப்பிடுகையில் இது சீர்திருத்தவாத முறையிலான அணுகலாகும் (புரட்சி என்பது பழைய அமைப்பினை அதன் அடிநிலைகளோடு நொறுங்கச் செய்யும் மாற்றமாகுமே அன்றி, கூடுமானவரை நொறுங்காதபடி பார்த்து எச்சரிக்கையாய், மெதுவாய், படிப்படியாய் அதைத் திருத்தியமைப்பதல்ல).

இங்கு எழும் கேள்வி இதுவே: புரட்சிகர முறைகளைக் கையாண்டு பார்த்து, அவை தோற்றுவிட்டதைக் கண்டு சீர்திருத்தவாத முறைகளை நீங்கள் அனுசரிப்பீர்களாயின், புரட்சி செய்தது பொதுவிலேயே தவறெனப் பிரகடனம் செய்கிறீர்கள் என்பதைத்தானே அது நிரூபிக்கிறது? நீங்கள் புரட்சியை ஆரம்பித்திருக்கக் கூடாது, சீர்திருத்தங்களைத் தொடங்கி அவற்றுக்குள்ளேயே உங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்பதை இது நிரூபிக்கவில்லையா?

இதுவே மென்ஷிவிக்குகளும் அவர்களையொத்த ஏனையோரும் வந்தடையும் முடிவு. ஆனால் இந்த முடிவு குதர்க்கவாதம் அல்லது தோல் தடித்துவிட்ட அரசியல்வாதிகள் புரியும் பித்தலாட்டமாகும், அல்லது அரசியல் கற்றுக்குட்டிகளின் சிறுபிள்ளைத்தனமாகும். புரட்சிகர முறைகள் ஏற்றவையாய், அவை வெற்றிகரமாய்க் கையாளத்தக்கனவாய் இருக்கும் வரம்புகளையும் நிலைமைகளையும் கவனியாது ஒதுக்கிவிடும் புரட்சிவாதத்தை மிகைப்படுத்துவதால் உண்டாகும் அபாயம்தான் மெய்யான புரட்சியாளருக்கு உண்டாகக் கூடிய மிகப் பெரிய—ஒரேயொரு என்றுகூடச் சொல்லலாம்—அபாயமாகும். உண்மையான புரட்சியாளர்கள் ''புரட்சி

யினைக்'' கொட்டை எழுத்திட்டு எழுதத் தொடங்கியதும், ''புரட்சியை'' ஏறத்தாழ தெய்வீகமான ஒன்றின் நிலைக்கு உயர்த்த முற்பட்டதும், நிதானம் தவற ஆரம்பித்ததும், எந்தத் தருணத்தில், எந்தச் சூழ்நிலைமைகளில், எந்தச் செயல் துறைகளில் புரட்சிகர வழியில் செயல்பட வேண்டு மென்பதையும் எந்தத்தருணத்தில், எந்தச்சூழ்நிலைமைகளில், எந்தச் செயல் துறைகளில் சீர்திருத்தவாதச் செயலில் இறங்கவேண்டுமென்பதையும் மிகமிக அமைதியாகவும் கொஞ்சமும் விருப்புவெறுப்பின்றியும் சிந்தித்துச் சீர்தூக்கி நிர்ணயிப்பதற்கான ஆற்றலை இழக்கத் தொடங்கியதும் பெரும்பாலும் அதோகதியாகியுள்ளனர். நிதானக் கண்ணோட்டத்தைத் துறந்து, ''மாபெரும், வெற்றிகர, உலகப்'' புரட்சி எல்லா நிலைமைகளிலுமே எல்லாச் செயல் துறைகளிலுமே எல்லாப் பிரச்சினைகளுக்கும் புரட்சிகர வழியிலேதான் தீர்வு காண முடியும் தீர்வு காணவும் வேண்டுமென்று நினைக்க முற்படும்போதுதான் மெய்யான புரட்சியாளர்கள் அழிந்துபடுவர் (வெளியிலிருந்து தோற்கடிக்கப்பட்டுவிடுவர் என்பதல்ல, அவர்களுடைய பணி உள்ளிருந்தே தகர்வுக்கு உள்ளாகி விடும்). அவர்கள் இதைச் செய்வார்களாயின் அவர்கள் அழிந்து படுவது உறுதி.

இத்தகைய கருத்துக்களை மண்டையில் ஏற்றிக் கொள்பவர் எவரும் அழிந்துபடுவார், ஏனெனில் அடிப்படையான ஒரு பிரச்சினை குறித்து அவர் அசட்டுக் கருத்துக்கள் கொண்டவர். கொடூரமான ஒரு யுத்தத்தில் (புரட்சியானது மிகமிகக் கொடூர வகைப்பட்ட யுத்தமே ஆகும்) அசட்டுத் தனத்துக்குத் தண்டனை தோல்விதான்.

''மாபெரும், வெற்றிகர, உலகப்'' புரட்சி புரட்சிகரமான முறைகளை மட்டும்தான் கையாள முடியும் கையாள வேண்டும் என்று கொள்வதற்கு ஆதாரம் உண்டா? எந்த ஆதாரமும் கிடையாது. இவ்வாறு கொள்வது முற்றிலும் போலியான முடிவே ஆகும். நாம் மார்க்சியத்திலிருந்து பிறழாது செல்வோமாயின் முற்றிலும் தத்துவார்த்த முதற்கோள்களைக் கொண்டு இதனை நிரூபித்துக் காட்டலாம். நமது புரட்சியின் அனுபவமும் இது போலியான முடிவே ஆகுமென்பதைத் தெளிவுபடுத்துகிறது. தத்துவார்த்தக் கண்ணோட்டத்திலிருந்து முட்டாள்தனமான காரியங்கள் ஏனைய

காலத்தில் செய்யப்படுவது போலவே புரட்சிக் காலத்திலும் செய்யப்படுகின்றன என்று எங்கெல்ஸ் கூறினர்,[36] அவர் கூறியது முழுக்கவும் சரியானதே. முட்டாள்தனமான காரியங்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவாய்ச் செய்ய முயல வேண்டும், செய்யப்பட்டவற்றை எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய்ச் சரிசெய்து கொண்டுவிட வேண்டும். எந்த ஒரு நேரத்திலும் எந்தப் பிரச்சினைகளுக்குப் புரட்சிகர முறைகளில் தீர்வு காண முடியும், எவற்றுக்கு முடியாது என்பதை நாம் கூடுமான அளவுக்கு நிதானமாய் மதிப்பிட்டாக வேண்டும். நமது நடைமுறை அனுபவத்தின் கண்ணோட்டத்திலிருந்து பிரேஸ்த் சமாதானம்[37] எவ்விதத்திலும் புரட்சிகரமல்லாத செயலுக்குரிய ஓர் உதாரணம். அது சீர்திருத்தவாதச் செயலாகும், இன்னுங் கூட மோசமானதாகும். ஏனெனில் அது பின்வாங்குதலாகும், ஆனல் சீர்திருத்தவாதச் செயலானது பொதுவாய் மெள்ள மெள்ள, எச்சரிக்கையோடு, படிப்படியாய் முன்னேறுகிறதே அன்றி பின்னேக்கிச் செல்வதில்லை. பிரெஸ்த் சமாதானம் செய்து கொண்டதில் நம்முடைய போர்த்தந்திரம் பிழையற்றதாகும் என்பது முழுநிறைவாகவும் எல்லோருக்கும் விளங்கும்படியும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளபடும்படியும் நிரூபிக்கப்பட்டுவிட்டதால், இது குறித்து மேலும் கூறத் தேவையில்லை.

நமது புரட்சி அதன் முதலாளித்துவ-ஜனநாயகப் பணிகளை மட்டும்தான் செய்து முடித்திருக்கிறது. இது குறித்துப் பெருமிதம் கொள்ள நமக்கு முழு உரிமை உண்டு. அதன் பணிகளின் பாட்டாளி வர்க்க அல்லது சோஷலிசப் பகுதியினை மூன்று பிரதானக் கூறுகளில் சுருக்கமாய்த் தொகுத்துக் கூறலாம்: (1) ஏகாதிபத்திய உலக யுத்தத்திலிருந்து புரட்சிகரமாய் வெளியேறுதல்; முதலாளித்துவக் கொள்ளைவெறியர்களின் இரு உலகக் கோஷ்டிகளும் ஏற்பாடு செய்திருக்கும் கொலைத்தாண்டவத்தை அம்பலப்படுத்துவதும் நிறுத்துவதும் —நம் தரப்பைப் பொறுத்தவரை இப்பணி பூரணமாய்ச் செய்யப்பட்டுவிட்டது; முன்னேறிய நாடுகள் பலவற்றிலும் புரட்சி ஏற்பட்டிருந்தால் இப்பணி அதன் எல்லாக் கூறுகளிலும் செய்து முடிக்கப்பட்டிருக்கலாம். (2) பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குரிய ஒரு வடிவமாய் சோவியத் அமைப்பினை நிறுவுதல்.

சகாப்தகர முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முதலாளித்துவ-ஜனநாயகப் பாராளுமன்ற முறையின் சகாப்தம் முடிவடைந்துவிட்டது. உலக வரலாற்றிலே ஒரு புதிய அத்தியாயம்—பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரச் சகாப்தம்—ஆரம்பமாகியுள்ளது. சோவியத் அமைப்பும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் எல்லா வடிவங்களும் பல நாடுகளின் முயற்சிகளால்தான் முத்தாய்ப்பு அளிக்கப்பட்டு நிறைவு செய்யப்படும். இத்துறையில் இன்னும் நாம் செய்யாதிருப்பவை மிக மிகப் பலவும் உள்ளன. இதைப் பார்க்கத் தவறுவது மன்னிக்க முடியாததாகும். மீண்டும் மீண்டும் நாம் இப்பணியைச் செம்மை செய்துச் செல்ல வேண்டியிருக்கும், திரும்பிச் செய்ய வேண்டியிருக்கும், தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கும். நமது உற்பத்தி சக்திகளையும் நமது கலாசாரத்தையும் வளர்த்திடுவதில் முன்னேக்கியும் மேல்நோக்கியும் நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையுடனும் கூடவே நமது சோவியத் அமைப்பை மேம்படுத்துவதற்கும் மாற்றுவதற்குமான பணிகளும் நடைபெற்றாக வேண்டும்—பொருளாதாரம், கலாசாரம் இவற்றின் அளவுநிலையில் இன்னமும் நாம் கீழ்மட்டத்தில்தான் இருக்கிறோம். மிகுதியான பலவும் மாற்றப்பட்டாக வேண்டும், இது குறித்து ''கூச்சப்படுவது'' அபத்தமும் (இன்னுங்கூட மோசமானதும்) ஆகும். (3) சோஷலிச அமைப்புக்கான பொருளாதார அடித்தளம் படைப்பிக்கப்பட்டாக வேண்டும்; இந்தத் துறையில் மிகவும் முக்கியமானதன், மிகவும் அடிப்படையானதன் பிரதான கூறுகள் இன்னும் பூர்த்தி செய்யப்பட்டாகவில்லை. இவற்றைச் செய்வதே நமக்குரிய பிழையற்ற பணி—கோட்பாட்டின் கண்ணேட்டத்திலும், நடைமுறைக் கண்ணேட்டத்திலும், இன்றைய ருஷ்ய சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசின் கண்ணேட்டத்திலும், சர்வதேசக் கண்ணேட்டத்திலும் பிழையற்றதாகும்.

இந்தப் பணியின் பிரதான கூறுகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லையாதலால், நமது கவனம் அனைத்தையும் இவற்றில் ஒன்றுகுவித்தாக வேண்டும். இங்குள்ள இடர், மாறிச் செல்வதற்குரிய வடிவம் சம்பந்தப்பட்டதாகும்.

*1918* ஏப்ரலில் **சோவியத் அதிகாரத்தின் உடனடிப் பணிகள்** என்பதில் நான் எழுதினேன்:

''பொதுவில் ஒரு புரட்சியாளராக, சோஷலிச ஆதரவாளராக அல்லது கம்யூனிஸ்டாக இருந்துவிட்டால் போதாது. அந்தந்த தருணத்திலும் சங்கிலி அனைத்தையும் பிடித்துக் கொள்ளும் பொருட்டு சங்கிலியில் குறிப்பிட்ட எந்தக் கரணையை உங்கள் சக்தி முழுவதையும் கொண்டு பற்றிக் கொள்ள வேண்டுமென்பதைக் கண்டு கொள்ளவும் அடுத்த கரணைக்கு மாறிச் செல்வதற்காக உறுதியுடன் தயார் செய்யவும் நீங்கள் ஆற்றலுடையோராய் இருத்தல் வேண்டும். கரணைகளின் வரிசைக் கிரமம், அவற்றின் வடிவம், அவை சேர்ந்து இணைந்திருக்கும் விதம், வரலாற்று நிகழ்ச்சிகளது சங்கிலியில் ஒன்றுக்கொன்று அவற்றுக்குள்ள வேறுபாடு இவை யெல்லாம் கொல்லுப் பட்டறையாளர் செய்யும் சாதாரண சங்கிலியில் இருப்பது போல அவ்வளவு எளிதாகவும் பொருளற்றதாகவும் இருக்கவில்லை.''*

நாம் பரிசீலிக்கும் செயல் அரங்கில் தற்போது இந்தக் கரணை, தக்கபடியான அரசு ஒழுங்கு முறையின் (நெறிமுறையின்) கீழ் உள்நாட்டு வர்த்தகத்தைப் புத்துயிர் பெற்றெழச் செய்வதே ஆகும். வரலாற்று நிகழ்ச்சிகளது சங்கிலியில், 1921-22ல் நமது சோஷலிசக் கட்டுமானத்தின் இடைக்கால வடிவங்களில், வர்த்தகம்தான் பாட்டாளி வர்க்க அதிகாரமான நாம், ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சியான நாம், ''நமது சக்தி முழுவதையும் கொண்டும் பற்றிக் கொள்ள வேண்டிய'' ''கரணையாகும்''. இப்பொழுது நாம் போதிய அளவு உறுதியுடன் இந்தக் கரணையைப் ''பற்றிக் கொள்வோம்'' ஆயின், மிக அருகாமையிலான வருங் காலத்தில் சங்கிலி அனைத்தின்மீதும் நிச்சயமாய் நாம் கட்டுப்பாடு செலுத்துவோம். பற்றிக் கொள்ளாவிடில், சங்கிலி அனைத்தின்மீதும் நாம் கட்டுப்பாடு செலுத்தப் போவதில்லை, சோஷலிச சமூக-பொருளாதார உறவுகளுக்கான அடித்தளத்தைப் படைப்பிக்கப் போவதுமில்லை.

கம்யூனிசமும் வர்த்தகமுமா?! விநோதமாய்த்தான் தோன்றுகிறது. இரண்டும் தொடர்பில்லாதனவாய், ஒவ்வாதனவாய், துருவங்களைப்போல விலகி நிற்பனவாய்த் தோன்று

---

* பார்க்கவும்: லெனின், நூல் திரட்டு, தொகுதி 36, பக்கம் 205.—பதிப்பாசிரியர்.

கின்றன. ஆனால் பொருளியலின் கண்ணோட்டத்திலிருந்து நாம் ஆராய்வோமாயின், கம்யூனிசமானது சிறு-விவசாயியின் தந்தைவழி மரபிலான பயிர்த்தொழிலிலிருந்து இருப்பதைக் காட்டிலும் அதிகமாய் இவை இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று விலகியிருக்கவில்லை என்பதைக் காண்போம்.

உலக அளவில் நாம் வெற்றி ஈட்டியதும் தங்கத்தை உலகின் மிகப் பெரிய நகரங்கள் சிலவற்றின் தெருக்களில் பொதுக் கக்கூசுகள் கட்டுவதற்காக உபயோகிப்போம் என்று நினைக்கிறேன். ''சுதந்திரத்துக்கான மகத்தான யுத்தம்'' என்பதாய் 1914-18ல் நடைபெற்ற யுத்தத்தில், எந்த சமாதானம் மோசமானது—பிரெஸ்த் சமாதானமா, வெர்சேய் சமாதானமா என்கிற பெரும் பிரச்சினையைத் தீர்மானிப்பதற்காக நடைபெற்ற அந்த யுத்தத்தில், தங்கத்துக்காக வேண்டி எப்படி ஒரு கோடிப் பேர் கொல்லப்பட்டனர், மூன்று கோடிப் பேர் முடமாக்கப்பட்டனர் என்பதை மறந்து விடாத தலைமுறைகளுக்கும், எப்படி இதேபோலத் தங்கத்துக்காக வேண்டி உதாரணமாய் 1925லோ, 1928லோ உதாரணமாய் ஜப்பானுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்குமோ பிரிட்டனுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்குமோ இதையொத்த இரு நாடுகளுக்குமோ நடக்கக் கூடிய யுத்தத்தில் இரண்டு கோடிப் பேரைக் கொல்லவும் ஆறு கோடிப் பேரை முடமாக்கவும் நிச்சயமாய்த் திட்டமிடுகிறார்கள் என்பதைக் காண்போருக்கும் அனுகூலமாய்த் தங்கத்தை உபயோகிப்பதற்கான ''நேர்மை மிக்க'' முறையாகவும் கல்வி போதமளிக்கும் முறையாகவும் இருக்கும்.

ஆனால் தங்கத்தை இந்தக் காரியத்துக்காக உபயோகிப்பது எவ்வளவு ''நேர்மை மிக்கதாயும்'' பயனுள்ளதாயும் அல்லது மனிதாபிமானம் கொண்டதாயும் இருப்பினும், இந்த நிலையை வந்தடையும் பொருட்டு நாம் இன்னும் பத்து, இருபது ஆண்டுகளுக்கு 1917-21ஆம் ஆண்டுகளின் கட்டத்தில் செய்தது போலவே அதே கடுமையுடனும் அதே அளவு வெற்றியுடனும் மேலும் மிக விரிவான துறையிலே பாடுபட்டாக வேண்டுமெனக் கூறுகிறோம். இதற்கிடையில் ருஷ்ய சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசில் நாம் தங்கத்தை மீத்துச் சேமிக்கவும், மிக உயர்ந்த விலைக்கு விற்கவும், அதைக் கொண்டு மிகக் குறைந்த விலைக்குப் பண்டங்கள்

வாங்கவும் வேண்டும். ஓநாய்களிடையே வாழும்போது ஓநாயைப் போல ஊளையிடத்தான் வேண்டும், எல்லா ஓநாய்களையும் ஒழித்துக் கட்டுவதைப் பொறுத்த மட்டில்—அறிவு வழிப்பட்ட மனித சமுதாயத்தில் இவற்றை ஒழித்துக் கட்டத்தான் வேண்டும்—''பெருமைப் பேச்சுக்கு நேரம் போருக்குப் பிற்பாடே அன்றி முன்னதாய் அல்ல'' என்கிற அறிவார்ந்த ருஷ்ய முதுமொழியின் பிரகாரம் நடந்து கொள்வோம்.

கோடிக் கணக்கான சிறு விவசாயிகளுக்கும் பெருவீதத் தொழில் துறைக்கும் இடையில் வர்த்தகம்தான் சாத்திய மான ஒரேயொரு பொருளாதார இணைப்பு—இந்த விவசாயி களுடன் கூடவே சிறந்த சாதனங்களையும் மின்விசைக் கம்பி வழிகளது வலைப்பின்னல் அமைப்பையும் கொண்ட பெரு வீத இயந்திரத் தொழில் துறை இல்லையேல், சிறு விவசாயி களுக்குச் சிறந்த பண்டங்களை முன்னிலும் கூடுதலான அளவு களிலும் மேலும் சீக்கிரமாகவும் மலிவாகவும் வழங்கும் திறன் பெறுவதற்குப் போதுமான தொழில்நுட்ப சாதனங் களும் ஒழுங்கமைப்பு ''மேற்கட்டுமானங்களும்'' பிற கூறு களும் கொண்ட தொழில் துறை இல்லையேல்... வர்த்தகம் தான் சாத்தியமான ஒரேயொரு பொருளாதார இணைப்பு. உலக அளவில் இந்த ''இல்லையேல்'' என்னும் நிபந்தனை ஏற்கனவே சாதிக்கப் பெற்றுவிட்டது, இந்த நிபந்தனை ஏற்கனவே இருப்பதாகி விட்டது, ஆனால் முன்பெல்லாம் மிகவும் பிற் பட்ட முதலாளித்துவ நாடுகளில் ஒன்றாய் இருந்த நாடு தொழில் துறைக்கும் விவசாயத்துக்கும் இடையே அனே கமாய்ப் புத்தம்புதிய இணைப்புகளைத் தனித்து நின்று நேரடி யாய் ஒரே அடியில் தோற்றுவிக்கவும் பயன்படுத்தவும் ஒழுங் கமைக்கவும் முயற்சி செய்தது; ''நேரடித் தாக்குதல்'' மூலம் இந்தப் பணியை நிறைவேற்றத் தவறிவிட்டது; இப்பொ ழுது அது மெதுவான, படிப்படியான, எச்சரிக்கையுடனான ''முற்றுகை'' நடவடிக்கைகள் பலவற்றின் மூலம் இப் பணியை நிறைவேற்ற முயற்சி செய்தாக வேண்டும்.

பாட்டாளி வர்க்க அரசாட்சி வர்த்தகத்தைக் கட்டுப் பாடு செய்து அதனை நெறிப்படுத்திக் குறிப்பிட்ட வழிகளிலே செலுத்தி, குறிப்பிட்ட வரம்புகளுக்குள் அதைச் செயல்பட வைக்க முடியும். ஒரு சிறு, மிகச் சிறிய ஓர் உதாரணம் தரு

கிறேன். தோனெத்ஸ் நிலக்கரிப் பிரதேசத்தில் பொருளாதாரம் சிறிதளவு, இன்னமும் மிகச் சிறிதளவே ஆன, ஆனல் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி புத்துயிர் பெற்றிருக்கிறது. இதற்கு, பெரிய அரசாங்கச் சுரங்கங்களில் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட உயர்வு ஓரளவும், விவசாயிகளின் சிறிய சுரங்கங்கள் குத்தகைக்கு விடப்பட்டது ஓரளவும் காரணமாகும். இதன் விளைவாய்ப் பாட்டாளிவர்க்க-அரசாங்கத்துக்குக் கூடுதலாய்ச் சிறிதளவு (முன்னேறிய நாடுகளில் கிடைப்பதுடன் ஒப்பிட்டால் அற்ப சொற்ப அளவே என்றாலும் வறுமை வாய்ப்பட்ட நமது நிலைமையைக் கருதும்போது குறிப்பிடத்தக்க அளவிலான) நிலக்கரி கிடைத்து வருகிறது. இதன் அடக்க விலை 100 என்பதாய் வைத்துக் கொள்வோம். இந்த நிலக்கரியை அது பல்வேறு அரசாங்க இலாகாக்களுக்கு 120 என்கிற விலைக்கும், தனி நபர்களுக்கு 140 என்கிற விலைக்கும் விற்று வருவதாய்க் கொள்வோம். (நான் தரும் புள்ளிகள் முற்றிலும் கற்பிதமானவை என்பதை இடைக் குறிப்பாய் இங்கு கூற வேண்டும், ஏனெனில் முதலாவதாக, சரியான விலைகள் எனக்குத் தெரியாது; இரண்டாவதாக, தெரிந்தாலுங்கூட இப்பொழுது அவற்றை நான் பகிரங்கப் படுத்த மாட்டேன்.) மிகவும் மிதமான அளவுகளில்தான் என்றாலும் தொடங்கிவிட்டோம் என்பதாய் இதிலிருந்து தெரிகிறது: தொழில் துறைக்கும் விவசாயத்துக்கும் இடையே பரிவர்த்தனையைக் கட்டுப்பாடு செய்ய, மொத்த வர்த்தகத்தைக் கட்டுப்பாடு செய்ய, இருக்கக் கூடிய சிறிய, பிற்பட்ட தொழில் துறையை அல்லது பலவீனமுற்றுவிட்ட பாழ்பட்ட நிலையிலுள்ள பெருவீதத் தொழில் துறையை நிர்வகிக்கும் பணியைச் சமாளிக்கத் தொடங்கிவிட்டோம் என்பதாய்த் தெரிகிறது; தற்போதைய பொருளாதார அடிப்படையில் வர்த்தகத்துக்குப் புத்துயிரூட்டவும், சாதாரண நடுத்தர விவசாயியை (அதாவது வகை மாதிரியாய்க் கொள்ளத்தக்க விவசாயியை, பெருந் திரளுக்கு உதாரணமான, பெருந் திரளானோரின் மனப்பாங்குக்கு மெய்யான பிரதிநிதியான விவசாயியை) பொருளாதாரம் புத்துயிர் பெறுவதன் அனுகூலத்தை உணரும்படிச் செய்யவும், மேலும் முறையாகவும் விடாப்பிடியாகவும் மேலும் விரிவாகவும் வெற்றிகரமாகவும் பெருவீதத் தொழில் துறையைப் புனரமைப்பதற்காக இதைப்

பயன்படுத்திக் கொள்ளவும் தொடங்கிவிட்டோம் என்பதாய்த் தெரிகிறது.

வர்த்தகத்தின்பால் பரம அலட்சியப் போக்கு கொண்ட ''உணர்ச்சி வயப்பட்ட சோஷலிசத்துக்கோ'', பழைய ருஷ்ய, பகுதியளவு பிரபுக்குலத்து, பகுதியளவு நாட்டுப்புறத்து, தந்தைவழிச் சமூகத்து மனப்பான்மைக்கோ நாம் சரணடையப் போவதில்லை. இடைக்காலப் பொருளாதார வடிவங்கள் யாவற்றையும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும், இது அவசியமென்பதால் பயன்படுத்தக் கற்றுக் கொண்டாக வேண்டும். விவசாயிகளுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான இணைப்பை வலிமையாக்கும் பொருட்டு, நாசமாகிவிட்ட அவதிக்குள்ளான நமது நாட்டின் பொருளாதாரத்தை உடனடியாக உயிர் பெற்றெழச் செய்யும் பொருட்டு, தொழில் துறையை மேம்படுத்தும் பொருட்டு, மின்னுக்கம் செய்வது போன்ற வருங்காலத்துக்குரிய மிகவும் விரிவான ஆழ்நிலை செயற்பாட்டுக்குரிய நடவடிக்கைகளுக்குப் பாதையைச் செப்பனிடும் பொருட்டு இவை யாவற்றையும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும், பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

புரட்சியின்பால் சீர்திருத்தங்களுக்குள்ள உறவினை மார்க்சியம் ஒன்றுல் மட்டுமே துல்லியமாகவும் பிழையின்றியும் வரையறுக்க முடிந்துள்ளது. அதே போதில் மார்க்ஸ் இந்த உறவை ஒரு கோணத்தில் மட்டுமிருந்துதான்—ஒரே நாட்டில்தான் என்றுலும் பாட்டாளி வர்க்கத்தின் ஓரளவுக்கு நிரந்தரமான நீடித்து நிலவும் முதலாவது வெற்றிக்கு முற்பட்டதான நிலைமைகளில் மட்டும்தான்—கண்ணுற முடிந்தது. இந்த நிலைமைகளில், பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்தின் இடைவிளைவே சீர்திருத்தங்கள் என்பதுதான் சரியான உறவுக்குரிய அடிப்படையாய் இருந்தது. முதலாளித்துவ உலகு முழுவதிலும் இந்த உறவுதான் பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரப் போர்த்தந்திரத்தின் அடிப்படையாகும், இரண்டாவது அகிலத்தின் ஊழல் மலிந்த தலைவர்களும் இரண்டரையாவது அகிலத்தின் போலிப் புலமையும் பொய் மினுக்கும் கொண்ட தீரர்களும் திரித்துப் புரட்டியும் மூடிமறைத்தும் வரும் அரிச்சுவடிப் பாடமாகும். பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு—ஒரே

யொரு நாட்டில்தான் என்ற போதிலும்—புரட்சியின் பால் பிற்பாடு சீர்திருத்தங்களுக்குள்ள உறவினில் புதியதொன்று இடம் பெறுகிறது. கோட்பாட்டினில் அது முன்பு போலவே தான் இருக்கிறது, ஆனால் வடிவத்தில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது—மார்க்சினாலுங்கூட முன்னறிந்து கொள்ள முடியாத மாற்றம். ஆயினும் மார்க்சியத்தினுடைய தத்துவவியலின், அரசியலின் அடிப்படையிலேதான் இதைப் புரிந்து கொள்ள முடியும். பிரெஸ்த் பின்வாங்குதலை நம்மால் வெற்றிகரமாய் நடத்த முடிந்தது ஏன்? ஏனென்றால், பின்வாங்குவதற்கு இடமிருக்கும்படி அந்த அளவுக்கு நாம் முன்னேறிச் சென்றிருந்தோம். அப்படித் தலைதெறிக்கும் வேகத்தில், ஒருசில வாரங்களுக்குள், 1917 ஆக்டோபர் 25லிருந்து பிரெஸ்த் சமாதானத்துக்குள், நாம் சோவியத் அரசைக் கட்டியெழுப்பினோம், ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து புரட்சிகர முறையில் வெளியேறினோம், முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை நிறைவுறச் செய்தோம்; ஆகவே பின்னோக்கி அமைந்த அந்தப்பெரிய நடையும்கூட (பிரெஸ்த் சமாதானம்) நாம் இந்த ''இடை ஓய்வைப்'' பயன்படுத்திக் கொள்ளவும் கோல்ச்சக்கையும் தெனீக்கினையும் யுதேனிச்சையும் பில்சூட்ஸ்கியையும் விராங்கெலையும் எதிர்த்து வெற்றிகரமாய் முன்னேறிச் செல்லவும் நமக்குப் போதுமான இடம் விட்டுவைத்தது.

பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு முன்பு சீர்திருத்தங்கள் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் இடைவிளைவாய் இருக்கின்றன. வெற்றிக்குப் பிற்பாடு (சர்வதேச அளவில் இன்னமும் ''இடைவிளைவாகவே'' இருப்பினும்) வெற்றி ஈட்டப் பெற்ற நாட்டுக்கு, மூச்சு விடுவதற்கான அவசியமும் நியாயமுமான சிறிது நேர இடைவெளியாக அமைகிறது; மிகவும் கடுமையாய்ப் பிரயாசையில் ஈடுபட்டிருந்ததைத் தொடர்ந்து இப்பொழுது ஏதேனும் சில மாற்றமைவுகளைப் புரட்சிகர வழியில் சாதிக்க போதுமான பலம் இல்லை என்பது தெளிவாகிறது. வெற்றியானது பலவந்தப் பின்வாங்குதலிலுங்கூட உறுதியுடன் நிற்க, பொருளாயத வழியிலும் ஆன்மீக வழியிலும் உறுதியுடன் நிற்க ''உள்ளார்ந்த பலத்தைப்'' படைக்கிறது. பொருளாயத வழியில் உறுதியுடன் நிற்பதென்பதற்கு, படு தோல்வி அளித்துவிடாதபடி பகைவனைத் தடுப்

பதற்குப் போதுமான அளவுக்குப் பலத்தில் மேல்நிலையைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என்று அர்த்தம். ஆன்மீக வழியில் உறுதியுடன் நிற்பதென்பதற்கு, நாம் மனந் தளர்ந்துவிடவும் ஒழுங்கு குலைந்துவிடவும் இடந் தராதிருத்தல், நிலைமையைப் பற்றிய நிதானம் தவறாதிருத்தல், உத்வேகத்தையும் மன உறுதியையும் பாதுகாத்து, நெடுந் தொலைவு—ஆனால் அளவு மீறாமலும், தக்க தருணத்தில் பின்வாங்குதலை நிறுத்தித் தாக்குதலுக்குத் திரும்பும்படியும்—பின்வாங்க முடியும் படியாய் இருத்தல் என்று அர்த்தம்.

நாம் அரசு முதலாளித்துவத்துக்குப் பின்வாங்கினோம், ஆனால் அளவு மீறி நெடுந் தொலைவு பின்வாங்கவில்லை. இப்பொழுது வர்த்தகத்தில் அரசாங்க ஒழுங்கியக்கத்துக்கு நாம் பின்வாங்கிச் செல்கிறோம், ஆனால் அளவுமீறிப் பின்வாங்கிவிடப் போவதில்லை. இந்தப் பின்வாங்குதல் முடிவுறும் நிலைக்கு வருகிறது என்பதற்குக் கண்கூடான அறிகுறிகள் தெரிகின்றன. அதிக தொலைவிலில்லாத வருங்காலத்தில் நாம் இந்தப் பின்வாங்குதலை நிறுத்திவிட முடியும் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. அவசியமாயுள்ள இந்தப் பின்வாங்குதலை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு உணர்வு பூர்வமாகவும் ஒருமனதாகவும் தப்பெண்ணங்களிலிருந்து விடுபட்டும் செய்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு இதை நாம் சீக்கிரமாகவே நிறுத்த முடியும்; அவ்வளவுக்கு அவ்வளவு இதனை அடுத்து நமது வெற்றிகர முன்னேற்றம் நிலையானதாகவும் வேகமுடையதாகவும் விரிவானதாகவும் இருக்கும்.

***1921 நவம்பர் 5***

நூல் திரட்டு,<br>தொகுதி 44,<br>பக்கங்கள் 221-29

பிராவ்தா, இதழ் 251,<br>1921 நவம்பர் 6-7

ஒப்பம்: நி. லெனின்

# பதிப்பாளர் குறிப்புகள்

1 மென்ஷிவிக்குகள்—ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதப் போக்கினர். மென்ஷிவிக்குகள் (சிறுபான்மையோர்) என்ற பெயரை அவர்கள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (1903) பெற்றனர். இந்தக் காங்கிரசின் இறுதியில் கட்சியின் மத்திய அமைபபுகளுக்காக நடைபெற்ற தேர்தலில் இவர்கள் காங்கிரஸ் பிரதிநிதிகளிடமிருந்து சிறுபான்மை வாக்குகளையே பெற்றனர். லெனின் தலைமையில் அமைந்த புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றனர். இவர்கள் போல்ஷிவிக்குகள் (பெரும்பான்மையோர்) என்று அழைக்கப்படலாயினர். 1905-1907ஆம் ஆண்டுகளின் புரட்சியின்போது மென்ஷிவிக்குகள் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயி வெகுஜனங்களுக்கும் இடையிலான கூட்டணியையும் எதிர்த்தனர்; மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாருடன் சமரசம் செய்து கொள்ளும் கொள்கையை அனுசரித்தனர். இந்தப் புரட்சி தோல்வியுற்றபின் பிற்போக்கு தலைவிரித்தாடிய 1907-1910ஆம் ஆண்டுகளில் மென்ஷிவிக்குகள் கட்சிக் கலைப்பாளர்களாகி, சட்டவிரோதமாய் இயங்கி வந்த புரட்சிகரக் கட்சியை ஒழித்திட முயன்றனர். முதலாம் உலகப் போரின்போது மென்ஷிவிக்குகள் சமூக-தேசியவெறிவாத நிலையை அனுசரித்தனர். 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து மென்ஷிவிக்குகள் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியோருடன் சேர்ந்து முதலாளித்துவ இடைக்கால சர்க்காரின் உறுப்பினர்களாகி, அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர்; மூண்டுவந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியை எதிர்த்துப் போராடினர்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் பகிரங்கமாகவே எதிர்ப்புரட்சிக் கட்சியாகி

சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துச் சதிகளும் கலகங்களும் செய்தனர். பக்கம் 5

2 ''பிராவ்தா'' (உண்மை) — செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் பதிப்பிக்கப்பட்ட போல்ஷிவிக் கட்சியின் சட்டபூர்வமான தினசரி செய்தித்தாள். 1912ல், ஏப்ரல் 22 (மே 5)லிருந்து வெளிவந்தது.

லெனின் ''பிராவ்தா''வைச் சித்தாந்த ரீதியில் வழிகாட்டி நடத்தினர்; நாள்தோறும் அதற்கு எழுதினர்; அதன் ஆசிரியர் குழுவுக்கு உத்தரவுகளை அனுப்பினர். செய்தித்தாள் போர் ஊக்கமும் புரட்சி உணர்வும் கொண்டு இயங்கும்படிச் செய்ய லெனின் பாடுபட்டார். கோட்பாடு ரீதியான பிரச்சினைகளில் போதிய தெளிவு அற்ற கட்டுரைகளை வெளியிட்டதற்காக ஆசிரியக் குழுவை விமர்சித்தார்.

போலீஸ் சதா ''பிராவ்தா''வைத் தொந்தரவு செய்தது. முதல் இதழ் வெளியான இரண்டு ஆண்டுகளுக்குச் சற்று அதிகமான காலத்தில் ''பிராவ்தாவை'' ஜாரிஸ அரசாங்கம் எட்டு முறை மூடியது; ஆனால் அது ''ரபோச்சாயா பிராவ்தா'' (தொழிலாளர் பிராவ்தா), ''புரோலித்தார்ஸ்கயா பிராவ்தா'' (பாட்டாளி பிராவ்தா), ''பூத் பிராவ்தி'' (பிராவ்தாவின் வழி) முதலிய வேறு பெயர்களில் மீண்டும் மீண்டும் வெளிவந்தது. 1914 ஜூலை 8 (21)ல், இப்பத்திரிகை மூடப்பட்டது.

பிப்ரவரி பூர்ஷுவா-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகுதான் அது மீண்டும் வெளிவந்தது. 1917, மார்ச் 5 (18) லிருந்து ரு. ச. ஜ. தொ. கட்சியின் மத்தியக் கமிட்டி, பீட்டர்ஸ்பர்க் கமிட்டி ஆகியவற்றின் அதிகாரபூர்வமான மத்தியப் பத்திரிகையாக ''பிராவ்தா'' வெளிவந்தது. ஏப்ரல் 5 (18)ல் வெளிநாட்டிலிருந்து திரும்பிய போது லெனின் ''பிராவ்தாவின்'' ஆசிரியர் குழுவில் சேர்ந்து, தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

1917 ஜூலை-அக்டோபரில் ''பிராவ்தா'' எதிர்ப்புரட்சி, பூர்ஷுவா இடைக்கால அரசாங்கத்தினல் தொல்லைக்குள்ளாக்கப்பட்டது; எனவே அது பெயரை அடிக்கடி மாற்றி, ''லிஸ்தோக் 'பிராவ்தி' '' (பிராவ்தா செய்தித்தாள்), ''புரோலித்தாரிய்'' (பாட்டாளி), ''ரபோச்சிய்'' (தொழிலாளர்), ''ரபோச்சிய் பூத்'' (தொழிலாளர் வழி) என்ற பெயர்களில் வெளிவந்தது. மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு 1917, அக்டோபர் 27 (நவம்பர் 9)லிருந்து கட்சியின் மத்தியப் பத்திரிகை ''பிராவ்தா'' என்ற தனது பழைய பெயரிலேயே வெளிவருகிறது. பக்கம் 5

[3] சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி — ருஷ்யாவில் 1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் பல்வேறு நரோத்னிக் கோஷ்டிகளையும் இணைத்து நிறுவப்பட்ட குட்டிபூர்ஷுவா ஜனநாயகவாதிகளின் கட்சி. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின்போது சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரில் பெரும்பாலோர் சமூக-தேசியவெறிவாத நிலையை ஏற்றனர். 1917 பிப்ரவரியில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்றதும், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் மென்ஷிவிக்குகளுடனும் காடேட்டுகளுடனும் சேர்ந்து முதலாளிகள்-நிலப்பிரபுக்களது எதிர்புரட்சி இடைக்கால சர்க்காரின் பிரதான தூண்களாய்ச் செயல்பட்டனர். இக்கட்சித் தலைவர்கள் (கேரென்ஸ்கிய், அவ்க்சேன்தியெவ், செர்னேவ்) இடைக்கால சர்க்கரின் உறுப்பினர்களாய் இருந்தனர். இளம் சோவியத் குடியரசுக்கு எதிரான அன்னியத் தலையீடும் உள்நாட்டுப் போரும் நடைபெற்ற ஆண்டுகளில் சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியினர் எதிர்ப்புரட்சியின் சதிகாரச் செயல்களில் ஈடுபட்டனர்; அந்நியத் தலையீட்டுக்கும் வெள்ளைப்படைத் தளபதிகளுக்கும் விரிவான ஆதரவளித்தனர்; சோவியத் அரசாங்கத்தின், கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்களை எதிர்த்துப் பயங்கரவாத வன்முறைச் செயல்களை மேற்கொண்டனர். பக்கம் 10

[4] கியொத்தேயின் ''ஃபாஸ்ட்'' நாடகத்தில் மெபிஸ்த்தோபிலிஸ் சொல்வதை லெனின் மேற்கோளாய்க் குறிப்பிடுகிறார். பக்கம் 11

[5] பாரிஸ் கம்யூன்—1871 ஆண்டில் நடந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியின் விளைவாகப் பாரிஸ் நகரத்தில் நிறுவப்பட்ட தொழிலாளி வர்க்கப் புரட்சிகர அரசாங்கம். மார்ச்சு 18முதல் மே 28 வரை, 72 நாட்கள் அது நீடித்தது. வரலாற்றில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதல் அரசாங்கம் இது. பக்கம் 11

[6] ''மேன்மை தங்கிய மன்னரின் எதிர்த்தரப்பு'' என்னும் தொடர் காடெட் கட்சியின் தலைவர் பா. நி. மில்யூக்கோவினுடையது. லண்டன் நகர மேயர் 1909 ஜூன் 19ல் (ஜூலை 2) அளித்த விருந்தில் சொற்பொழிவாற்றுகையில் மில்யூக்கோவ் கூறியதாவது: ''...ருஷ்யாவில் பெட்ஜெட்டைக் கட்டுபாடு செய்யும் சட்ட மன்றம் ஒன்று இருக்கும் வரை, ருஷ்ய எதிர்த்தரப்பு மேன்மை தங்கிய மன்னரின் எதிர்த்தரப்பாய் இருக்குமே ஒழிய, மேன்மை தங்கிய மன்னருக்கு எதிர்த்தரப்பாய் இராது'' (ரேச், இதழ் 167, 1909 ஜூன் 21 [ஜூலை 4]). பக்கம் 15

7 ''ஜார் ஒழிக, தொழிலாளர் அரசாங்கமே வேண்டும்''—போல்ஷிவிக்-எதிர்ப்புக் கோஷம். முதன்முதல் 1905ல் பார்வுசால் பிரகடனம் செய்யப்பட்டது. நிரந்தரப் புரட்சி—விவசாயிகள் சேராத புரட்சி—என்கிற திரொத்ஸ்கியத் ''தத்துவத்தின்'' அடிப்படையாய் அமைந்த கோஷம் இது. இந்தத் ''தத்துவம்'' முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியானது வெகுஜன இயக்கத்துக்குப் பாட்டாளி வர்க்கம் தலைவனாய்ச் செயல்படுகையில் சோஷலிசப் புரட்சியாய் வளர்ந்திடும் என்னும் லெனினுடைய தத்துவத்துக்கு எதிராய் முன்வைக்கப்பட்டது. பக்கம் 15

8 **பிளாங்கியர்கள்**—புகழ்பெற்ற பிரெஞ்சுக் கற்பனாவாதக் கம்யூனிஸ்டான புரட்சியாளர் லுயீ ஒகுஸ்ட் பிளாங்கி [Blanqui] (1805-1881) தலைமையில் சோஷலிஸ்டு இயக்கத்தில் தோன்றிய ஒரு போக்கின் ஆதரவாளர்கள் இவர்கள். ''கூலி அடிமை நிலையிலிருந்து மனித குலம் விடுதலை பெறப் பாட்டாளி வர்க்கப் போராட்டம் தேவையில்லை, சிறுபன்மை அறிவுத்துறையினரைச் சேர்ந்த சிறு கோஷ்டியினது சதியின் மூலமே இதைச் செய்துவிடலாம்'' (வி. இ. லெனின்) என்று பிளான்கிஸ்டுகள் நம்பினர். வெகுஜனங்களுடன் தொடர்புகள் கொண்டிருக்க வேண்டுமென்பதை இவர்கள் உதாசீனம் செய்தனர்; எழுச்சி வெற்றி பெற அவசியமான ஸ்தூல நிலைமையைப்பற்றி இவர்கள் கவலைப்படவே இல்லை; புரட்சிகரக் கட்சிகுரிய போர்த் தந்திரத்துக்குப் பதிலாய் ஒருசில சதிகாரர்களுக்கான போர்த்தந்திரத்தைக் கையாண்டனர். பக்கம் 16

9 பார்க்கவும் கார்ல் மார்க்ஸ் ,பிரான்சில் உள்நாட்டுப் போர். சர்வதேசத் தொழிலாளர் கழக பொது அவையின் பேருரை; பிரெடெரிக் எங்கெல்ஸ் ''முன்னுரை'' (கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, மாஸ்கோ, 1969 பக்கங்கள் 217-30). பக்கம் 16

10 **யெதின்ஸ்த்வோ** (ஒற்றுமை) — பெத்ரோகிராதில் வெளியிடப்பட்ட ஏடு; பிளெஹானவின் தலைமையிலிருந்த பாதுகாப்புவாத மென்ஷிவிக் வலதுசாரிக் கோஷ்டியின் ஏடு. 1914 மே-ஜூனில் நான்கு இதழ்கள் வெளிவந்தன. 1917 மார்ச்சிலிருந்து நவம்பர்வரை நாளேடாய் வெளிவந்தது. 1917 டிசம்பரிலிருந்து 1918 ஜனவரி வரை **நாஷே யெதின்ஸ்த்வோ** என்ற பெயரில் வெளிவந்தது. இடைக்கால அரசாங்கத்துக்கு அது ஆதரவளித்தது. முதலாளித்துவ வர்க்கத்துடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம்

நடத்துவதையும் ''உறுதியான அதிகாரத்தையும்'' ஆதரித்தது. போல்ஷிவிக்குகளை எதிர்த்துப் போராடிற்று, இதில் மஞ்சள் பத்திரிகைகளின் முறைகளை அடிக்கடி கையாண்டது. பக்கம் 17

11 லெனின் இங்கு குறிப்பிடுவது பிளெஹானவின் அராஜகவாதமும் சோஷலிசமும் என்னும் பிரசுரம். முதலில் இது ஜெர்மன் மொழியில் 1894ல் பெர்லினில் வெளிவந்தது. பக்கம் 18

12 இங்கு குறிப்பிடப்படுவது பாசெல் அறிக்கை. இது 1912 நவம்பர் 24,25ல் பாசெலில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டுச் சிறப்புக் காங்கிரசில் ஏற்கப்பட்டது. இந்த அறிக்கை ஏகாதிபத்திய யுத்தம் தொடங்கவிருக்கும் அபாயம் குறித்து எல்லா தேசங்களுக்கும் எச்சரிக்கை செய்தது; இந்த யுத்தத்தின் ஆக்கிரமிப்பு நோக்கங்களைத் புலப்படுத்திற்று; வைராக்கியத்துடன் சமாதானத்துக்காகப் போராடும்படியும் ''முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தைப் பாட்டாளி வர்க்கத்தினுடைய சர்வதேச ஒருமைப்பாட்டின் பலத்தைக் கொண்டு'' எதிர்த்துப் போராடும்படியும் எல்லா நாடுகளின் தொழிலாளர்களுக்கும் அறைகூவல் விடுத்தது. ஷ்டுட்கார்ட் காங்கிரஸ் (1907) தீர்மானத்தின் அடிப்படையில் லெனின் வரைந்திருந்த ஒரு பிரிவும் இந்த அறிக்கையில் அடங்கியிருந்தது. ஏகாதிபத்திய யுத்தம் மூளும் பட்சத்தில் அதனால் விளையும் பொருளாதார,அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு சோஷலிஸ்டுகள் முதலாளித்துவ வர்க்கத்தினது ஆட்சியின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டுமென்றும் சோஷலிசப் புரட்சிக்காகப் போராட வேண்டுமென்றும் இப்பிரிவு கூறிற்று. பக்கம் 27

13 ஸ்துரூவெவாதம் — மார்க்சியத்தை மிதவாத-முதலாளித்துவ வழியில் திரிக்கும் போக்கு. ருஷ்யாவில் ''சட்டபூர்வ மார்க்சியத்தின்'' தலைமைப் பிரதிநிதியாய் இருந்த பா. பொ. ஸ்துரூவெ என்பரின் பெயரால் அழைக்கப்பட்டது. ''சட்டபூர்வ மார்க்சியம்'' ருஷ்யாவில் 1890ஆம் ஆண்டுகளில் மிதவாத-முதலாளித்துவ அறிவுத் துறையினரிடையே ஒரு சமூக-அரசியல் போக்காய் எழுந்தது. ஸ்துரூவெயின் தலைமையில் ''சட்டபூர்வ மார்க்சியவாதிகள்'' மார்க்சியத்தை முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு ஏற்றபடி பயன்படுத்திக் கொள்ள முயன்றனர். ஸ்துரூவெவாதம் மார்க்சியத்திலிருந்து மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு ஏற்றதை எல்லாம் கடன்வாங்கிக் கொண்டு மார்க்சியத்தின் மெய்யான சாரமான அதன்

புரட்சிகர ஆன்மாவை, முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத வீழ்ச்சி, பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இவை குறித்த தத்துவத்தை நிரா கரித்து விடுகிறது என்று லெனின் சுட்டிக்காட்டினர். ஸ்துருவெ முதலாளித்துவ அமைப்பைப் போற்றிப் புகழ்ந் தார், ''முதலாளிகளிடமிருந்து கற்றறிந்து கொள்ள வேண்டும்'' என்று வாதாடினர். பக்கம் 27

14 Die Neue Zeit (புதிய காலம்)—1883 முதல் 1923 வரை ஸ்டூட்கார்ட்டில் வெளியான ஜெர்மன் சமூக-ஜன நாயகக் கட்சியின் சித்தாந்தச் சஞ்சிகை. 1917, அக்டோபர் வரை காவுத்ஸ்கியும், பின்னர் கூனேவும் இதன் ஆசிரியர் களாக இருந்தனர். கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ் இருவரதும் பல படைப்புக்கள் இதில் முதல் முதலில் வெளியாயின. அதன் ஆசிரியர்களுக்கு எங்கெல்ஸ் அடிக்கடி ஆலோசனைகள் கூறி, மார்க்சியத்திலிருந்து அவர் கள் வழுவிய பொழுது கடுமையாகக் கண்டித்தார்.

1890-1900ன் இறுதிப் பகுதியில், எங்கெல்ஸின் மறை வுக்குப் பிறகு, திரிபுவாதக் கட்டுரைகளை இப்பத்திரிகை முறையாக வெளியிடத் தொடங்கியது. முதலாவது உலகப் போரின் (1914-18) பொழுது இப்பத்திரிகை ஒரு மைய நிலைப் போக்கை மேற்கொண்டு, சமூக-தேசிய வெறியர்களை ஆதரித்தது. பக்கம் 30

15 சோஷியல்-டெமாக்கிராட் — ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மத்திய ஏடாய் 1908 பிப்ரவரி யிலிருந்து 1917 ஜனவரி வரை சட்டவிரோதமாய் வெளி வந்த செய்தியேடு. மொத்தம் 58 இதழ்கள் வெளிவந்தன. ஐந்து இதழ்கள் அனுபந்தங்களுடன் வெளியாயின. 1911 டிசம்பர் முதல் லெனின் இதன் ஆசிரியராய் இருந்து, எண்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளும் பிறவும் எழுதி ஞர்.

முதல் உலகப் போரின்போது, சர்வதேசச் சந்தர்ப்ப வாதத்தையும் தேசியவாதத்தையும் தேசியவெறியையும் எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும், போல்ஷிவிக் கோஷங்களுக்கான பிரசாரத்திலும், ஏகாதிபத்தியப் போ ரையும் அதன் சூத்திரதாரிகளையும் எதேச்சாதிகாரத்தை யும் முதலாளித்துவத்தையும் எதிர்த்துப் போராடும்படி தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பாளி மக்கள் அனை வரையும் தட்டியெழுப்புவதிலும் சோஷியல்-டெமாக்கிராட் முக்கிய பங்காற்றியது.

உலக சமூக-ஜனநாயக இயக்கத்தில் சர்வதேசிய வாதிகளை ஒன்றுபடுத்த இந்தச் செய்தியேடு அரும் பணி ஆற்றியது. பக்கம் 33

16 அரசாங்க டூமா—*1905-1907* ஆண்டுகளின் புரட்சிகர நிகழ்ச்சிகளின் காரணமாய் ஜாரிஸ்டு சர்க்கார் கூட்ட வேண்டியதாகிய பிரதிநிதித்துவ சபை. சட்ட மன்றமா யிருந்த அரசாங்க டூமா மெய்யான அதிகாரம் எதுவும் இல்லாததாகவே இருந்து வந்தது.

அரசாங்க டூமாவுக்கான தேர்தல்கள் நேரடியானவை யாகவோ, சமத்துவ வாக்குரிமையுடையவையாகவோ, குடி மக்கள் அனைவருக்குமானவையாகவோ இருக்கவில்லை. உழைப்பாளி மக்களுக்கும் ருஷ்யாவிலிருந்த ருஷ்யரல்லாத பிற இனத்தோருக்கும் வாக்குரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தது. ஏராளமான தொழிலாளர்களும் விவசாயிகளும் வாக்குரிமையற்றோராகவே இருந்தனர்.

முதலாவது டூமாவும் (*1906* ஏப்ரல்-ஜூலை) இரண்டாவது டூமாவும் (*1907* பிப்ரவரி-ஜூன்) ஜாரிஸ்ட் சர்க்காரால் கலைக்கப்பட்டன.

*1907* ஜூன் 3ல் ஜாரிஸ்ட் சர்க்கார் இரண்டாவது டூமாவைக் கலைத்துவிட்டு புதிய தேர்தல் சட்டத்தைப் பிறப்பித்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், நகரக் குட்டி பூர்ஷுவாக்களின் வாக்குரிமையை மேலும் குறையச் செய்தது. நிலப்பிரபுக்கள், பெரு முதலாளிகளது கறுப்பு நூற்றுவர் கூட்டணி இதனால் மூன்றாவது டூமாவிலும் (*1907-1912*) நான்காவது டூமாவிலும் (*1912-1917*) ஆதிக்கம் வகிக்க முடிந்தது. பக்கம் *36*

17 காடேட் கட்சி (கான்ஸ்டிடூஷனல்-டெமாக்கிராட்டிக் கட்சி—அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சி)— ருஷ்யாவின் மிதவாத-முடியாட்சிவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் தலைமையான கட்சியாக இருந்தது. இது *1905* அக்டோபரில் துவக்கப்பட்டதாகும். முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் முதலாளித்துவ அறிவுத்துறையினரும் இதில் உறுப்பினர்களாய் இருந்தனர். உழைப்பாளி மக்களை ஏமாற்றும் பொருட்டு இவர்கள் தமக்கு ''மக்கள் சுதந்திரக் கட்சி'' என்பதாய்ப் பொய்ப் பெயரிட்டுக் கொண்டனர். ஆனால் உண்மையில் அவர்களுடைய கோரிக்கைகள் சட்ட முறை முடியாட்சி வேண்டும் என்பதற்கு மேல் செல்லவில்லை. முதல் உலகப் போரின்போது ஜாரிஸ்ட் அரசாங்கத்தின் நாடுபிடிக்கும் கொள்கைக்குக் காடேட்டுகள் முன்னின்று ஆதரவுஅளித்தனர். *1917*, பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் போது அவர்கள் முடியாட்சியைப் பாதுகாக்க முயன்றனர். இடைக்கால சர்க்காரில் முக்கிய நிலை வகித்து மக்கள் நலன்களுக்கு விரோதமான புரட்சி-எதிர்ப்புக் கொள்கையைப் பின்பற்றினர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிற்பாடு காடேட்டுகள்

சோவியத் ஆட்சியதிகாரத்தின் பரம வைரிகளாயினர். ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் யாவற்றிலும், தலையீட்டாளர்களது எல்லா இராணுவத் தாக்குதல்களிலும் பங்கெடுத்துக் கொண்டனர். பக்கம் 39

18 **சார்ட்டிசம்** — ஆங்கிலேயத் தொழிலாளர்களின் வெகுஜனப் புரட்சி இயக்கம்; மிகக் கடினமான பொருளாதார நிலைமைகள், அரசியல் உரிமைகள் இல்லாத நிலை இவற்றின் காரணமாய் எழுந்தது. மக்கள் உரிமைச் சாசனம் (சார்ட்டர்) கோரியதால் இந்த இயக்கம் இப்பெயரைப் பெறலாயிற்று. 1830ஆம் ஆண்டுகளின் பிற்பாதியில் மாபெரும் பொதுக் கூட்டங்கள், ஆர்பாட்டங்களுடன் இந்த இயக்கம் ஆரம்பமாகி சிற்சில இடைவெளிகள் விட்டு 1850ஆம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதி வரை நடைபெற்றது.

முரணற்றப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தலைமையும் தெளிவான வேலைத்திட்டமும் இல்லாததே சார்ட்டிஸ்ட் இயக்கத்தின் தோல்விக்கான பிரதான காரணம். பக்கம் 47

19 **''ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகளுக்குக் கடிதம்''**—ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாராளுமன்றத் தேர்தல்களைப் பகிஷ்காரம் செய்வதென்று முடிவெடுத்ததையொட்டி லெனின் இக்கடிதத்தை எழுதினார். கட்சியின் பொது மாநாட்டுக்கு முந்திய தினம் 1920 ஆகஸ்டு 31ல் இக்கடிதம் ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய ஏடான Die Rote Fahneவில் (செங்கொடி) வெளியிடப்பட்டது. ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் தமது தவறைத் திருத்திச் சரியான முடிவை எடுக்க இக்கடிதம் உதவிற்று. கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் தீர்மானத்துக்கு ஏற்ப 1920 செப்டம்பர் 1ல் இம்மாநாடு பாராளுமன்றத் தேர்தல்களில் பங்கெடுப்பதென்று தீர்மானம் செய்தது. ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர ஒற்றுமையைத் தமது தேர்தல் இயக்கக் கோஷமாய் ஏற்றுக் கொண்டனர். பக்கம் 57

20 **மஞ்சள் அல்லது பெர்ன் அகிலம்**—முதல் உலகப் போர் மூண்டதும் தகர்ந்துவிட்ட இரண்டாவது அகிலத்துக்குப் பதிலாய் மேற்கு ஐரோப்பியச் சந்தர்ப்பவாத தலைவர்கள் 1919 பிப்ரவரியில் பெர்னில் கூடிய சோஷலிஸ்டுக் கட்சிகளுடைய மாநாட்டில் இரண்டாவது (பெர்ன்) அகிலத்தை நிறுவினர். பக்கம் 57

21 ஆன்டான்ட்—இச்சொல் 1907ல் உருவான ஏகாதிபத்திய அரசுகளது (பிரிட்டன், பிரான்சு, ருஷ்யா ஆகியவை) கூட்டைக் குறிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. இக்கூட்டு மற்ருெரு ஏகாதிபத்தியக் கூட்டான முக்கூட்டுக்கு (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, இத்தாலி) எதிராக அமைக்கப்பட்டது. 'ஆன்டான்ட்' என்னும் பெயர் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே 1904ல் ஏற்பட்ட "Entente cordiale" (நேசக் கூட்டு) என்றழைக்கப்பட்ட ஒப்பந்தத்திலிருந்து வந்ததாகும். முதல் உலக ஏகாதிபத்தியப் போரின் போது இந்த ஆன்டான்டில் அமெரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் வேறு பல நாடுகளும் சேர்ந்து கொண்டன. மாபெரும் அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து, இக்கூட்டின் பிரதான உறுப்பினர்களான பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் சோவியத் குடியரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆயுதமேந்திய தலையீட்டின் மூலவர்களாகவும் சூத்திரதாரிகளாகவும் செயல்பட்டன. பக்கம் 62

22 கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசில் ருஷ்யப் பிரதிநிதிக் குழு போர்த்தந்திரம் குறித்து முன்மொழிந்த நகல் விரிவுரைகளுக்கு ஜெர்மன், ஆஸ்திரிய, இத்தாலியப் பிரதிநிதிக் குழுக்கள் சமர்ப்பித்த திருத்தங்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. பக்கம் 66

23 ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி (ஜெ. க. தொ. க.)—1919 அக்டோபரில் ஹைடெல்பெர்கில் கூடிய ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி இரண்டாவது காங்கிரசில் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட ஜெர்மன் இடதுசாரி கம்யூனிஸ்டுக் கோஷ்டியாளர்கள் 1920 ஏப்ரில் மாதத்தில் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியை (ஜெ. க. தொ. க.) அமைத்துக் கொண்டனர். ஜெர்மனியில் எல்லாக் கம்யூனிஸ்டு சக்திகளும் ஒன்றுபடுவதற்கு உதவும் பொருட்டும், ஜெ. க. தொ. கட்சியின் சிறந்த பகுதியோரின் விருப்பங்களுக்கு இணங்கும் பொருட்டும் நவம்பரில் இந்தக் கட்சி அனுதாப உறுப்பினராகத் தற்காலிகமாய்க் கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஆனல் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியையே அதிகாரபூர்வமான அமைப்பாகக் கருதி வந்தது. ஜெ. க. தொ. கட்சி ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் இணைந்துவிட வேண்டும், அதன் எல்லாச் செயல்களுக்கும் ஆதரவளிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்தான் அது கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஆனல் ஜெ.க.தொ. கட்சியின் தலைமை கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவின்

தாக்கீதுகளின்படி நடந்து கொள்ளவில்லை. கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் (1921 ஜூன்-ஜூலை) இன்னமும் ஜெ. க. தொ. கட்சியைப் பின்தொடர்ந்த தொழிலாளர்களை ஈர்த்துக் கொள்ள முயல வேண்டுமெனக் கருதி, ஜெ. க. தொ. கட்சிக்கு இரண்டு மாத அவகாசம் கொடுப்பதென்றும், அதற்குள் அது தனது கட்சிக் காங்கிரசைக் கூட்டி இணைவது குறித்து முடிவு செய்தாக வேண்டுமென்றும் தீர்மானித்தது. ஜெ. க. தொ. கட்சியின் தலைமை இத்தீர்மானத்தின்படி நடக்கவில்லையாதலால், அது கம்யூனிஸ்டு அகிலத்துக்குப் புறம்பானதாகிவிட்டது. பிற்பாடு ஜெ. க. தொ. கட்சி தொழிலாளர்களிடையே ஆதரவில்லாத குறுங்குழுவாதிகளது சின்னஞ்சிறு கோஷ்டியாகச் சீரழிந்துவிட்டது. பக்கம் 67

24 இங்கு குறிப்பிடப்படுவது ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் குழு ஜெர்மன் சோஷலிஸ்டுக் கட்சிக்கும், ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சிக்கும், ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சிக்கும் எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும் விடுத்த "பகிரங்கக் கடிதம்" (Offener Brief). 1921 ஜனவரி 8ல் இக்கடிதம் Die Rote Fahne (செங்கொடி) செய்தியேட்டில் வெளிவந்தது. கடுமையாகிச் சென்ற பிற்போக்கையும் தொழிலாளி மக்களுடைய அடிப்படை உரிமைகளுக்கு எதிராய் முதலாளிகள் தொடுத்த தாக்குதலையும் எதிர்த்துக் கூட்டுப் போராட்டம் நடத்தும்படி ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி இந்தக் கடிதத்தில் தொழிலாளர்களுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் சோஷலிஸ்டு நிறுவனங்களுக்கும் அறைகூவல் விடுத்தது. கூட்டுச் செயலுக்கான கம்யூனிஸ்டு வேலைத்திட்டத்தில் இயலாதோராகிய முதுபெரும் படைவீரர்களுக்குப் பென்ஷன்கள், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தல், ஏகபோகங்களின் செலவில் நாட்டின் நிதி நிலையை மேம்படச் செய்தல், உணவு, மூலப் பொருள்கள், எரிபொருள் இவற்றின் கையிருப்புகள் ஆலைக் கமிட்டியின் கட்டுப்பாட்டின்கீழ் வருதல், மூடப்பெற்ற எல்லா ஆலைகளும் திரும்பவும் திறக்கப்படுதல், விதைத்தல், அறுவடை செய்தல், விளைபொருள்களின் விற்பனை ஆகியவை விவசாயிகளுடைய சங்கங்கள், விவசாயத் தொழிலாளர்களுடைய நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வருதல், உடனடியான படைக்கலக் குறைப்பு, முதலாளித்துவ இராணுவ வகைப்பட்ட எல்லா நிறுவனங்களையும் கலைத்தல், தொழிலாளர்களது தற்காப்புக்கு ஏற்பாடு செய்தல், எல்லா அரசியல் கைதிகளுக்கும் தண்டனை ரத்து அளித்தல், சோவியத் ருஷ்யாவுடன் உடனடி

யாய் வர்த்தக, ராஜிய உறவுகளை நிறுவுதல் முதலான கோரிக்கைகள் அடங்கியிருந்தன.

பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாய்த் தொழிலாளர்கள் முன்வந்தனர் என்றாலும், ''பகிரங்கக் கடிதம்'' விடுக்கப்பட்ட நிறுவனங்களுடைய வலதுசாரித் தலைவர்கள் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து கூட்டுச்செயல் மேற்கொள்ளுவதென்ற பிரேரணையை நிராகரித்துவிட்டனர். பக்கம் 69

25 தாக்குதல் போராட்டத் தத்துவம் அல்லது ''தாக்குதல் தத்துவம்''—1920 டிசம்பரில் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி, ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரி இவற்றின் ஒற்றுமைக் காங்கிரசில் பிரகடனம் செய்யப்பட்ட தத்துவம். புரட்சிகரச் செயற்பாட்டுக்குத் தக்க எதார்த்த நிலைமைகள் உள்ளனவா, அல்லது தொழிலாளி வெகுஜனங்கள் கம்யூனிஸ்டுக் கட்சியை ஆதரிக்கிறார்களா என்பதைக் கருதாமலே கட்சி தாக்குதல் போர்த்தந்திரத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கொண்டது இந்தத் தத்துவம். ''தாக்குதல் தத்துவத்துக்கு'' ஹங்கேரியிலும் செக்கோஸ்லோவாக்கியாவிலும் இத்தாலியிலும் ஆஸ்திரியாவிலும் பிரான்சிலும் இடதுசாரிகளிடையே ஆதரவாளர்கள் இருந்தனர். ஜெர்மனியில் 1921 மார்ச்சில் நடைபெற்ற பாட்டாளி வர்க்க எழுச்சிக்கு இத்தத்துவம்தான் அடிப்படை, இதுவேதான் அதன் தோல்விக்கான காரணங்களில் ஒன்று. இதன்பின் இடதுசாரிவாதிகள் ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் குழுவின் தவறுகளுக்கு நியாயம் கூற முயன்றனர். மார்ச் மாத எழுச்சி குறித்து 1921 ஏப்ரல் 8ல் ஏற்கப்பட்ட அதன் விரிவுரைகள் இக்கட்சி இந்த எழுச்சிக்கு அடிப்படையாய் அமைந்த ''புரட்சிகரத் தாக்குதல் வழியையே பற்றியொழுக வேண்டும்'' என்றும், தாக்குதல் நடவடிக்கைகள் ''தோற்றுப் போக நேர்ந்தாலும், வருங்கால வெற்றிக்கு அவசியமான படியாய் இருக்கும், வெகுஜனங்களை வென்று கொள்ள புரட்சிகரக் கட்சிக்கு இது ஒன்றே சாத்தியமான வழியாகும்...'' என்றும் கூறின. இந்தத் தத்துவத்தின் ஆதரவாளர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசில் அகிலத்தின் போர்த்தந்திரத் தீர்மானங்களுக்கு இதனை அடிப்படையாக்க முயன்றனர். லெனின் இக்காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் இந்தத் ''தத்துவம்'' தவறானது, சாகசவாதத் தன்மையது என்பதைத் தெளிவுபடுத்தினார். பொறுமையுடன் தயார் செய்தல், தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையோரைக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு ஆதரவாய் வென்று கொள்ளுதல்

என்னும் லெனினது கொள்கை வழியினை இக்காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. பக்கம் 72

26 இங்கு குறிப்பிடப்படுவது 1921 மார்ச்சில் நடைபெற்ற ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதமேந்திய எழுச்சி.

வெகுஜனங்களிடையே கம்யூனிஸ்டுகளுடைய செல்வாக்கு வெகுவாகி வந்ததைக் கண்டு அஞ்சிய ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கம், பாட்டாளி வர்க்கப் புரட்சி முன்னணிக்கு ஆத்திரமூட்டி காலத்துக்கு முன்னதாகவே தயாரிப்பின்றி ஆயுதமேந்திய எழுச்சியை நடத்தும்படித் துண்டிவிட்டு தொழிலாளர்களுடைய புரட்சி நிறுவனங்களைத் தோற்கடிப்பதென்று முடிவு செய்தது. சதிகாரர்கள் வேலைநிறுத்தங்களைத் தூண்டுவதாகவும் இவர்களை அடக்க வேண்டுமென்றும் கூறி பிரஷ்யப் போலீசின் அதிபரான சமூக-ஜனநாயகவாதி ஹெர்சிங் மார்ச் 16ல் மத்திய ஜெர்மனியின் ஆலைகளுக்கு போலீஸ் ரோந்துப் படைகளை அனுப்பி வைத்தார். அதிகாரிகளுடைய ஆத்திரமூட்டும் செயல்கள் தொழிலாளர்களிடையே சீற்றத்தை உண்டாக்கின. போலீசாருடன் கைகலப்புகள் நடைபெற்றன.

ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் குழுவில் இடதுசாரிப் பெரும்பான்மையினர் ''தக்குதல் தத்துவத்தால்'' உந்தப்பட்டு, அகால எழுச்சி நடத்தும்படி ஜெர்மன் தொழிலாளர்களைத் தூண்டினர். மத்தியக் குழு மார்ச் 17ல் ''பாட்டாளி வர்க்கம் போரை ஏற்றுக் களம் புக வேண்டு'' மென்று முடிவு செய்து, மத்திய ஜெர்மனியின் தொழிலாளர்களுக்கு ஆதரவாய் ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தைப் பொது வேலைநிறுத்தத்தில் இறங்குமாறு வற்புறுத்தியது. தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையோர் எழுச்சிக்குத் தயாராயில்லை, அவர்கள் இதில் சேரவில்லை. மத்திய ஜெர்மனியில் மட்டும்தான் எதிர்ப்பு ஆயுதமேந்திய போராட்டத்தின் தன்மை பெற்றது. இந்த மார்ச் மாத எழுச்சியின்போது இளம் கம்யூனிஸ்டுக் கட்சி பல தவறுகள் இழைத்தது.

தொழிலாளர்கள் வீரதீரமாய்ப் போராடிய போதிலும் மார்ச் மாத எழுச்சி நசுக்கப்பட்டுவிட்டது. கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் பலத்த அடி கிடைக்கும்படி நேர்ந்தது. சக்திகளைப் பிளவுபடுத்திச் சிதறடிக்கும் நோக்கத்துடன் சமூக-ஜனநாயகவாதிகளும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கத் தலைவர்களும் அனுசரித்த வஞ்சகக் கொள்கையே இந்த எழுச்சி தோல்வியுற்றதற்கான பிரதான காரணம். முக்கியமாய்ப் பாவுல் லெவீ இந்த எழுச்சிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் பெருந் தீங்கு இழைத்தார்.

மார்ச் மாதப் போர்கள் ஜெர்மனியில் புரட்சிகரத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கிய மைல் கல்லாய் அமைந்தன.

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் மார்ச் மாத எழுச்சியைக் கவனமாய்ப் பரிசீலித்தது. இந்த மாபெரும் போரில் கம்யூனிஸ்டுகள் இழைத்த பல தவறுகளையும் இக்காங்கிரசின் தீர்மானம் சுட்டிக்காட்டி இவ்வாறு கூறியது: ''மார்ச் மாத எழுச்சி முன்னோக்கி எடுத்து வைக்கப்பட்ட மிகப் பெரிய அடியாகும். முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து லட்சக்கணக்கான பாட்டாளிகள் நடத்திய வீரமிக்கப் போராட்டமாகும். மத்திய ஜெர்மனியில் தொழிலாளர்களுடைய பாதுகாப்புக்கு வழிகாட்டி ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டு கட்சி ஜெர்மன் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சியாகும் என்பதை நிரூபித்துள்ளது'' (**கம்யூனிஸ்டு அகிலம் ஆவணங்களில். கம்யூனிஸ்டு அகிலக் காங்கிரசுகள், அதன் செயற் குழு விரிவுக் கூட்டங்களின் தீர்மானங்கள், விரிவுரைகள், வேண்டுகோள்கள். 1919-32, ருஷ்யப் பதிப்பு,** மாஸ்கோ, 1933, பக்கம் 194).

பக்கம் 73

27 **இரண்டரையாவது அகிலம்** (அதிகாரபூர்வமான பெயர் ''சோஷலிஸ்டுக் கட்சிகளின் சர்வதேசக் கழகம்'')—புரட்சிகர வெகுஜனங்களுடைய நிர்ப்பந்தம் காரணமாய் இரண்டாவது அகிலத்திலிருந்து பிரிந்து சென்ற மையவாத சோஷலிசக் கட்சிகள், கோஷ்டிகளின் சர்வதேச நிறுவனம். 1921 பிப்ரவரியில் நடைபெற்ற வியன்னு மாநாட்டில் இது உருவாயிற்று. இரண்டாவது அகிலத்தைச் சொல்லளவில் குறை கூறிவிட்டு இரண்டரையாவது அகிலத் தலைவர்கள் உண்மையில் பாட்டாளி வர்க்க இயக்கம் குறித்த தலைமையான எல்லாப் பிரச்சினைகளிலும் தொழிலாளி வர்க்கத்தினுள் சந்தர்ப்பவாத, பிளவுவாதக் கொள்கையே கடைப்பிடித்தனர். தொழிலாளி மக்கள் திரள்களிடையே ஓங்கி வந்த கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கிற்கு எதிர் எடையாய் அவர்கள் இந்தக் கழகத்தைப் பயன்படுத்த முயன்றனர்.

1923 மே மாதத்தில் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்கள் சோஷலிஸ்டுத் தொழிலாளர்களின் அகிலம் என்கிற பெயரில் ஒன்று சேர்ந்து கொண்டன.

பக்கம் 74

28 இங்கு குறிக்கப்படுவது 1921 ஏப்ரலிலிருந்து ஜூன் வரை நடைபெற்ற ஆங்கிலேயச் சுரங்கத் தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தம். யுத்த ஆண்டுகளில் சுரங்கங்கள்மீது நிறுவப்பட்ட அரசாங்கக் கட்டுபாட்டை அகற்

றும் சட்டம் ஒன்றை 1921 மார்ச் 24ல் பிரிட்டிஷ் அரசாங்கம் நிறைவேற்றியது. இதையடுத்து ஒரு வாரத்திற்கெல்லாம் மார்ச் 31ல் சுரங்க முதலாளிகள் கதவடைப்பு செய்வோமென்று அச்சுறுத்தி, சம்பளங்கள் 30 சதவீதமும் சில பிரதேசங்களில் 50 சதவீதமுங்கூட குறைக்கப்பட ஒத்துக்கொள்ள வேண்டுமென்று தொழிலாளர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தனர். ஏப்ரல் 1ல் சுரங்கத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் தொடங்கினர். பத்து லட்சத்துக்கு மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர். வேலைநிறுத்தம் தொடங்கிய முதல் நாளன்றே நாடெங்கும் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டு, சுரங்கப் பிரதேசங்களுக்கு படையாட்கள் அனுப்பப்பட்டனர்.

சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஆதரவாய் ஏப்ரல் 15ல் ஆலை, போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் தொடங்கினர். ஆனால் சீர்திருத்தவாதத் தொழிற் சங்கத் தலைவர்கள் இந்த வேலைநிறுத்தத்தை வாபஸ் செய்துவிட்டனர். பிற்போக்கான தொழிற் சங்க அதிபர்கள் வேலைநிறுத்தத்தை முறியடித்த வெள்ளிக்கிழமையை ஆங்கிலேயத் தொழிலாளர்கள் கறுப்பு வெள்ளி என்று பெயரிட்டு அழைத்தனர். மேலும் ஒன்பது வாரங்களுக்குச் சுரங்கத் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடினர். முடிவில் ஜூன் மாத இறுதியில் வேலைக்குத் திரும்பும் படியான பலவந்த நிலைமை ஏற்பட்டது. பக்கம் 79

29 1921 ஜூலை தொடக்கத்தில் பெர்லின் நகராண்மைக் கழகத் தொழில் நிலையங்களின் தொழிலாளர்களும் சிப்பந்திகளும் சம்பள உயர்வு கேட்டு வேலைநிறுத்தம் செய்வதென்று முடிவெடுத்தனர். பெரும்பாலான தொழிலாளர்கள் (சுமார் 80 ஆயிரம் பேர்) வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாய் இருந்தனர். ஆனால் சீர்திருத்தவாதிகள் வேலைநிறுத்தத்தைத் தடுப்பதில் வெற்றி பெற்றுவிட்டனர். தொழிலாளர்கள், சிப்பந்திகளின் பிரதிநிதிகளுக்கும் சமூக-ஜனநாயகவாதிகளும் அடங்கிய பெர்லின் நகராண்மைக் கழகத்தின் பிரதிநிதிகளுக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவாய்த் தொழிலாளர்கள், சிப்பந்திகளது சம்பளங்களில் சொற்ப அளவு உயர்வு ஏற்பட்டது.
பக்கம் 85

30 1921 ஜூலை ஆரம்ப நாட்களில் லில் நகரின் (பிரான்ஸ்) பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் தொடங்கினர். ஆலை முதலாளிகள் அவர்களுடைய சம்பளங்களைக் குறைத்ததே இதற்குக் காரணம். வேலைநிறுத்தம் நோர்ட், வோகெஸ் மாவட்டங்களுக்கும் பரவிற்று. வேலைநிறுத்தம் செய்தோரின் எண்ணிக்கை 60 ஆயிரத்தை எட்டியது.

செப்டம்பர் முதற் பாதியில் பிரான்சின் வட மாவட்டத்தில் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது. பிற மாவட்டங்களின் தொழிலாளர்களும் சிறிது காலத்துக்கு இதில் சேர்ந்து கொண்டனர். அரசாங்கம் வட மாவட்டத்துக்குப் படையாட்களை அனுப்பிற்று. அதேபோதில் தொழிலாளர்களுக்கும் ஆலை முதலாளிகளுக்கும் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் மத்தியஸ்தராகவும் பங்கெடுத்துக் கொண்டது. தொழிலாளர்கள் உறுதியுடன் இரண்டு மாதங்களுக்குத் தொடர்ந்து போராடியும், தொழிற் சங்கத் தலைவர்களது சீர்திருத்தவாதப் போர்த்தந்திரம் காரணமாகவும், பாதகமான பொருளாதார நிலைமைகள் காரணமாகவும் இந்த வேலைநிறுத்தம் தோல்வியுற்றது.
பக்கம் 86

31 1921 ஜூலை 8ல் ரோம் நகரில் நடைபெற்ற மாபெரும் தொழிலாளர் பொதுக் கூட்டம் இங்கு குறிப்பிடப்படுகிறது.
பக்கம் 86

32 V.K.P.D. (Vereinigte Kommunistische Partei Deutschlands) ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி—ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி, ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரி இவற்றின் ஒற்றுமைக் காங்கிரசில் நிறுவப்பட்ட கட்சி. இந்த ஒற்றுமைக் காங்கிரஸ் 1920 டிசம்பர் 4லிருந்து 7வரை பெர்லினில் நடைபெற்றது. சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் கால் காங்கிரசில் (1920 அக்டோபர்) பெரும்பாலான பிரதிநிதிகள் மூன்றாவது அகிலத்தில் உடனடியாக இணைந்துவிட வேண்டுமென்றும் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் இணைப்புக்காக வகுத்திருந்த 21 நிபந்தனைகளையும் முழுமையாய் ஏற்க வேண்டுமென்றும் கோரியதை அடுத்து அக்கட்சியில் பிளவு ஏற்பட்டது. இக்கட்சியின் வலதுசாரியினர் காங்கிரசை விட்டு வெளியேறி, தனிக் கட்சியை அமைத்து அதற்குப் பழைய பெயரையே சூட்டிக் கொண்டனர். இக்கட்சி 1922 செப்டம்பர் வரை இருந்துவிட்டு சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்து கொண்டுவிட்டது.

ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் காங்கிரஸ் (ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ்) இயெனாவில் 1921 ஆகஸ்டு 22க்கும் 26க்கும் இடையில் நடைபெற்றது. இக்காங்கிரசுக்குத்தான் லெனின் கடிதம் எழுதியனுப்பினார். இந்தக் காங்கிரஸ் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ், கட்சியின் முன்னுள்ள உடனடிப் பணிகள், தொழிற் சங்க வேலைகள், சோவியத் ருஷ்யாவின் நிலைமை, அதற்கு உதவுவதற்கான வழிகள் முதலான பொருள்கள் குறித்த உரைகளை விவாதித்தது.

மிகப் பெருவாரியான வாக்குகள் கொண்டு இக்காங்கிரஸ் ஏற்ற தீர்மானம் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் முடிவுகளை அங்கீகரித்தது; மூன்றாவது காங்கிரஸ் விரிவுரைகளில் 1921 மார்ச் மாத எழுச்சியின்போது ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் குழு இழைத்த தவறுகள் பற்றி கூறப்பட்ட விமர்சனத்தை ஒத்துக்கொண்டது. கட்சி அதனுடைய பழைய பெயரை ஏற்று, ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியது.

பக்கம் 90

33 **மாஸ்கோ**—கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசின் செய்தியேடு. மாஸ்கோவில் மூன்று மொழிகளில்—ஜெர்மன் (இதழ்கள் 1-50), பிரெஞ்சு (இதழ்கள் 1-44), ஆங்கிலம் (இதழ்கள் 1-41) —வெளியிடப்பட்டது.

பக்கம் 103

34 **போலந்து சோஷலிஸ்டுக் கட்சி**—சீர்திருத்தவாத தேசியவாதக் கட்சி. 1892ல் நிறுவப்பட்டது. பக்கம் 108

35 1875 மார்ச் 18-28, 1884 டிசம்பர் 11 தேதிகளிட்டு ஔகுஸ்ட் பெபெலுக்கு பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதிய கடிதங்களைப் பார்க்கவும். பக்கம் 112

36 பிரெடெரிக் எங்கெல்சின் "Flüchtlings literatur."

பக்கம் 115

37 **பிரேஸ்த் சமாதான ஒப்பந்தம்**—சோவியத் ருஷ்யாவுக்கும் நால்வர் கூட்டணிக்கும் (ஜெர்மனி, ஆஸ்திரியா ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகியவற்றாலானது) இடையே பிரெஸ்த்-லித்தோவ்ஸ்கில் 1918 மார்ச் 3ல் கையெழுத்தாகி, மார்ச் 15ல் சோவியத்துகளின் நான்காவது (சிறப்பு) அனைத்து-ருஷ்யாவின் காங்கிரசால் அங்கீகரிக்கப்பட்ட சமாதான உடன்படிக்கை. இதன் ஷரத்துகள் சோவியத் ருஷ்யாவுக்கு மிகவும் பாதகமாயிருந்தன.

பிரேஸ்த் ஒப்பந்தம் சோவியத் குடியரசுக்குச் சிறிது அவகாசமளித்தது; சிதைந்து வந்த பழைய சேனையைக் கலைக்கவும் புதிய செஞ்சேனையைத் தோற்றுவிக்கவும் வாய்ப்பு தந்தது; சோவியத் அரசு சோஷலிச நிர்மாணத்தை மேற்கொள்ளவும் உள்நாட்டு எதிர்ப் புரட்சிக்கும் அந்நியத் தலையீட்டுக்கும் எதிரான போராட்டத்துக்கு சக்திகளை ஒன்றுதிரட்டவும் வகை செய்து கொடுத்தது. ஜெர்மனியில் 1918 நவம்பரில் புரட்சி நடைபெற்று முடியாட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து நவம்பர் 13ல் அனைத்து-ருஷ்ய மத்தியச் செயற்குழு கொள்ளைக்கார பிரேஸ்த் ஒப்பந்தத்தை நிராகரித்தது.

பக்கம் 115

# பெயர்க்குறிப்பு அகராதி

அக்ஸெல்ரோத், பா. பொ. [Axelrod, P.B,] *(1850-1928)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி; 1903ல் நடந்த ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு மென்ஷிவிக்குகளின் ஒரு தலைவர் ஆனார். உலக ஏகாதிபத்தியப் போர்க் காலத்தில் (1914-1918) மைய நிலைச் சொற்றொடர்களில் மறைந்து கொண்டு உண்மையில் சமூக-தேசியவெறிப் போக்கைக் கடைப்பிடித்தார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காருக்கு ஆதரவளித்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிபால் பகைமை பாராட்டினார். நாடுகடந்து சென்று சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீட்டுக்கு ஆதரவாகப் பேசினார்.—*34*

ஆட்லெர், பிரீட்ரிஹ் [Adler, Friedrich] *(1879-1960)*—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளது வலதுசாரியின் தலைவர். ஆஸ்திரியாவில் 1918ல் நடைபெற்ற புரட்சிக்குப் பிற்பாடு எதிர்ப்புரட்சி முகாமுக்கு ஓடிவிட்டார். மிகவும் வெட்கக் கேடான முறையில் சோஷலிசத்துக்குத் துரோகமிழைத்தவர் என்று வி. இ. லெனின் இவரைப் பற்றிக் குறிப்பிட்டார். மையவாத இரண்டரையாவது அகிலத்தின் (1921-23) நிறுவர்களில் ஒருவர். பிற்பாடு தொழில், சோஷலிஸ்டு அகிலம் என்றொன்றின் தலைவர்களில் ஒருவராயினார். —*60*

எங்கெல்ஸ் பிரெடெரிக் [Engels, Friedrich] *(1820-1895)—7, 16,17,35,46,112,115*

கர்னிலோவ், லா. கி. [Kornilov, L.G.] *(1870-1918)*—ஜாரிஸ்டு ஜெனரல், முடியாட்சிவாதி. 1917 ஜூலை-ஆகஸ்டு

மாதங்களில் ருஷ்யப் படைகள் எல்லாவற்றின் தலைவர். 1917 ஆகஸ்டு, இடைக்காலச் சர்க்காரைக் கவிழ்த்து ராணுவச் சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான கலகத்திற்குத் தயாரிப்பு செய்தார். அக்கலகம் முறியடிக்கப்பட்டபின் கைது செய்யப்பட்டார். பிற்பாடு தோன் ஆற்றுப் பிரதேசத்துக்கு ஓடி, சோவியத் மக்களை எதிர்த்துப் போராடிய 'தொண்டர் சேனை' என்ற வெண்படை ஒன்றை நிறுவி அதன் சேனாதிபதியானார். எக்கதெரீனொதார் (இப்பொழுது கிராஸ்னொதார்) நகருக்கு அருகில் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டார். —*40,41*

காமெனெவ், லெ. பொ. [Kamenev, L. B.] (ரோசென்பெல்ட்) *(1883-1936)*—*1901* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் இடைக்கால அரசாங்கம் குறித்தும் யுத்தம் குறித்தும் அரை-மென்ஷிவிக் போக்கை அனுசரித்தார்; சோஷலிசப் புரட்சியை நோக்கமாய்க் கொண்ட லெனினியக் கட்சிக் கொள்கையை எதிர்த்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிற்பாடு மாஸ்கோ சோவியத்தின் தலைவர், மக்கள் கமிசார் அவையின் துணைத் தலைவர், மத்தியக் குழுவின் அரசியல் குழு உறுப்பினர். லெனினியக் கட்சிக் கொள்கையை மீண்டும் மீண்டும் எதிர்த்து வந்தார். திரோத்ஸ்கிய எதிர்த் தரப்பின் தலைவராய்ப் புரிந்த செயல்களுக்காக *1927*ல் பதினைந்தாவது காங்கிரசால் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். தனது தவறுகளை *1928*ல் பகிரங்கமாய் ஒப்புக்கொண்ட பின்கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆயினும் கட்சி-எதிர்ப்பு நடவடிக்கைகளை விட்டுவிடவில்லை. *1932*ல் திரும்பவும் விலக்கப்பட்டார். *1933*ல் மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்பட்டார். கட்சி-எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக மூன்றும் முறையாய் *1934*ல் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—*18,19,21,22,23,25,30,31,32,34,91*

காவுத்ஸ்கி, கார்ல் [Kautsky, Karl] *(1854-1938)* —ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் இவற்றின் தலைவர்களிலும் தத்துவவாதிகளிலும் ஒருவர். *1914*ல் உலக ஏகாதிபத்தியப் போர் மூண்டபோது, மார்க்சியத்

துக்குத் துரோகம் செய்தார். தொழிலாளர் இயக்கத்தி லுள்ள, தொழிலாளர் இயக்கத்துக்கு மிகவும் ஆபத்தான சந்தர்ப்பவாதப் போக்காகிய மையவாதத்தின் (காவுத்ஸ்கிவாதத்தின்) சித்தாந்தத் தலைவர்.—27

**கிரெய்பிஹ், காரெல்** [Kreibich, Karel] *(பிறப்பு: 1883)*—செக்கோஸ்லோவாக்கிய, சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர். 1902 முதல் சமூக-ஜனநாயக இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்; இதன் இடதுசாரிக்கு நெருங்கியவராய் இருந்தவர். செக்கோஸ்லோவாக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர். கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசில் கலந்து கொண்டார். அப்பொழுது அவர் ''இடதுசாரி'' கருத்தோட்டங்கள் கொண்டிருந்தார். 1922, 1924, 1925ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற் குழு உறுப்பினர்.—87

**கிளாவுஸெவிட்ஸ், கா.** [Clausewitz, K.] *(1780-1831)*—பிரஷ்ய ஜெனரல், பிரபல முதலாளித்துவ இராணுவத் துறை தத்துவவாதி, நெப்போலியன் யுத்தங்களையும் பிற யுத்தங்களையும் பற்றிய வரலாறு குறித்து பல நூல்கள் எழுதியவர். —86

**குச்கோவ், அ. இ.** [Guchkov, A. I.] *(1862-1936)*—பெரிய முதலாளி, அக்டோபரிஸ்டுகளின்—இது ருஷ்யாவில் முதலாளி வர்க்கத்தினதும், நிலப்பிரபுகளினதும் ஒரு கட்சி—தலைவர். 1917ல் பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தில் மந்திரியாயிருந்தவர். ருஷ்யாவில் சோஷலிசப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து செயலூக்கமுள்ள புரட்சி எதிர்ப்பாளராயிருந்தவர்; எதிர்ப் புரட்சி நசுக்கப்பட்டபோது நாடுகடந்து ஓடிவிட்டார்.—11,20,

**கூனெவ், ஹெ.** [Cunow, H.] *(1862-1936)*—ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி, வரலாற்றியலாளர், சமூகவியலாளர், இனவியலாளர். ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் ஏடான "Die Neue Zeit" இன் தலைமை ஆசிரியராய் 1917லிருந்து 1923வரை இருந்தவர். ஆரம்பத்தில் மார்க்சியவாதிகளுக்கு நெருங்கியவராய் இருந்தவர், பிறகு திருத்தல்வாதியாகவும் மார்க்சியத்தின்

புரட்டராகவும் மாறியவர். ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் போது சமூக-ஏகாதிபத்தியத்தின் தத்துவ வாதியாய்ச் செயல்பட்டார்.—*27,30,32*

**கேரென்ஸ்கிய், அ. பி.** [Kerensky, A. F.] *(1881-1970)*—சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். உலக ஏகாதிபத்தியப் போரின்போது அதிதீவிர சமூக-தேசியவெறியர் ஆனார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப்பின் முதலாளித்துவ இடைக் காலச் சர்க்காரில் அமைச்சர்—அதிபராகவும் தலைமைத் தளபதியாகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டார்; 1918ல் வெளிநாடு போய்விட்டார். —*43, 50*

**கோம்பர்ஸ், ஸாமுவேல்** [Gompers, Samuel] *(1850-1924)*—அமெரிக்கத் தொழிற் சங்க இயக்கத்தில் முக்கியஸ்தர். அமெரிக்கத் தொழிற் சங்க சம்மேளனத்தை நிறுவியோரில் ஒருவர். முதலாளிகளுடன் வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையைக் கடைபிடித்தார்; தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தை எதிர்த்தார். முதல் உலகப் போரின்போது சமூக-தேசியவெறியராக இருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கும் சோவியத் அரசுக்கும் பகையாய் இருந்தவர்.—*57*

**கோல்ச்சாக், அ. வ.** [Kolchak, A. V.] *(1873-1920)* —ஜாரிஸ்டுக் கடற்படைத் தலைவர்; முடியாட்சிவாதி; 1918-19ல் ருஷ்யாவில் எதிர்ப்புரட்சிக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர்; ஆன்டான்ட் அரசுகளின் கையாள். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஆதரவுடன் தன்னை ருஷ்யாவின் தலைமை அதிபதியாகப் பிரகடனம் செய்து கொண்டு, ஊரால், சைபீரியா, தொலைக் கிழக்கு ஆகியவற்றில் முதலாளிகள், நிலப்பிரபுக்களது இராணுவச் சர்வாதிகாரத்துக்குத் தலைமை தாங்கினார். செஞ்சேனையின் தாக்குதல்களும் கொரில்லா இயக்கத்தின் வளர்ச்சியும் கோல்ச்சாக் ஆதிக்கத்தை முறியடித்தன.—*122*

**சூஹி, அளகுஸ்தின்** [Souchy, Augustin] — *ஜெர்மன் அராஜக வாத-சிண்டிகலிஸ்டுகளின் தலைவர்களில் ஒருவர், நூலாசிரியர். ஜெர்மனியின் புரட்சிகர சிண்டிகலிஸ்டுகளுடைய பிரதிநிதியாய் 1920 ஏப்ரல்-அக்டோபரில் சோவியத் ருஷ்யாவுக்கு வந்திருந்தார். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் பிரதிநிதியாய்க் கலந்து கொண்டவர். பிற்பாடு கம்யூனிஸ்டு இயக்கத்துக்குப் பகைவராளுர்.—52*

**செராட்டி, ஜியாச்சின்டோ மெனேட்டி** [Serrati, Giacinto] Menotti] *(1872-1926)—இத்தாலியத் தொழிலாளர் இயக்கத்தின் பிரமுகர், இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். உலக ஏகாதிபத்தியப் போரின்போது சர்வதேசியவாதியாய் இருந்தார். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் இத்தாலியப் பிரதிநிதிக் குழுவின் தலைவராய்க் கலந்து கொண்டார். 1924ல் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். இறுதி நாள் வரையில் அக்கட்சியின் வேலைகளில் தீவிரமாய்ப் பங்குகொண்டார்.—104, 105*

**ச்ஹெயீத்ஸே நி. செ.** [Chkheidze, N.S.] *(1864-1926)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1917ஆம் ஆண்டு பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தை முன்னின்று ஆதரித்தவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சியைத் தொடர்ந்து ஜியார்ஜியாவின் அரசியல் நிர்ணய சபையின் (எதிர்ப்புரட்சி மென்ஷிவிக் அரசாங்கம்) தலைவராளுர். 1921ல் பிரான்சுக்குச் சென்று விட்டர்.—10,15,20,22*

**ஸினேவியேவ் (ரடொமீஸ்லிஸ்கி), கி. யெ.** [Zinoviev, G.Y.] *(1883-1936)—1901ல் ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் சேர்ந்தார். பிற்போக்கு தலைவிரித்தாடிய 1907-10ஆம் ஆண்டுகளில் கட்சிக் கலைப்பாளர்கள், ஒட்ஸொவிஸ்டுகள், திரோத்ஸ்கிஸ்டுகள் ஆகியோரிடத்து சமரசரவாதப் போக்கை அனுசரித்தார். ஏகாதிபத்திய உலக யுத்தத்தின்போது சர்வதேசியக் கருத்தோட்டம் கொண்டிருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்*

*சிக்குத் தயாரிப்பு நடைபெற்ற காலத்தில் உசலாடினூர், ஆயுதமேந்திய எழுச்சியை எதிர்த்து நின்ருர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு பல முக்கிய பதவிகள் வகித்தார். கட்சியின் லெனினியக் கொள்கையைத் திரும்பத் திரும்ப எதிர்த்தார், இதற்காக 1927ல் விலக்கப்பட்டார், 1928ல் சேர்த்துக் கொள்ளப்பட்டு பிறகு 1932 திரும்பவும் விலக்கப்பட்டார், 1933ல் மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்பட்டர். அவரது கட்சி-எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக மீண்டும் 1934ல் விலக்கப்பட்டார்.—5*

**ஸுடெக்கும், அல்பெர்ட்** [Südekum, Albert] *(1871-1944)—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர், திருத்தல்வாதி. முதல் உலக ஏகாதிபத்தியப் போரின் போது அதிதீவிர சமூக-தேசியவெறியர். காலனிப் பிரச்சினையில் ஏகாதிபத்தியக் கருத்துக்களைப் பிரசாரம் செய்தார். தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தை எதிர்த்தார். 1918-1920ல் பிரஷ்யாவின் நிதி மந்திரி. கடைகோடிச் சந்தர்ப்பவாதத்துக்கு அவர் பெயர் இடுகுறியாயிருந்தது.—31*

**ஸெத்கின், கி.** [Zetkin, C.] *(1857-1933) —ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளி வர்க்க, கம்யூனிஸ்டு இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசால் அகிலத்தின் செயற் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சர்வதேச மாதர் செயற் குழுவிற்குத் தலைமை தாங்கினூர். 1924 முதலாய், புரட்சி வீரர்களுக்கு உதவுவதற்கான சர்வதேச நிறுவனத்தின் செயற் குழுவினுடைய நிரந்தரத் தலைவர்.—95,96*

**ஸ்தெக்லோவ், யூ. மி.** [Steklov, Y.M.] *(1873-1941)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்குப் (1903) பிறகு போல்ஷிவிக்குகளுக்கு நெருங்கிவந்தார். 1917 பிப்ரவரி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து ''புரட்சிகரப் பாதுகாப்புவாத'' நிலையை பற்றி நின்ருர், பிறகு போல்ஷிவிக்குகளின் பக்கம் சேர்ந்தார்.—10,15,20,22*

**ஸ்பிரிதோனவா, மா. அ.** [Spiridonova, M.A.] *(1884-1941)*— *ருஷ்ய சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர் களில் ஒருவர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாய கப் புரட்சிக்குப் பிற்பாடு இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் குழுவின் நிறுவகராய் இருந்தார். 1917 நவம் பரில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி நிறுவப்பட்டதும் அதன் மத்தியக் குழு உறுப்பினரானார். பிரெஸ்த் சமாதான உடன்படிக்கையை எதிர்த்தார். 1918 ஜூலையில் நடைபெற்ற எதிர்ப்புரட்சி இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரது கலகத்தில் முக்கிய பங்கு கொண்டார். இக்கலகம் அடக்கப்பட் டதும், சோவியத் ஆட்சிக்கு எதிரான பகை நடவடிக்கை களில் தொடர்ந்து ஈடுபட்டார். பிற்பாடு அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகிக் கொண்டார். —42*

**ஷெய்டெமன், பிலிப்** [Scheidemann, Philipp] *(1865-1939)*— *ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் கடைகோடியான வலதுசாரி, சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். 1918 நவம்பர் மாதத்தில் ஜெர்மனியில் புரட்சி நடந்தபோது ஸ்பார்த்தகிஸ்டுகளுக்கு எதிராய் வன் முறை பிரயோகிக்க வேண்டுமென்ற கிளர்ச்சிக்கு ஊக்க மளித்தார். 1919ல் பிரதம மந்திரியாகி ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்துக்கு எதிரான பயங்கர அடக்கு முறைக்குத் தலைமை தாங்கினார்.—57,91*

**ஷ்மேரால், போ.** [Šmeral, B.] *(1880-1941)* —*செக்கோஸ் லோவாகிய, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர். செக்கோஸ்லோவாகியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர். 1897 முதலாய் செக் நாட்டு சமூக-ஜனநாயகக் கட்சி உறுப் பினரும் அதன் தலைமைப் பிரமுகர்களில் ஒருவருமாய் இருந்தவர். செக்கோஸ்லோவாகியப் புரட்சி இயக்கம், தேச விடுதலை இயக்கம் இவற்றில் ஊக்கமுடன் பங்கு ஆற் றினார். 1918 முதல் தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சிய-லெனினியக் கட்சியை நிறுவ இடதுசாரி சமூக-ஜன நாயகவாதிகள் நடத்திய போராட்டத்துக்குத் தலைமை*

*தாங்கினார். 1921ல் செக்கோஸ்லோவாகியக் கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவப்பட்டதும் அதன் மத்தியக் குழு உறுப்பினரானார். 1921-29லும் 1935-56லும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு உறுப்பினர்.—87,88*

**ஹில்பெர்டிங், ருடோல்ப்** [Hilterding, Rudolf] *(1877-1941)—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் சந்தர்ப்பவாதத் தலைவர்களிலும் தத்துவவாதிகளிலும் ஒருவர். முதல் உலக ஏகாதிபத்தியப் போரின்போது மையவாதி. சமூக-தேசியவெறியர்களுடன் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டுமென்ற நிலையை ஆதரித்தார். 1917லிருந்து ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்.—91*

**ஹேம்பெல்** [Hempel]*—கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது காங்கிரசில், ஜெர்மன் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சியின் ஒரு பிரதிநிதியாயிருந்தவர்.—69*

**ஹோல்ட்ஸ், மாக்ஸ்** [Hölz, Max] *(1889-1933)—ஜெர்மன் இடதுசாரிக் கம்யூனிஸ்டு. 1920ல் காப்பின் சதியை எதிர்த்து வோக்லண்ட் (மத்திய ஜெர்மனி) தொழிலாளர்கள் நடத்திய ஆயுதமேந்தியப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கினார். அவருடைய அராஜகவாதப் போக்குகளுக்காக ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். 1921 மார்ச் மாதத்தில் பிட்டர்பெல்ட்-மெர்சபர்க்-ஹாலேயில் (மத்திய ஜெர்மனி) தொழிலாளர்களது படைப் பிரிவுகளின் ஆயுதமேந்தியப் போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். இதற்காக விசேஷ நீதி மன்றத்தால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார். சிறையில் இருக்கையில் 1922ல் மீண்டும் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்து கொண்டார்.—74*

**டெராச்சீனி, உம்பேர்டோ** [Terracini, Umberto] *(பிறப்பு: 1895)—இத்தாலியில் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கியமானவர், இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர். இடதுசாரி குறுங்குழுவாதத் தவறுகள் செய்தார், கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்*

*ருவது காங்கிரஸில் லெனின் அவற்றைக் கண்டித்தார். விமர்சனத்தின் விளைவாய் இந்தத் தவறுகளைத் திருத்திக் கொண்டார்.—66,67,69,70,71,72,76,77,79,88*

**டேவிட், எடுவார்ட்** [David, Eduard] *(1863-1930)—ஜெர்மன் சமூக-ஜனநாயக வலதுசாரித் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி. 1919ல் ஜெர்மன் குடியரசின் முதலாவது கூட்டு அரசங்கத்தில் சேர்ந்து கொண்டார். 1919-20ல் உள்நாட்டு அமைச்சர். ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் பழிவெறி நோக்கங்களை ஆதரித்தவர்.—91*

**டோமா, அல்பேர்** [Thomas, Albert] *(1878-1932)—பிரெஞ்சு அரசியல்வாதி, வலதுசாரி சோஷலிஸ்ட். முதல் உலக யுத்தத்தின் போது சமூக-தேசியவெறியர். 1919ல் பெர்ன் அகிலத்தை அமைத்தவர்களில் ஒருவர்.—57*

**தாஷின்ஸ்கி, இக்நாசி** [Daszynski, Ignazi] *(1866-1936)—போலந்து அரசியல் தலைவர்களில் ஒருவர். கலீசியாவில் 1892-1919ல் சமூக-ஜனநாயகக் கட்சிக்குத் தலைமை தாங்கினார். ஐக்கிய போலந்து சோஷலிஸ்டுக் கட்சியின் (வலதுசாரி) தலைவர்களில் ஒருவரானார். 1919 முதல் போலந்து செய்முக்கு மும்முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். போலந்து சோஷலிஸ்டுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவராயிருந்தார். 1920ல் போலந்தின் முதலாளித்துவ-நிலச்சுவான்தார் அரசாங்கத்தின் துணைப் பிரதமராயிருந்தார். பாசிஸ்டுகள் அதிகாரம் பெறுதலையும் பிறகு போலந்தின் பில்சூத்ஸ்கிய் பாசிஸ்டு ஆட்சியையும் ஆதரித்தவர்.—110*

**தெனீக்கின், அ. இ.** [Denikin, A.I.] *(1872-1947)—ஜார் ராணுவத்தின் தளபதி; ருஷ்யாவில் அன்னிய ராணுவத் தலையீடும் உள்நாட்டு யுத்தமும் நடந்த காலத்தில் (1918-20) பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பாவையாக இருந்தவர்; ருஷ்யாவின் தெற்கில் புரட்சி எதிர்ப்பு இராணுவத்தின் தலைமைத் தளபதியாக இருந்தார். இந்த ராணுவச் சதிகள் செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டபின் நாடு கடந்து வாழ்ந்தார்.—122*

**தாபால்** [Dabal] *(1890-1937)*—போலந்து, சர்வதேச விவசாயி இயக்கத் தலைவர். 1919ல் போலந்து பாராளுமன்றமான செய்முக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். போலந்து விவசாயிக் கட்சியின் இடதுசாரியினது தலைவர்களில் ஒருவர். சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான போரை எதிர்த்து அவர் நடத்திய பிரசாரத்துக்காகப் பன்முறை கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார். 1922ல் போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினரானார்.—110

**த்ஸெரெத்தேலி, இ. கி.** [Tsereteli, I.G.] *(1882-1959)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் பெத்ரொகிராத் சோவியத்தின் செயற்குழு உறுப்பினர், பாதுகாப்புவாதி. 1917 மே மாதத்தில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்க உறுப்பினரானார். போல்ஷிவிக்குகள் மீதான அடக்குமுறையின் சூத்திரதாரிகளில் ஒருவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிற்பாடு ஜார்ஜியாவின் எதிர்ப்புரட்சி மென்ஷிவிக் அரசாங்கத்தின் தலைவர்களில் ஒருவர். ஜார்ஜியாவில் சோவியத் ஆட்சியதிகாரம் நிறுவப்பட்டதும் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்.—10,15,20,22

**நோஸ்கே, குஸ்தாவ்** [Noske, Gustav] *(1868-1946)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர். 1919-20ஆம் ஆண்டுகளில் இராணுவ அமைச்சராக இருந்தார். பெர்லின் தொழிலாளர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக்கும், கார்ல் லீப்க்னெஹ்ட், ரோசா லுக்சம்பர்க் ஆகியோரின் கொலைக்கும் தலைமை தாங்கினார்.—57,91

**பிரீஸ்லண்ட்** [Friesland] (உண்மைப் பெயர்: ரீட்டர், எர்னஸ்ட்) *(1889-1953)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரித் தலைவர்களில் ஒருவர், கொள்கை கோட்பாடற்ற சாகசவாதி, பாசிஸ்டுகளின் கையாள். 1919ல் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்து கொண்டார், ஆனால் 1922ல் அவரது கட்சி-எதிர்ப்புச் செயல்களுக்காக விலக்கப்பட்டார்.—100

**பில்சூட்ஸ்கி, ஜோ.** [Pilsudski, J.] *(1867-1935)*—முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவப் போலந்தின் பிற்போக்குவாத அரசியல் பிரமுகர். பாசிஸ்டு சர்வாதிகாரி. முதல் உலக யுத்தத்தின்போது ஜெர்மனியின் தரப்பில் போராடிய போலந்து சேனைப் பிரிவுகளுக்குத் தலைவர். 1918-22ல் போலந்து அரசுத் தலைவராய் இருந்தபோது உழைப்பாளி மக்களின் புரட்சி இயக்கத்தைக் கொடிய முறையில் அடக்கியவர். சோவியத் அரசை எதிர்த்து நிலப்பிரபுத்துவப் போலந்து நடத்திய யுத்தத்தின் (1920) சூத்திரதாரிகளில் ஒருவர். 1926 மே மாதத்தில் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி பாசிஸ்டு சர்வாதிகார ஆட்சியை நிறுவியவர். ஹிட்லர் ஜெர்மனியுடன் 1934ல் கூட்டு நிறுவிக் கொண்டார்.—*122*

**பிளான்க், லூயி** [Blanc, Louis] *(1811-1882)* —பிரெஞ்சுக் குட்டிபூர்ஷுவா சோஷலிஸ்ட், வரலாற்றியலாளர். முதலாளித்துவத்தில் வர்க்க முரண்பாடுகள் இணக்கம் காண முடியாதவை என்பதை மறுத்து, பாட்டாளி வர்க்கப் புரட்சியை எதிர்த்தவர்; முதலாளித்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்வதை ஆதரித்தவர். சமரசப் போர்த்தந்திரத்தை அனுசரித்ததன் மூலம், தொழிலாளர்களைப் புரட்சிப் போராட்டத்திலிருந்து திசைதிருப்பிவிட முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு உதவினார்.—*15*

**பிளெஹானவ், கி.வ.** [Plekhanov, G.V.] *(1856-1918)* —ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியஸ்தர்; ருஷ்யாவில் முதன்முதலாய் மார்க்சியத்தைப் பரப்பியவர்.

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப்பின் மென்ஷிவிக்குகளோடு சேர்ந்து கொண்டார். முதல் உலகப் போரின்போது (1914-18) சமூக-தேசியவெறிப் போக்கைக் கடைப்பிடித்தார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப்பின் ருஷ்யாவுக்குத் திரும்பி வந்தார்; முதலாளித்துவ இடைக்கால சர்க்காருக்கு ஆதரவு காட்டினார். மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் பால்

எதிர்மறைப் போக்கை அனுசரித்தார், ஆனால் சோவியத் ஆட்சிக்கு எதிராய்ப் போராடவில்லை.—*17,18,30,32,34*

**புரியான், எ.** [Burian, E.] *(1878-1935)*—செக் நாட்டு சமூக-ஜனநாயகவாதி. *1920* முதலாய்ச் செக்கோஸ்லோவாகியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் அதன் மத்தியக் குழுவிலும் உறுப்பினர். *1922*ல் கம்யூனிஸ்டு அகிலத்தில் செக்கோஸ்லோவாகியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதி. அவரது வலதுசாரித் திரிபுக்காகவும் கட்சிக் கலைப்புப் போர்த்தந்திரத்துக்காகவும் *1929*ல் செக்கோஸ்லோவாகியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—*88*

**பெபெல், ஒளகுஸ்ட்** ]Bebel, August] *(1840-1913)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர்.—*112*

**பெனெகக், ஆன்டன்** [Pannekoek, Anton] *(1873-1960)*—ஹாலந்து நாட்டைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதி. உலக ஏகாதிபத்தியப் போரின் போது சர்வதேசியவாதியாக இருந்தார். *1918-21*ஆம் ஆண்டுகளில் ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினராய் இருந்தார்; கம்யூனிஸ்டு அகிலத்தின் வேலைகளில் கலந்து கொண்டார். அதிதீவிர இடதுசாரி, குறுங்குழுவாதப் போக்கைப் பின்பற்றினார்.—*27,*

**பொர்டீகா, அமடேவோ** [Bordiga, Amadeo] *(பிறப்பு: 1889)*—இத்தாலிய நாட்டு அரசியல்வாதி, இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் உறுப்பினர். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாம் காங்கிரசில் கலந்து கொண்டார். *1921*ல் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவுவதில் பங்கு கொண்டார். பொர்டீகா இடதுசாரிக் குறுங்குழுவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தார். பாசிஸத்திற்கு எதிராக ஐக்கிய அணியைத் திரட்ட வேண்டும் என்னும் கம்யூனிச அகிலத்தின் போர்த்தந்திரத்தை எதிர்த்தார்.—*50,52,54*

**பௌவர், ஒட்டோ** [Bauer, Otto] *(1882-1938)*—ஆஸ்திரிய வலதுசாரி சமூக-ஜனநாயகம், இரண்டாம் அகிலம் ஆகிய

வற்றின் தலைவர்களில் ஒருவர். *1918-19*ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரிய முதலாளித்துவக் குடியரசின் அயல் நாட்டு மந்திரியாய் இருந்தார். ஆஸ்திரியத் தொழிலாளர்களின் புரட்சிகர நடவடிக்கைகளை நசுக்குவதில் முக்கிய பங்கு கொண்டார்.—*60*,

**மாக்மஹோன், பா.** [Mac-Mahon, P.] *(1808-1893)*—பிரெஞ்சு அரசாங்க, இராணுவப் பிரமுகர், முடியரசுவாதி. பிராங்கோ-பிரஷ்ய யுத்தத்தின்போது *(1870-71)* செடானில் முக்கிய சேனை ஒன்றின் தளபதி. தோற்கடிக்கப்பட்டுக் கைதியாய்ப் பிடிக்கப்பட்டார். வெர்சேய் எதிர்ப்புரட்சி சேனையின் தளபதியாய் *1871*ல் பாரிஸ் கம்யூனின் வீரக் காவலர்களை மிருகத்தனமாய் ஒடுக்கியவர். *1873-79*ல் பிரான்சின் ஜனாதிபதி. இவருடைய பங்குடன் தயார் செய்யப்பட்ட முடியாட்சிவாதச் சதி தோல்வியுற்றதும் ராஜினாமா செய்தார்.—*41*

**மாஸ்லோவ், அ.** [Maslow, A.] *(பிறப்பு: 1891)*—ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் ''அதீத-இடதுசாரிக்'' கோஷ்டியின் தலைவர்களில் ஒருவர். *1921* முதல் பெர்லின் எதிர் தரப்புக்குத் தலைமை தாங்கினார். இது *1924*ல் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் குழுத் தலைமைப் பதவியைப் பிடித்துக்கொண்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரசில் அகிலத்தின் செயற் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோஷ்டி கட்டும் பிளவு நடவடிக்கைகளுக்காக *1925*ல் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டார், விரைவில் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்தும் கம்யூனிஸ்டு அகிலத்திலிருந்தும் விலக்கப்பட்டார். பிற்பாடு அரசியலிலிருந்து விலகிக் கொண்டார்.—*100,101*

**மார்க்ஸ் கார்ல்**[Marx, Karl]*(1818-1883)7,16,17,46,47,121,122*

**மார்த்தவ், லெவ்** [Martov, L. (Tsederbaum, Yuli Osipovich)] *(1873-1923)*—மென்ஷிவிசத்தின் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரிப் புரட்சிக்குப்பின் மென்ஷிவிக்-சர்வதேசியவாதிகளின் குழு ஒன்றிற்குத் தலைமை தாங்கினார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் சோவியத் ஆட்சியை எதிர்த்துப் பகிரங்கமாகவே பகைவனின் முகாமில் சேர்ந்துவிட்டார். *1920*ல் வெளிநாடுகளுக்கு ஓடினார்.—*42*,

**மியாஸ்னிக்கோவ், அ. பி.** [Myasnikov, A.F.] *(1886-1925)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, 1906 முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் முக்கிய பதவிகள் வகித்தார். 1921ல் ஆர்மீனிய மக்கள் கமிசார் அவையின் தலைவர், இராணுவ விவகார மக்கள் கமிசார்; 1922ல் டிரான்ஸ்காக்கேசிய சோவியத் சமஷ்டியின் யூனியன் கவுன்சில் துணைத் தலைவர்.—65

**மில்யூக்கோவ், பா. நி.** [Milyukov, P.N.] *(1859-1943)*—ருஷ்ய ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தின் சித்தாந்தவாதி, வரலாற்றியலாளர், நூலாசிரியர். அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர், அதன் மத்தியக் குழுத் தலைவர், இக்கட்சியின் மத்திய ஏடான ''ரேச்''சின் (பேச்சு) ஆசிரியர். மூன்ருவது, நான்காவது டூமாக்களில் உறுப்பினர். 1917ல் முதலாவது முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் அயல் விவகார அமைச்சர். ஏகாதிபத்திய யுத்தத்தை ''வெற்றிகர முடிவுக்குக்'' கொண்டுவரும் கொள்கையைப் பின்பற்றினர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ருஷ்யாவுக்கு எதிராய் அன்னிய இராணுவத் தலையீட்டுக்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர். வெளிநாடுகளுக்கு ஓடிய வெள்ளைப்படையினரில் ஒருவர்.—20,84

**யுதேனிச், நி. நி.** [Yudenich, N.N.] *(1862-1933)*—ஜாரிஸ்டு ஜெனரல். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் ருஷ்யாவின் வட-மேற்குப் பிரதேசத்தில் இயங்கிய வெண்படைகளுக்குத் தலைமை தாங்கினர். 1919ல் பெத்ரோகிராதைக் கைப்பற்ற இரு முறை முயன்ருர், ஆனல் தோல்வியடைந்தார். 1919 நவம்பரில் செஞ்சேனையால் தோற்கடிக்கப்பட்டபின் பின்வாங்கிச் சென்று எஸ்தோனியாவில் புகுந்து கொண்டார்.—122

**ராதேக், கா. பெ.** [Radek, K.B.] *(1885-1939)*—இருபதாம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் கலீஷியா, போலந்து, ஜெர்மனியின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் ஈடுபட்டார். 1917ல் போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தார். போல்ஷிவிக்

கட்சியின் லெனினியக் கொள்கையை அடிக்கடி எதிர்த்தார்; 1918ல் ''இடதுசாரி கம்யூனிஸ்டு'' ஆனர்; 1923ல் திரோத்ஸ்கியவாதியானர். 1936ல், கட்சி விரோதச் செயல்களுக்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். —27,72,73,74,79,95,96

**ரென்னர், கார்ல்** [Renner, Karl] *(1870-1950)*—ஆஸ்திரிய அரசியலாளர்; ஆஸ்திரியாவில் வலதுசாரி சமூக-ஜன நாயகவாதிகளின் தலைவரும் தத்துவவாதியுமாவார். முதல் உலகப் போரின்போது சமூக-தேசியவெறியர். 1919-20ல் ஆஸ்திரியான் தலைமை அமைச்சர், 1945-50ல் ஜனுதிபதி. —57,59,60

**ரொமானவ், நிக்கொலாய்** [Romanov, Nicholas] *(1868-1918)*—ருஷ்யாவின் கடைசிச் சக்கரவர்த்தி; 1894லிருந்து 1917 வரை ஆண்டார்.—8

**லஸ்ஸாரி, கோன்ஸ்டன்டினே** [Lazzari, Constantino] *(1857-1927)*—இத்தாலியில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முக்கிய தலைவர்களிலும், இத்தாலிய சோஷலிசக் கட்சியின் ஸ்தாபகர்களிலும் ஒருவர். இக்கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர். 1912-19ல் இக்கட்சியின் பொதுச் செயலாளர். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் போது இக்கட்சியில் ''மாக்சிமிலிஸ்ட்'' (மையவாத) போக்கின் தலைவர்களில் ஒருவர். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது, மூன்ருவது காங்கிரஸ்களில் பங்கெடுத்துக் கொண்டார். 1922ல் சீர்திருத்தவாதிகளை விட்டு விலகினர், ஆயினும் அவர்களிடமிருந்து பூரணமாய் அவரால் துண்டித்துக் கொள்ள முடியவில்லை. 1926ல் கைதுசெய்யப்பட்டார், பிறகு விடுதலை செய்யப்பட்டு சில காலத்துக்கெல்லாம் இறந்துவிட்டார்.—86

**லான்ஸ்பரி, ஜார்ஜ்** [Lansbury, George] *(1859-1940)*—பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர்களில் ஒருவர். 1892ல் சமூக-ஜனநாயகச் சம்மேளனத்திலும் 1906ல் தொழிற் கட்சியிலும் சேர்ந்தார். 1910-12, 1922-40ல் பாராளு மன்ற உறுப்பினர். 1912-1922ல் டெய்லி ஹெரால்டு பத்திரிகையின் பதிப்பாளரும் ஆசிரியரும்.—45

**லிவோவ், கி. யெ.** [Lvov, G.Y.] *(1861-1925)*—இளவரசர், பெரிய நிலப்பிரபு. ருஷ்யாவில் 1917 பிப்ரவரி பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப்பின் முதலாளித்துவ இடைக் கால அரசாங்கத்தில் மந்திரி சபையின் தலைவராகவும் உள்நாட்டு மந்திரியாகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப்பிறகு நாடு கடந்து வாழ்ந்தார். சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான அன்னிய ராணுவத் தலையீட்டின் அமைப்பாளர்களில் ஒருவர்.—*11,15*

**லெகீன், கார்ல்** [Legien, Karl] *(1861-1920)* ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி; ஜெர்மன் தொழிற் சங்கங்களின் தலைவர்களில் ஒருவர்; சீர்திருத்தவாதி. 1919-20ல் வெய்மர் குடியரசு மக்கள் சபையின் உறுப் பினர். பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்திற்கு எதி ராகப் போராடினார்.—*91*

**லெஞ்ச், பாவுல்** [Lensch, Paul] *(1873-1926)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரியினரது பத்திரிகையான "Leipziger Volkszeitung" இன் ஆசிரியராய் 1905-13ஆம் ஆண்டுகளில் இருந்த வர். உலக ஏகாதிபத்திய யுத்தம் தொடங்கியதும் சமூக-தேசியவெறியரானார். யுத்தத்துக்குப் பிற்பாடு ரூர் பெரு முதலாளிகளின் பத்திரிகையான "Deutsche Allgemeine Zeitung" இன் தலைமை ஆசிரியர். சமூக-ஜன நாயகக் கட்சியின் சாதாரண உறுப்பினர்களின் கோரிக்கை யின் பேரில் 1922ல் இக்கட்சியிலிருந்து விலக்கப் பட்டார்.—*30*

**லெவீ, பாவுல்** [Levi, Paul] *(1883-1930)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, ஸ்பார்ட்டகஸ் கழகத்தைச் சேர்ந்தவர், ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர். 1921ல் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் வலதுசாரி எதிர்த்தரப்புக்குத் தலைமை தாங்கினார், கட்சிக் கட்டுப்பாட்டை முரட்டுத்தனமாக மீறியதற்காகக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.—*74,93,95,96, 97,98,99,100,101,104*

**லெனின், வி. இ.** [Lenin, V.I.] *(1870-1924)*—*18*

**விராங்கெல், பி. நி.** [Wrangel, P.N.] *(1878-1928)*—ஜார் சேனைத் தளபதி, கோமகன், முடியரசுவாதி. அன்னிய இராணுவத் தலையீட்டின்போது பிரிட்டிஷ்-பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கையாள். ருஷ்யாவின் தென் பகுதியில் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர். 1920 ஏப்ரல்-நவம்பரில் ருஷ்யாவின் தென் பகுதியில் எதிர்ப்புரட்சிப் படைகளின் சேனாதிபதி. இப்படைகள் செஞ்சேனையால் தோற்கடிக்கப் பட்டதும் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்.—122

... PUBLIC L...

## விற்பனையாளர்கள்
## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

### தலைமை அலுவலகம்

41. பி. சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட். சென்னை—600098.

### ஷோ-ரூம்

136. மவுண்ட் ரோடு. சென்னை—600002.

### கிளைகள்

80. மேலக் கோபுர வீதி. மதுரை—625001.
87/89. ஒப்பணக்கார தெரு. கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு. திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு. சேலம்—636001.

### விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

## வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**В. И. Ленин**

ПИСЬМА О ТАКТИКЕ

*На тамильском языке*